"தேவனிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பாருங்கள்;
தேவனுக்காக பெரிய காரியங்களை முயற்சி செய்யுங்கள்"
- வில்லியம் கேரி

# தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்

## பரிசுத்த ஆவியால் நிறைந்திருத்தல்

ஹெல்மட் ஹவுபைல்

மொழியாக்கம் & பதிப்பு
**போதகர் எசே. பால் எடிசன்**

# தனிப்பட்ட
# எழுப்புதலுக்கான படிகள்

## பரிசுத்த ஆவியால் நிறைந்திருத்தல்

ஹெல்மட் ஹவுபைல்

மொழியாக்கம் & பதிப்பு
**போதகர் எசே. பால் எடிசன்**

# உள்ளடக்கம்


பக்கம்

**பதிப்புரை**

**அறிமுகம்**

**தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்**

நாள் 1 பரிசுத்த ஆவியால் நிறைந்திருத்தல். "பரிசுத்த ஆவிக்குள்ளான வாழ்க்கை" என்ற விஷயத்தில் நான் ஏன் தீவிரமாக ஈடுபட்டேன்?................................ 05

**முன்னுரை**

**முடிவுகளைப் பெருக்குதல்**

தலைவர்கள் மற்றும் எதிர்கால தலைவர்களுக்கு..................................... 07

**அத்தி - 1 இயேசுவின் மிகச் சிறந்த பரிசு!**

நாள் 2 பரிசுத்த ஆவியைப் பற்றி இயேசு என்ன கற்பித்தார்? இயேசுவின் வல்லமை நிறைந்த செய்தியை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா?.................................... 16

**அத்தி - 2 நமது பிரச்சனையின் மையம் எது?**

நாள் 3 நமது பிரச்சனைக்கு ஆவிக்குரிய காரணம் இருக்கிறதா? பரிசுத்த ஆவியானவர் இல்லாததுதான் காரணமா?.............................................. 28

நாள் 4 மாம்ச கிறிஸ்தவனின் முக்கிய பிரச்சனை என்ன?.................................... 46

**அத்தி - 3 நமது பிரச்சனைகள் தீர்க்கப்படக்கூடியதே**

நாள் 5 நமது பிரச்சனைகளுக்கு தேவனுடைய தீர்வு என்ன? நாம் எப்படி மகிழ்ச்சியாகவும் வலிமையான கிறிஸ்தவர்களாகவும் வளர முடியும்?......... 59

நாள் 6 ஞானஸ்நானத்திற்கும் பரிசுத்த ஆவிக்குமுள்ள தொடர்பு என்ன?................ 71

**அத்தி - 4 என்ன வித்தியாசங்களை நாம் எதிர்பார்க்கலாம்?**

நாள் 7 பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட வாழ்வில் கிடைக்கும் நன்மை என்ன?......... 81

நாள் 8 பரிசுத்த ஆவிக்காக நாம் ஜெபிக்காதபோது எதை இழக்கிறோம்?................. 93

**அத்தி - 5 நடைமுறை அனுபவத்திற்கான திறவுகோல்**

நாள் 9 தேவனின் தீர்வை நான் என்னில் செயல்படுத்தி அனுபவிப்பது எப்படி?......... 106

நாள் 10 பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுவதை உறுதிசெய்ய நான் எப்படி ஜெபிக்க வேண்டும்?......................................................................... 118

**அத்தி - 6 நமக்கு முன்னுள்ள அனுபவங்கள் என்ன?**

நாள் 11 தனிப்பட்ட அனுபவங்கள், அதே போல் சபை, கான்பரன்ஸ் மற்றும் யூனியனிலிருந்து வரும் அனுபவங்கள்................................................. 127

**அத்தி - 7 ஆர்வமும் பகிர்வும்**

நாள் 12 நாம் கொடுக்கும் மகிழ்ச்சி நம் இதயங்களுக்கே திரும்புகிறது. பிறர் "பரிபூரண ஜீவனை" அனுபவிக்க நான் எப்படி உதவ முடியும்............. 141

நாள் 13 செய்திகளை நாம் எப்படி எந்த வழிகளில் அனுப்புகிறோம்?.......................... 150

**பிற்சேர்க்கை**

நாள் 14 மேலும் ஆராய்வதற்கான பரிந்துரைகளும் - தொடர்புகளும்....................... 157

# பதிப்புரை

கர்த்தருக்குள் பிரியமான சகோதர சகோதரிகளுக்கு,

வணக்கம். கிறிஸ்துவின் வருகை நெருங்கி கொண்டிருக்கிறது. வேதாகமத்தில் முன்னுரைக்கப்பட்ட சம்பவங்கள் நம் கண்முன் நிறைவேறி வருகின்றன. உலகத்தின் மேல்வரப்போகும் ஆபத்தை அறிவிக்க வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு மீதமான திருச்சபைக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால் அந்த பணியை உலகிற்கு உரைக்கும் முன் சபை கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தால் மூடப்பட்டு தேவஆவியானவரால் இடைக்கட்டப்பட வேண்டும்.

நம்மிடையே திட்டங்களுக்கோ, யோசனைகளுக்கோ, வடிவங்களுக்கோ, பணத்திற்கோ பஞ்சமில்லை. இவையெல்லாம் இருந்து பரிசுத்த ஆவி இல்லாவிட்டாலும் நாம் தேவனுடைய ஊழியத்தை நிறைவேற்றிவிட முடியுமென புத்தியில்லாத கன்னிகைகளைப்போல நினைக்கின்றோமா? இன்றைய 'நம்முடைய தேவை – பரிசுத்த ஆவிதான் என்றால், நாம் ஏன் அதைப்பற்றி பேசவோ அதற்காக ஜெபிக்கவோ அதைப்பற்றி பிரசங்கிக்கவோ இல்லை' என்ற திர்க்கதரிசியின் வார்த்தைகளால் நம்மை தட்டியெழுப்புகிறார் போதகர் ஹெல்மட் ஹவுபைல். இந்த சிறிய புத்தகம் என்னை தொட்டது. இதை வாசிக்கும் அனைவரையும் பட்சிக்கும் என்பதில் சந்தேகமில்லை. வேதவசனங்களை தீர்க்கதரிசன எழுத்துக்களோடு எடுத்துரைக்கும் இந்த எழுத்துக்கள் காட்டுத் தீ போல் எட்டுதிக்கும் பரவட்டும். 'நான்' என்னும் அகங்காரத்தை அது நம்மில் சுட்டெரிக்கட்டும். கிறிஸ்து, கிறிஸ்து மட்டுமே நம்மில் பிரதிபலிக்கட்டும். அப்பொழுது நாம் அவரை சந்திக்க ஆயத்தமாயிருப்போமே.

அன்பிற்குரிய டாக்டர் பால்சன் ஏசுவடியான் அவர்கள் தாம் கிறிஸ்துவுக்குள் நித்திரையடைவதற்கு முன் இந்த புத்தகத்தை தமது சகோதரியின் மகள் திருமதி பிளாரன்ஸ் ஜெயபரதன் அவர்களிம் கொடுத்து எப்படியாகிலும் தமிழில் வெளியிடப்பட வேண்டும் என்ற தம் ஆவலை வெளிப்படுத்தினார். அவரது மறைவுக்குப்பின் அவருடைய விருப்பத்தின்படியே தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு Dr. K.A.P. ஏசுடியான் அவர்கள் குடும்பத்தாரின் மூலம் 2000 பிரதிகள் அச்சடிக்கப்பட்டு முதலாவது வழங்கப்படுகிறது. அவர்களின் முதல் முயற்சிக்காக நான் தேவனை துதிக்கிறேன். வரும் நாட்களில் இந்தப்புத்தகம் ஆயிரம் பதினாயிரமாக அச்சிடப்பட்டு விநியோகிப்பட வேண்டும். இதை வாசிக்கும் உள்ளங்கள் தொடப்பட்டால் தேவனோடு கரங்கொடுப்பீர்களா?

தேவனின் நிறைந்த நல்ஆசி உங்கள் அனைவருடனும் இருப்பதாக!

கிறிஸ்துவின் பணியில் உங்கள் சகோதரன்,
**போதகர். எசே. பால் எடிசன்,**
பதிப்பாசிரியர்
பிப்ரவரி – 2022.

# ஒரு கனி நிறைந்த வாழ்க்கை

இயேசு: "ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்" யோவான் 15:5

**இயேசுவில் நான் நிலைத்திருப்பது எப்படி?**

"என்னிடத்தில் வாருங்கள்" (மத்.11:28) என இயேசு அழைக்கிறார். இயேசுவிடம் வந்தவர்கள் அவரில் நிலைத்திருக்கும்படி அழைக்கப் படுகிறார்கள் (யோவான் 15:4). இது எப்படி செயல்படுகிறது?

"என்னில் நிலைத்திருங்கள் நான் உங்களில் நிலைத்திருப்பேன்."

**கிறிஸ்துவில் நிலைத்திருப்பது என்றால்:**

– அவரது ஆவியைத் தொடர்ந்து பெறுதல்

– அவரது சேவைக்கு நிபந்தனையற்ற அர்ப்பணிப்பு

இந்த விளக்கம் உண்மையில் என் கண்களைத் திறந்து, தேவனுடன் நடப்பதற்கு எனக்கு தெளிவைக் கொடுத்தது. என்னைப் பொறுத்தவரை இதுவே மகிழ்ச்சியான கிறிஸ்தவ வாழ்க்கையின் இரகசியம் (யோவான் 15:11). மேலும் இது பலருடைய மகிழ்ச்சியான மற்றும் நிறைவான வாழ்க்கைக்கு வழியை காட்டவேண்டும் என்பதே எனது விருப்பமும் ஜெபமும். இத்தொடரில் உள்ள மூன்று சிறு புத்தகங்களில் "தனிபட்ட எழுப்புதலுக்கான படிகள்" இதன் அடித்தளமாக உள்ளது.

**தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள் தொடரில் உள்ள மூன்று சிறு புத்தகங்களிடையே உள்ள தொடர்பு என்ன?**

**எண். 1 தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்**

இது பரிசுத்த ஆவியை தொடர்ந்து கேட்டு பெறுவது பற்றியது.

**எண். 2 இயேசுவில் நிலைத்திருங்கள்**

இது இயேசு கிறிஸ்துவிடம் சரணடைந்த வாழ்க்கையைப் பற்றியது.

**எண். 3 இயேசுவின் ஆவியால் நிரப்பப்பட்ட சக ஊழியர்கள்**

இது அவரது சேவைக்கு நிபந்தனை இல்லாமல் சரணடைவதைப் பற்றியது.

**ஊக்கம் :**

அன்றாடம் காலை மாலை தியானநேரத்தில் இரண்டு இரண்டு பேராகச் சேர்ந்து வாசித்து தியானிப்பது விலைமதிப்பற்ற ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும் என்பதை அனுபவம் காட்டுகிறது. தம்பதிகளாக வாசிக்கும்போது இரட்டத்தனையான ஆசீர்வாதம் உள்ளது!

நாள் 1

# தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்

## பரிசுத்த ஆவியால் நிறைந்திருத்தல்

### "பரிசுத்த ஆவிக்குள்ளான வாழ்க்கை" என்ற விஷயத்தில் நான் ஏன் தீவிரமாக ஈடுபட்டேன்?

ஆகஸ்ட் 14, 2011 அன்று நான் சுவிட்சர்லாந்தில் பெர்னீஸ் ஹைலேண்ட்ஸில் கந்தர்கிரண்டில் இருந்தபோது ஒரு முக்கியமான காரியம் எனக்கு மிகத் தெளிவாகத் தெரிந்தது. நாம் ஏன் நம் இளமையின் ஒரு பகுதியை இழந்திருக்கிறோம் என்பதற்கான ஆன்மீக காரணத்தை நான் உணர்ந்தேன். அது என்னை மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. நான் என்னுடைய பிள்ளைகள் மற்றும் பேரக்குழந்தைகளை நினைத்தேன். அப்போதிருந்து நான் இந்த விஷயத்தில் தீவிரமாக ஈடுபட்டேன்.

நம்முடைய பல பிரச்சனைகளுக்குப் பின்னால் அதே ஆன்மீக காரணம் இருப்பதாக நான் இப்போது நம்புகிறேன்; குறிப்பாக உள்ளூர் மற்றும் உலகளாவிய திருச்சபையின் தனிப்பட்ட பிரச்சனையும் அதுதான். அது பரிசுத்த ஆவியின் பற்றாக்குறையேயாகும்.

இதுதான் காரணம் என்றால் இந்த பிரச்சனையை நாம் உடனடியாகத் தீர்க்க வேண்டும். காரணத்தை நீக்கவோ அல்லது கணிசமாக குறைக்கவோ முடிந்தால் பல பிரச்சனைகள் மிதமிஞ்சியதாக மாறும் அல்லது தீர்க்கப்படும்.

### இந்த குறைபாடு பற்றி மற்றவர்கள் என்ன சொல்லுகின்றனர்

* **எமில் ப்ரன்னர் (Emil Brunner)** : ஒரு எவாஞ்சலிகல் சீர்திருத்த இறையியலாளர், பரிசுத்த ஆவி "எப்போதுமே அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இறையியலின் மாற்றான் தாய் பிள்ளையாக இருக்கிறது" என்று எழுதினார். - Johannes Mager, Auf den spuren des Herlgien Geistes (Lunberg, 1999). Cover

* **டி.மார்ட்டின் லாயிட்-ஜோன்ஸ் (D. Martin Lloyd Jones):** நான் என் நேர்மையான கருத்தை கூறுவதாயின், கடந்த காலமோ அல்லது நிகழ்காலமோ வேதாகம நம்பிக்கைகளில் மிகவும் புறக்கணிக்கப்பட்ட பொருள் பரிசுத்த ஆவியைப் பற்றியதாகும். எவான்ஞ்சலிகள் சுவிசேஷத்தின் மேல் வைத்திருக்கிற நம்பிக்கையின் பெலவீனம் தான் அதற்குக் காரணம் என்று நான் உறுதியாக நம்புகிறேன். - D. Martin Lloyd Jones, Vollmacht, Telos - Taschenbuch Nr.385, Marburg 1984, p.72
* **லேராய் ஈ ஃப்ரூம் (Leroy E Froom):** "பரிசுத்த ஆவியின் பற்றாக்குறையே நம்முடைய மிகப்பெரிய பிரச்சனை என்று நான் உறுதியாக நம்புகிறேன்." – EG White, The coming of the comforter (Hagertown, 1949), p.94
* **டுவைட் நெல்சன் (Dwight Nelson):** "நம்முடைய சபை சோர்வடையும் அளவிற்கு வியக்கத்தக்க வடிவங்களையும், திட்டங்களையும் மற்றும் நிகழ்ச்சிகளையும் உருவாக்கியுள்ளது. அதேசமயம் நம்மில் அநேக ஊழியக்காரர்களையும் தலைவர்களையும் மேற்கொண்டிருக்கிற ஆன்மீக தரித்திர நிலையை (பரிசுத்த ஆவியின் பற்றாக்குறையை) நாம் ஒப்புக்கொள்ளாவிட்டால், தற்சார்பு கிறிஸ்தவத்திலிருந்து நாம் ஒருபோதும் வெளியேற முடியாது." – Editor Helmut Haubeil, Missionsbrief Nr.34 (Bad Aibling. Zon) Seite 3

முதலில் தேவனுடைய வார்த்தையால் ஈர்க்கப்படுவதை நாம் விரும்புகிறோம். அதன் பிறகு பரிசுத்த ஆவியானவரைப்பற்றி நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வேண்டுகோளை காண்போம்.

## எனது விருப்பம்

ஏற்கனவே பரிசுத்த ஆவியில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு நபரும் ஆவியின் முழுமையை அடையவும், பரிசுத்த ஆவியில் வாழாதவர்கள் அல்லது ஆவியானவருடன் போதுமான அனுபவம் இல்லாதவர்களுக்கு இது ஒரு புதிய நிறைவான மற்றும் வெற்றிகரமான வாழ்க்கையின் ஆரம்பமாயிருக்க நான் விரும்புகிறேன்.

# முடிவுகளைப் பெருக்குதல்

அன்புள்ள தலைவர்களே,

உங்கள் பகுதி ஆன்மீக ரீதியில் வளர வேண்டுமா? ஆனால் அது உண்மையில் சாத்தியமா? ஆம், அது நிச்சயமாக சாத்தியம். எப்படி?

> நீங்கள் எதை விரும்புகிறீர்களோ அதை ஒரு இராணுவத்தின் வல்லமையால் வெற்றிக் கொள்ள முடியாது: மனித பெலத்தினால் அல்ல: அல்லவே அல்ல, "என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." (சகரியா 4:6)

இது எப்படி நடக்க வேணடும்? நாம் அனைவரும் இன்னும் இங்கே கற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன். மற்றவர்களின் அனுபவங்களிலிருந்து நாமும் கற்றுக்கொள்ள விரும்புகிறோமா? ஆம்! அதை நான் உறுதியாக நம்புகிறேன். தேவன் தமது ஆவியின் மூலம் முழு வழியையும் நமக்கு காட்டுவாராக.

"**தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்**" என்ற இந்த கையேட்டின் மூலம் பகிரப்பட்டுள்ள அனுபவங்கள் உங்களுக்கும் பேருதவியாக இருக்க முடியும். ஆயினும் இந்த கையேட்டை ஒருவர் பலமுறை வாசிப்பதினால் மட்டுமோ அல்லது அதை பலருக்கு வினியோகிப்பதால் மட்டுமோ ஒரு தனிநபரின் ஆன்மீக வளர்ச்சி வந்து விடாது. அதற்கு அதிகம் தேவைப்படுகிறது. அதற்கு உங்கள் இதயத்தின் ஊக்கம் தேவை. நான் சொல்லத்துணிவது என்னவென்றால்: நீங்கள் எதுவரைக்கும் பயணிக்கிறீர்களோ அதுவரை மட்டுமே உங்கள் வளர்ச்சி இருக்கும். அந்த பாதையில் நீங்கள் முன்னே சென்றிருக்காவிட்டால் வேறொருவருக்கு உங்களால் வழிகாட்ட இயலாது. நம்முடைய ஜீவியம், நம்முடைய ஜெபங்கள், நம்முடைய சாட்சிகள், நம்முடைய உரையாடல்கள், நம்முடைய செல்வாக்கு,

மற்றும் நம்முடைய பிரசங்கங்கள், போன்றவற்றை தேவனால் உபயோகிக்க முடியும். உண்மையில் நீங்கள் அதை நன்றாக புரிந்து கொள்வதற்கு பலமுறை வாசிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். இதுபோன்ற முக்கியமான கருப்பொருளை நன்றாக விளங்கிக் கொள்வதற்கு ஆறு முதல் பத்து முறையாவது படிக்க வேண்டியது அவசியம் என்று கல்வி ஆராய்ச்சி காட்டுகிறது. ஒரு முறையாவது அதற்கு முயற்சி செய்யுங்கள். அப்போது நான் சொல்வது உண்மை என்பதை நீங்களே ஒத்துக்கொள்வீர்கள்.

**ஒரு போதகர் மற்றும் யூனியன் இலாக்கா இயக்குனர் உட்பட இரண்டு சாட்சிகள்.**

இவ்விருவரும் ஒய்வு பெற்று தற்பொழுது அமெரிக்காவில் வசித்து வருகின்றனர்.

**1. சாட்சி - தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்** என்ற உங்கள் புத்தகத்தை நான் மூன்று முறை படித்தேன். நீங்கள் விளக்கியதைப்போல தேவனின் வாக்குறுதிகளை அடிப்படையாகக் கொண்ட பிரார்த்தனை பற்றிய புதிய வெளிச்சத்தைக் கண்டுபிடிப்பேன் என்று நான் ஒருபோதும் நினைத்ததில்லை. அதுமுதல் என்வாழ்க்கையில் நான் கொஞ்சமும் சாத்தியம் என்று எதிர்பார்த்திராத வெற்றிகளை தேவன் என் வாழ்க்கையில் அடைந்தார். ஒரு முகாம் கூட்டத்தில் (Camp meeting) பிரசங்கிக்க நான் அழைக்கப்பட்டேன். நான் பிரசங்கிக்க வேண்டிய தலைப்பை உங்கள் புத்தகம் கொடுத்தது. June 26, 2017 – FS சுருக்கப்பட்டது.

**2. சாட்சியம்** - நான் உங்கள் புத்தகத்தை படிக்க ஆரம்பித்ததிலிருந்து (புத்தகத்திலுள்ள அறிவுரைப்படி நான் அதை ஆறு முறை படித்தேன்) தேவ வாக்குறுதிகளை பற்றிப்பிடித்து பிரார்த்தனை செய்யக் கற்றுக்கொண்டதால் என் வாழ்க்கை மாற்றப்பட்டது... **தேவ ஆவியானவரின் சமூகத்திலிருந்து வரும் இளைப்பாறுதலும் நம்முடைய மிகப்பெரிய தேவையும்** என்பது பற்றி, முகாம் கூட்டத்திற்கு ஒரு பிரசங்கத்தைத் தயாரிக்க கர்த்தர் எனக்கு வழிகாட்டினார். நான் ஊழியத்திற்காக அர்ப்பணித்த எல்லா வருடங்களிலும் அந்த அரங்கில் கூடியிருந்த 3000 பேர்களிடத்தில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை இறங்கியதை நான் உணரவில்லை. என்னுள் ஏற்பட்ட முழுமையான மாற்றத்தை என் மனைவி கவனித்தாள். நானா அப்படி மாறிவிட்டேன் என்பதைக் குறித்து நான் ஆச்சர்யப்படுகிறேன். July 25th 2017- FS சுருக்கப்பட்டது

**40 - நாள் கூட்டம் : 17பேர்களிலிருந்து - 65உறுப்பினர்களாக**

கொலோன் – கல்கில் உள்ள சிறு சபையில் 17 ஜெர்மன், ஸ்பானிஷ்

மற்றும் போர்ச்சுகீஸ் உறுப்பினர்கள் இருந்தனர். போதகர் J. லோட்ஸே 40 நாள் கூட்டத்தை நடத்த அவர்களை அழைத்தார். அவர்கள் இரண்டு குழுக்களாக 40 நாட்கள் புத்தகத்தைப் படித்தனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் தாங்கள் சந்தித்திராத 5 நபர்களுக்காக பிரார்த்தனை செய்தனர். பின்னர் அவர்களுடன் தனிப்பட்ட தொடர்பை ஏற்படுத்திக் கொண்டனர். 40வது நாளில் அவர்கள் விருந்தினர் ஓய்வுநாள் நிகழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தனர். அது சுவிசேஷக்கூட்டத்தின் 14வது நாளாகும். குறுகிய காலத்தில் அவர்களால் 13 பேருக்கு ஞானஸ்நானம் கொடுக்க முடிந்தது. அவர்கள் 40 நாள் கூட்டத்தை பல முறை அடுத்த நான்கு வருடங்களில் நடத்தி 65 அங்கத்தினர்களைக் கொண்ட சபையாக வளர்ந்தனர். (40 நாட்கள் கூட்டத்திற்கான புத்தகத்தைப் பார்க்கவும் மற்றும் கொலோனில் நிகழ்ந்த "அனுபவங்களை" பார்க்கவும்).

## லுகானோ, சுவிட்சர்லாந்தின் இத்தாலிய மொழி பேசும் பகுதி - மிகவும் மதசார்பற்றது

டென்னிஸ் ஸ்மித்தின் புத்தகமான 40 நாள் நிகழ்ச்சியின் மூலம் தென்ஆப்ரிக்காவில் மிஷினெரியாக ஊழியம் செய்த போதகர் மத்தியாஸ் மேக் மிகச்சிறந்த அனுபவங்களை கொண்டிருந்தார். அவர் சுவிட்சர்லாந்து திரும்பியதும் உடனடியாக இந்த நிகழ்ச்சி நிரலை தொடங்கினார். முதல் ஆண்டில் 15 பேர் ஞானஸ்நானம் பெற்றனர் (இந்த பிராந்தியத்தில் இது மிகவும் அசாதாரணமானது). ஒரு பெண் 15 வருடங்களாக சபைக்கு வழக்கமான விருந்தாளியாக வந்து கொண்டிருந்தாள். இந்த 40 நாள் நிகழ்ச்சியின் முடிவில் அவள் ஞானஸ்நானம் எடுக்க முடிவு செய்தாள்.

**இளைஞர்** – என் பெயர் அலினா வான் ரென்ஸ்பர்க், நான் (12200 அங்கத்தினர்களைக் கொண்ட ஆஸ்திரேலியாவில்) சவுத் குவின் கான்ஃபரன்ஸிலேயே இளம் வயதுள்ள வாலிபர்களுக்கு இயக்குனராக பணிபுரிகிறேன். ஒரு இளம் பெண், "தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்" என்ற புத்தகத்தை இவ்வாண்டின் துவக்கத்தில் என்னிடம் பகிர்ந்து கொண்டாள். அதை படித்தபோது நான் முற்றிலும் திகைத்துப் போனேன். நானும் எனது கணவரும் எந்தக் காரியத்தைக் குறித்த பாரத்தை எங்கள் இதயங்களில் சுமந்து கொண்டிருந்தோமோ அதே காரியத்தை அது பேசியது; நம் வாழ்வில் பரிசுத்தஆவியின் விழிப்புணர்வு! நான் உங்களுக்கு பல கதைகளைச் சொல்ல முடியும். ஆயினும் சுருங்கச் சொன்னால் இந்த புத்தகத்தால் நாங்கள் பெரிதும் ஆசீர்வதிக்கப்பட்டோம். சீடத்துவமும் ஆன்மீக வளர்ச்சியும் இலாக்கா – இயக்குனரான கிரக் பிராட் என்பவர் 300 புத்தகங்களை பெற்று இந்த ஆண்டின் துவக்கத்தில் இளம் வாலிப

தலைவர்களுக்காக நடத்தப்பட்ட கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் வழங்கினார். அதன் விளைவு மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. எனவே, இந்த ஆண்டு பிக்கேம்பில் எனது இளைஞர்களுக்கு லைஃப் குருப் அமர்வுகளில் படிப்பதற்காக கூடுதல் 150 புத்தகங்களை பெற விரும்புகிறேன். .

**366 ஞானஸ்நானங்களும் + ஞானஸ்நான வகுப்பில் 35 பேர்களும்**

1,30,000 அங்கத்தினர்களைக் கொண்ட புருண்டி யூனியனின் செயலாளரான, பால் இராகோஸ், அனைவருக்குமாக சேர்த்து 1,00,000 "**தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்**" என்ற புத்தகங்களை கிருண்டியிலிருந்து பெற்றதாகக் கூறினார்.

இந்த புத்தகத்தின் செல்வாக்கின் மூலம் சத்தியத்திலிருந்து மருளவிழுந்த 320 பேர்கள் மார்ச் 2017ல் மறு ஞானஸ்நானத்தின் மூலம் சத்தியத்திற்குத் திரும்பி வந்தனர்.

**காது கேளாதோர்** – மூன்று முறை இந்தக் கையேட்டை வாசித்தனர். பின்னர் அவர்கள் மற்ற காது கேளாதவர்களுடன் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். அதன் விளைவாக மார்ச் 2017ல் காது கேளாத மேலும் 25 நபர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தோம்.

**கைதிகள்** – எம்பிம்பா சிறையில் உள்ள எங்கள் சபை அங்கத்தினர்களுக்கு இந்த கையேட்டை விநியோகித்தோம். அவர்கள் பரிசுத்த ஆவியால் உந்தப்பட்டு தங்கள் விசுவாசத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளத் தொடங்கினார்கள். கடந்த ஓய்வுநாளில் 21 கைதிகள் ஞானஸ்நானம் பெற்றனர் மற்றும் 35 பேர் ஞானஸ்நானத்திற்கு தயாராகி வருகின்றனர். இது "தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்" என்ற கையேட்டின் கனிகள் எனலாம். சுருக்கம்

**ஜெபவாரம்**

புருண்டி யூனியன் நவம்பர் 2017ல் 1,30,000 பேர்களுக்கான ஜெபவாரத்தை நடத்தியது. அதில் **தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்** என்ற புத்தகத்தை மீண்டும் பயன்படுத்தியது. அதில் நம்முடைய செயலாளர் அவர்கள் கொடுத்த தேவசெய்தி அன்வென்டிஸ்ட் வானொலி மூலம் ஒவ்வொரு மாலையிலும் ஒளிபரப்பப் பட்டன.

**மாணவர்கள்** – ஆண்ட்ரூஸ் பல்கலைக்கழகத்தின் தலைமைப் போதகரான பாஸ்டர் டுவைட் நெல்சன், "இந்த சிறிய புத்தகம் என் உள்ளத்தை மாற்றியது. நான் உங்களுக்காக அதையே செய்ய விரும்புகிறேன்" என்றார். அவர் செப்டம்பர் 2, 2017ல்: "கிரவுண்ட் ஜீரோ

மற்றும் புதிய சீர்திருத்தம்: பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் பெறுவது எப்படி? என்ற மூன்று சொற்பொழிவுகளின் தொடரைத் தொடங்கினார். "**தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்**"லிருந்து அவர் மேற்கோள் காட்டி அதை ஒவ்வொருவருக்கும் பரிந்துரைத்தார். அதன்படி 4000 பதிவிறக்கங்கள் மற்றும் ஆயிரக்கணக்கானோர் அந்த சிறு புத்தகங்களை விலைகொடுத்து வாங்கினர். அவரது சொற்பொழிவுகள் மற்றும் அவரது வலைப்பதிவின் இணைப்பு இதோ: https//www.pmchurch.tv/sermons

**ஒரு அற்புதமான யோசனை –** அமெரிக்காவிலிருந்து – நான் நேற்று டுவைட் நெல்சன் அவர்களின் சொற்பொழிவுத் தொடரை கேட்டேன். "**தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்**" என்ற புத்தகத்தை இந்த ஓய்வுநாளில் நான் எனது சபையில் அறிமுகப்படுத்தும்போது, எனது சாட்சி சிலரின் ஆர்வத்தை தூண்டும் என்ற நம்பிக்கையில் நான் முதல் ஐந்து நிமிடங்கள் ஜெபிக்கப்போகிறேன். மதிய உணவிற்குப்பின் எனது போதகர்களின் அனுமதியுடன் மீதமுள்ள பிரசங்கத்தை ஆர்வமுள்ளவர்களுக்கு காண்பிப்போம். DW

**ஊழியம் –** டுவைட் நெல்சன் தனது வலைப்பதிவில் அக்டேபர்11, 2017ல் எழுதுகிறார் (சுருக்கப்பட்டு திருத்தப்பட்டது)

தொண்ணுற்றொரு "விருத்தினர்கள்" ஜாக்ரெப் அட்வென்டிஸ்ட்களுடன் 90 நிமிட இரவு நிகழ்ச்சியில் பங்கு பெற்றனர். தனிப்பட்ட ஒருவர் தன்னுடைய குறிப்பில் 'உங்கள் பரிந்துரை பிரார்த்தனைகளுக்கு நன்றி தெரிவிப்பதுடன், நான் சுவிசேஷ ஊழியத்தில் ஈடுபட்டிருந்த எல்லா வருடங்களிலும் பெற்றிராத அனுபவத்தை ஜாக்ரெப்பில் பொது நற்செய்தி பிரசங்கத்தில் பெற்றேன் என்பதை சாட்சியாக அறிவிக்க விரும்புகிறேன்.' பயோனியர் சபை போதகர்களிடம் நான் சொன்னது போல, ஒருங்கிணைந்த பிரார்த்தனையின் விளைவாக – அந்த நகரத்தில் இரவும் பகலும் பரிசுத்த ஆவியின் முழு தலையீட்டின் பலனாக நடைபெற்று வருகிறதென்பதை நான் உங்களுக்கு நினைவூட்டுகிறேன். லூக்கா 11:13ல் கிறிஸ்து தம் சீஷரிடம் கூறியதுபோல நம்மையும் ஜெபிக்க அழைக்கிறார். செப்டம்பர் மாதத்தில் நம்மில் பலர் அனுதின பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திற்காக தேவனைத் தேட ஆரம்பித்தோம். அதனால் ஜாக்ரெப்பில் தனிப்பட்ட விதத்தில் நான் அனுபவித்ததையும் மற்றும் நான் கண்டதையும் வைத்து என்னால் தேவனுடைய வாக்குத்தத்தைக் குறித்து முழு நம்பிக்கையுடன் இருக்க முடிகிறது. இவை அனைத்திலும் நான் என்னைப் பற்றி எதுவும் கூறவில்லை – ஆனால் இயேசுவின் வாக்குறுதியின்

உண்மைத்தன்மையைப் பற்றியே கூறுகிறேன். "பரிசுத்த ஆவி உங்கள் மேல் வரும்போது நீங்கள் பெலனடைவீர்கள்"(அப்.1:8). எனவே நாம் எதைச் செய்தாலும் ஒவ்வொரு நாள் காலையிலும் நாம் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்திற்காக அவரைத் தேடுவதை விட்டுவிடக்கூடாது.

**ஒப்புரவாகுதல்:** தனிநபர்கள் மற்றும் குடும்பங்களில் நல்ல அனுபவங்கள் இருந்திருக்கின்றன. (அனுபவங்களை காண்க (2/17; 31; 3/35 ; 3/40 ; 4/52; 4/56) பதட்டங்கள், சண்டைகள், பிரிவுகள், காயங்கள், மன்னியாமை, உணர்ச்சி கொந்தளிப்புகளின் மத்தியில் அன்பு, அமைதி, மன்னிப்பு மற்றும் நல்லிணக்கத்திற்கெதிரான தனிப்பட்ட தாக்குதல்களிலிருந்து முழு சபையும் அடைந்த அனுபவங்கள். (அனுபவங்கள் எண். 1/10 ; 7/84).

**இளம் தாய் - குழந்தைகள் - அமெரிக்கா:** உண்மையில் மூன்று சிறுவர்களை வளர்க்கும் பெரும் பொறுப்பை நான் உணர்கிறேன். ஒவ்வொரு நாளும் பரிசுத்த ஆவியானவர் என்னை ஆட்கொள்ள வேண்டும் என்று தினமும் கேட்பது மட்டுமே எனக்கிருக்கும் ஒரே நம்பிக்கை. உங்கள் புத்தகத்தைப் படித்ததிலிருந்து என் பையன்களின் நடத்தையில் என்ன வித்தியாசத்தை ஏற்படுத்தியிருக்கிறதென்று பார்த்தேன். பொதுவாக பொறுமை இல்லாத இடத்தில் இப்போது என்னிடம் பொறுமை இருக்கிறது, நான் ஏமாற்றமடையும் இடத்தில் அன்பும் இரக்கமும் இருக்கிறது. மேலும் அவர்கள் தங்கள் தப்பிதங்களை உணர்ந்து அமைதலாக இருப்பார்கள். நிச்சயமாக நாங்கள் வளர்கிறோம், இயேசு என்னில் எப்படி ஜீவிக்க முடியும் என்ற எளிய உண்மையைப் புரிந்து கொண்டதற்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்! D.W.

**ஆர்வத்தை அதிகரிப்பது எப்படி?** இந்த பட்டியலின் கீழ் நீங்கள் மதிப்புமிக்க பரிந்துரைகளைக் காணலாம். தொடங்குவதற்கு மிகவும் எளிதான ஒரு விஷயம் என்னவென்றால், "ஒருங்கிணைந்த வாசிப்பு" என்ற பரிந்துரையாகும். கருத்தரங்கு நடத்துவதன் மூலம் வலுவான ஊக்கம் கிடைக்கிறது. அதை நீங்களே செய்யலாம் அல்லது விருந்தினர் ஒருவரை பேச்சாளராக வைத்திருக்கலாம் (அல்லது வீடியோ நிகழ்ச்சிகளைக் கூட பயன்படுத்தலாம்). கருத்தரங்கிற்கு முன்னும் பின்னும் "ஒருங்கிணைந்த வாசிப்பு" இருந்தால் நீங்கள்அந்த கருத்தரங்கின் பயனை மேலும் அதிகரிக்கலாம்.

**என் வேண்டுகோள்:** உங்களுக்கு நெருக்கமான ஒருவருடன் சேர்ந்து ஜெபித்து எத்தனைமுறை படிக்க முடியுமோ அத்தனை முறை இந்த

கையேட்டைப் படிக்க – ஒரு மூத்த சகோதரனாக நான் உங்களுக்கு பரிந்துரைக்கிறேன். இப்படி செய்வது உங்கள் குழு, சபை அல்லது கான்ஃபரன்ஸின் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்திற்கு வழிநடத்தும்.

போதகர்கள், மூப்பர்கள் மற்றும் பிற முக்கிய உறுப்பினர்களுடன் உங்கள் நுண்ணறிவையும் மற்றும் உங்கள் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்வது அடுத்தகட்டமாக இருக்க முடியுமா? அவர்களின் இதயங்களை அடைவது மிகவும் முக்கியம். எத்தியோப்பியாவில் அப்படித்தான் தொடங்கியது. ஜூலை 2017ல் 500 போதகர்கள் எழுப்புதல் வாரத்தின் இறுதியில் அம்ஹாரிக்கில் கையேட்டைப் பெற்றார்கள். வடக்கு பிலிப்பைன்ஸ் யூனியனில் இந்த கையேடு ஜூன் 2017ல் 1500 நபர்களுக்கு பிலிப்பினோவில் நடந்த பிரார்த்தனை மாநாட்டில் கொடுக்கப்பட்டது.

**அனுபவங்கள்**

நீங்கள் உங்கள் தனிப்பட்ட சாட்சிகளையும் மற்றும் எங்கள் ஆவணங்களில் உள்ள சாட்சிகளையும் பகிர்ந்து கொள்வீர்களா? அவைகளில் பெரும் உத்வேகம் இருக்கிறது. தேவைப்பட்டால் "**தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்**" – புத்தகங்களிலுள்ள சாட்சியங்களையும் பயன்படுத்தலாம்

**அன்புள்ள வாசகரே!**

பரிசுத்த ஆவியில் நாம் வளருவோம். கர்த்தர் தாமே 'ஆவியிலே நிறைந்திருங்கள்' என்று கட்டளையிட்டிருக்கிறார். (MB. 20:3): நீங்கள் இடைவிடாமல் அனுதினமும் "ஆவியிலே நிறைந்திருங்கள்" (எபே.5:18). நம்மிலிருக்கும் கிறிஸ்துவும் பரிசுத்த ஆவியானவரும் நம்மை "நற்செய்தியாளர்களாக" மாற்றுவாராக (ஏசா.40:9).

"**பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்**" (அப்.1:8) என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகிலிருந்தபோது கூறிய கடைசி வார்த்தைகளை மறந்து விடாதீர்கள்.

கிறிஸ்துவுக்குள் உங்கள் சகோதரன்

**ஹெல்மட் ஹவுபைல்**

# முக்கிய வார்த்தைகள்

## நம் திருச்சபைகளை இயேசுவின் அருகில் கொண்டு வாருங்கள்

இந்த புத்தகத்தை மொழிபெயர்த்து ஒன்றியம் முழுமைக்கும் பயன்படுத்தியதற்கு நன்றி சொல்ல விரும்புகிறேன். இந்த புத்தகத்தில் உள்ள ஊக்கமும் போதனைகளும் என்னை தனிப்பட்ட முறையில் ஆசீர்வதித்துள்ளன. மேலும் நமது திருச்சபை இயேசுவிடம் நெருங்கி வரவும் வாழ்க்கையை மாற்றும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை தனிப்பட்ட முறையில் அனுபவிக்கவும் இவற்றை பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்துவார் என்று நான் நம்புகிறேன். **- ஒன்றியத்தின் தலைவர்**

## தேவனே நான் எதை தவறவிட்டிருக்கிறேன் என்பதை காட்டுங்கள்!

"தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்" புத்தகத்திற்காக நான் தேவனை துதிக்க விரும்புகிறேன். தேவனுடனான எனது பாதை சமீபகாலமாக சற்று கடினமாக உள்ளது. ஆகவே நான் தவறவிட்டதை எனக்கு வெளிப்படுத்தும்படி அவரிடம் கேட்டேன். 3ABNன் ஒளிபரப்புகளை அடிக்கடி கேட்டு வருகிறேன். அதிகாலை 2 மணி அளவில் ஒரு அமைதியான குரல் என்னை தட்டியெழுப்பியது. நான் விழித்தபோது 3ABN பேச்சாளர் 'பரிசுத்த ஆவி' என்ற கருப்பொருளைக் குறிப்பிட்டு "தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்" என்ற புத்தகத்தை இணையதளத்தில் பார்க்கக் கூறினார். உடனே புத்தகத்தை பதிவிறக்கம் செய்து அப்போது முதல் என் ஜெப–தியான நேரத்தில் அதைப் படித்து வருகிறேன். இந்த புத்தகம் என் ஆவிக்குரிய கண்களைத் திறந்துவிட்டது. பரிசுத்த ஆவியானவர் எவ்வளவு முக்கியமானவர் என்பதையும் அவர் ஏன் நம்முடன் இங்கே பணியாற்றுகிறார் என்பதையும் நான் இப்போது தெளிவாக அறிவேன். அவர் எப்போதுமே இருக்கிறார் என்பதை நான் அறிவேன். ஆயினும் அவருடைய பரிமாணத்தைப் நான் சரியாக புரிந்து கொள்ளவில்லை. இந்த புத்தகம் – அவர் யார் என்பதையும் என்னுடைய ஆவிக்குரிய பயணத்தில் அவர் என்ன பங்கு வகிக்கிறார் என்பதையும், மேலும் என்னுடைய பழைய சுபாவங்களையும் பாவஆசைகளையும் எதிர்த்து போராடுவதற்கு பரிசுத்த ஆவியானவரை அனுதினமும் அழைப்பது எவ்வளவு முக்கியம் என்பதையும் எனக்கு புரிய வைத்தது. நான் இந்த புத்தகத்தை ஒன்றன் பின் ஒன்றாக படித்து வருகிறேன். இது என்னை மிகவும் ஆசீர்வதித்துள்ளது. எனது ஆவிக்குரிய பாதை ஏன் இவ்வளவு கடினமாக இருந்ததென்பதற்கு, வல்லமையின் ஆதாரமான பரிசுத்த ஆவியுடன் நான் இணைக்கப்படவில்லை என்பதே காரணம் என்பதை இப்போது நான் நன்கு புரிந்து கொள்கிறேன். நான் உங்களுக்காக ஜெபிப்பேன். – ஆஸ்திரேலியாவிலிருந்து R.V

## நாம் பொருளாதார வறுமையால் அல்ல ஆவிக்குரிய வறுமையால் பாதிக்கப்பட்டிருக்கிறோம்!

கடந்த ஆண்டு இறுதியில் ஸ்பைசர் அட்வென்டிஸ்ட் பல்கலைக்கழத்தில் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்டேன். அமெரிக்காவின் முக்கிய பேச்சாளரிடம் "தனிப்பட்ட எழுப்புதலுக்கானபடிகளின்" நகல் இருந்தது. அவரது உரைகள் இந்நூலில் இருந்து வந்தவை. "நாம் பொருளாதார வறுமையால் அல்ல ஆவிக்குரிய வறுமையால் பாதிக்கப்பட்டிருக்கிறோம்" என்று அவர் கூறினார். – பங்களாதேஷில் இருந்து R.K.



### தனிப்பட்ட எண்ணங்கள் மற்றும் கலந்துரையாடலுக்கான வழிகாட்டி

1. இறையியலில் எப்பொழுதும் "மாற்றான்தாய் பிள்ளை"யாக என்னப் படுவது எது? அது என்ன விளைவுகளை ஏற்படுத்தும்?

_______________

2. எந்த வாக்குறுதியை நாம் பற்றிக்கொண்டு கேட்க வேண்டும் (சகரி. 4:6) இது உங்களுக்கும் உங்கள் சபைக்கும் என்ன அர்த்தமுடையது?

_______________

3. நல்ல பலன்களை எதிர்பார்க்க எந்த முக்கிய நிபந்தனைகளை நிறைவு செய்ய வேண்டும்? _______________
4. மேற்கோள் காட்டப்பட்ட அனுபவங்களில் குறிப்பாக உங்களைத் தொட்டது எது? ஏன்? _______________

### நமது ஜெப நேரம்

- ➢ உங்கள் ஜெப–பங்காளியுடன் தொடர்பு கொண்டு இந்த தலைப்பைப் பற்றி விவாதியுங்கள்.
- ➢ உங்கள் ஜெப–பங்காளியுடன் சேர்ந்து ஜெபியுங்கள்.

1. ஏற்றுக்கொள்ளவும், கற்றுக்கொள்ளவும் மற்றும் பரிசுத்த ஆவியின் செயல்பாட்டிற்கு திறந்த இதயத்திற்காகவும் ஜெபியுங்கள்.
2. பரிசுத்த ஆவியின் பணியில் நீங்கள் போதுமான கவனம் செலுத்தாத பகுதி எது என்பதைப் பற்றிய தெளிவான புரிதலுக்காக ஜெபியுங்கள்.
3. சபையில் உள்ள அனைத்து போதகர்கள், ஆசிரியர்கள் மற்றும் பிற தலைவர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையை அனுபவிக்கவும் அவரால் வழிநடத்தப்பட தயாராக இருப்பதற்கும் ஜெபியுங்கள்.
4. தேவனுடனான தனிப்பட்ட அனுபவங்களுக்கு – பரிசுத்த ஆவியின் மூலம் அவர் உங்களில் எவ்வாறு செயல்பட முடியும்.

நாள் 2

# இயேசுவின் மிகச்சிறந்த பரிசு!

## பரிசுத்த ஆவியைப் பற்றி இயேசு என்ன கற்பித்தார்?

## இயேசுவின் வல்லமை நிறைந்த செய்தியை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா?

### தனிப்பட்ட சாட்சிகளில் சில...

**"ஆதியில் கொண்டிருந்த அன்பிற்கு" திரும்புதல்:** நானும் எனது நண்பரும் "தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்" என்ற சிறு புத்தகத்துடன் தற்போது 40 நாட்கள் புத்தகத்தை மூன்றாவது முறையாக திரும்பத்திரும்ப படித்துக்கொண்டிருக்கிறோம் என ஒரு சகோதரி எனக்கு எழுதினார். இந்த விஷயத்தை நாங்கள் கண்டுபிடிப்பதற்கு முன் எங்கள் நம்பிக்கையும் அனுபவமும் ஜெபவாழ்க்கையும் முன்னொரு காலத்திலும் இருந்ததில்லை. நாங்கள் மீண்டும் ஆதியில் கொண்டிருந்த அன்பை கண்டுபிடித்தோம். நமது ஆண்டவர் ஜெபங்களுக்கு பதிலளிக்கிறார். நம் மீதும் நாம் ஜெபிக்கும் நபர்கள் மீதும் பரிசுத்த ஆவி எவ்வாறு செயல்படுகிறார் என்பதை அவர் வெளிப்படுத்துகிறார்.

**இயேசு எங்கள் வாழ்வில் நுழைந்தார்:** "அவை என் வாழ்க்கையில் ஒரு மிகப்பெரிய எதிர்பார்க்கப்பட்ட ஆசீர்வாதமாய் மாறிவிட்டது என இந்த புத்தகங்களைப் பற்றி வேறொருவர் எழுதினார். பிறசபை உறுப்பினர்களும் மற்றும் எங்கள் சபையைச் சேர்ந்த ஒரு சகோதரியும் அனுபவித்ததைப் போன்ற அனுபவம் எங்களுக்கு இருந்ததில்லை. ஆனால் இப்போது இயேசு எங்கள் வாழ்க்கையில் நுழைந்து எங்களை மாற்றத் தொடங்கினார் என்பதை அனுபவிக்கும் பாக்கியம் எங்களுக்கு கிடைத்துள்ளது. அவர் இன்னும் எங்களிடையே கிரியைச் செய்கிறார் நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாக அவரிடம் நெருங்கி சேர்கிறோம். S.K.

இயேசுவால் இவ்வளவு பெரிய செல்வாக்கை எப்படி ஏற்படுத்த முடிந்தது? என இயேசுவின் சீஷர்கள் தங்களைத் தாங்களே கேட்டுக்கொண்டார்கள். அது அவருடைய ஜெபவாழ்க்கையுடன்

தொடர்புடையதா? ஆகவேதான் அவர்கள், "ஆண்டவரே எங்களுக்கு ஜெபிக்கக் கற்றுத்தாரும்" என்று அவரிடம் வேண்டிக்கொண்டார்கள். அவரும் அவர்களுடைய வேண்டுதலுக்கு பதிலளித்தார்.

லூக்கா 11:13ல் ஜெபத்தைப் பற்றிய அவருடைய பாடம் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. கர்த்தருடைய ஜெபம், நள்ளிரவில் வந்த நண்பனின் வருகை பற்றிய உவமை மற்றும் உச்சக்கட்டமாக பரிசுத்த ஆவிக்காக தொடர்ந்து விடுக்கும் வேண்டுகோள்.

இந்த உவமையில் (வசனங்கள் 5–8) நள்ளிரவில் ஒரு மனிதனின் வீட்டிற்கு விருந்தாளி ஒருவன் வருகின்றான். அவனுக்கு முன் வைப்பதற்கு வீட்டுக்காரனிடம் எதுவும் இல்லை. செய்வதறியாமல் அவன் தன் அண்டை வீட்டுக்காரனிடம் சென்று, அவனுக்கு முன் வைப்பதற்கு தன்னிடத்தில் ஒன்றும் இல்லையென்பதை விளக்கி அப்பத்தை இரவலாகக் கேட்கிறான். அப்பத்தைப் பெறும் வரை தொடர்ந்து கெஞ்சுகிறான். இப்பொழுது அவனிடம் தனக்கும் தன்னுடைய விருந்தினனுக்கு முன் வைப்பதற்கும் அப்பம் – ஜீவ அப்பம் இருக்கிறது. இப்பொழுது அவன் பகிரக்கூடிய நிலையில் இருக்கிறான்.

இயேசு இந்த உவமையை (பிரச்சனை: என்னிடத்தில் ஒன்றுமில்லை) பரிசுத்த ஆவியின் தேவையுடன் சம்பந்தப்படுத்தி: "கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்" (லூக்கா 11:9) என்றார்.

### இயேசு: பரிசுத்த ஆவியைக் கேளுங்கள் என்ற சிறப்பான வேண்டுகோளை விடுகிறார்.

பரிசுத்த ஆவியைக் கேட்கும்படி இயேசு நமக்கு உறுதியாக கட்டளையிட்ட ஒரு குறிப்பிட்ட வேதாகமப் பகுதி இது. நமது இதயத்தைத் தொடும்படி அன்புடன் வலியுறுத்தும் இந்த பகுதியைத் தவிர வேதாகமத்தில் வேறொரு பகுதியிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. லூக்கா 11ல் உள்ள இந்த வசனங்கள் ஜெபத்தைப்பற்றிய அவருடைய படிப்பினையாகும். நாம் பரிசுத்த ஆவியைக் கேட்க வேண்டும் என்று அங்கே அவர் வலியுறுத்தினார். லூக்கா 11:9–13

இந்த ஒருசில வசனங்களில் "கேளுங்கள்" என்ற வினைச் சொல்லை இயேசு ஆறு முறை பயன்படுத்தியுள்ளார். பின்னர் அவர் கேளுங்கள் என்பதற்குப் பதிலாக இரண்டு முறை "தேடுங்கள்" என்று வலியுறுத்தினார். இதுவும் ஒரு செயல் வார்த்தையே – மேலும் இரண்டு முறை "தட்டுங்கள்" என்ற வினைச் சொல்லையும் பயன்படுத்தியுள்ளார்.

பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுவதற்கு நாம் நடவடிக்கை எடுக்க

வேண்டும் என்று அவர் தெளிவாகக் காட்டுகிறாரா? கேளுங்கள் என்று கடைசியாக சொல்லப்படும் வார்த்தை கிரேக்க மொழியில் தொடர்ந்து கேட்க வேண்டும் என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதாவது நாம் ஒரு முறை மட்டும் கேட்கக்கூடாது, மாறாக தொடர்ந்து கேட்க வேண்டும். அவசரத் தேவைக்காக மட்டும் கேட்டு பின்னர் நிறுத்தி விடாமல் தொடர்ந்து கேட்க வேண்டும் என்று இயேசு இங்கே எதிர்பார்க்கிறார். இந்த இதயப்பூர்வமான அழைப்பின் மூலம் பரிசுத்த ஆவியின் மீதான நமது விருப்பத்தை அவர் நிச்சயப்படுத்த விரும்புகிறார். பரிசுத்த ஆவியின் ஊற்றை நாம் தொடர்ந்து கேட்காவிட்டால் முக்கியமான ஒன்றை நாம் இழக்க நேரிடும் என்று இயேசுவின் இந்த அவசர அழைப்பு நமக்குக் காட்டுகிறது. "நமது மாபெரும் தேவை பரிசுத்த ஆவியானவர்" என்ற உண்மையை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ளும்படி நம் கவனத்தை ஈர்க்கிறார். இதன் மூலம் நாம் பரிசுத்த ஆவியானவரின் வளமான ஆசீர்வாதங்களைப் தொடர்ந்து பெற வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

கிறிஸ்துவின் பொருட்பாடங்கள் என்னும் புத்தகம் கூறுவதாவது: "ஒரே ஒரு முறை கேளுங்கள் பெற்றுக்கொள்வீர்கள் என்று தேவன் சொல்லவில்லை. தொடர்ந்து சோர்ந்துபோகாமல் ஜெபத்திலே தரித்திருங்கள். அப்படி தொடர்ந்து கேட்பது விண்ணப்பிப்பவரை மிகவும் தீவிரமான அணுகுமுறைக்கு கொண்டுவருவதோடு, அவர் எந்த விஷயங்களுக்காக விண்ணப்பித்தாரோ அவற்றைப் பெற்றுக்கொள்வதில் அவருக்கு அதிக விருப்பத்தை அளிக்கிறது." - EG White, COL p.145.3

பின்னர் இயேசு மூன்று உதாரணங்களைக் கொடுத்தார், இதன் மூலம் பொல்லாதவர்களான மனித தகப்பன்மார்களே தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளை கொடுக்க நினைக்கும்போது நமது பரமதகப்பன் நமக்கு பரிசுத்த ஆவியைக் கொடுக்க மாட்டாரா என்பதை அவர் நமக்குச் சுட்டிக்காட்டுகிறார். நாம் பொருத்தமான வழியில் கேட்கும்போது பரிசுத்த ஆவியானவரைப் பெறுவோம் என்ற உறுதியான நம்பிக்கையோடே இருக்க வேண்டுமென இயேசு விரும்புகிறார். இந்த வாக்குறுதி மற்றும் பிறவாக்குறுதிகளின் மூலம் நாம் விசுவாசத்துடன் கேட்கவேண்டும். மாத்திரமல்ல நாம் கேட்டவைகளை ஏற்கெனவே பெற்றுக்கொண்டோம் என்பதையும் அறியவேண்டும் (1யோவான் 5:14–15).

இந்த விசேஷ அழைப்பில் இயேசு சுட்டிக்காட்டுவதுபோல, பரிசுத்த ஆவியைக் கேட்காமல் இருக்கும்போது, அத்தியாவசியமான ஒன்று காணமல் போகிறது. பரிசுத்த ஆவியானவரே நம்முடைய மிகப்பெரிய தேவையென அவர் நம் கவனத்தை ஈர்க்கிறார். மேலும் பரிசுத்த ஆவியின்

ஆசீர்வாதங்களை நாம் தொடர்ந்து அனுபவிக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

ஜெபத்தைக் குறித்த அவரது பாடத்தின் இந்த பகுதி ஒரு தனித்துவமான செயல்முறையாகும். பரிசுத்த ஆவியானவர் தேவனின் மிகப் பெரிய பரிசு – அதாவது மற்ற எல்லா வரங்களையும் அவருடன் கொண்டுவரும் பரிசாகும். இது இயேசு தம் சீஷர்களுக்கு வழங்கிய உன்னத பரிசும் அவரது அன்பின் தெளிவான சான்றுமாகும். அத்தகைய மதிப்புமிக்க பரிசு யார் மீதும் வலுக்கட்டாயமாக திணிக்கப்படாது என்பதை நம்மால் விளங்கிக் கொள்ள முடியும் என்று நினைக்கிறேன். தங்களுடைய விருப்பத்தை வெளிப்படுத்தி அதை பாராட்டுபவர்களுக்கு மட்டுமே இந்த பரிசு வழங்கப்படுகிறது.

இயேசுவிடம் தங்கள் வாழ்க்கையை ஒப்படைத்தவர்களுக்கு அவர் கொடுக்கப்படுவார்; தொடர்ந்து அர்ப்பணிப்போடு வாழ்பவர்களுக்கு அவர் கொடுக்கப்படுவார். யோவான் 15:4–5ல் அவ்வர்ப்பணிப்பு வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

- தேவனுக்காக ஏங்குதல் ("தாகமாயிருக்கிறவன் எவனோ" யோவான் 7:37).
- தேவனிடம் விசுவாசமாயிருத்தல் ("வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ" யோவான் 7:38)
- தேவனை நம்புவதால் தங்களை முழுமையாக ஒப்படைத்தல் ("நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுங்கள்" ரோமர் 12:1).
- அனைத்திலும் தேவனை பின்பற்றுதல் ("தேவனுக்குக் கீழ்ப்படிகிறவர்கள்" அப் 5:32)
- தங்கள் சொந்த வழியை கைவிட்டு தேவனுடைய வழிநடந்து அவருடைய விருப்பத்தின்படி வாழுதல் (மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் – அப் 2:38)
- தவறான எதையும் திட்டமிடக்கூடாது ("என் இருதயத்தில் அக்கிரமசிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார்." சங்.66:18).
- தங்களின் பெரிய தேவையை உணர்ந்து ஒப்புக்கொள்ளுதல் (என்னிடம் ஒன்றும் இல்லை – லூக் 11:6).

➢ தொடர்ந்து பரிசுத்த ஆவிக்காக கேளுங்கள் – (லூக். 11:9–13).

தேவன் நமக்காக வைத்திருக்கும் இந்த எதிர்பார்ப்புகளில், இந்த பரிசு எவ்வளவு மதிப்பு மிக்கது என்பதை உங்களால் தெளிவாக காண முடியவில்லையா? இந்த முன்நிபந்தனைகள் அனைத்தையும் பற்றி நீங்கள் சிந்திக்கும்போது, ஒரு வேளை உங்களுக்குள்ளே இருக்கும் குறைபாடுகளை நீங்கள் காணலாம்.

யோவான் 7:37 "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன்" என்ற வசனத்தின் அடிப்படையில், பரிசுத்த ஆவிக்காக விருப்பதோடு ஜெபிப்பதை நான் எனது அன்றாட வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறேனா ?

**ஜெபம் :** "கர்த்தராகிய இயேசுவே, பரிசுத்த ஆவியைப்பெற்றுக் கொள்வதற்காக நீர் வைத்துள்ள எல்லா முன்நிபந்தனைகளுக்கும் நான் முற்றிலும் ஆம் என்று கூறுகிறேன். நீங்கள் இப்போதே – இன்றைக்கே என்னுள் அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்று நான் உண்மையாகவே கேட்கிறேன்." அந்த முன்நிபந்தனைகளையும் நிறைவேற்றுவதில் நம்முடைய அற்புதமான தேவன் நம்மோடிருக்கிறார்.

## நிறைவான வாழ்வின்<br>ஆதாரமாக பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார்

இயேசுவின் கருத்துப்படி, தாம் இந்த உலகிற்கு ஏன் வந்தேன் என்பதை அவரே கூறும்போது: "நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன் என்றார்" (யோவான் 10:10).

இயேசுவின் இரண்டாம் வருகைக்குப்பின் தேவன் அருளும் நித்திய ஜீவனை – முற்றிலும் மாறுபட்ட பரிமாணத்தில் தொடரும் புதிய வாழ்வை, நாம் இப்போதே பெற்று அனுபவிக்க வேண்டும் என்று இயேசு விரும்புகின்றார்.

மேலும் ஒரு நிறைவான வாழ்க்கையின் ஆதாரம் பரிசுத்த ஆவி என்பதையும் அவர் நமக்கு காட்டுகிறார்: "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச்சொன்னார்" (யோவான் 7:37–39).

ஜீவத்தண்ணீருள்ள நதிகள் – அது ஒரு நிறைவான வாழ்க்கைக்கு ஒரு நல்ல ஒப்பீடு அல்லவா?

**இயேசு இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் இத்துடன் தொடர்புடைய எந்த உதாரணத்தை அவர் நமக்குக் கொடுத்தார்?**

மரியாள் இயேசுவை பரிசுத்த ஆவியின் மூலம் கருத்தரித்தாள் என்பது நமக்குத் தெரியும் **(மத்.1:18).** அவருடைய ஞானஸ்நானத்திற்குப் பிறகு அவர் ஜெபித்தார் என்பதும் நமக்குத் தெரியும்: "பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப்போல அவர்மேல் இறங்கினார்" **(லூக்.3:22).** இந்த சூழ்நிலைகளிலும் தினமும் பரிசுத்த ஆவியைப் பெறுவது அவருக்கு அவசியமும் முக்கியமுமானதா? நான் எலன் உவைட்டின் எழுத்துக்களிலிருந்து மேற்கோள்களைக் சுட்டிக் காட்டுகிறேன்.

"காலைதோறும் அவர் பரலோகத்தில் உள்ள தனது பிதாவிடம் தொடர்பு கொண்டு, அவரிடமிருந்து அனுதினமும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றார்." - Signs of the Times, Nov 21, 1895, par-3.

அப்போஸ்தலர் நடபடிகளில் ஒரு அறிக்கை உள்ளது: "கிறிஸ்து இவ்வுலகத்தில் வாழ்ந்த காலத்தில்கூட, அவருக்குத் தேவையாயிருந்த புதிய கிருபைக்காக அனுதினமும் அவர் பிதாவை நாடினார் என்ற அறிவு தன்னை அர்ப்பணம் செய்த ஊழியனுக்கு ஆச்சர்யமான ஆறுதலை அளிக்கிறது." Acts of the Apostles (1911) p 56.1

இக்காரியத்தில் இயேசு உண்மையில் நமக்கு ஒரு முன்னுதாரணமாகவே விளங்கினார். இயேசுவுக்கே பரிசுத்த ஆவியின் புத்துணர்ச்சி அனுதினமும் தேவைப்பட்டதென்றால் உங்களுக்கும் எனக்கும் எவ்வளவு முக்கியம் என்பதை நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டும்.

இயேசுவின் நோக்கத்தை அப்போஸ்தலனாகிய பவுல் உண்மையில் நன்கு புரிந்து கொண்டிருந்தான். எபேசியருக்கு தாம் எழுதிய கடிதத்தில் **1:13**ல் "விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்" என்பதை பவுல் உறுதிப் படுத்துகிறான். பின்னர் **3:16–17**ல் "ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும் ...அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகவும்" ஊக்குவிக்கிறான்; மேலும் **5:18**ல் அங்கீகரிக்கப்பட்ட அப்போஸ்தலனாக, எபேசியரையும் நம்மையும் "ஆவியினாலே நிரப்பப்பட வேண்டும் அல்லது தொடர்ந்து "ஆவியில் நிறைந்து" இருக்கும்படி வேண்டுகோள் விடுகிறான்." - Johannes mager. Auf den Spuren des Helligen Geistes, (Luneburg, 1999), Seite. நாம் மறுபடியும் பிறந்தபோது பரிசுத்த ஆவியானவரை பெற்றிருந்தாலும், நமக்கு அனுதின புத்துணர்ச்சி தேவை என்பதை காண்கிறோம். ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் கிறிஸ்துவில் வளர்வதற்கும் பரிசுத்த ஆவியால் நாம் அனுதினமும் நிரப்பப்பட

வேண்டுவது மிகவும் அவசியம்.

ஓய்வுநாள் பள்ளி பாட வழிகாட்டி பின்வருமாறு கூறுகிறது: 'பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம்' பெறுவது என்றால் என்ன? இயேசு தனிப்பட்ட முறையில் இதை ஒத்தபொருளுடன் விளக்கினார். ஒரு நபர் பரிசுத்த ஆவியால் 'ஞானஸ்நானம்' பெறுகிறார் (அப்.1:4) 'பரிசுத்த ஆவி உங்களிடத்தில்' வரும்போது (வச.8). பொதுவாக ஞானஸ்நானம் பெறுவது என்றால் எதோ ஒன்றில் – வழக்கமாக தண்ணீரில் முழுவதுமாக மூழ்குதல் என்று அர்த்தம். அது முழு மனிதனையும் சுட்டிக்காட்டுகிறது. அது போல பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்றால் முழுவதுமாக 'பரிசுத்த ஆவியின்' செல்வாக்கினால் நிறைந்திருப்பது என்றர்த்தம். பவுல் அதையே எபே.5:18ல் உதாரணப்படுத்தி 'ஆவியில் நிறைந்திருங்கள்' என்கிறார். கிரேக்க வினைச் சொல் "நிரப்பப்பட்டது" என்ற பதத்துடன் விளக்குகிறது."
- Sabbath School Study Guide, July 17, 2014.

### இயேசுவின் பிரிவிடை வார்த்தைகளும் பரிசுத்த ஆவியும்

இயேசு தம் சீஷர்களிடமிருந்து பிரிந்து பரலோகத்திற்கு செல்லுமுன் தமக்குப் பதிலாக பரிசுத்த ஆவியானவர் அவர்களிடம் வருவார் என்ற மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் யோவான் 16:7ல் தெரிவித்தார். "நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்."

### ஒரு புதிய சாதகமான தீர்வு

சீஷர்கள் ஆச்சரியப்படும்படியான ஒன்றை இயேசு கூறினார்: "நான் போகிறது உங்களுக்கு பிரயோஜனமாக இருக்கும்." அதாவது பரிசுத்த ஆவியின் மூலம் அவர் நம்முடன் இருக்க முடியும் என்பதே அந்த புதிய தீர்வு. இயேசு தனிப்பட்ட முறையில் இருந்தால் அவர் ஒரு வரைமுறைக்குள்தான் இருக்க முடியும். அதே வேளையில் பரிசுத்த ஆவியானவர் மூலம் இருப்பது அதிக நன்மையளிக்கிறது. அவர் தற்போது எங்கிருந்தாலும் ஒவ்வொரு நபரிலும் இருக்க முடியும்.

### ஒரு ஆசிரியர் மற்றும் அவரது மாணவரின் தனிப்பட்ட சாட்சியம்

H. ஹவுபைலின் 'தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்' என்ற சிறு புத்தகம் ஒரு வருடத்திற்கு முன்பு எங்கள் ஊர் சபையில் கொடுக்கப்பட்டது, நான் அதை உடனே படிக்க ஆரம்பித்தேன். அதைப் படித்துக் கொண்டிருக்கும்போது எனக்கு முன்பு எப்போதையும் விட தேவனுடன் அதிக

அனுபவங்கள் ஏற்பட்டன – இந்த புத்தகம் என்னை கவர்ந்தது மற்றும் ஊக்குவித்தது.

கையேட்டின் பிற்சேர்க்கையில் பின்வரும் பரிந்துரையைக் கண்டேன். கல்வியியல் ஆராய்ச்சி ஒரு முக்கியமான பொருளைபற்றி நாம் முழுமையாக புரிந்து கொள்ளும்வரை அதை ஆறு முதல் பத்து முறை படிக்க அல்லது கேட்க வேண்டியது அவசியம் என்று சுட்டிக்காட்டுகிறது. "இந்த ஊக்கமளிக்கும் வார்த்தைகள் என் கவனத்தை ஈர்த்தது: குறைந்தபட்சம் ஒரு முறை முயற்சி செய்யுங்கள். முடிவு உங்களை நம்பவைக்கும்."

நான் அதை அனுபவிக்க விரும்பினேன், ஏற்கனவே மூன்றாவது வாசிப்பு என்னைப் சிறை பிடித்தது, என் வாழ்நாள் முழுவதும் நான் ஏங்கிக் கொண்டிருந்த என் மீட்பர் மீது எனக்குள் ஏற்பட்ட பேரன்பை உணர்ந்தேன். இரண்டு மாதங்களுக்குள் நான் அதை ஆறு முறை படித்து முடித்தேன்.

இயேசு நம் அருகில் வரும் போது எப்படி இருக்கும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியும். அவருடைய தூய்மையான, கனிவான மற்றும் அன்பான கண்களை நாம் பார்க்க முடியும். அப்போதிருந்து, நம் மீட்பரின் இந்த மகிழ்ச்சி இல்லாமல் என்னால் இருக்க முடியவில்லை.

நான் காலையில் எழுந்தவுடன், மீண்டும் தேவனுடனான நெருக்கமான ஐக்கிய அனுபவத்திற்காக, காலை ஜெப வேளையை எதிர்பார்த்து ஏங்கினேன். உரையாடல்களின் போதும் கற்பிக்கும் போதும் மற்றும் பிறரோடு தொடர்பு கொள்ளும்போதும் பரிசுத்த ஆவி என் எண்ணங்களுக்கு உதவ வேண்டுமென பகலில் அமைதியாக பிரார்த்தனை செய்தேன்.

ஒரு குழந்தை நமது கவனத்தை பெறவிரும்பி செயல்படுவது போல செயல்படுவதற்கேற்ற வலிமையையும் ஞானத்தையும் தேவன் எனக்குக் கொடுத்தார்.

அப்போதிருந்து எனது வேலைநாட்கள் சிருஷ்டிகரின் பிரசன்னத்தால் நிரம்பியுள்ளன. என் அன்றாட வாழ்க்கையில் அவர் எனக்கு உண்மையில் உதவுகிறார். அப்போது முதல் நான் காலையிலும் இடைப்பட்ட நேரத்திலும் பரிசுத்த ஆவியின் நிறைவுக்காக ஜெபிக்கிறேன். இப்பொழுதே பரலோகத்தை கிட்டிச்சேர்வது போலிருக்கிறது, பரலோகம் எப்படி இருக்கும் என்பதை ஏற்கனவே ருசிக்க முடிகிறது.

கையேட்டைப் படித்துக் கொண்டிருந்தபோது பள்ளியில் பயிலும் என் மாணவரும் இந்த அனுபவத்தில் பங்கு பெற வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் எழுந்தது. ஆஸ்திரியாவின் வோரால்பெர்க்கில் உள்ள எங்கள் எலியா அன்வென்டிஸ்ட் பள்ளியில் நான் 10 – 15 வயதுள்ளவர்களுக்கு

கற்பிக்கிறேன். ஆகவே எனக்கு வாய்ப்புகள் கிடைக்க தேவனை வேண்டினேன். பின்னர் வெகுசீக்கிரத்தில் பரிசுத்த ஆவியானவர் எப்படி இளைஞர்களின் இதயத்தில் வேலை செய்ய முடியும் என்பது பற்றிய மிக அற்புதமான அனுபவத்தை நான் அடைந்தேன்.

### 13 வயது ருஃபியனும் பரிசுத்த ஆவியானவரும்

பரிசுத்த ஆவியின் கையேட்டை நான் வாசிப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு இந்த அனுபவம் ஆரம்பமாயிற்று. எங்கள் பள்ளிக்கு ஒரு புதிய மாணவன் வந்தான். அவன் வந்த சில நாட்களுக்குள் எங்கள் அமைதியான சோலைவனம் ஒரு கடினமான சண்டை களமாக மாற்றப்பட்டது. சிறுவனுக்கு அப்போது 13 வயது. அவன் மற்ற எல்லா குழந்தைகளிலும் பெரியவன், வயதிற்கேற்ப பலசாலியுமானவன். கல்வி –ஆண்டில் கற்றுக்கொண்ட அற்புதமான அனேக பல நல்ல விஷயங்கள் ஒரு கணத்தில் மறைந்துவிடும் போல தோன்றியது.

அதைப்பற்றி அவனே சொல்லட்டும்: "நான் எனது தற்போதைய பள்ளிக்கு வந்தபோது எனக்கு என்ன காத்திருக்கிறது என்று எனக்குத் தெரியாது. பள்ளியில் சேர்ந்த இரண்டாம் நாள் ஒரு சின்ன காரியத்தால் கோபமடைந்து என் வகுப்புத் தோழர்களுடன் சண்டையிட ஆரம்பித்தேன். அவன் என்னைவிட மிக பலவீனமானவனாக இருந்தாலும் அவனை தரக்குறைவாகப் பேசி அடித்தேன். அவனை நான் மீண்டும் பார்க்க விரும்பவில்லை.

கடந்த கால வழக்கம்போல நான் என் தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்டேன். அதன் பிறகுநான் தலைமை ஆசிரியருடன் உரையாடினேன். அடுத்த மாதத்தில் ஒரு செயல்முறை என்னில் ஏற்பட்டது. நான் ஒரு போதகரின் மகனாக இருந்தபோதிலும் இந்த செயல் முறை என்னில் இப்போதுதான் தொடங்கியிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. நான் இயேசுவோடு அதிக நேரம் செலவிட ஆரம்பித்தேன்."

இந்த இளைஞனுக்கு கூடுதல் கவனம் தேவை என்று நான் நினைத்தேன். அவன் தனது தோல்வியை அறிந்து வருத்தப்பட்டு மீண்டும் முயற்சித்தான். ஆயினும் அவனது சொந்த பலத்தால் கிடைத்த அந்த வெற்றி வெகுநாள் நீடிக்கவில்லை. ஆரம்பத்தில் சண்டையில்லாதிருந்த போதும் ஒரு நாளை கழிப்பதே மிகுந்த சிரமமாய் இருந்தது. ஆனால் படிப்படியாக முன்னேற்றம் ஏற்பட்டது.

ஆறு மாதங்களுக்குப் பிறகு ஜெபம் அவனை தேவனிடம் நெருங்கச் செய்ததாக தான் உணர்ந்ததாக கூறினான். இதற்கிடையில் அவன்

காலைதோறும் பெலத்திற்காக ஜெபிக்க ஆரம்பித்தான். அவனது ஆத்திரம், கோபம், மற்றும் சண்டை போன்றவைகள் படிப்படியாக குறையத் தொடங்கின.

அவன் எங்கள் பள்ளிக்கு வந்து பதினோரு மாதங்கள் கடந்து விட்டன. மேலும் அவனிடம் பல முன்னேற்றங்களைக் காண முடிந்தது. ஆனால் அவனது கோபம் எரிச்சல் மற்றும் அவனது முஷ்டிகள் நிரந்தரமாக கட்டுப்பாட்டில் இல்லை.

இது இயல்பானது – அவன் தனது சொந்த வலிமையையும் புரிதலையும் கொண்டு வெற்றியடைய முயற்சிக்கிறான். இது சில சமயங்களில் வேலை செய்கிறது. எங்கள் ஜெபமும் சில சாதனைகளைச் செய்தன. ஆனாலும் அவனுடைய மனநிலை இன்னும் சரியாகவில்லை மற்றும் ஆவியின் புதுப்பிக்கும் வல்லமை காணப்படவில்லை.

யாதொரு நபர் தனது தவறுகளை கண்டு தனது கோபத்தை கட்டுப்படுத்த முயற்சிக்கும்போது அடுத்த கணத்தில் மீண்டும் தோல்வி அடைந்தால் அது அவருக்கு என்ன நன்மை செய்யும்? நான் என் புத்தியீனத்தை உணர்ந்த நேரத்தில் மேலே குறிப்பிட்டுள்ள சிறு புத்தகத்தை பெற்றேன். அது சரியான நேரத்தில் வந்தது. அப்போதுதான் நான் எதைக் இழந்திருந்தேன் என்பதை நான் உணர்ந்தேன். அது பரிசுத்த ஆவியின் வல்லமை. எனக்கு உதவி செய்யும்படி நான் தேவனிடம் கேட்டதில்லை.

"தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகளின்" செய்தி என்னைத் தொட்டுவிட்டதால் நான் அந்த சிறுவனிடம் பரிசுத்த ஆவிக்காக நீ ஜெபித்திருக்கிறாயா என்று கேட்க நான் தைரியமாக எழுந்தேன். இல்லை அவன் ஒருபோதும் ஜெபித்ததில்லை. பின்னர் நான் கையேட்டின் பேரில் அவனது ஆர்வத்தை எழுப்ப முயற்சித்தேன். இருந்தாலும் நான் அவனிடம் அதை கொடுக்கவில்லை. உண்மையில் அவனே அதை விரும்பி கேட்க வேண்டும். மிக விரைவில் அவன் அந்த கையேட்டை தனக்கு தரும்படி வேண்டினான்.

மீண்டும் அவனது சொந்த வார்த்தைகளில்: "நவம்பர் 2012ல் என் ஆசிரியர் எனக்கு "தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்" என்ற சிறு புத்தகத்தை கொடுத்தார். நான் ஆவலுடன் படிக்க ஆரம்பித்தேன். அந்த சமயத்தில் நான் பரிசுத்த ஆவியின் வேலையைப் பற்றி அறிந்திருக்கவில்லை."

முதல் நாளுக்குள் அவன் ஏற்கனவே கிட்டத்தட்ட இரண்டு அத்தியாயங்களை படித்து முடித்திருந்தான். பிறகு நான் எத்தனை முறை படித்தேன் என்று அவன் என்னிடம் கேட்டான். அவன் உடனடியாக

அத்தியாயங்களை மீண்டும் படிக்க தொடங்கி கையேடு பரிந்துரைத்ததை செய்ய விரும்பி, அதை 6–10 முறை வாசித்தான்.

அப்போதிருந்து அவனிடம் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டது. டிசம்பர் 2012 முதல் எந்த முஷ்டியோ சண்டையோ செய்யவில்லை என்பதை என்னால் நம்ப முடியவில்லை. அவன் தினமும் அடித்துக்கொண்டிருந்த சிறுவர்கள் அவனது நண்பர்களாக மாறி இணக்கமாக பழகினார்கள்.

அவன் முற்றிலும் மாறிவிட்டான். கடுமையான அதிகாரம் செலுத்தும் இயல்பு இருந்த இடத்தை கண்ணியம், தாழ்மை மற்றும் அமைதி போன்றவை எடுத்துக்கொண்டன. தேவன் கிரியைச் செய்கிறார் என்பதை அவனது வகுப்பு தோழர்கள் உறுதிப்படுத்த முடியும். நீங்கள் ஒவ்வொரு நாளும் ஆவியின் நற்கனிகளை பார்க்க முடியும். தேவனின் மகிமைக்காக, அந்தச் சிறுவன் ஜூன் 2013ல் ஞானஸ்நானம் பெறமுடிவு செய்திருக்கிறான் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். பரிசுத்த ஆவியானவராலன்றி அது நடைபெற்றிருக்காது.

ஒரு குழந்தையிடம் காரணத்தை சொல்லி அதை எளிதாக நிர்வகிக்கலாம் என்று நான் எப்போதும் எண்ணிக்கொண்டிருந்தேன். பொறுமை, கவனம் மற்றும் அதிகமாக நேரம் செலவழித்து பேசுவதால்; அது நடைபெற்றுவிடும் என்றிருந்தேன், ஆனால் அது நீண்ட காலத்திற்கு நடைபெறவில்லை. நம்மால் இயலாததை 'அவருடைய ஆவியால்' மட்டும்தான் சாத்தியமாக்க முடியும் என்ற பாடத்தை தேவன் எனக்கு கற்றுக்கொடுத்தார்.

ஒருநாள் இந்த சிறுவன் பரலோகத்தில் இருக்கும்போது, தேவனே அதைச் செய்தார் என்பதை நான் அறிவேன். நான் என் ஞானத்தின் விளிம்பில் இருந்தபோது, இறுதியாக என்னால் அவனை வழிநடத்த முடியாது என்பதை நான் புரிந்து கொண்டபோது, தேவன் அவனில் தீவிரமாக வேலை செய்யத் தொடங்கினார். தேவனுக்கு நம்பிக்கையற்ற வழக்குகள் என்று எதுவும் இல்லை என்பதை அறிய இது என்னை ஊக்குவிக்கிறது. CP.

**ஜெபம் :** பரலோகத் தகப்பனே, பரிசுத்த ஆவியைக் கேட்கும்படி இயேசுவின் அவசர அழைப்பிற்கு நன்றி. பரிசுத்த ஆவியின் பற்றாக்குறையால் நான் அனுபவித்த இழப்புகளுக்காக வருந்துகிறேன். எனக்கு தெய்வீக உதவி தேவை, அதனால் இயேசு என்னில் பெரியவராக முடியும். என் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் எனக்கு அவருடைய உதவி தேவை. பரிசுத்தஆவியானவர் என் குணத்தை மாற்றியமைத்து தேவராஜ்யத்திற்கு என்னைப் தகுதியுள்ளவனாக்க முடியும் என்பதற்கு நன்றி. என்னையும் என்னில் இருப்பதையும் முழுமையாக உங்களிடம் ஒப்படைக்கிறேன். என்னை ஏற்றுக்கொண்டு உங்கள் ஆசீர்வாதங்களை எனக்கு கொடுப்பதற்காக நன்றி. பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய அறிவில் வளர எனக்கு உதவுங்கள். ஆமென்.

## தனிப்பட்ட எண்ணங்கள் மற்றும் கலந்துரையாடலுக்கான வழிகாட்டி

1. ஜெபத்தைப் பற்றி போதித்தபோது இயேசு எந்த வார்த்தையை அடிக்கடி பயன்படுத்தினார்? (லூக்கா 11:1–13 – கர்த்தருடைய ஜெபம், உவமை, வேண்டுகோள்)

2. விடாமுயற்சியோடு ஜெபிக்க வேண்டும் என்ற உவமையில் பரிசுத்த ஆவிக்காக நாம் தொடர்ந்து கேட்கவேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கும்படி இயேசுவை தூண்டியது எது?

3. பரிசுத்த ஆவியைக் கேட்கும்படி இயேசு விடுத்த வேண்டுகோளில் உங்களை மிகவும் கவர்ந்தது எது? அவருடைய முன்மாதிரியிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்?

4. தேவனுக்கான நம் அர்ப்பணிப்பு நம் அனுதின வாழ்க்கையில் எப்படி வெளிப்படுகிறது?

### நமது ஜெப நேரம்

- ➢ உங்கள் ஜெப–பங்காளியுடன் தொடர்பு கொண்டு இந்த தலைப்பைப் பற்றி விவாதியுங்கள்.
- ➢ உங்கள் ஜெப–பங்காளியுடன் சேர்ந்து ஜெபியுங்கள்.

1. பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்வதற்கு விசுவாசத்தோடு தினமும் நாம் அவரிடம் கேட்க வேண்டும் என்பதை மனதில் கொள்ளுவோம்.
2. "தாகம் எடுப்பதினால் நாம் அடிக்கடி ஜீவ ஊற்றண்டைக்கு செல்கிறோம்.
3. இயேசுவை பற்றி அறியவும் அவரிடமிருந்து கற்றுக்கொள்ளவும் நம் பரம தகப்பனுடன் எங்ஙனம் நாம் நெருங்கிய தொடர்பை வைத்துக் கொள்ள முடியும்.

நாள் 3

# நமது பிரச்சனைகளின் மையம் எது?

## நமது பிரச்சனைக்கு
## ஆவிக்குரிய காரணம் இருக்கிறதா?

### பரிசுத்த ஆவியானவர் இல்லாததுதான் காரணமா?

### குறைபாடுகளுக்கான காரணங்கள்

வேதாகமம் கூறும் பதில்: "நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை. நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி (உங்கள் மனம் விரும்புகிறபடி ரோமர் **8:5–7)** செலவழிக்கவேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால், பெற்றுக் கொள்ளாமலிருக்கிறீர்கள்." (யாக்.**4:2–3)**

பரிசுத்த ஆவிக்காக நாம் மன்றாட வேண்டும் என்பதற்காக கர்த்தராகிய இயேசு நம்மை அன்புடன் வற்புறுத்தி அழைத்தார் (லூக். **11:9–13).** இதை நாம் இடைவிடாமல் செய்ய வேண்டும் என்பதை புரிந்து கொள்கிறோம். மூன்றாவது அத்தியாயத்தில் இதைக்குறித்து நாம் இன்னும் ஆழமாகப் பார்ப்போம்.

"அவர்கள் கிறிஸ்துவைப் பற்றியும் பரிசுத்த ஆவியைப் பற்றியும் பேசுகிறார்கள்; ஆயினும் எந்த நன்மையும் கிடைக்கவில்லை. தெய்வீக முகவர்களால் வழிநடத்தப்படவும் கட்டுப்படுத்தப்படவும் அவர்கள் தங்கள் ஆத்துமாவை ஒப்படைக்கவில்லை" - Ellen G White, The Desire of Ages, (1898), p.672

எழுப்புதல் அடைவதற்காக நாம் சில காலமாக ஜெபித்து வருகிறோம். இது மிகவும் அவசியமான ஒன்று. "பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமே சபைகளின் இன்றைய தேவை"யென எலன் உவைட் கூறுகிறார். - Ellen G White, Manuscript releases vol 7 p.267.

"ஆவியானவரை பெறுவதற்கு இதுதான் வழியென்றால் நாம் ஏன் பரிசுத்த ஆவியின் வரத்திற்காக பசியும் தாகமுமுடையவர்களாக இல்லை?

நாம் ஏன் அதைப்பற்றி பேசவோ அதற்காக ஜெபிக்கவோ அதைப்பற்றி பிரசங்கிக்கவோ கூடாது?" - Ellen G White, Testimonies for the Church vol-8 p.22

எழுப்புதலுக்காக ஜெபிப்பது நல்லது. ஆனால் வெறுமனே அதற்காக நாம் ஜெபித்தால் மட்டும் போதாது. மார்க்ஃபின்லி கூறுவது போல "அத்துடன் எழுப்புதலுக்காக வேதாகமம் கூறும் ஆலோசனைகளையும் நாம் நடைமுறைப்படுத்த வேண்டும்." - Mark Finley, Revive us again, p.25.

தனிப்பட்ட எழுப்புதலுக்கான நடவடிக்கைகளை எடுக்க நான் உங்களை அழைக்கலாமா? பலருக்கு இது மிகவும் வல்லமை வாய்ந்த மற்றும் நிறைவான வாழ்க்கைக்கு வழிவகுக்கும்.

தொடங்குவதற்கு முன் இதிலுள்ள பிரச்சனைகளை பகுத்தாராய விரும்புகிறோம். நாம் இதை முழுமையாக செய்ய விரும்புகிறோம். இல்லையென்றால் ஒரு மாற்றம் தேவையா? தேவையில்லையா என்று நாம் கருதுவதில் ஆபத்து இருக்கிறது. அதன்பிறகு தேவனின் தீர்வு என்னவென்று நாம் பார்க்க விரும்புகிறோம். இப்படி செய்வது நமக்கு மிகப்பெரிய ஆசீர்வாதத்தை கொண்டுவரும். நிறைவாக இதை எவ்விதம் செயல்படுத்தி முழுமையாக அனுபவிக்க முடியும் எனக் காண விரும்புகிறோம்.

நம்மிடையே காணப்படும் பரிசுத்த ஆவியின் பற்றாக்குறைக்கு நாம் செய்த, செய்கின்ற அனைத்தும் வீண் என்று அர்த்தமல்ல. பல நல்ல திட்டங்களும் யோசனைகளும் இருந்தன, இருக்கின்றன. நமது மனித முயற்சிகளை தேவன் நிச்சயமாகவே ஆசீர்வதித்தார். ஆனால் உண்மையில் நாம் பரிசுத்த ஆவியோடு இன்னும் நெருக்கமாக வாழும்போது மட்டுமே இப்போதிருப்பதைவிட மிகச்சிறப்பான பெரிய ஆசீர்வாதங்கள் அடையமுடியும் என்பது தேவனுக்கு மட்டுமே தெரியும்.

அது இந்த திசையில் சென்றிருக்கும் மற்றும் எதிர்காலத்தில் இந்த திசையில் செல்லும் என்று ஹென்றி டி பிளாக்பி தம் உள்ளக்கிடக்கை வெளிப்படுத்தினார். "தேவனுடைய உதவியில்லாமல் நாம் அறுபது வருடங்களாக பாடுபட்டு முடிக்கும் காரியங்களை அர்பணிப்புள்ள மக்களைக் கொண்டு தேவன் ஆறு மாதங்களில் அதிகம் செய்ய முடியும்." - Henry T Blackby, Den wilen Gottes erkennen und tun (Experiencing God knowing and Doing the will of God), (Kassel, 2002), p.31.

தேவனுடைய தலைமைக்கு நாம் உடனடியாக சென்றதன் மூலம் நாம் அதிக செயல்திறன்களை பெற்றோமா இல்லையா என்பதுதான் நாம் கேட்க வேண்டிய கேள்வி. நாம் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படும்போது அதுதான் நடைபெறுகிறது.

உதாரணம்: ஒருவர் பிரசங்கம் செய்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் பேசி முடித்ததும் – எவரும் ஏற்காமல் இருக்கலாம் அல்லது ஒரு சிலர், பலர் அல்லது அனைவரும் அச்செய்தியை ஏற்கலாம். பலர் அல்லது அனைவரும் அச்செய்தியை ஏற்றுக்கொண்டு அதை நடைமுறைக்கு கொண்டுவந்தால் இது ஒரு சிறந்த செயல்திறன் எனப்படும். இது பரிசுத்த ஆவியானவரால் மட்டுமே கிடைப்பதாகும்.

## மூன்று மக்கள் குழுக்களும் தேவனுடனான அவர்களின் தனிப்பட்ட உறுவுகளும்

தேவனுடனான தனிப்பட்ட உறவுகளை வைத்து தேவனுடைய வார்த்தை இம்மூன்று குழுக்களையும் வேறுபடுத்துகிறது. ஒவ்வொரு குழுவிலும் அவர்கள் தங்கள் பெற்றோரிடமிருந்து பெற்ற பயிற்சி, குணம், தனிப்பட்ட அனுபவம், வயது, கலாச்சாரம், கல்வி போன்றவற்றைப் பொறுத்து வெவ்வேறு சாயல்கள் காணப்பட்ட போதிலும் இந்த எல்லா வேறுபாடுகள் மத்தியில் தேவனைப்பற்றிய மூன்று அடிப்படை அணுகுமுறைகள் மட்டுமே உள்ளன.

- தேவனுடன் எவ்வித உறவும் வைத்திராத நபரை வேதாகமம் ஜென்ம சுபாவமுள்ள மனிதன் என்று அழைக்கிறது.
- தேவனுடன் வலுவான உறவு கொண்டிருப்பவரை ஆவிக்குரிய மனிதன் என்றழைக்கிறது
- பிரிவுபட்ட, போலியான உறவு கொண்டிருப்பவரை – மாம்ச சிந்தையுள்ள மனிதன் என்றழைக்கிறது.

தேவனுடைய வார்த்தையில் ஜென்ம சுபாவமுள்ளவன், ஆவிக்குரியவன் மற்றும் மாம்ச சிந்தையுள்ளவன் போன்ற வார்த்தைகள், மனிதன் தேவனுடன் வைத்திருக்கும் தனிப்பட்ட உறவைக் கொண்டே விவரிக்கப் படுகின்றன.

இந்த மூன்று குழுக்களும் 1கொரி 2:14–16 மற்றும் 1.கொரி 3:1–4 விவரிக்கப்பட்டுள்ளன. இப்போது நாம் ஜென்ம சுபாவமுள்ள மனிதனைப் பற்றி மேலோட்டமாகப் பார்ப்போம். அவன் உலகில் வாழ்கிறான். சபையிலுள்ள இரண்டு குழுக்களை விரைந்து கவனித்தால் பிரச்சனை எங்கு மறைக்கப்பட்டுள்ளது என்பதை அறியமுடியும். இதில் நீங்கள் எந்தக் குழுவைச் சேர்ந்தவர் என்பதே மிக முக்கியமான விஷயம். மேலும் இந்த பரிசோதனை நமது சொந்த வாழ்க்கையைக் கண்டு கொள்ள உதவுகிறது. இதன் மூலம் நாம் பிறருடைய வாழ்க்கையை அல்ல நமது சொந்த வாழ்க்கையையே காண விரும்புகிறோம்.

**ஒருவரை ஒரு குழுவில் அல்லது மற்றொன்றில் நியமனம் செய்வதற்கான அளவுகோல் எது?** மூன்று குழுக்களிலும் பரிசுத்த ஆவியுடனான தனிப்பட்ட உறவின் அடிப்படையிலேயே ஒருவர் எந்த குழுவைச் சேர்ந்தவர் என்று தீர்மானிக்கப்படுகிறார்.

### ஜென்மசுபாவமுள்ள மனிதன்

"ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப் படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்." 1கொரி.2:14.

ஜென்மசுபாவமுள்ள மனிதனுக்கு பரிசுத்த ஆவியோடு எந்த தொடர்பும் இல்லை. அவன் உலகில் வாழ்கிறான். தேவனைப்பற்றி அவன் விசாரிப்பதே இல்லை அல்லது தேவனைப்பற்றி மிக அறிதாகவே விசாரிக்கிறான்.

### ஆவிக்குரியவர்களும் மாம்சத்திற்குரியவர்களும் சபையில் இருக்கின்றனர்

இந்த இரண்டு குழுக்களும் முக்கியமாக 1கொரி. 2 & 3 அத்தியாயங்களிலும் ; ரோமர் 8:1–17 ; கலாத்தியர் 4 & 6ம் அத்தியாயத்திலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர். இந்த இரண்டு குழுக்களில் உள்ளவர்களும் பரிசுத்த ஆவியானவரிடம் வைத்துள்ள உறவைப் பொறுத்தே அவர்கள் எந்த குழுவைச் சேர்ந்தவர்கள் என்று தீர்மானிக்கப்படுகின்றனர். ஏனெனில் பரிசுத்த ஆவியானவருடனான உறவின் மூலம் மட்டுமே நாம் பரலோகத்துடன் இணைக்கப்படுவதற்கான வாய்ப்பை பெறமுடியும் என்பதை தேவன் நிர்மானித்துள்ளார். - The Desire of Ages, p.322 ; மத்தேயு 12:32) "ஆவியின் செல்வாக்கிற்கு இதயம் திறந்திருக்க வேண்டும் அல்லது தேவனின் ஆசீர்வாதத்தைப் பெற முடியாது" - E.G.White, Steps to Christ p.69

### ஆவிக்குரிய சபை அங்கத்தினர்

"ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்? எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது." (ஏசா.40:13).

ஆவிக்குரியவனே உண்மையான கிறிஸ்தவன். அவன் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருப்பதால் அவன் ஆவிக்குரியவன் என்றழைக்கப் படுகிறான். இங்கேயும் பரிசுத்த ஆவியானவருடனான உறவே அவனை ஆவிக்குரியவன் என்று அழைக்கப்படுவதற்கான அளவுகோலாகும். அந்த

நபர் பரிசுத்த ஆவியானவரோடு நல்லுறவையும், அதேவேளையில் வளர்ந்து வரும் உறவையும் கொண்டுள்ளான். இயேசுவே அவனது வாழ்க்கையின் மையமாக விளங்குகிறார்; நம் இதய சிம்மாசனத்தில் இயேசு வீற்றிருக்கிறார் என்று நாம் சில வேளைகளில் சொல்லுகிறோம். ஆவிக்குரியவன் இயேசுவிற்கு தன்னை முழுமையாகவும் முற்றிலுமாகவும் ஒப்புக்கொடுத்துள்ளதோடு; அனுதினமும் காலையில் தன்னையும் தன்னிடம் உள்ள எல்லாவற்றையும் இயேசுவிடம் சரணடையச் செய்வதன் மூலம் இது உறுதி செய்யப்படுகிறது. லவோதிக்கேயாவிற்குச் சொல்லப்படும் செய்தியில் 'அனாலாயிருப்பவனாக' அவன் அழைக்கப்படுகிறான். பத்து கன்னிகைகளைப் பற்றிய உவமையில் அவன் 'புத்தியுள்ளவன்' என்று அழைக்கப்படுகின்றான். ரோமர் 8:1–17 மற்றும் கலாத்தியர் 5ல் அவனைப்பற்றி மேலும் அதிகமாக சொல்லப்பட்டுள்ளது. அவன் பரிபூரண ஜீவனை அனுபவிப்பவனாகவும் (யோவான் 10:10) பவுல் கூறுவது போல "தேவனுடைய சகலபரிபூரணத்தாலும் நிறையப் பட்டவனாகவும்" ஆகிறான். (எபே.3:19; கொலோ .2:9)

### மாம்ச சிந்தையுள்ள சபை அங்கத்தினன்

ஒரு நபர் ஒரு குறுகிய காலத்திற்கு அல்லது பல வருடங்களுக்கு சபை உறுப்பினராக இருந்தாலும் இன்னும் அவன் ஒரு மாம்ச சிந்தையுள்ளவனாகவே இருக்க முடியும். இந்த நேரத்தில் நீங்கள் ஒரு மாம்சசிந்தையுள்ள ஒரு கிறிஸ்தவன் என்று உங்களுக்குத் தெரிய வருமானால் அதைப்பற்றி ஆச்சர்யமடையவோ அல்லது வருத்தப்படவோ வேண்டாம். மாறாக மகிழ்ச்சியடையுங்கள். ஏனென்றால் நீங்கள் அதை உடனடியாக மாற்றுவதற்கான வாய்ப்பு உள்ளது. பரிசுத்த ஆவியானவர் உங்களில் ஜீவிக்க அனுமதிப்பதின் மூலம் நீங்கள் அதை உடனடியாக மாற்ற முடியும். பெரும்பாலான மாம்ச கிறிஸ்தவர்கள் இந்த நிலையில் இருப்பதை அறியாமலே இருக்கிறார்கள். மேலும் அவர்கள் அதே நிலையில் இருந்து கொண்டு விசுவாசத்தில் அதிக அனுபவத்தைப் பெற வேண்டுமென விரும்புகின்றனர். அனேக நேரங்களில் அவர்களின் அறியாமை பெரும்பாலும் அவர்களின் தவறுகூட இல்லை.

**சிந்தியுங்கள் :** பரிசுத்த ஆவியின் மூலம் கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசம் செய்வதால் நீங்கள் மிகுந்த மகிழ்ச்சியை அனுபவிப்பீர்கள். நித்திய ஜீவனைப் பற்றிய நல்ல நம்பிக்கையில் நீங்கள் உறுதி பெற்றுள்ளதால் "உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்" (யோவான் 15:11). இந்த மாற்றத்தின் மூலம் நீங்கள் படிப்படியாக "பரிபூரண வாழ்க்கையை"அனுபவிப்பீர்கள். (யோவா. 10:10).

**ஜெபம்:** பரலோகத் தகப்பனே, தயவுசெய்து இந்த கேள்வியை நான் என்னிடமே கேட்டுக்கொள்ள எனக்கு மனதைத் தாருங்கள். நான் ஒரு மாம்ச கிறிஸ்தவனாயிருந்தால், நான் அதை சரியாக உணர்ந்து கொள்ள உதவுங்கள். நீங்கள் விரும்பும் எல்லாவற்றிற்கும் என்னை தயாராக இருக்கச் செய்யுங்கள். தயவுகூர்ந்து என்னை மகிழ்ச்சியான கிறிஸ்தவ வாழ்க்கைக்கு வழிநடத்துங்கள். வாக்களிக்கப்பட்ட சந்தோஷமான பரிபூரண வாழ்க்கை வாழ என் இதயத்தை புதுப்பியுங்கள். என் பிரார்த்தனைக்கு பதில் அளித்ததற்கு நன்றி. ஆமென்.

அப்போஸ்தலனானகிய பவுல் 1கொரி.3:1–4 வசனங்களில் மாம்ச சபை அங்கத்தினர்களைக் குறித்து என்ன சொல்லுகிறான் என்பதை வாசிக்கலாம்.

"மேலும், சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல், மாம்சத்துக்குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேசவேண்டியதாயிற்று. நீங்கள் பெலனில்லாதவர்களானதால், உங்களுக்குப் போஜனங் கொடாமல், பாலைக் குடிக்கக்கொடுத்தேன்; இன்னமும் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருக்கிறபடியால், இப்பொழுதும் உங்களுக்குப் பெலனில்லை. பொறாமையும் வாக்குவாதமும் பேதங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா? ஒருவன் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், வேறொருவன் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நீங்கள் மாம்சத்துக்குரியவர் களல்லவா?"

இந்த குழுவில் நியமனம் செய்வதற்கான அளவுகோல் பரிசுத்த ஆவியானவரோடு உள்ள தனிப்பட்ட உறவு என்பதை உங்களால் இங்கே தெளிவாகப் பார்க்க முடிகிறதா? இந்த சில வசனங்களில் அப்போஸ்தலனாகிய பவுல் அவர்கள் மாம்சத்துக்குரியவர்கள் என்பதை நான்கு முறை குறிப்பிடுகின்றான். மாம்சம் என்பதன் அர்த்தம் என்ன? இதன் பொருள்: இந்த நபர் மாம்ச பெலத்தினால் வாழ்கின்றவர். அதாவது ஒரு நபரின் இயல்பான வலிமை மற்றும் திறன்களை இது சுட்டிக்காட்டுகிறது. மேலும் அந்த நபர் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படவில்லை அல்லது பரிசுத்த ஆவியால் நிறையவில்லை என்று அர்த்தமாகும்.

இந்த குழு அப்பட்டமான பாவத்தில் வாழும் மக்களை மட்டுமே கொண்டுள்ளது என்று சிலர் நினைக்கிறார்கள். அப்படியல்ல, இந்த குழுவில்

உள்ள பல நிழல்களில் இதுவும் ஒன்று. இந்த ஒவ்வொரு குழுவிலும் நிறைய வேறுபாடுகள் உள்ளன என்பதை நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

மாம்சத்திற்குரியவர்களை பவுல் "அன்பான சகோதரரே" என்று அழைக்கிறார். இது அவர் சபை அங்கத்தினர்களிடம் பழகுவதை காட்டுகிறது. "ஆவிக்குரியவர்களிடம்" பேசுவதைப் போல அவர்களிடம் பேச முடியவில்லை. அதாவது அவர்கள் பரிசுத்த ஆவியால் நிறைந்திருக்கவில்லை அல்லது போதுமான அளவு பரிசுத்த ஆவியால் நிரப்பப்படவில்லை. "கிறிஸ்துவில் அவர்களை குழந்தைகளாக எண்ணியே" அவர்களிடம் பேச வேண்டியிருந்தது. வளர்ந்திருக்க வேண்டிய அளவிற்கு அவர்கள் விசுவாசத்தில் வளரவில்லை என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. ஒரு நபர் சிறந்த வேதாகம அறிவைக் கொண்டிருக்க முடியும். ஆயினும் அவர் இன்னும் ஆன்மீக ரீதியாக வளரவில்லை. ஆவிக்குரிய வளர்ச்சியானது இயேசுவிற்கான நமது முழு அர்ப்பணிப்பு மற்றும் பரிசுத்த ஆவியின் நிலையான வாழ்க்கையுடன் தொடர்புடையது.

பல மாம்ச கிறிஸ்தவர்கள் தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் அதிருப்தி, ஏமாற்றம், நோக்கமில்லாதிருப்பதோடு, தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கைக்காக தொடர்ந்து முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர்.

மாம்சசிந்தை கொண்ட அனேக சபை அங்கத்தினர்கள் இந்த நிலைக்கு பழகிவிட்டனர் அல்லது இந்த நிலையில் திருப்தி அடைந்துள்ளனர். நாங்கள் பெரும் பாவிகள் எங்களால் அதை மாற்ற முடியாது என்று அவர்கள் சொல்லலாம். அதேவேளையில் மற்ற மாம்ச கிறிஸ்தவர்கள் உற்சாகமாக இருக்கலாம். விவிலிய உண்மையை அவர்கள் அறிந்திருப்பதால் மகிழ்ச்சியடைகிறார்கள். மாம்சசிந்தை கொண்ட அங்கத்தினர்கள் மிகவும் சுறுசுறுப்பாக செயல்படுவதோடு உள்ளூர் சபையில் அல்லது சபை நிர்வாகத்தில் முன்னணி பதவிகளில் கூட இருக்கலாம். அவர்கள் தேவனுக்காக அதிகம் செய்யக்கூடும்.

மத்தேயு 7:22–23 "அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்."

இயேசு அவர்களை அறியேன் என்று கூறினார். பிரச்சனை எங்கே

இருந்தது? கிறிஸ்துவுடன் அவர்கள் உண்மையான உறவைக் கொண்டிருக்கவில்லை. மேலோட்டமான ஒரு போலி உறவையே வைத்துக்கொண்டிருந்தனர். அர்ப்பணிப்பு இல்லை அல்லது உறவு பராமரிக்கப்படவில்லை. பரிசுத்த ஆவியின் மூலம் இயேசு அவர்களின் இதயத்தில் வாழவில்லை. இதனால் அவர்களுக்கு கிறிஸ்துவுடன் தனிப்பட்ட உறவு இல்லை. "எனவே கிறிஸ்துவுடன் வெளிப்பார்வைக்கு தொடர்பு இருந்திருக்கலாம்" - E.G. White, The Desire of Ages, (1898) p.676.

கிறிஸ்து நம்மில் எப்போது வாசம் செய்வதில்லை? என்பது பற்றி சில தீவிரமான வார்த்தைகளைப் படித்தேன். நான் அவற்றை குறிப்பிடுவதற்கு முன், நாம் பரிசுத்த ஆவியோடு வாழ்ந்தால் பின் வரும் விஷயங்களிலிருந்து நாம் சுதந்திரமாக இருக்க முடியும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"கிறிஸ்துவின் ஆவிக்கு முரணான ஆவி எந்த வடிவில் இருந்தாலும் அது அவரை மறுதலிக்கும். மனிதர்கள் தீயவைகளை பேசுவதன் மூலமும், முட்டாள்தனமான வார்த்தைகளால், அலப்பி, பொய்யான, இரக்கமற்ற வார்த்தைகளை பேசுவதன் மூலமும் கிறிஸ்துவை மறுதலிக்கலாம். வாழ்க்கைச் சுமைகளைத் தவிர்ப்பதன் மூலம், சிற்றின்பத்தைத் தேடுவதன் மூலம் அவர்கள் அவரை மறுக்கலாம். உலகத்துடன் ஒத்துப்போவதற்காக இணக்கமற்ற நடத்தை, தங்கள் சொந்த கருத்துக்களை பேணிவளர்த்து, தன்னை நியாயப்படுத்துதல், சந்தேகத்தை வளர்ப்பது, வம்பை விலைகொடுத்து வாங்குதல் மற்றும் இருளில் வாழ்வதன் மூலம் அவர்கள் அவரை மறுக்கலாம். இந்த எல்லா வழிகளிலும் அவர்கள் கிறிஸ்து தங்களில் இல்லை என்று அறிவிக்கிறார்கள்." – EG White, The Desire of Ages p.357.2

தேவனுடைய கிருபையால் இது விரைவில் மாறலாம். இதைப்பற்றி 3 மற்றும் 5வது பகுதியில் படிப்போம்.

## நம் வாழ்க்கையை தேவனிடம் ஒப்படைத்து அவரிடம் சரணடைவது ஏன் முக்கியமானது?

தேவனுடைய வார்த்தை கூறுவதாவது: "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" **(ரோமர் 12:1).**

"தற்பெருமை என்னும் கொடுங்கோன்மை மற்றும் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து தேவன் நம்மை குணமாக்கி, விடுவிக்க

விரும்புகிறார். ஆனால் இதற்கு ஒரு முழு மாற்றம் தேவை, நமது முழு இயல்பையும் புதுப்பிப்பதற்கு, நாம் அவரிடம் நம்மை முழுமையாக ஒப்படைக்க வேண்டும்." E.G. White, Steps to Christ (1892), p.43.2

நமது தற்பெருமை புண்படுகிறது, பொறாமை, எரிச்சல், மனக்கசப்பு, முதலியவைகளிலிருந்து தேவன் நம்மை விடுவிக்க விரும்புகிறார்.

"தம்முடைய சித்தத்தை நம்மில் செயல்படுத்தத்தக்கதாக தேவன் நம்மை அவரிடம் ஒப்புக்கொடுக்கும்படி அழைக்கிறார். தேவகுமாரனின் மகிமையுள்ள சுதந்திரத்தைப் பகிர்ந்து கொள்வதற்காக, பாவத்தின் அடிமைத் தனத்திலிருந்து நாம் விடுவிக்கப்படுவோமா என்பதை நாம் தான் தேர்வு செய்ய வேண்டும்." – EG White, Steps to Christ (1892), p.43.4

தேவன் நமது அடிப்படை உறுதிபாட்டிற்கு மறுபிறப்பின் மூலமாகவே பதிலளிக்கிறார் (யோவா. 3:1–21). அது நமது ஒப்புக்கொடுத்தலில் நிலைத்திருப்பதோடு தொடர்புடையது (யோவான் 15:1–17). இதைப்பற்றி மூன்றாவது பகுதியில் அதிகம் பேசுவோம்.

மோரிஸ் வென்டன் நம் வாழ்க்கையை தேவனிடம் ஒப்படைப்பது பற்றி கீழ்க்கண்டவாறு கூறுகின்றார்: "அரைகுறையான ஒப்படைப்பு என்று எதுவும் இல்லை. கொஞ்சம் கர்ப்பமுற்றிருக்கிறாள் என்று சொல்வது எப்படியோ அப்படித்தான் அரைகுறையான ஒப்படைப்பும் இருக்கிறது. ஒன்று ஒப்படைத்திருக்கிறீர்கள் அல்லது ஒப்படைக்கவில்லை என்பதுதானே தவிர அதில் அரைகுறையானதென்று சொல்வதற்கு ஒன்றுமில்லை." - Morris Venden, 95 Theses on Righteousness by Faith (Pacific Press,1987), p.63.

அன்றாடம் சரணடைவது பற்றி எலன் உவைட் பின்வருமாறு கூறினார்: "கிறிஸ்துவுடன் சேர்ந்து பணியாற்றுபவர்கள் மட்டுமே; ஆண்டவரே நானும் என்னிடம் உள்ளவைகள் யாவும் உம்முடையதே என்று கூறுபவர்கள் மட்டுமே தேவனுடைய குமாரர் – குமாரத்திகளாக அங்கீகரிக்கப்படுவார்கள்." - EG White, The Desire of Ages p.523

எனவே சபையில் இருந்து கொண்டே ஒரு நபர் தொலைந்தும் போகமுடியும் என்பது எவ்வளவு துயரமானது. (பத்து கன்னிகைகள் பற்றிய உவமையும் மற்றும் லவோதிக்கேயா சபைக்கான தூதும் இதை விளக்குகிறது.)

## மாம்சசிந்தையுள்ள கிறிஸ்தவனை அடையாளம் காண்பது ஏன் கடினமானது?

மாம்ச சிந்தையுள்ள ஒரு நபரின் வாழ்க்கை மார்க்க காரியங்களால் நிரம்பியிருப்பதால் அவர் தன்னுடைய வாழ்க்கையில் மிக முக்கியமான

ஒன்றை – அதாவது தேவனுடனான ஒரு நெருக்கமான இரட்சிக்கும் உறவை இழந்திருக்கிறேன் என்பதைக்கூட அவர் சற்றும் உணருவதில்லை. நம் வாழ்நாள் முழுவதையும் கிறிஸ்து ஆள அனுமதிக்கப்படாவிட்டால் அவர் கதவிற்கு முன் நின்று கதவை தட்டி நிற்கிறவராகவே இருப்பார் (வெளி.3:20). மேலும் இந்த நிலை மாறவில்லையென்றால் "நான் உன்னை என் வாயினின்று வாந்தி பண்ணிப் போடுவேன்" என்கிறார்.

வேறு ஏதோ ஒன்று ஆளுகை செய்கிறது. வேதாகமத்தை அடிப்படையாகக் கொண்ட நமது கோட்பாட்டு அடித்தளத்தின் மேல் நமக்கு வலுவான நம்பிக்கைகள் உள்ளன. (அதே வேளையில் மனதில்பட்ட காரியங்களுக்கு (நுண்ணறிவுகளுக்கு) நாம் இன்னும் திறந்தே இருக்க விரும்புகிறோம்) நாம் சத்தியத்தை விசுவாசிக்கிறோம் என்ற உறுதியான நம்பிக்கை நம்மிடம் இருக்கிறது. அது நம்மை ஆச்சர்யமடையச் செய்கிறது. மேலும் நம்மிடம் வேதாகமத்தைக் குறித்த நல்ல அறிவு இருக்கிறது. நாம் சரியானதைச் சொல்லுகிறோம். அதுவே மாம்ச சிந்தையை அடையாளம் காணமுடியாத அளவிற்கு மிகவும் கடினமாக்குகிறது. உண்மையில் பரிசுத்த ஆவி என்னில் வாசம் செய்தால் அவர் எனக்கு அதை காண்பிக்க மாட்டாரா? இல்லையென்றால் வித்தியாசத்தை நான் எங்ஙனம் கண்டுகொள்ள முடியும்?

ஒரு போதகர் இவ்வாறு எழுதினார்: எங்கள் 40 நாள் ஜெபக்கூட்டத்தில் பங்கு கொள்ளும் ஒரு சகோதரியிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. பிரச்சனை எங்கே இருந்தது? அந்த நிகழ்ச்சி தன் வாழ்க்கையை மாற்றிவிட்டதாக அவள் கூறினாள். அவளுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் எதையோ இழந்திருப்பதை அவள் வாழ்நாள் முழுவதும் தேடிக் கொண்டிருந்தாள். 'பரிசுத்த ஆவியே அது' என்பது இப்போது அவளுக்குத் தெரியும். அவளுடைய சாட்சியை நீங்கள் கேட்டிருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். தேவனுடனான உறவு வைத்திருப்பதை தன் வாழ்க்கையில் முதன்முறையாக கவனித்ததாக அவள் கூறினாள். மற்றவர்களும் அவள் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றத்தை ஏற்கனவே கவனித்திருக்கிறார்கள். Email. an H. Haubeil – received on Feb 15, 2012.

அந்த நபர் தன் வாழ்க்கையில் எதையோ இழந்திருக்கிறார் என்பதை அவரால் உணர முடிகிறது, ஆனால் எதை என்று அவருக்குத் தெரியவில்லை. அனேகருடைய நிலையும் அதுதான். மேலும் அதை எப்படி பெற்றுக்கொள்வது என்றும் தெரியவில்லை.

1கொரி. 3:1–4 வசனங்களில் "இன்னமும்" என்ற வார்த்தை மூன்று முறை பயன்படுத்தியதற்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். "இன்னமும் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருக்கிறபடியால்"

மாம்சத்திற்குரிய ஒருநபர் ஆவிக்குரியவராக மாறுவது சாத்தியம் என்பதை இது நமக்குக் காட்டுகிறது. எவரும் மாம்சத்துக்குரியவராகவே இருக்க வேண்டிய அவசியமில்லை. அவர் திருச்சபையில் இருப்பதால் தன்னுடைய நிலையை மாற்றிக்கொள்வதற்கு அவருக்கு அதிக சந்தர்ப்பம் இருக்கிறது. நீங்கள் எப்படி ஆவிக்குரியவராகமுடியும் என்பதைப் பற்றி நாம் பின்னர் பேசுவோம்.

கருத்தில் கொள்ள வேண்டிய மற்றொரு அம்சம் பொறாமை மற்றும் சண்டை NIV மொழிபெயர்ப்பில் சொல்லுவதுபோல "உங்களுக்குள் பொறாமை மற்றும் வாக்குவாதம் இருக்கிறது." இந்த நடத்தையுடைய சபைவிசுவாசிகள் தேவஆவியினால் ஆளப்படாமல் மாம்சசிந்தையிலேயே செயல்படுகிறார்கள் என்பதை நிரூபிக்கிறது. மற்ற ஜனங்களைப் போலவே இவர்களும் ஜென்மசுபாவ மனிதர்களைப் போலவே செயல்பட முடியும். மார்க்க பிடிப்பில் இருந்தாலும் சபையில் பதற்றம், முக்கியமாக – ஜென்மசுபாவமுள்ள சபை அங்கத்தினர்களிடமிருந்து உருவாகிறது என்று இது அர்த்தப்படுத்துகிறதா? (யூதா 19ஐ பார்க்கவும்). இயேசு வாழ்ந்த காலத்தில் பரிசேயர்களும் சதுசேயர்களும் ஒருவருக்கொருவர் போட்டியிடவில்லையா? இதன் பொருள் – ஏற்கனவே பழமைவாதிகளுக்கும் தாராளவாதிகளுக்குமிடையே பதட்டங்கள் இருந்தன. ஒரு குழு மிகவும் கொள்கை பிடிப்பு உள்ளவர்களாக இருந்தனர். மற்றகுழு விஷயங்களை தாராளமாக எடுத்துக்கொண்டனர். ஆனால் இருவரும் தாங்களே சரியான வேத விளக்கம் மற்றும் மனப்பான்மையுடன் இருப்பதாக கூறிக்கொண்டாலும் இருகுழுக்களும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படாத ஜென்மசுபாவம் உடையவர்களே என்பதை இயேசு நமக்குச் சுட்டிக்காட்டினார். இன்றும் பழமைவாத கிறிஸ்தவர்களும்கூட ஜென்ம கிறிஸ்தவர்களாக இருக்க முடியும்.

எதிர்பாராதவிதமாக இன்று மக்கள் பெரும்பாலும் பழமைவாதம் அல்லது முற்போக்குவாதம் பார்ப்பதுபோலவே பார்க்கிறார்கள். பார்க்கிறபடியே அவர்கள் தீர்மானிக்கிறனர். ஆயினும் வேதாகமம் வகைப்படுத்துகிறபடி "ஜென்மசுபாவமா அல்லது ஆவிக்குரிய சுபாவமா" என்பதை கண்டறிவது நமக்கு ஒரு சவாலாகவே இருக்கிறது. கலாத்தியர் 6:7–8 வசனங்களில் தேவன் என்ன சொல்லுகிறார் என்பதை நன்றாக கவனியுங்கள்.

"மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்."

மாம்ச கிறிஸ்தவர் இயேசுவை பின்தொடர்ந்து அவரைப் பிரியப்படுத்த விரும்புகிறார். ஆனாலும் தனது முழு வாழ்க்கையையும் இயேசுவிடம் ஒப்படைக்கவில்லை. அல்லது அவர் எப்படியோ பின்வாங்கிப்போனார் (கலா.3:3; வெளி 2:4–5). அதாவது அவர் தன்னை அறியாமலேயே தேவனின் விருப்பத்திற்கும் தன்னுடைய விருப்பத்திற்கும் ஏற்ப ஒரே நேரத்தில் வாழ விரும்புகிறார். ஆனால் அது பயன்தராது. இறுதியில் அவர் தனது சொந்த வாழ்க்கையை தனது கைகளில் எடுத்துக்கொள்கிறார். ஒரு பழமொழி சொல்வது போல அவரது இதயத்தில் இரண்டு ஆத்துமாக்கள் வாழ்கின்றன. அப்படிப்பட்ட நிலையில் தேவன் பரிசுத்த ஆவியை அனுப்ப முடியுமா? யாக்கோபு 4:3 இதற்கு பதிலளிக்கிறது: "நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்." ஜென்ம சுபாவத்தின்படி கேட்பது என்று இந்த அங்கத்தினர் முடிவு செய்தார். அத்தகைய கோரிக்கைக்கான பதில் தற்பெருமையை அவரில் அதிகரிக்கச்செய்யும் அல்லவா? விளைவு, இந்த சபை அங்கத்தினர் சாதாரண மனித பெலன் மற்றும் திறமைகளினாலேயே ஜீவிக்கிறார். இப்படிப்பட்ட வாழ்க்கையை வெளி 3:16 "வெதுவெதுப்பு" என்றும் மத்தேயு 25ல். "புத்தியில்லாமை" என்றும் அழைக்கிறது.

## மாம்சசிந்தையுள்ள சபை அங்கத்தினர்களை இயேசு ஏன் வெதுவெதுப்பானவர்கள் என்று அழைக்கிறார்?

பல கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியின் அனுபவம் இல்லாதவர்களாய் இருக்கின்றனரே ஏன்? இந்த கேள்விக்கு பதிலளிக்க வேண்டுமாயின் முதலாவது லவோதிக்கேயாவின் நிகழ்வை காணவேண்டும். லவோதிக்கேயா சபையின் விசுவாசிகளை இயேசு ஏன் வெதுவெதுப்பானவர்கள் என்று அழைக்கிறார். அதற்கு அவர் நமக்கு ஒரு தெளிவான காரியத்தை விளக்கிக் காட்டியுள்ளார். "இதோ நான் வாசல்படியில் நின்று தட்டுகிறேன்" (வெளி.3:20). இயேசு விசுவாசிகளின் வாழ்க்கையின் மையம் அல்ல; மாறாக வெளியில் நின்று கொண்டிருந்தார். அவர் ஏன் உள்ளே போகவில்லை? ஏனென்றால் அவர் உள்ளே அழைக்கப்படவில்லை. அவர் தனது வழியை கட்டாயப்படுத்தவில்லை, ஏனென்றால் அவர் நமது மனவிருப்பத்தின் முடிவை மதிக்கிறார்.

விசுவாசிகள் இயேசுவை வீட்டுவாசலின் முன்னே நிறுத்தி வைத்திருப்பதேன்? இதற்கு பல்வேறு காரணங்கள் கூறலாம். சிலர் பரிசேயனாகிய நிக்கொதேமுவைப்போல அறிவுப்பூர்வமாக மட்டுமே அறிந்து கொள்ள விரும்புகின்றனர். ஆவிக்குரிய வாழ்க்கையில் தேவனிடம் அவர்கள்

நெருங்கி சேர்வதில்லை. கிறிஸ்தவ வாழ்க்கை என்றால் என்ன என்று அவர்கள் அறிந்திருக்கவில்லை (யோவான் 3:1–10 உடன் ஒப்பிடுக). மற்றவர்களோ கிறிஸ்துவுக்கு சீடர்களாவதென்றால் அதற்கு அதிக கிரையம் செலுத்த வேண்டியிருக்கும் என்று நினைத்து அவரருகில் வருவதில்லை. அவர்கள் செல்வந்தனான வாலிப தலைவனைப்போல அதிகமாக விட்டுக்கொடுக்க வேண்டியதிருக்கும் என்று கருதுகின்றனர் (மத்.19:16–24 உடன் ஒப்பிடுக). இயேசுவைப் பின்பற்றுவதற்கு சுயமறுப்பு, வாழ்க்கையை மாற்ற விருப்பம் (மத்.16:24–25 உடன் ஒப்பிடவும்), மற்றும் தன்னை முழுமையாக தேவனிடம் ஒப்படைத்தல் தேவை (ரோமர் 12:1) என நினைக்கின்றனர். இயேசுவோடு ஐக்கியம் கொள்வதற்கு போதிய நேரம் செலவழிக்காதவர்கள் அவரை வெளியே நிற்கச் செய்து அவரை அசட்டை செய்கின்றனர்.

**நான் மீண்டும் சொல்கிறேன்:** வெளி.3:20ல் "வெதுவெதுப்பாக" இருப்பதற்கான காரணம்: "இதோ நான் வாசல்படியில் நின்று தட்டுகிறேன்" இயேசு அவர்களின் வாழ்க்கையின் மையத்தில் இல்லை. மாறாக வெளியில் அல்லது ஒதுங்கி நிற்கிறார். 'வெதுவெதுப்பான தன்மை' என்பது கிறிஸ்துவுடனான தனிப்பட்ட உறவுடன் தொடர்புடையது. மற்றபடி கிறிஸ்துவுடன் சம்பந்தப்பட்ட நபர் கண்டிப்பாக வெதுவெதுப்பாக இருக்க முடியாது.

**ஒரு உதாரணம்:** ஒரு மனிதன் தனது வியாபாரத்தில் நிறைய முதலீடு செய்துவிட்டு, அதே நேரத்தில் தன் மனைவியைப் புறக்கணிக்கலாம். அவன் தனது வேலையில் அதிக கவனம் செலுத்துகின்றான், அதேவேளையில் தனது திருமண உறவில் கவனம் செலுத்துவது இல்லை. அதுபோல ஒரு நபர் அர்ப்பணிப்புள்ள சபை அங்கத்தினராகவோ, விடாமுயற்சியுள்ள சபைத் தலைவராகவோ அல்லது போதகராகவோ அல்லது கான்பஃரன்ஸ் தலைவராகவோ கூட இருக்கலாம்; அதே வேளையில் கிறிஸ்துவுடனான தனது உறவில் கவனக்குறைவாக இருக்க முடியும். அந்த நபர் நிறைய பணிகளை நிறைவேற்ற அர்ப்பணிப்புடன் இருக்கிறார். அதேவேளையில் அவர் கிறிஸ்துவுடனான தனிப்பட்ட உறவை புறக்கணிக்கிறார். இயேசு அகற்ற விரும்பும் வெதுவெதுப்பான தன்மை இதுதான். ஒரு நபர் தேவனுடைய பணியில் (சபை மற்றும் மிஷினெரி ஊழியத்தில்) மிகவும் பிசியாக இருந்து கொண்டு, அதே வேளையில் தேவனிடம் செலவழிப்பதற்கு நேரம் இல்லையென்பது எவ்வளவு துயரமானது.

## பத்துக் கன்னிகைகளின் உவமை

ஆவிக்குரிய மற்றும் மாம்ச சிந்தையுள்ள சபை உறுப்பினர்களைப் பொறுத்தவரை பத்து கன்னிகைகளைப் பற்றிய இயேசுவின் உவமை நமக்கு சுட்டிக்காட்டுவது என்ன?

- பத்து பேரும் கன்னிகைகள்
- அனைவருக்கும் வேதசத்தியத்தின்மேல் நம்பிக்கை இருந்தன.
- அனைவரும் மணவாளனை சந்திக்க சென்றனர்.
- இரண்டாம் வருகையை அனைவரும் எதிர்பார்த்தனர்.
- அனைவரும் நித்திரைமயக்கமடைந்து தூங்கினர்.
- அனைவரும் அழைப்பைக் கேட்டு விழித்தெழுந்தனர்.
- அனைவரும் தங்கள் விளக்குகளை ஆயத்தப்படுத்தினர்.
- அனைவரது விளக்குகளும் எரிந்து கொண்டிருந்தன.
- அவர்களில் பாதிபேர் தங்கள் விளக்குகள் அணைந்து போகிறதை கவனித்தனர்.

அவர்களனைவரும் தங்கள் விளக்குகளை தயார் செய்தனர் மற்றும் அனைத்து விளக்குகளும் எரிந்து கொண்டிருந்தன. ஆனால் எரியும் விளக்குகளுக்கு எண்ணெய் தேவை. ஆற்றல் பயன்படுத்தப்பட்டது. சிறிது நேரம் கழித்து அவர்களில் ஐந்து பேர் தங்கள் விளக்குகள் அணைந்து போகிறதை கவனித்தனர். சிறிது நேரம் மட்டுமே எரிந்த புத்தியில்லாத கன்னிகைகளின் விளக்குகள் ஏதோவொன்றை (பரிசுத்த ஆவி) இழந்து கொண்டிருந்தன என்பதை நமக்கு காட்டுகின்றன. ஆனால் அது போதுமானதாக இல்லை. எண்ணெய் குறைவாக இருந்தது. அது மட்டுமே வித்தியாசம்.

ஐந்து பேரும் உள்ளே வருவதற்கு கதவைத் திறக்கும்படி கேட்டபோது இயேசு உங்களை அறியேன் என்று பதிலளித்தார். எண்ணெய் சுட்டிக்காட்டும் பரிசுத்த ஆவியை பெறுவதற்காக அவர்கள் அதிக நேரத்தை செலவிட நேர்ந்தது. காலம் மிகவும் பிந்திவிட்டபடியால் கதவும் அடைக்கப்பட்டது.

இயேசுவின் பேச்சு, அவருடனான நமது உறவுக்கும் பரிசுத்த ஆவிக்கும் ஏதோ ஒரு தொடர்பு இருக்கிறது என்பதை காட்டுகிறது. பரிசுத்த ஆவியால் தன்னை நிரப்ப அனுமதிக்காதவர் இயேசுவால் அங்கீகரிக்கப்பட மாட்டார். ரோமர் **8:8–9** கூறுவதாவது: "மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப்

பிரியமாயிருக்கமாட்டார்கள் கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல."

உண்மையில், பரிசுத்த ஆவியின் மூலம் மட்டுமே நாம் இயேசுவோடு உண்மையான தனிப்பட்ட உறவைக் கொண்டிருக்கிறோம். 1யோவான் 3:24 கூறுவதாவது: "அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே அறிந்திருக்கிறோம்." நான் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருக்கிறேன் என்ற உறுதி எனக்கு இருந்தால் நான் இயேசுவில் இருக்கிறேன் என்பதே இதன் பொருள். அவர் என்னில் இருக்கிறார் என்பதும் உறுதி.

40 – நாள் ஜெபக்கூட்டத்தில் பங்குகொண்ட சகோதரிக்கு கிடைத்த அனுபவம் இதுதான். அவளுடைய வாழ்க்கையில் பரிசுத்த ஆவி இடைபட்டதன் வாயிலாக அவள் தேவனுடனான உறவை முற்றிலும் மாறுபட்ட விதத்தில் அனுபவித்தாள். மற்றவர்கள் அவளது வாழ்வில் ஏற்பட்ட மாற்றத்தைக் கவனித்தார்கள். தெற்கு ஜெர்மனியைச் சேர்ந்த ஒரு சகோதரி இந்த கையேட்டைப் படித்த பிறகு பின்வருவனவற்றை எழுதினார். டென்னிஸ் ஸ்மித் எழுதிய "40 – நாள் ஜெபம் மற்றும் இரண்டாம் வருகையை சந்திக்க ஆயத்தமாகுதல்" என்ற தியான புத்தகம் இரண்டையும் ஒன்றாக வாசித்த அனுபவம் என் வாழ்க்கையில் மிகப் பெரிய, நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட ஆசீர்வாதமாக மாறியது. பல சபை அங்கத்தினர்கள் மற்றும் எங்கள் சபையைச் சேர்ந்த ஒரு சகோதரிக்கு கிடைத்த அனுபவத்தைப் போலவே, இயேசு எங்கள் வாழ்க்கையில் நுழைந்து எங்களை மாற்றத்தொடங்கினார் என்பதை இப்போது அனுபவிக்கும் பாக்கியம் எங்களுக்குக் கிடைத்துள்ளது. அவர் இன்னும் எங்களிடையே கிரியை செய்து, படிப்படியாக எங்களை தம்மிடம் நெருங்கிவரச் செய்கிறார்" – Email from March 31, 2013.

ஒரு சகோதரர் பின்வருமாறு எழுதினார்: "தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள் என்ற சிறுபுத்தகம் என்னை ஆழமாகத் தொட்டது. பத்துக் கன்னிகைகள் மற்றும் குறிப்பாக ரோமர் 8:9 'கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவன் அல்ல' என்ற வசனம் என்னை மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. எனக்குள் பரிசுத்த ஆவி இருக்கிறாரா? என்று எனக்குத் தெரியவில்லை; அவர் என்னில் கிரியை செய்கிறாறென்றால் என் வாழ்க்கையில் ஏன் அவருடன் தொடர்புடைய "கனிகளை" நான் இழந்திருக்கிறேன் என்ற திகைப்பு என்னை வேதனைப்படுத்தியது. இந்த ஓய்வுநாள் பிற்பகலில் நான் கையேட்டைப் படித்து முடித்தேன். எல்லையற்ற ஆழ்ந்த சோகம் என்னைச் சூழ்ந்து கொண்டது. பிறகு 108வது

பக்கத்திலுள்ள ஜெபத்தைப் படித்தேன். பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ள எனக்குள் ஒரு ஆழ்ந்த ஆவல் உருவாயிற்று. என் இதயம் மாறும் மற்றும் தேவனாகிய பிதா தம்முடைய சித்தத்தின்படி என்னை மாற்றுவார் கையேட்டிற்காகவும் அதன் ஆழமான வார்த்தைகளுக்காகவும் நன்றி." –A.P

மாம்ச கிறிஸ்தவனுக்குள்ள மிகப்பெரிய சோகம் என்னவென்றால், ரோமர் 8:9ன்படி "கிறிஸ்வின் ஆவி இல்லாதவன் அவருடையவன் அல்ல" அதாவது, அவனுடைய நிலை மாறாவிட்டால் அவன் நித்திய ஜீவனை பெறமுடியாது என்பதே.

**ஒட்டு மொத்த கருத்து :** ஆவிக்குரிய சிந்தை மற்றும் மாம்ச சிந்தையுள்ள சபை அங்கத்தினரிடையே உள்ள வேறுபாடு பரிசுத்த ஆவியோடு தொடர்புடையதாகும். ஆவிக்குரிய கிறிஸ்தவன் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுகிறான். மாம்ச சிந்தையுள்ள கிறிஸ்தவனோ போதுமான அளவு பரிசுத்த ஆவியால் நிரப்பப்படவில்லை.

நீங்கள் ஒரு மாம்ச கிறிஸ்தவன் என்பதை உணர்ந்தால் அதற்காக நீங்கள் உங்களையே கோபப்படுத்திக் கொள்ள வேண்டாம். தேவன் உங்களுக்கு ஒரு பரிகாரத்தை வழங்குகிறார்: அந்த பரிகாரம் பரிசுத்த ஆவியானவரே.

சில வட்டங்களில் பரிசுத்த ஆவிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது; மறுபுறம் மற்ற வட்டங்களில் அவர் புறக்கணிக்கப் படுகிறார். வேதாகமம் காட்டும் மத்திய பாதையில் கர்த்தர் நம்மை வழிநடத்துவாராக.

# அற்புதமான வார்த்தைகள்

**ஒரு குவளையிலுள்ள குளிர்ந்த நீர் போல**

"தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்" – புத்தகம் ஒரு குவளையிலுள்ள குளிர்ந்த நீர் போன்றது. ஒரு மனிதன் அதைக் குடித்தால் அது அவனுக்குப் புத்துணர்ச்சியைத் தரும். அந்த குளிர்ந்த நீரை தூங்கிக் கொண்டிருக்கிறவர் மேல் ஊற்றினால் அது மின்சாரம் தாக்குவதுபோல் வேலை செய்யும். இந்த புத்தகத்தை எழுதியவருக்கும் இந்த புத்தகங்களை எங்கள் திருச்சபைக்கு அனுப்பியவர்களுக்கும் நன்றி. தனிப்பட்ட முறையில் நான் இந்த புத்தகத்திலிருந்து பல ஆசீர்வாதங்களைப் பெற்றேன். – பாகிஸ்தானிலிருந்து T.B.

**பரிசுத்த ஆவியானவர் 'ஓட்டுனர் இருக்கையில்' அமர்ந்து 'விபத்துக்களை' தவிர்க்கிறார்**

'தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்' புத்தகத்தை நான் நான்கு முறை படித்திருக்கிறேன். மேலும் இரண்டு முறையாவது படிப்பேன். அது ஒரு ஆசீர்வாதம். சாதாரணமானவனான நான் கடந்த ஓய்வுநாளில் பிரசங்கித்தேன். வேதாகமத்திலும் எலன் உவைட் புத்தகங்களிலும் படிக்க எனக்கு இப்போது அதிக உள் சுதந்திரம் இருக்கிறது. இப்போது என்னிடம் ஒரு வித்தியாசமான அணுகுமுறை இருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் ஓட்டுநர் இருக்கையில் அமர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். பல வருடங்களுக்கு முன்பே நான் அதைச் செய்திருந்தால் எத்தனை விபத்துக்களை தவிர்த்திருப்பேன்! – அமெரிக்காவிலிருந்து P.M.

**விளக்கில் எண்ணை**

'தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்' என்ற சிறு புத்தகத்தின் பரிந்துரைகளைப் பின்பற்றும் எவரும் நிச்சயமாக அவரவர் விளக்கில் தேவையான எண்ணெய் வைத்திருப்பார்கள். – ஜெர்மனியில் இருந்து H.K.

**அடிப்படைகளுக்குத் திரும்பு**

அடிப்படைகளுக்குத் திரும்ப எங்களுக்கு உதவியதற்கு மீண்டும் நன்றி! - J.S.

*"அந்தப்படி எக்காளமும் விளங்காத*
*சத்தமிட்டால் எவன் யுத்தத்திற்கு*
*ஆயத்தம்பண்ணுவான்?"*
**– 1கொரி. 14:8**

## தனிப்பட்ட எண்ணங்கள் மற்றும் கலந்துரையாடலுக்கான வழிகாட்டி

1. பரிசுத்த ஆவியின் பற்றாக்குறைக்கு காரணம் என்ன?

______________________________

2. தேவனுடனான உறவால் வரையறுக்கப்பட்ட மக்கள் மூன்று குழுக்கள் உள்ளன. ஒவ்வொரு குழுவின் பண்புகள் என்ன?

ஜென்மசுபாவமுள்ள மனிதன் :______________________

மாம்ச மனிதன் :______________________

ஆவிக்குரிய மனிதன் :______________________

3. நான் எந்தக் குழுவில் இருக்கிறேன் என்பதை எந்தக் காரணி தீர்மானிக்கிறது?

______________________________

______________________________

4. தேவனிடம் அர்ப்பணிக்க வேண்டியது ஏன் முக்கியமானது?

______________________________

______________________________

5. புத்தியுள்ள ஐந்து கன்னிகைகளுக்கும் புத்தியில்லாத ஐந்து கன்னிகைகளுக்குமுள்ள வித்தியாசம் என்ன?

______________________________

______________________________

### நமது ஜெப நேரம்

- ➢ உங்கள் ஜெப–பங்காளியுடன் தொடர்பு கொண்டு இந்த தலைப்பைப் பற்றி விவாதியுங்கள்.
- ➢ உங்கள் ஜெப–பங்காளியுடன் சேர்ந்து ஜெபியுங்கள்.

1. உங்களுடைய குறை என்ன என்பதை உங்களுக்குக் காண்பிக்கும்படி தேவனிடம் ஜெபியுங்கள்.
2. ஆவிக்குரிய இதயத்திற்காக ஜெபியுங்கள்.
3. நீங்கள் மாம்ச கிறிஸ்தவனாக இருந்தால் அதை உணர்ந்து கொள்ளும் திறனுக்காகவும் அதை மாற்றுவதற்கு தேவனின் உதவிக்காகவும் ஜெபியுங்கள்.

நாள் 4

## மாம்ச கிறிஸ்தவனாயிருப்பதின் முக்கியப் பிரச்சனை என்ன?

### ஒப்பீடு : ஆதி சபையும் கடைசி கால சபையும்

ஆதி சபையை இன்றைய சபையுடன் ஒப்பிடும்போது, ஆதி சபை முக்கியமாக ஆவிக்குரிய விசுவாசப்பிள்ளைகளால் நிறைந்திருந்திருக்க வேண்டும் என்பதை நம்மால் கண்டுகொள்ள முடியும். அவர்களின் விரைவான மற்றும் நேர்மறையான வளர்ச்சிக்கு இதுவே காரணம் என்று அப்போஸ்தல நடபடிகள் புத்தகம் காட்டுகிறது. அவர்களுக்கு வேறு எந்த உதவியோ உபகரணங்களோ இருக்கவில்லை. ஆனால் அவர்களிடம் பரிசுத்த ஆவியானவர் இருந்தார். நம்மிடம் ஏராளமான சிறந்த உபகரணங்கள், திட்டங்கள் உள்ளன. ஆனால் பரிசுத்த ஆவியின் குறைபாடு இருக்கிறது.

A.W. டோசர் சொன்னதை நினைவில் கொள்ளுங்கள்: "பரிசுத்த ஆவியானவர் இன்று நம் சபையிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டால், நாம் செய்து கொண்டிருக்கும் 95% பணிகள் தொடரும், வித்தியாசத்தை யாரும் கவனிக்க மாட்டார்கள். ஆனால் ஆதி சபையில் பரிசுத்த ஆவி விலகியிருந்தால், 95% (கிட்டதட்ட அனைத்தையும் குறிக்கிறது) பணிகள் நிறுத்தப்பட்டிருக்கும். மேலும் அனைவரும் வித்தியாசத்தை கவனித்திருப்பார்கள்." Dr. S. Joseph Kidder, Anleitung zum geistichen Leben (Andrew University, PPP Folie 2.)

### பரிசுத்த ஆவியின்றி நாம் வாழக் கற்றுகொண்டோமா? இன்றைய சபை அதிகமாக மாம்ச கிறிஸ்தவர்களால் நிறைந்துள்ளதா?

இதன் விளைவாக, நாம் பெரும்பாலும் பலனற்றவர்களாக இருக்கிறோம். பெரிய அளவில் வெற்றிகளையும் சாதிப்பது இல்லை என்பது உண்மைதானே? பல இடங்களிலுள்ள நம்முடைய பலவீனமான சபை வளர்ச்சிக்கும், மாம்ச சிந்தையுடன் கூடிய அணுகுமுறைக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா? நமது தனிப்பட்ட மற்றும் பரஸ்பர மையப்பிரச்சனை பரிசுத்த ஆவியின் பற்றாக்குறையே என்பதை நாம் மென்மேலும் கவனிப்போம். தனிப்பட்ட முறையில் நாம் தேவனுடைய ஒத்தாசையுடன் விரைவில் இந்தநிலையை மாற்ற முடியும்.

ஊழியக்காரர்களுக்கான பின்வரும் அறிக்கை இயல்பாகவே அனைவருக்குமே பொருந்தும். ஜோகன்னஸ் மாகர் கூறுவதாவது:

"ஆவிக்குரிய மற்றும் மாம்ச கிறிஸ்தவர்களுக்கிடையே பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டவர்களுக்கும், பரிசுத்த ஆவிக்கு இடங்கொடுக்காதவர்களுக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை பவுல் வேறுபடுத்திக் காட்டுகிறார். பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் பெற்றார்கள். அதேவேளையில் அவர்கள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படவில்லை."

ஊழியக்காரர்களுக்கு இது பொருந்துமா? நான் நல்ல இறையியல் பயிற்சியை பெற்று, வேதவாக்கியங்களின் மொழிநடையை நன்கு அறிந்து திறமையாக விளக்கத்தை கொடுக்கமுடியும். நான் தலை சிறந்த வேதாகம உண்மைகளை அறிவார்ந்த முறையில் பெற்று அவற்றை புரிந்து கொண்டு பல்வேறு நூற்றாண்டுகளுக்கிடையில் பெலமாக எடுத்தாளப்பட்ட இறையியலை நன்கு அறிந்திருக்க முடியும். எங்ஙனம் பிரசங்கம் செய்ய வேண்டும் என்ற புரிதலைப்பெற்று பொருத்தமான மற்றும் யதார்த்தமான பிரசங்கங்களை பிரசங்கிக்க முடியும். மேலும் இவற்றோடு எனக்கு அறிவு மற்றும் திறமைகள் அனைத்தும் இருந்தபோதிலும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படாமலும் இருக்க முடியும். புத்தகங்கள், கல்வி, நல்ல தொழில் நுட்ட உபகரணங்கள், வசீகரிக்கும் தன்மை எல்லாம் இருந்தாலும் இவையாவும் ஆவியால் நிறைந்த வாழ்க்கைக்கு மாற்றாக அமையாது.

பிரசங்கித்தல், ஜெபம் செய்தல், சபை நிரல்களை ஒழுங்குபடுத்துதல், போதகருக்கான ஆலோசனை வழங்கும் சுவிசேஷ நிகழ்சிகளை தயாரித்தல் – இவை அனைத்தையும் கற்றுக் கொள்ளலாம். மற்றும் பரிசுத்த ஆவியின் துணையின்றி நடைமுறைப்படுத்தவும் முடியும். எலன் உவைட் இந்த அபாயகரமான சாத்தியத்தை பின்வருமாறு விவரித்தார்: "பரிசுத்த ஆவியானவராகிய தேவன் மிகக் குறைவாக இருப்பதற்கான காரணம் ஊழியக்காரர்கள் அவருடைய துணையில்லாமல் பணி செய்ய கற்றுக்கொள்வதே ஆகும்." – EG. White, Testimonies for the Church, Vol.1, (1868), p.383.1

ஜோகன்னஸ் மேகர் ஒரு போதகர், சுவிசேஷகர், மற்றும் பல ஆண்டுகளாக முறையான இறையியல் பேராசிரியராக இருந்தவர். அவர் கடைசியாக சுவிட்சர்லாந்தின் பெர்னில் உள்ள யூரோ– ஆப்ரிக்காவின் (இப்போது: மத்திய ஐரோப்பிய மண்டலம்) ஊழிய இலாக்காவின் செயலாளராகக் பணியாற்றினார். இப்போது ஓய்வு பெற்று ஜெர்மனியின் ஃப்ரீடென்சாவில் வசித்து வருகிறார். - Johannes Mager (Auf den Spuren des Heiligen Geistes (Following the Steps of the Holy Ghost), Luneberg,1999), pages 102-103.

**சுருக்கம்:** மாம்ச சிந்தையில் இருப்பதென்பது சாதாரண மனிதபெலம் மற்றும் திறன்களை மட்டும் கொண்டு பரிசுத்த ஆவியின்றி அல்லது போதிய அளவு பரிசுத்த ஆவியின்றி வாழ்வதாகும்.

## மாம்ச கிறிஸ்தவத்திலுள்ள முக்கிய தடை

வேதாகமத்தின் சிறந்த நெறிமுறைகள் – உங்கள் பகைவர்களை நேசிப்பது, ஜனங்களின் பாவத்தை மன்னிப்பது மற்றும் பாவத்தை மேற்கொள்வது போன்றவற்றை மனித முயற்சியால் அல்ல – பரிசுத்த ஆவியின் வல்லமையால் மட்டுமே முடியும். மாம்ச கிறிஸ்தவத்தில் உள்ள முக்கிய பிரச்சனை என்னவென்றால், அது மனித பலத்தை மட்டுமே நம்பி வாழ்வதாகும். நம்முடைய சொந்த பலத்தால் மட்டும் தேவனுடைய விருப்பத்தை செய்துவிட முடியாது. இந்த தலைப்பில் சில வேதவசனங்களைப் படிப்போம்.

ஏசாயா **64:6** "எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது."

எரேமியா **13:23** "எத்தியோப்பியன் தன் தோலையும், சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்றக்கூடுமோ? கூடுமானால், தீமைசெய்யப் பழகின நீங்களும் நன்மைசெய்யக்கூடும்."

எசேக்கியேல் **36:26–27** "உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும் பண்ணுவேன்."

ரோமர் **8:7** "எப்படியென்றால், மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை: அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது." NIV "மாம்ச சிந்தையால் ஆளப்படும் மனது தேவனுக்கு எதிரானது. அது தேவசித்தத்திற்கு தன்னை ஒப்புக்கொடுப்பதில்லை. அதன்படி செயல்படுவதும் இல்லை."

**எலன் உவைட் மிகத்தெளிவாகவும் துல்லியமாகவும் கூறினார்:**

"நியாயப்பிரமாணத்தைக் தங்களது சொந்த முயற்சியால் கடைபிடித்து பரலோகத்தை அடைய முயற்சிப்பவர்கள் சாத்தியமற்றதை முயற்சிக்கிறார்கள். கீழ்படிதல் இல்லாமல் மனிதன் இரட்சிக்கப்பட முடியாது. ஆனால் அவனது கிரியைகள் அவனுடையதாக மட்டும் இருக்கக்கூடாது; கிறிஸ்து அவனில் கிரியை செய்து தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் அவனில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்." – Review and Herald, July 1, 1890.

பரிசுத்த ஆவியின்றி தேவனுடைய சித்தத்தை செய்வதற்கு நம்மால் இயலாது என்பதை இந்த குறிப்புகள் மிகத்தெளிவாக காட்டுகின்றன. நாம்

எப்போதும் தேவனுடைய விருப்பத்திற்கான ஒரு முடிவை எடுக்க வேண்டும், அதை செயல்படுத்த தேவன் நமக்கு பெலன் தருகிறார். விசுவாசத்தின் மூலம் நீதிமானாகுதல் என்ற கோட்பாட்டின்படி இந்த புரிதல் மிகவும் முக்கியமானது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## தங்களின் பெலத்தை மிஞ்சிய ஒன்றை செய்ய முயற்சிக்கும்போது என்ன நடக்கக்கூடும்?

அதை என்னால் செய்ய முடியாது! இப்போது நான் மீண்டும் தோல்வியடைந்து விட்டேன்! இப்படி நான் அடிக்கடி உணரும்போது என்ன நடக்கும்? ஓரளவிற்கு நாம் ஏமாற்றத்தை சந்திக்கிறோம் என்றே நினைக்கிறேன்.

இந்த பிரச்சனை பழைய தலைமுறையைவிட இளைய தலைமுறையினருக்கு மிகவும் முக்கியமானது என்று நான் நினைக்கிறேன். வயதானவர்கள் கடமை உணர்வு, குடும்பம், பள்ளி மற்றும் வியாபாரத்தில் நேர்மை ஆகியவற்றை பயன்படுத்தப் பழகியிருக்கிறார்கள். இதனால் இளைஞர்களைப்போல் அவர்கள் ஏமாற்றத்தால் எளிதில் எரிச்சலடைய மாட்டார்கள். பிரச்சனை இளைஞர்கள் மற்றும் பெரியவர்கள் இருவருக்கும் சமமாகவே இருந்தாலும் இளம் நபர் மட்டுமே அதை இன்னும் தெளிவாக கவனிக்கிறார். ஆகவே தங்கள் சொந்த பெலத்தால் விசுவாசத்தின் பாதையில் பயணிப்பதே ஒவ்வொரு மாம்ச கிறிஸ்தவனின் முதன்மையான பிரச்சனையாகும்.

இந்த சிக்கலை தீர்ப்பது எப்படி என முயற்சிப்போம்? ஒரு நபர் தேவனின் உதவிக்காக மிகவும் தீவிரமாக ஜெபிக்கலாம் மற்றும் கடினமாக உழைக்க முடிவு செய்யலாம். நாம் இவ்வளவு குறுகிய மனதுடன் இருக்கக்கூடாது என்று மற்றொரு நபர் நினைத்து அவர் விஷயங்களை மிகவும் சாதாரணமாக எடுத்துக்கொள்ள துவங்குகிறார் மற்றும் சுதந்திரமாக உணர்கிறார். வேறு ஒருவர் தனது நம்பிக்கையை முற்றிலுமாக கைவிட்டுவிடுகிறார். என்றாலும், இப்போது அவர் நன்றாகக்கூட உணரலாம். பிரச்சனை என்னவென்றால், இந்த வெளிப்படையான தீர்வுகளுக்காக அவர்கள் எடுக்கும் முடிவுகள் தவறான தீர்வுகள். ஏனென்றால் அதன் விளைவுகள் உடனடியாகவோ அல்லது தாமதமாகவோ வரும். தேவனின் கற்பனைகளை தீவிரமாக எடுத்துக்கொள்வதே சரியான வழி. ஏனென்றால் அவை நம்முடைய நன்மைக்காகவே அன்பினால் கொடுக்கப்பட்டவை. ஆயினும் இதைசெய்வதற்கு தேவனின் பெலன் நமக்குத் தேவை. பரிசுத்த ஆவியின் வல்லமையில் வாழ்வதே சரியான வழி. ஏனெனில் அதில் அதிக மகிழ்ச்சி, உந்துதல், வலிமை, பலன் மற்றும் வெற்றி இருக்கிறது.

## மையப் பிரச்சினை

இதுவரை மாம்ச கிறிஸ்தவத்துடன் தொடர்புடையதை நாம் ஓரளவுக்கு அடையாளம் கண்டோம் என்று நினைக்கிறேன். வெதுவெதுப்பாக தன்னை பின்பற்றுவர்களை இயேசு ஏன் விரும்பவில்லை என்பது இப்போது தெளிவாக புரிகிறதா? தேவன் நமக்குக் கொடுக்க விரும்புவது போன்ற பூரணமான வாழ்க்கை அவர்களிடம் இல்லை. அவர்கள் ஒரு மோசமான உதாரணம் என்பது அவர்களில் பெரும்பாலோருக்குத் தெரியாது. நாம் நினைப்பதைவிட பிரச்சனை மிகவும் தீவிரமானது. "அரைகுறையான இதயமுள்ள கிறிஸ்தவர்கள் சந்தேகவாதிகளைவிட மோசமானவர்கள். அவர்களின் ஒத்துழையாமை நிலைப்பாடு பலரை தவறாக வழிநடத்துகிறது." - EG White letter 44, 1903, quoted in SDA Bible Commentary. Vol.7. p.963 on Rev. 3:15-16

ஆர்தர் ஜி.டேனியல்ஸ் எழுதிய "கிறிஸ்துவே நமது நீதி" என்ற புத்தகத்தில் நாம் பின்வருவனவற்றை வாசிக்கிறோம். "ஆனால் சம்பிரதாயம் மிகவும் வஞ்சிக்கும் நாசகரமானது. இது சந்தேகத்திற்கு இடமில்லாத மறைக்கப்பட்ட பாறை போன்று தோன்றினாலும் பல நூற்றாண்டுகளாக சபை அடிக்கடி சிதைந்துள்ளது. தேவனுடைய வல்லமையில்லாத 'தேவபக்தியின் வேஷம்' கடைசி நாட்களின் ஆபத்துகளில் ஒன்றாக இருக்குமென பவுல் நம்மை எச்சரிக்கிறார். ஆகவே வஞ்சிக்கும் பில்லிசூனியத்திலிருந்து விலகிச் செல்லுமாறு அறிவுறுத்துகிறார்." -Arthur G Daniels, Christ Our Righteousness, p.30, - Christu unsere Gerechtigkeit (Hamburg 1962), S.20.

## மாம்ச கிறிஸ்தவத்திற்கு வழிவகுக்கும் சாத்தியமான காரணிகள்

பின்வரும் காரணிகள் அல்லது காரணங்கள் மாம்ச கிறிஸ்தவத்திற்கு வழிவகுக்கும் விஷயங்கள் ஆகும்.

**1. அறியாமை** - பரிசுத்த ஆவியோடு நாம் போதுமான அளவு நம்மை அர்ப்பணிக்கவில்லை அல்லது அதை நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான திறவுகோலை நாம் காணவில்லை.

**2. நம்பிக்கையின்மை அல்லது குறைந்த விசுவாசம்** - பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுவதற்கு நம் வாழ்க்கையை இயேசு கிறிஸ்துவிடம் முழுமையாக ஒப்படைப்பதே முன்நிபந்தனையாகும். இதுவும் அறியாமையின் காரணமாக நடக்கலாம். அதாவது நாம் விரும்புவதைவிட தேவன் நம்மை வித்தியாசமாக வழிநடத்துவார் என்று பயப்படுவதால் இருக்கலாம். தேவனின் அன்பையும் ஞானத்தையும் நாம் போதுமான அளவு நம்பவில்லை என்பதே இதன் பொருள்.

**3. பிழையான கருத்துக்கள்** - ஒரு நபர் உண்மையில் பரிசுத்த

ஆவியை பெறாவிட்டாலும் அல்லது போதுமானதாக பெறாவிட்டாலும் – தான் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருப்பதாக நினைக்க முடியும். இது அடிக்கடி நிகழும் பிரச்சனையாக தெரிகிறது.

**4. மிகவும் சுமையோடிருப்பது** - தங்களின் வாழ்க்கை மிகவும் பாரமாயிருப்பதால் கிறிஸ்துவுடனான உறவைப் பேணுவதற்கு தங்களுக்கு போதுமான நேரம் இல்லை என்று நினைக்கிறார்கள், அல்லது அப்படியே சற்று நேரத்தை செலவிட்டாலும் அதனால் தேவனுடனான உறவில் எந்த முன்னேற்றமும் ஏற்படுவதில்லை.

**5. மறைக்கப்பட்ட பாவங்கள்** - இது தொடர்பு அறுந்துபோகுதல் போன்றது. அதாவது தேவவல்லமையுடன் எந்த தொடர்பும் இல்லை.

**6. பெரும்பாலும் தங்களின் உணர்வுகளுக்கு ஏற்ப செயல்படுதல் :** "விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்" என தேவ வார்த்தை கூறுகிறது. நான் தேவனை நம்பி முடிவெடுக்கிறேனா? அல்லது என் உணர்வுகளுக்கு ஏற்ப முடிவெடுக்கிறேனா? ரோஜர் மோர்னோவின் இந்த அறிக்கை என்னை மிகவும் கவர்ந்தது: "என்ன நடக்கிறது என்பதை உணராமல், கிறிஸ்து மற்றும் அவருடைய தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கு செவிகொடுப்பதற்கு பதிலாக, தங்கள் உணர்வுகளுக்கு செவிகொடுக்கும்படி அந்த தீயஆவிகள் மக்களை ஊக்குவிக்கும். எப்படியிருந்தாலும் அந்த தனிநபரது அனுமதியில்லாமல் அவருடைய வாழ்க்கையின் கட்டுப்பாட்டை அந்த ஆவிகளால் பெற முடியாது." - Roger Morneau, A Trip into the supernatural, Review and Herald 1982. p.43

## நான் ஏற்கனவே பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருந்தாலும், ஏன் பரிசுத்த ஆவியைக் கேட்க வேண்டும்?

ஒருபுறம், பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம்செய்வதற்காக நமக்குக் கொடுக்கப்பட்டார் என்றும், மறுபுறம், நாம் பரிசுத்த ஆவியானவரை விசுவாசத்தினால் தொடர்ந்து கேட்க வேண்டும் என்றும் சொல்லப்படுகிறது. இந்த வெளிப்படையான முரண்பாட்டை எவ்வாறு தீர்ப்பது?

ஒருபுறம்: யோவான் 14:17ல் (பரிசுத்த ஆவியானவர்) "உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால்," என்று இயேசு கூறினார்; அப்போஸ்தலர் 2:38ல் "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என்கிறான் பேதுரு.

மறுபுறம்: இயேசு ஜெபத்தைப் பற்றி போதித்தபோது, லூக்கா 11:9–13ல் "கேளுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்" என்றார். எபேசியர்

5:18ல் பவுல் "ஆவியினாலே நிறைந்திருங்கள்" என்கிறான். கிரேக்க மொழியில் இவ்விரண்டு நிகழ்வுகளிலும் இது ஒரு தொடர்ச்சியான விண்ணப்பமாகவே வருகிறது.

**தீர்வு:** இதற்கான தீர்வை எலன் உவைட் கூறுகிறார்: "ஆயினும் ஆவியின் செயல்பாடுகள் எப்போதும் எழுதப்பட்ட வார்த்தையுடன் இணக்கமாக இருக்கும். இயற்கை உலகைப் போலவே, ஆன்மீக உலகிலும் நிகழ்கின்றன. தெய்வீக வல்லமையால் இயற்கை உலகின் ஒவ்வொரு உயிரினமும் ஒவ்வொரு இமைப்பொழுதும் பாதுகாக்கப்படுகிறது; ஆயினும் அது ஒரு நேரடி அதிசயத்தால் நிகழாமல் தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஏதுகரங்கள் மூலம் வழங்கப்படுகிறது. எனவே கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களின் ஆவிக்குரிய வாழ்க்கையும் "தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், வளர" (எபே. 4:13) வேண்டுமானால் அவன் ஜீவ அப்பத்தை புசித்து, இரட்சிப்பின் தண்ணீரைக் குடிக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையில் உள்ள அறிவுரைகளுக்கு செவிசாய்த்து எல்லாவற்றிலும் அவன் விழித்திருந்து, ஜெபித்து, அயராது வேலை செய்ய வேண்டும்." - E.G. White, The Acts of the Apostles, p.284.2

நாம் பிறக்கும்போதே ஜீவனைப் பெற்றோம். இந்த ஜீவனைத் தக்கவைக்க நாம் சாப்பிட, குடிக்க, மற்றும் உடற்பயிற்சி போன்றவைகளைச் செய்ய வேண்டும். தண்ணீர் மற்றும் ஆவியால் ஞானஸ்நானம் பெறுவதன் மூலம் நாம் பரிசுத்த ஆவியைக் கொண்டிருக்கிறோம். இதனால் இந்த ஆன்மீக வாழ்க்கை நம் வாழ்நாள் முழுவதும் இருக்கும். ஆயினும், இந்த ஆவிக்குரிய வாழ்க்கையைத் தக்கவைக்க, தேவன் வழங்கிய பரிசுத்த ஆவி, தேவனுடைய வார்த்தை, ஜெபம், நம்முடைய சாட்சி போன்ற ஆன்மீக வழிமுறைகளைப் பயன்படுத்துவது அவசியம்.

யோவான் 15:4ல் "என்னில் நிலைத்திருங்கள் நானும் உங்களில் நிலைத்திருப்பேன்." என இயேசு கூறினார். "கிறிஸ்துவில் நிலைத்திருத்தல் என்பது அவருடைய சேவைக்கு தங்களை ஒப்புக்கொடுத்து அவருடைய ஆவியை தடையில்லாமல் தொடர்ச்சியாக பெறுவதாகும்." எலன் உவைட், The Desire of Ages, (1898), p.676.2

அதனால்தான் நாம் ஒவ்வொரு நாளும் விசுவாசத்தினால் பரிசுத்த ஆவியைக் கேட்க வேண்டும் மற்றும் ஒவ்வொரு காலையிலும் நம்மையும் நம்மிடம் உள்ள எல்லாவற்றையும் இறைவனிடம் ஒப்படைக்க வேண்டும்.

### நான் எங்கே நிற்கிறேன்?

நான் எந்தக் குழுவில் இருக்கிறேன் என்பதைக் கண்டவறிவதே

இப்போது மிக முக்கியமான விஷயம். நான் எங்கே நிற்கிறேன்?

எனதருமை தாயார் 20 வயதாக இருந்தபோது, ஒரு மனிதன் அவளிடம் கேட்ட கேள்விக்கு: விசுவாசத்திலெல்லாம் எனக்கு ஆர்வமில்லை என்று பதிலளித்தாள். அந்த மனிதன் மாறுத்தரமாக: நீ இன்று இரவில் மரிக்க வேண்டியிருந்தால்? என்றார். இந்த கருத்து அவளை மிகவும் பாதித்தது. ஆனால் அது மிகவும் நேர்மறையான விளைவைக் கொண்டிருந்தது. அது இயேசுவுக்கும் அவருடைய சபைக்கும் ஒரு நல்ல முடிவை எடுக்க வழிவகுத்தது. இந்த கேள்வி உங்களுக்கும் உதவலாம்.

நீங்கள் இன்று ஒரு வேளை (மாரடைப்பு, விபத்து) இறந்துவிட்டீர்கள் என்று வைத்துக் கொள்வோம். இயேசு கிறிஸ்துவுடன் நித்திய வாழ்வை களிப்போம் என்ற உறுதி உங்களுக்கு இருக்கிறதா? நிச்சயமற்றவராக இருக்க வேண்டாம்.

## ஏதோ ஒரு பயம்!

இந்த பிரச்சனையின் அகோரத்தன்மையை நான் புரிந்து கொள்ள ஆரம்பித்தாலே, எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது. நான் இந்த பத்தியை உண்மையில் சேர்க்க வேண்டுமா என்று யோசித்து ஜெபித்தேன். நான் இப்போது அதற்கான வாய்ப்பைப் பெறுகிறேன். ஏனென்றால் அது இப்போதைய வாழ்க்கைக்கும் மற்றும் நித்திய ஜீவனுக்கும் மகிழ்ச்சியான விஷயம். ஏனெனில் அது குறிப்பாக திருமணம், குடும்பம், சபை மற்றும் தொழில் போன்றவற்றின்மேலும் தனது செல்வாக்கைச் செலுத்துகிறது. இது யாருக்குப் பொருந்தும் என்று எனக்குத் தெரியாது. ஆனால் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு நான் உதவ விரும்புகிறேன். ஏனெனில் எனக்கும் உதவி செய்யப்பட்டுள்ளது. மாம்ச கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் இதை உணர்ந்து கொள்வது மிகவும் அவசியம். தேவ ஒத்தாசையில்லாமல் அவரால் மாற முடியாது. தேவன் தமது அன்பினால், பரிசுத்த ஆவியின் மூலம், இயேசு கிறிஸ்துவுடன் உருவாகும் நெருக்கமான உறவினால் நம்மை வளமாக ஆசீர்வதிக்க விரும்புகிறார். இதன் விளைவாக பெரும் இழப்பைத் தவிர்ப்பதோடு அளவிடமுடியாத ஆசீர்வாதத்தையும் அனுபவிக்க முடியும். அற்புதமான விஷயம் என்னவென்றால், தேவ ஒத்தாசையுடன் நாம் இந்த நிலைமையை, விரைவாகவும் சரியாகவும் செய்ய முடியும். (அத்தியாயம் 3 மற்றும் 5ல் இன்னும் விரிவாக)

மாம்ச கிறிஸ்தவத்தின் பிரச்சனை வேதாகமத்தில் பல்வேறு விதங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட குழுக்கள் மற்றும் குழுக்களில் உள்ள ஜனங்கள் வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கலாம். ஆனால் மையப்

பிரச்சனை ஒன்றே. விளக்கங்களோ வெவ்வேறானவைகள்.

- "**மாம்ச சிந்தை**" ரோமர் **8:1–17; 1**கொரி**.3:1–4;** கலாத்தியர் **5:16–21** மற்றும் பிற வசனங்கள்

- "**புத்தியில்லாத**" பத்துக் கன்னிகைகளின் உவமை. மத்தேயு **25:1–13**

"புத்தியில்லாத கன்னிகைகளால் பிரதிநிதித்துவம் செய்யப்படும் சபையின் நிலை லவோதிக்கேயாவின் நிலையோடு ஒப்பிட்டே பேசப்படுகிறது" E.G. White, Review and Herald, Aug19,1890.

- "**வெதுவெதுப்பான**" லவோதிக்கேயாவிற்கு கடிதம் வெளி**.3:14–21**

"நீ குளிராகவோ அல்லது அனலாகவோ இருக்க விரும்புகிறேன்" **(**வெளி **3:15)** என்று இயேசு கூறுவது ஆச்சர்யமாக இருக்கிறதல்லவா**?** நீ வெது வெதுப்பாயிருப்பதைவிட குளிராயிரு என கூறுவதற்கு காரணம் என்ன**?** அரைகுறையான கிறிஸ்தவர்கள் தெய்வநம்பிக்கை இல்லாதவர்களை விட மோசமானவர்கள்; அவர்களின் ஏமாற்றும் வார்த்தைகள் மற்றும் இணக்கமற்ற நிலை பலரை வழிவிலகச் செய்கிறது**.** தெய்வநம்பிக்கை இல்லாதவன் தன்னுடைய நிலையை மறைக்காமல் காட்டுகிறான்**.** வெதுவெதுப்பான கிறிஸ்தவனோ இரு தரப்பினரையும் ஏமாற்றுகிறான்**.** அவன் ஒரு நல்ல உலகமனிதனோ அல்லது ஒரு நல்ல கிறிஸ்தவனோ அல்ல**.** யாராலும் செய்ய முடியாத ஒரு வேலையை செய்ய சாத்தான் அவனை பயன்படுத்துகிறான்**.**" – E.G. White letter 44, 1903. quoted in the SDA Bible Commentary Vol 7. P.963 on Rev. 3:15,16.

- "**மறுபடியும் பிறக்கவில்லை**" அல்லது இந்த நிலையில் இல்லாதவன் **–** யோவான் **3:1–21.**

"இவ்வுலகில் புதிய பிறப்பு என்பது ஒரு அரிய அனுபவம்**.** சபைகளில் பல குழப்பங்கள் இருப்பதற்கு இந்த அனுபவத்தை பெறாததே காரணம்**.** கிறிஸ்துவின் பெயரை ஏற்றுக்கொண்டிருக்கிற அனேகர் பரிசுத்தமற்றவர்களாகவும் பாவிகளுமாகவே இருக்கின்றனர்**.** அவர்கள் ஞானஸ்நானத்தின்போது பாவத்துடனேயே தண்ணீருக்குள் சென்று வந்துள்ளனர்**.** சுயம் சாகவில்லை**.** எனவே அவர்கள் கிறிஸ்துவுடனேகூட நீதிக்கென்று எழுந்திருக்கவில்லை**.** " – E.G.White, MS 148,149, quoted in SDA BC Vol.6, p.1075 Many buried alive.

- **தேவபக்தியின் வேஷம் –** "தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவர்கள்" **– 2**தீமோ**.3:5.** ஆர்தர் ஜி டேனியல்ஸ் இதைப்பற்றி பின்வருமாறு கூறுகிறார்**:**

"சம்பிரதாயம் என்பது மிகவும் ஏமாற்றும் மற்றும் அழிவுகரமான ஒன்று. இது மறைக்கப்பட்ட எதிர்பாராத ஒன்றாகும். இது நூற்றாண்டுகளாக சபை பலமுறை சிதைந்துவிடும் என்று அச்சுறுத்தியது. தேவ வல்லமையில்லாமல் (பரிசுத்த ஆவியால் நிரப்பப்படாமல்) தேவபக்தி போன்று தோற்றமளிப்பது கடைசிகால வஞ்சகங்களில் ஒன்றாகும், இந்த வசதியான, சுயவஞ்சகத்தினால் ஏமாற்றப்படாதபடி இருக்கும்படி பவுல் எச்சரித்துள்ளார்."
- A.G.Daniels, Christ our Righteousness, p.20

எலன் உவைட்டின் எழுத்துக்களில் சில அதிர்ச்சியூட்டும் அறிக்கைகளும் உள்ளன.

- **மிக மிகக் குறைவு:** "எனது கனவில் ஒரு காவலர் ஒரு முக்கியமான கட்டிடத்தின் வாசலில் நுழைவாயிலுக்கு முன் வந்த ஒவ்வெருவரிடம் 'நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா?' என்று கேட்டார். அளவீட்டு கோல் அவனது கையில் இருந்தது. மிகச்சிலரே கட்டிடத்திற்குள் அனுமதிக்கப்பட்டனர்" - E.G.White, Selected Massages, Vol.1 (1958), p.109.2
- **இருபது பேரில் ஒருவர்கூட தயாராக இல்லை :** "சபைக்கு நான் சொல்ல வேண்டிய ஒரு உறுதியான அறிக்கை இருக்கிறது. சபைப் புத்தகங்களில் பதிவு செய்யப்பட்ட இருபது பேரில் ஒருவர் கூட தங்கள் பூமிக்குரிய வரலாற்றை முடிப்பதற்கு ஆயத்தமாய் இல்லை. மேலும் அவர்கள் தேவன் இல்லாமலும் நம்பிக்கையற்ற ஒரு சாதாரண பாவியைப் போல் இருக்கின்றனர்." - E.G.White, Christian Service (1925), p .41.1

### ➢ நாம் ஏன் தூங்குகிறோம்?

கிறிஸ்துவின் வீரர்கள் ஏன் தூக்க மயக்கமாகவும், அலட்சியமாகவும் இருக்கிறார்கள்? ஏனென்றால் கிறிஸ்துவுடனுள்ள அவர்களின் உண்மையான தொடர்பு குறைவாகவே உள்ளது; ஏனெனில் அவர்கள் அவருடைய ஆவியின் ஆதரவை இழந்து காணப்படுகின்றனர்."
- E.G. White, The Great Controversy (1911), p.507.3

### ➢ ஒரு பெரிய ஆபத்து

"இவ்வுலகின் குறுகிய வாழ்க்கை குறித்தோ, நிச்சயமற்ற தன்மை குறித்தோ இங்கு நான் எழுதமாட்டேன்; ஆயினும் ஒரு பயங்கரமான ஆபத்து இருக்கிறது – அந்த ஆபத்தைக்குறித்து போதுமான அளவு புரிந்து கொள்ளப்படவில்லை. தேவ ஆவியின் மன்றாட்டுக்குக் கீழ்ப்படிவதற்கு பதிலாக, பாவங்களில் வாழத்தெரிந்துகொண்டு காலம் தாழ்த்துகின்றனர்; அப்படிப்பட்டவர்களுக்கு இது உண்மையில் மிகப்பெரிய தாமதமாகும்."

- E.G. White, Selected Messages, Vol.1 (1958), p.109.2

பாவத்தின் அடிப்படை என்ன? "அவர்கள் என்னை விசுவாசியாத படியினாலே" (யோவான் 16:9). நாம் உண்மையாகவே இயேசுவை நம்புவோமானால் நம்மை அவரிடம் முழுமையாக ஒப்படைப்போம். அது நமது முழுமையான ஒப்படைத்தலுடன் எல்லாவற்றிலும் அவரை பின்பற்ற நமது விருப்பத்தை தெரிவிப்பதிலிருக்கிறது.

அதை நான் மீண்டும் சொல்ல விரும்புகிறேன்: பக்திவினயமான இந்த அறிவிப்பை எழுதும் வாய்ப்பைப் பெற்றேன். ஏனென்றால் இது நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையின் மகிழ்ச்சியையும், நித்திய வாழ்க்கையையும், குறிப்பாக நம் திருமணங்கள், குடும்பங்கள் மற்றும் சபைகளில் நம் செல்வாக்கையும் கொண்டுள்ளது.

## கேள்விகள்! அநேக கேள்விகள்!

நீங்கள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருக்கிறீர்களா? இல்லையா? என்பது மிக முக்கியமான கேள்வி. உண்மையில் ஒரு நபர் எப்போது பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுகிறார்? அதற்குத் தேவையான முன்நிபந்தனைகள் என்ன? பரிசுத்த ஆவியானவருடனான நம் வாழ்க்கையின் நேர்மறையான முடிவுகள் என்ன? நீங்கள் பரிசுத்த ஆவியால் நிரப்பபட்டிருக்கிறீர்கள் என்று தவறாக நினைக்கும் போது என்ன நடக்கும்?

## சிக்னல்களுக்கு நன்றி சொல்லுங்கள்

எழுப்புதல் என்ற தலைப்பில் நாம் நம்மை அதிகம் அர்ப்பணித்துள்ளோம் என்பதற்கு தேவனுக்கு நன்றி. நம்முடைய அற்புதமான – வல்லமை மிகுந்த தேவன், நாம் எழுப்புதல் அடையவேண்டுமென்பதற்காக பரிசுத்த ஆவியின் தூண்டுதல்களை கொடுப்பதற்கு முக்கிய காரணங்கள் இருக்கின்றன என்று நான் நினைக்கிறேன். அதற்கு இவையும் காரணங்களாக இருக்கலாம்.

- நம்முடைய குறைபாட்டை நீக்கி லவோதிக்கேயாவின் நிலையிலிருந்து நம்மை வெளியேற்ற அவர் விரும்புகிறார்.
- இயேசுவின் அதிசீக்கிர இரண்டாவது வருகைக்கும் அதற்குமுன் நடக்கும் சிறப்பு நேரத்திற்கும் நம்மை ஆயத்தப்படுத்த விரும்புகிறார்.
- தேவனின் கட்டளைகளையும் (வெளி 12:17), இயேசு கிறிஸ்துவைக்குறித்த சாட்சியை உடையவர்களின் (வெளி 14:12) மூலம், உலகில் மாபெரும் எழுப்புதலை கொண்டுவர அவர் விரும்புகிறார் (வெளி 18:1–2).

ஒவ்வொரு மாம்ச கிறிஸ்தவனும் விரைவில் ஒரு ஆவிக்குரிய

கிறிஸ்தவனாக மாறவேண்டும் என்பதற்காகவும் தேவனுக்கு நன்றி சொல்லுவோம். பரிசுத்த ஆவியினால் வாழும் ஒவ்வொருவரும் கிறிஸ்துவில் முழுமையாக வளர முடியும். இதுதான் இப்போதைய நமது அடுத்த வேலை. இந்த அத்தியாயத்தின் முடிவில் இன்னும் ஒரு அனுபவம்.

## புதிய உந்துதலும் இதயத்தில் சந்தோஷமும்

சபையில் உள்ள ஒரு சகோதரி 'தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்' என்ற சிறு புத்தகத்தை எனக்கு கொடுத்தார். கையேட்டின் உள்ளடக்கங்களால் நான் சொல்லொண்ணா மகிழ்ச்சியடைந்தேன். நீண்ட காலமாக இது போன்ற ஒன்றைத்தான் நான் தேடிக் கொண்டிருந்தேன். இறுதியில் அதைக் கண்டுபிடித்தேன். நான் என் ஆவிக்குரிய வாழ்க்கையை ஒழுங்கமைக்க ஆரம்பித்தேன், அப்போதுதான் நான் ஏதாவது செய்ய வேண்டும் என்பதை உணர்ந்தேன். நான் என்னை முழுமையாக இயேசுவிடம் ஒப்படைத்தேன். அப்போது முதல் தேவன் என்னை அதிகாலமே எழுப்பி, என்னுடைய தனிப்பட்ட தியானநேரத்திற்கு வழிவகுத்தார். 40 – நாள் புத்தகத்திலிருந்து ஒவ்வொரு நாளும் ஒரு அத்தியாயத்தைப் வாசித்தேன். இயேசுவுடனான எனது உறவு அதிகமாக வளர்ந்ததை நான் தெளிவாக கவனித்தேன். அது ஆழமாகவும் நெருக்கமாகவும் ஆனது. பரிசுத்த ஆவியானவர் எனக்குள் கிரியைச் செய்ய ஆரம்பித்தார். 40 – நாள் புத்தகத்திற்கு பிறகு அத்துடன் சேர்ந்த இரண்டாவது புத்தகத்தையும் வாசித்தேன். அதுமுதல் அந்த புத்தகங்கள் ஒவ்வொன்றையும் நான்கு முறை வாசித்தேன். தினமும் தேவன் என்னுடன் நெருங்கி வரவேண்டும் என்பதைத் தவிர வேறு எதையும் என்னால் கேட்க இயலவில்லை. முடிவுகள் அருமை! ஏனென்றால் எனக்குள் ஏற்பட்ட புதிய உந்துதலும் என் உள்ளத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சியும் அறியப்படாமல் இருக்க முடியாது. இந்த நேரத்தில் நான் தேவனுடன் நிறைய அனுபவங்களைப் பெற்றிருக்கிறேன். எனது அனுபவத்தைப் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்புகளையும் தேடினேன். இயேசுவுடனான நெருங்கின உறவு பல விஷயங்களை முக்கியமற்றதாக ஆக்கியது. மேலும் தேவையற்ற கவலைகள் தீர்க்கப்பட்டன. இந்த அனுபவத்தை அனேகர் பெற்று அனுபவிக்க வேண்டும் என்று விரும்பி பிரார்த்திக்கிறேன். H.S

## எல்லா பரிசுகளிலும் மிக உயர்ந்த பரிசு - பரிசுத்த ஆவியானவர்

இயேசு தம்முடைய சபைக்கு கொடுத்த எண்ணற்ற பரிசுகளுக்காக மகிழ்ச்சியடைந்தார். தம்முடைய ஜனங்களின் மேன்மைக்காக பிதாவிடமிருந்து பெற்ற அனைத்துப் பரிசுகளிலும் மிக உயர்ந்த பரிசு பரிசுத்த ஆவியானவரே ஆகும். - Ellen G. White, Desire of Ages, p. 671.2

**"ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்."** (மத். 7:24)

---

நமது பிரச்சனையின் மையம் எது? / நாள் 4

### தனிப்பட்ட எண்ணங்கள் மற்றும் கலந்துரையாடலுக்கான வழிகாட்டி

1. மாம்ச கிறிஸ்தவனின் மையப் பிரச்சனை என்ன?

   ______________________________

2. நம் சக்திக்கு அப்பாற்பட்ட ஒன்றைச் செய்ய முயற்சித்தால் என்ன நடக்கும்? ______________________________

3. மாம்ச கிறிஸ்தவத்திற்கு வழிநடத்தும் காரணிகள் என்ன?

   ______________________________

4. ஞானஸ்நானத்தின்போது பரிசுத்த ஆவியை பெற்ற பின்னும், நாம் ஏன் அவருக்காக ஜெபிக்க வேண்டும்? ______________________________

### நமது ஜெப நேரம்

- ➢ உங்கள் ஜெப–பங்காளியுடன் தொடர்பு கொண்டு இந்த தலைப்பைப் பற்றி விவாதியுங்கள்.
- ➢ உங்கள் ஜெப–பங்காளியுடன் சேர்ந்து ஜெபியுங்கள்.

1. தேவன் நம் ஒவ்வொருவரையும் அவருடைய பரிசுத்த ஆவியால் நிரப்புகிறார்.
2. அவருடன் நாம் நடக்கும்போது தேவனின் வளமான ஆசீர்வாதத்திற்காக ஜெபியுங்கள்
3. பரிசுத்த ஆவியின் நிலையான வழிகாட்டுதலுக்காக.

அத்தியாயம் - 3

நாள் 5

# நமது பிரச்சனைகள் தீர்க்கப்படக் கூடியதே

## நமது பிரச்சனைகளுக்கு தேவனுடைய தீர்வு என்ன? நாம் எப்படி மகிழ்ச்சியாகவும் வலிமையான கிறிஸ்தவர்களாகவும் வளர முடியும்?

"என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்" என்று இயேசு கூறினார். (யோவான் 15:4)

"கிறிஸ்துவில் நிலைத்திருத்தல் என்பது அவருடைய ஆவியை தொடாச்சியாக பெறுவதையும், அவருடைய சேவைக்கு சாக்குபோக்கு சொல்லாமல் ஒப்புக்கொடுப்பதையும் குறிக்கிறது." – E.G. White, The Desire of Ages (1898), p.676.

நமது பிரச்சனைக்கான தெய்வீக தீர்வு இரண்டு பகுதிகளாயிருந்தாலும் அதுவே மகிழ்ச்சியான கிறிஸ்தவ வாழ்க்கைக்கு வழியாகும். ஏன்? இயேசு கீழ்கண்ட வார்த்தைகளில் தம் கருத்தை உரைத்தார்: "என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும் படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்" (யோவான் 15:11). பரிசுத்த ஆவியானவரை தொடர்ந்து பெறுதல் மற்றும் முழுமையான ஒப்படைப்பு என்ற இவ்விரண்டு படிகளின் மூலமாக கிறிஸ்து நம்மில் ஜீவிக்கிறார், மேலும் அதுவே பூரண மகிழ்ச்சிக்கு வழியாகும். "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்" என கொலோசெயர் 2:27 பேசுகிறது. திராட்சைசெடி பற்றிய உவமையில் இயேசு பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய வாக்குறுதி (யோவான் 14) மற்றும் பரிசுத்த ஆவியானவரின் வேலை (யோவான் 16) இவ்விரண்டையும் உட்பொதித்தார் என்பது குறிப்பிடத்தக்கது அல்லவா?

அனுதினமும் நாம் நம்மையும் நம்மிடம் இருப்பதையும் தேவனிடம் ஒப்புக்கொடுப்பதுடன், அனுதினமும் பரிசுத்த ஆவியின் பொழிவை அவரிடம் கேட்டு விசுவாசத்தின் மூலம் பெற்றுக்கொள்கிறோம்.

## அனுதினமும் நம்மை இயேசுவிடம் ஒப்படைக்க வேண்டிய அவசியம் என்ன?

லூக்கா **9:23**ல் இயேசு கூறியதாவது: "ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்."

சீடத்துவம் என்பது அன்றாட விஷயம் என இயேசு கூறினார். சுயத்தை மறுப்பதென்பது நம் வாழ்வின் மீதான நமது கட்டுப்பாட்டை இயேசுவிடம் கொடுப்பதாகும். அனுதினமும் சிலுவையை சுமப்பதென்பது நமக்கு சிரமங்களை ஏற்படுத்தும் என்று அர்த்தமல்ல. இதன் பொருள் என்னவென்றால்: அனுதினமும் நம்முடைய அகங்காரத்தை மறுத்து இயேசுவிடம் நம்மை மகிழ்ச்சியுடனும் விருப்பத்துடனும் சமர்ப்பிப்பதாகும். "அனுதினமும் நான் சாகிறேன்" என்று பவுல் தன்னைப்பற்றி குறிப்பிட்டதுபோல, இயேசுவின் நாட்களில் யாதொருவன் சிலுவையை சுமந்து கொண்டு போகிறான் என்றால் அவனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தண்டனை பெறும் இடத்திற்கு சென்று கொண்டிருக்கிறான் என்று அர்த்தம். அதுபோல இயேசு கிறிஸ்துவை பின்செல்வதென்பது – அவரை ஏற்றுக் கொள்வதால் வரும் கஷ்டங்களை சுமந்து அவரை பின்பற்றுவதாகும்.

பிறந்த போதே நாம் ஜீவனை பெற்றுக்கொண்டோம். அந்த ஜீவனை காப்பதற்காகவும், பெலன் மற்றும் ஆரோக்கியத்தை பராமரிப்பதற்காகவும் வழக்கமாக தினமும் நாம் சாப்பிடுகிறோம். நாம் மீண்டும் பிறந்தபோது நமது ஆவிக்குரிய ஜீவனைப் பெற்றோம். நமது ஆவிக்குரிய வாழ்க்கையை வலுவாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உள்வசிக்கும் பரிசுத்த ஆவியானவரை தினமும் கவனித்துக்கொள்வதும் அவசியம். இது நமது சரீர வாழ்க்கையிலும் நமது ஆவிக்குரிய வாழ்க்கையிலும் நடக்கவில்லை என்றால் நாம் பலவீனமாகி நோய்வாய்ப்பட்டு இறக்க நேரிடும். ஒரே வேளையில் உட்கொண்டு நாம் உணவை சேமித்து வைக்க முடியாதது போல பரிசுத்த ஆவியானவரை சேமித்து வைக்க முடியாது.

அப்போஸ்தலர் நடபடிக்கை புத்தகத்தில் இது குறித்து ஒரு மதிப்புமிக்க ஆலோசனை உள்ளது: "இயற்கை உலகைப் போலவே ஆவிக்குரிய உலகிலும் நடைபெறுகிறது. தெய்வீக வல்லமையால் இயற்கை உலகம் ஒவ்வொரு இமைப்பொழுதும் பாதுகாக்கப்படுகிறது; ஆயினும் அது நேரடியான ஒரு அற்புதத்தால் நடைபெறுவது இல்லை, தேவன் நமக்கு எட்டும் வகையில் வைத்திருக்கிற ஆசீர்வாதங்களைப் பயன்படுத்துவதால் கிடைக்கிறது.

அதுபோல ஆவிக்குரிய ஜீவனும் தேவனால் அருளப்பட்டிருக்கிற ஆசீர்வாதங்களை முறையாக பயன்படுத்துவதன் மூலம் பாதுகாக்கப் படுகிறது." - E.G. White, The Acts of the Apostles (1911), p.284.2

யுகங்களின் வாஞ்சை என்ற புத்தகத்தில் சொல்லப்பட்ட கருத்து என்னை மிகவும் கவர்ந்தது: "ஒவ்வொரு நாளும் நாம் கிறிஸ்துவை பின்பற்ற வேண்டும். நாளைக்கு வேண்டிய உதவியை தேவன் இன்றே கொடுக்க மாட்டார்." - E.G. White, The Desire of Ages (1898), p.313.4

"இயேசுவைப் பின்பற்றுவதற்கு ஆரம்பத்திலேயே முழு மனதுடன் மனமாற்றம் தேவை, இந்த மனமாற்றத்தை ஒவ்வொரு நாளும் புதுப்பிக்க வேண்டும்." என எலன் உவைட் கூறினார். - Editor Francis D Nichol, Adventist Bible Commentary Vol.1 (Review and Herald, 1976), p.1113

"மனமாற்றமடைந்தபோது நாம் செய்து கொண்ட தற்பிரதிஷ்டை எவ்வளவுதான் முழுமையானதாயிருந்தாலும், அனுதினமும் அவற்றை நாம் புதுபிக்காவிட்டால் நமக்கு ஒன்றும் பயனளிக்காது." - E.G. White, Review and Herald, Jan 6, 1885.

காலையில் உங்களை தேவனிடம் பிரதிஷ்டை செய்யுங்கள் இதுவே உங்கள் முதல் வேலையாக இருக்கட்டும். உங்கள் ஜெபம் "தேவனே உம்முடையது போல் என்னை முழுமையாக எடுத்துக்கொள்ளுங்கள். என் திட்டங்களையெல்லாம் நான் உங்கள் பாதத்தில் வைக்கிறேன். உங்களது சேவையில் இன்று என்னை பயன்படுத்துங்கள். என்னுடனே இருங்கள், என் வேலைகள் எல்லாம் உங்களில் செய்யப்படட்டும்." இது அன்றாட விஷயம். ஒவ்வொரு நாள் காலையிலும் உங்களை அன்றைய தினத்திற்காக தேவனிடம் அர்ப்பணியுங்கள். உங்கள் திட்டங்கள் அனைத்தையும் அவரிடம் ஒப்படைத்து அவர் குறிப்பிடுவது போல நிறைவேற்றப்படவோ அல்லது விட்டுவிடப்படவோ வேண்டும். இவ்வாறு நாளுக்கு நாள் நீங்கள் உங்கள் வாழ்க்கையை தேவனின் கையில் ஒப்புக்கொடுத்து செயல்படும்போது உங்கள் வாழ்க்கை மென்மேலும் கிறிஸ்துவின் ஜீவியத்தைப்போல வடிவமைக்கப்படும்." - E.G. White, Steps to Christ (1892), p.70.1

மோரிஸ் வென்டன் கூறுவதாவது: "அனுதின மனமாற்றத்தின் அவசியத்தை நீங்கள் கண்டுபிடிக்கவில்லையென்றால், அது உங்கள் வாழ்க்கையில் ஒரு பெரிய திருப்புமுனையாக இருக்கும். 'ஆசீர்வாத மலையியிலிருந்து வரும் எண்ணங்கள்' என்ற புத்தகம் பக்.101ல் இந்த வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டுள்ளது: "நீங்கள் ஒவ்வொரு நாளும் தேவனைத்தேடி உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்புவீர்களானால்

....உங்கள் முறுமுறுப்புகள் தீர்க்கப்படும், உங்கள் கஷ்டங்கள் அனைத்தும் நீங்கும், இப்போது உங்களை எதிர்கொள்ளும் குழப்பமான பிரச்சனைகள் அனைத்தும் தீர்க்கப்படும்." Morris Venden, 95 Theses on Righteousness by Faith (Pacific press, 1987), p.96

நாம் இயேசுவிடம் முதல்முறை வந்தபோது நம்மை அவரிடம் ஒப்புக்கொடுத்ததைப் போலவே அனுதினமும் அவரில் நிலைத்திருத்தலை புதிப்பிப்பது முக்கியமாகும்.

மோரிஸ் வென்டன் மேலும் கூறுவதாவது: "தேவனுடன் அனுதின உறவில் நிலைத்திருக்கும் காரியம் அனுதினமும் ஒவ்வொரு இமைப்பொழுதும் ஒப்படைத்து அவரைச் சார்ந்திருப்பதற்கு வழிவகுக்கிறது." -Morris Venden, 95 Theses on Righteousness by Faith (Pacific press, 1987), p.233

**நாம் உறுதியாக இருக்கலாம் :** ஒவ்வொரு நாள் காலையிலும் நாம் இயேசுவிடம் நம்மை ஒப்படைக்கும்போது, அவர் என்ன செய்ய விரும்புகிறாரோ அதை நாம் செய்கிறோம். ஏனென்றால் அவர் "என்னிடம் வாருங்கள்" (மத்.11:28) என்றழைத்ததோடு "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" (யோவான் 7:37) என்கிறார்.

"கர்த்தர் நமக்கு பெரிய காரியங்களைச் செய்ய ஆயத்தமாயிருக்கிறார். வெற்றியை எண்ணிக்கையைக் கொண்டு அல்ல, நம் ஆத்துமாவை இயேசுவிடம் முழுமையாய் ஒப்புக்கொடுப்பதன் மூலம் பெறுகின்றோம். நாம் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய பெலத்தை நம்பி முன்னேற வேண்டும்..." - E.G. White, Sons and Daughters of God, p.279

தேவனை முழுமையாக நம்பி அவரிடம் சரணடையும் போது, நம்மூலம் அவர் தம்முடைய பெரும் செல்வாக்கை வெளிப்படுத்துகிறார் என்பதை, ஜான் வெஸ்லி பின்வருமாறு விவரிக்கிறார்: "99 சதவிகிதம் ஒப்புக்கொடுத்த ஒரு சேனை முழுவதையும் கொண்டு சாதிப்பதைக் காட்டிலும் 100சதவீதம் தன்னை தேவனிடம் ஒப்படைப்படைத்த ஒரு தனி மனிதனைக் கொண்டு தேவனால் அதிகம் சாதிக்க முடியும்." - Dr. Joseph Kidder, Anleitung zum geistilichen Leben (Andrew University), PPP slide 14.

எலன் உவைட் எழுதியதாவது: "கிறிஸ்துவோடு சேர்ந்து பணியாற்றுபவர்கள், மற்றும் ஆண்டவரே நானும் என்னிடம் உள்ளவைகள் யாவும் உம்முடையவைகள் என்று கூறுபவர்கள் மட்டுமே தேவனுடைய குமாரர் – குமாரத்திகளாக அங்கீகரிக்கப்படுவார்கள்." - Ellen White, The Desire of Ages (1898), p.523

"ஆவி, ஆத்துமா, சரீரம் அனைத்தையும் தேவனுக்கு

அர்ப்பணிப்பவர்களே, உடல் மற்றும் மன பலம் போன்றவற்றின் புது ஆற்றலை தொடர்ந்து பெற்றுக்கொள்வார்கள். பரிசுத்த ஆவியானவர் அவர்களது இதயத்திலும் மனதிலும் கிரியை செய்ய தமது உன்னத பெலத்தை அளிப்பார். தேவகிருபை அவர்களின் திறன்களை விரிவுபடுத்தி பெருகச் செய்வதுடன், தெய்வீக இயல்பின் ஒவ்வொரு பரிபூரணமும் ஆத்துமாக்களை மீட்கும் பணியில் அவர்களுக்கு உதவி புரியும் மேலும் மனித பலவீனத்தில் சர்வ வல்லமையுள்ள செயல்களைச் செய்ய அவர்கள் வழிநடத்தப்படுவார்கள்." - Ellen White, The Desire of Ages (1898), p.827.3

அனுதினமும் என்ற தலைப்புடன் 'தற்பிரதிஷ்டை' 'அர்ப்பணிப்பு' உங்கள் வாழ்க்கையை ஒப்படைத்தல்' அல்லது 'மனமாற்றம்' போன்றவை இணைகின்றன.

## பரிசுத்த ஆவியின் புதிய ஞானஸ்நானத்தை ஒரு நபர் ஏன் தினமும் கேட்க வேண்டும்?

பரிசுத்த ஆவியால் தன்னை நிரப்ப வேண்டும் என்ற மன்றாட்டு இயேசு தன்னுடன் தங்கவேண்டும் என்று அழைப்பதற்கான வேண்டுகோளாகும். ஏனென்றால் பரிசுத்த ஆவியானவர் மூலமாகவே இயேசு நம்மில் ஜீவிக்கிறார். ஆயினும் பரிசுத்த ஆவியை தினமும் பெறவேண்டியதன் அவசியம் என்ன?

எலன் உவைட் அப்போஸ்தர் நடபடிகளில் இவ்வாறு கூறியுள்ளார்: "கிறிஸ்து இவ்வுலகத்தில் வாழ்ந்த காலத்தில்கூட, அவருக்குத் தேவையாயிருந்த புதிய கிருபைக்காக அனுதினமும் அவர் பிதாவை நாடினார் என்ற அறிவு தன்னை அர்ப்பணம் செய்த ஊழியனுக்கு ஆச்சரியமான ஆறுதலை அளிக்கிறது ...பாவத்திற்கெதிரான யுத்தத்தில் தேவனிடத்தில் அக்கறையுடனும் விடாமுயற்சியுடனும் ஜெபித்து; தேவனை முழுமையாய் பற்றிக் கொண்டு, விசுவாசதோடு அர்ப்பணித்த மனிதர்களுக்கு, பரிசுத்த ஆவியின் உதவி கிடைக்கும் என்பதில் அவருடைய சொந்த உதாரணமானது ஒரு நிச்சயமாய் இருக்கிறது." -Acts of the Apostles (1911), p 56.1

இதுவே இயேசுவின் அன்றாட தேவையாக இருந்திருந்தால், நமக்கு அது எவ்வளவு முக்கியம். 2கொரி.4:16ல் ஒரு முக்கியமான கருத்துச் சொல்லப்பட்டுள்ளது. "உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப் படுகிறது."

நம் உள்ளான மனிதனுக்கு அன்றாட கவனிப்பு தேவை. இந்த அனுதின புதுப்பித்தல் எந்த வகையில் நடைபெறுகிறது? எபே 3:16–17,19ல் அது பரிசுத்த ஆவியானவரின் மூலமாய் நடைபெறுகிறது. "நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும்,

விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

**அதன் விளைவாக:**

- பரிசுத்த ஆவியின் புதுப்பித்தலுக்காக தினமும் ஜெபிக்க வேண்டும். இதை ஒரு சட்டமாக வைத்துக் கொள்ள வேண்டும்.
- இதன் விளைவாக கிறிஸ்து நம்மில் ஜீவிக்கிறார்.
- நம் உள்ளான மனிதன் பெலப்படுவதற்காக, அவருடைய மகிமையின் ஐசுவரியத்தின்படியே நமக்கு வல்லமையைக் கொடுக்கிறார். தேவவல்லமை இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு வல்லமையாகும்.
- இவ்வாறாக தேவ அன்பு நம் இருதயங்களில் ஊற்றப்படுகிறது.
- "அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாய் இருக்கிறீர்கள்" என்பதே ஜீவியத்திற்கான வழி (யோவான் 10:10 ; கொலோ. 2:10).

நான் கண்ட மற்றொரு முக்கியமான வசனம் எபேசியர் 5:18ல் காணப்படுகிறது. "ஆவியினாலே நிறைந்து" – இது வெறும் ஆலோசனை மட்டுமல்ல. இது ஒரு தெய்வீக கட்டளை. பரிசுத்த ஆவியோடு நாம் வாழ வேண்டும் என்று நம் தேவன் எதிர்பார்க்கிறார். கிரேக்க வல்லுனர்கள் இது இன்னும் துல்லியமான அர்த்தமுள்ளதென்று கூறுகின்றனர் – நான் ஜோகன்னஸ் மேகரை மேற்கோள்காட்டுகிறேன்: "நீங்கள் தொடர்ந்து இடைவிடாமல் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட வேண்டும்." Editor Werner E. Lange, grotes Bedufnis (Luneburg, 2011), p.42

நமது வேதபாட வழிகாட்டி கூறுவதாவது: பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்பது பரிசுத்த ஆவியின் செல்வாக்கின் கீழ் முழுமையாக இருப்பதாகும் – அவரால் முழுமையாக நிரப்பப்படுவதாகும். இது ஒரு முறை நடைபெறும் அனுபவம் அல்ல, மாறாக எபே.5:18ல் பவுல் விளக்குவது போல் தொடர்ந்து மீண்டும் மீண்டும் நடைபெறவேண்டிய ஒன்று. கிரேக்க வினைச் சொல்லிற்கு "நிரப்பப்பட்டது" என்று அர்த்தம். Sabbath School Study Guide, July 17, 2014.

அப்போஸ்தலனாகிய பவுல் இதை எபேசியர் 5ம் அத்தியாயத்தில் எழுதினாலும் 1:13ல் "விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட

பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்." என்றும் எழுதினார். எபேசியர்கள் ஏற்கனவே பரிசுத்த ஆவியை பெற்றிருந்தனர். ஆயினும்கூட அவர்கள் அவருடைய 'ஆவியின் வல்லமையால் பலப்படுத்தப்பட்டு, "ஆவியால் நிறைந்து" அதாவது மென் மேலும் தொடர்ந்து பரித்த ஆவியால் நிரப்பப்பட வேண்டும் என்றார். எபே. 4:30ல் நாம் பரிசுத்த ஆவியானவரை 'துக்கப்படுத்தவோ' 'அவமதிக்கவோ' கூடாது என்றும் எச்சரிக்கிறார்.

எலன் உவைட் கூறுவதாவது: "ஆவியின் அனுதின ஞானஸ்நானத்திற்காக ஒவ்வொரு ஊழியக்காரனும் தேவனிடம் தன்னுடைய விண்ணப்பத்தை ஏறெடுக்க வேண்டும்" - Ellen White, The Acts of the Apostles, (1911), p.50.2

"ஆவியின் செல்வாக்கால் நாம் அனுதினமும் கிறிஸ்துவின் நீதியைப்பெற்று, தெய்வீக சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாக மறுரூபமடைய வேண்டும். விருப்பத்தை உயர்த்தி முழுமனிதனையும் மேம்படுத்துவதற்காக இதயத்தை பரிசுத்தப்படுத்துவது பரிசுத்த ஆவியின் வேலை." - Ellen White, Selected Messages 1, (1958), p.374.1

கர்த்தர் வேறொரு இடத்தில் அம்மையார் மூலமாக கூறியதாவது: "தேவனின் குரலாக பரிசுத்த வேதாகமத்தால் ஈர்க்கப்பட்டு, அதன் போதனைகளைப் பின்பற்ற விரும்புவோர், அனுதினமும் கற்றுக்கொள்வதற்காகவும் ஆன்மீக ஆர்வத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்வதற்காகவும் மெய்விசுவாசப் பிள்ளைகளுக்கு பரிசுத்த ஆவியானவர் பரிசாக வழங்கப்பட்டுள்ளார்." - Ellen White, The Signs of the Times March 8, (1910), par.1

மேலும் "அன்றன்றும் கிறிஸ்துவை நாம் பின்பற்ற வேண்டும். மறுநாளுக்குள்ளதை தேவன் இன்றே வழங்கமாட்டார்." - Ellen White, The Desire of Ages, (1898), p.313.4

மற்றொரு இடத்தில்: "நமது முன்னேற்றத்திற்காக தெய்வீக முகவருடன் தொடர்பு ஒவ்வொரு கணமும் அவசியம். நாம் தேவ ஆவியின் அளவைப் பெற்றிருக்கலாம், ஆனால் ஜெபம் மற்றும் விசுவாசத்தின் மூலம் நாம் தொடர்ந்து அதிக ஆவியைத் தேட வேண்டும்." – E.G. White, The Review and Herald, March, 1897, par.5

இந்த அற்புதமான மேற்கோளையும் நான் கண்டேன்: "அப்போஸ்தலர்களின் நாட்களில் அவர்கள் அனைவரையும் ஒருமனமாக்கின அன்பின் அனுதின ஞானஸ்நானம் உங்களுக்குத் தேவை." - Ellen White, Testimonies to the Church (1904), vol. 8, p.191

"மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறதென்று" ரோமர் 5:5 காட்டுகிறது. அதே காரியத்தை எபே.3:17லும் காண்கிறோம். பரிசுத்த ஆவியின் அனுதின ஞானஸ்நானம் (பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்) நம்மில் அன்பை ஏற்படுத்துகிறது (இறைவனின் அகாபே அன்பால் நிரப்பப்படுகிறது). அதன் விளைவாக பாவத்தின் வல்லமை உடைக்கப்படுகிறது.

### தனிமையாக தொழுதுகொள்வதின் முக்கியத்துவம்

தேவனை தனிமையாக தொழுது கொள்வதில் முக்கியத்துவம் இருக்கிறதென்றால், நான் அனுதினமும் இயேசுவிடம் சரணடைந்து பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட வேண்டும் என்று கேட்பது எவ்வளவு அவசியம்?

அன்றாட தொழுகையும் ஓய்வுநாளைக் கடைபிடிப்பதும் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு அடித்தளமாகும்.

> **ஆவியின் செல்வாக்கால் நாம் அனுதினமும் கிறிஸ்துவின் நீதியைப் பெற்று, தெய்வீக சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாக மறுரூபமடைய வேண்டும்.**

நாம் ஏற்கனவே வேதவசனங்களையும் பல்வேறு மேற்கோள்களையும் படித்திருக்கிறோம். அவைகள் உள்ளான மனிதன் நாளுக்கு நாள் புதிதாக்கப்படுவதை நமக்குக் காட்டுகின்றன. இது நமது அன்றாட தனிப்பட்ட தொழுகையின் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்துகிறது.

பரிசுத்த ஸ்தல தொழுகையின் முழு அடித்தளம் காலை – மாலை செலுத்தப்படும் தகனபலிகளாகும். ஓய்வுநாளில் அவைகளையும் சேர்த்து அதிகப்படியான ஓய்வுநாள் தகனபலிகள் செலுத்தப்பட்டன (எண்.28:4,10). தகனபலி செலுத்த வேண்டியதன் முக்கியத்துவம் என்ன?

பாவி கர்த்தரிடம் முழுமையாக சரணடைய வேண்டியதை சர்வாங்க தகனபலி சுட்டிக்காட்டுகிறது. இங்கே அந்த நபர் தனக்காக எதையும் வைத்துக்கொள்ளவில்லை என்பதையும், அத்துடன் எல்லாம் தேவனுக்கே சொந்தம் என்பதையும் அறிக்கை செய்கிறான்." – Fritz Rienecker, Lexikon zur Bible(Wuppertal, 1964), p.1017

"பலியிடுவதற்காக காலையிலும் மாலையிலும் நியமிக்கபட்ட மணிநேரங்கள் பரிசுத்த மணித்துளிகளாகக் கருதப்பட்டன. மேலும் அவை யூததேசம் முழுமைக்கும் தொழுகைக்காக குறிக்கப்பட்ட நேரமாக அனுசரிக்கப்பட்டது. இந்த வழக்கத்தையே கிறிஸ்தவர்கள் காலை மற்றும்

மாலை ஜெபத்திற்கு ஒரு உதாரணமாக வைத்திருக்கிறார்கள். ஆவியோடு தொழுது கொள்ளாமல் வெறுமனே சடங்குகளை மட்டும் செய்வதை தேவன் கண்டனம் செய்தாலும், அவரை நேசிப்பவர்களை அவர் மிகுந்த மகிழ்ச்சியுடன் பார்க்கிறார். காலையிலும் மாலையிலும் அவரை பணிந்து கொண்டு, செய்த பாவங்களுக்கு மன்னிப்பு கேட்கவும் மற்றும் தேவையான ஆசீர்வாதங்களுக்காக அவர்களின் கோரிக்கைகளை முன்வைக்கவும் இது வகைசெய்கிறது." - Ellen White, patriarchs and prophets, (1890), p.353.3

அன்றாட தொழுகை நம் ஆவிக்குரிய வாழ்க்கையின் அடிப்படையாக இருப்பதையும் அது ஓய்வுநாளோடு சம்பந்தப்பட்டுள்ளது என்பதையும் உங்களால் காண முடிகிறதா? அத்துடன் நம்மில் வாசம்செய்யும் பரிசுத்த ஆவியானவர் மூலம் இயேசு கிறிஸ்துவிடம் அனுதினமும் நம்மை ஒப்படைக்க வேண்டும் என்பதற்கு நமக்குக் கொடுக்கப்படும் அழைப்பு என்பதையும் உங்களால் காண முடிகிறதா?

ஒவ்வொருநாளும் ஒவ்வொரு காரியத்திலும் தேவனுக்கு முன்னுரிமைக் கொடுப்பது என்ற மிக முக்கியமான ஆவிக்குரிய கொள்கைகளை உங்கள் சொந்தமாக்கிக் கொண்டீர்களா? மலை பிரசங்கத்தில் இயேசு: "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும் என்று கூறினார்." மத்தேயு 6:33

இப்போது கிறிஸ்துவை நீங்கள் உங்கள் இருதயத்தில் வைத்திருப்பதே தேவனுடைய ராஜ்யம். இதனிமித்தமே தேவனிடம் நம்மை அனுதினமும் ஒப்படைத்து, தினமும் தொழுகை நேரத்தில் பரிசுத்த ஆவியைக் கேட்க வேண்டும். நாம் தேவனுக்கு முன்பாக நிற்கும் வேளையே தீர்க்கமான தருணம்: கிறிஸ்துவோடு நமக்கு இரட்சிக்கும் தனிப்பட்ட உறவு இருக்கிறதா? (யோவான் 15:1–17ஐ பார்க்கவும்). உங்கள் விசுவாசத்தின் நிறைவேறுதலுக்காக நீங்கள் அதிகம் ஏங்கவில்லையா?

தேவனுடன் சிறிது நேரத்தைகூட அமைதியாக செலவழிக்க முடியாதவர் அல்லது போதிய நேரம் இல்லாமல் வாரத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை மட்டும் தொழுதுவதன் மூலம் கொஞ்சம் மட்டுமே பலப்படுத்தப்படுவார். இது வாரத்திற்கு ஒரு முறை மட்டுமே சாப்பிடுவதைப் போன்றது. வாரத்திற்கு ஒரு முறை மட்டுமே சாப்பிடுவதைப் ஒப்பீடு செய்ய வேண்டுமென்றால்: வாரத்திற்கு ஒரு முறை மட்டுமே உங்களை வளர்க்க விரும்புவது போன்றது. அது அபத்தமானது அல்லவா? தொழுகை செய்யாத ஒரு கிறிஸ்தவர் மாம்சத்திற்குரியவர் என்று இது அர்த்தப்படுத்தவில்லையா?

இந்த நிலையில் இருப்பதென்பது அவர் இரட்சிக்கப்படவே மாட்டார் என்பதை குறிக்கிறது. நாம் மாம்ச கிறிஸ்தவர்களாக இருக்கும்போது நமது தொழுகை வெறும் கடமைக்காகவே இருக்கும். நாம் ஆவிக்குரியவர்களாயிருந்தால் தொழுகை என்பது மிகவும் முக்கியமாகிவிடும்.

பல ஆண்டுகளுக்குமுன் நான் ஜிம் வாஸ் எழுதிய ஒரு சிறு புத்தகத்தைப் படித்தேன். அவன் ஒரு கொள்ளைக் கூட்டத்தை சேர்ந்தவன். ஒரு குற்றவாளி, மதம் மாறியவன். அவன் முழுமனதுடன் தனது பாவங்களையெல்லாம் ஒப்புக்கொண்டான். இது என்னை மிகவும் கவர்ந்தது. நான் என்னையே பார்த்து: நான் எல்லா வகையிலும் நன்றாக இருக்கிறேன், ஆனால் எனக்கு அது போன்ற அனுபவங்கள் இல்லையே என்றேன். பிறகு நான் கர்த்தரிடம்: "பரமபிதாவே, எனக்குத் தெரிந்த அனைத்து பாவங்களையும், இன்னும் நீங்கள் எனக்கு சுட்டிக்காட்டும் அனைத்துப் பாவங்களையும் ஒப்புக்கொள்ள விரும்புகிறேன். கூடுதலாக, வேதாகமத்தை வாசிப்பதற்காக நான் வழக்கத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பே எழுந்திருப்பேன். பிறகு நீங்கள் என் வாழ்க்கையில் தலையிடுவீர்களா என்று பார்க்க விரும்புகிறேன்" என்று ஜெபித்தேன்.

தேவனுக்கு ஸ்தோத்திரம்! அவர் என் வாழ்க்கையில் தலையிட்டார். அப்போதிருந்து, குறிப்பாக ஓய்வுநாள் தொடர்பாக எனது காலை தொழுகை தேவனோடு என் வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைந்தது.

அனுதினமும் ஒப்புக்கொடுப்பதன் மூலம் மற்றும் அனுதினமும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுவதன் மூலம் நம் வாழ்க்கை நன்மை பயக்கும் வகையில் மாற்றம் பெறுகிறது. இது நமது தனிப்பட்ட தொழுகை நேரத்தில் நடைபெறுகிறது.

# போதகர்கள் சொல்லுவது என்ன? (பகுதி 1)

**நாம் ஒரு காரியத்தைச் செய்கிறதில்லை**

நாம் எல்லாவகையான நல்ல தீர்வுகளையும் தேடுகிறோம். ஆனால் நாம் ஒரு காரியத்தை செய்கிறதில்லை; பரிசுத்த ஆவியின் அதிகாரத்தைக் கேட்பதில்லை. திருச்சபை தன்னுடைய கனியற்ற தன்மையையும், மக்களிடத்தில் நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்தவில்லை என்பதையும் அறிந்திருக்கிறது. தன்னுடைய உண்மையான அதிகாரம் காணாமல் போனதையும் அவள் உணர்கிறாள். இந்த அதிகாரத்தைத் தேடுவதில் அவள் எல்லாவற்றையும் முயற்சி செய்யத் தயாராக இருக்கிறாள். ஆனால் அவள் செய்யாத ஒன்று பரிசுத்த ஆவியின் அதிகாரத்தைத் தேடுவது இல்லை. M.L. J., Telos 385

**ஆதியில் கொண்டிருந்த அன்புக்குத் திரும்பு**

பரிசுத்த ஆவியின் நிரப்புதலின் மூலம், நான் இயேசுவோடு நெருங்கி நடக்க வழிநடத்தப்பட்டேன். நம்முடைய கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் ஆதி அன்பிற்கு திரும்புவதை அனுபவித்தேன். தனிப்பட்ட மாற்றங்கள் எனக்குள் நிகழத் தொடங்கின. தேவ ஆவி என்னுள் வசிப்பதால் மட்டுமே அது உருவாயிற்று. எனது ஊழியத்தில், நான் இதுவரை பார்த்திராத ஒரு வல்லமையைப் பார்க்க ஆரம்பித்தேன். D.S.

**பரலோகத்திலிருந்து வந்த ஒரு பரிசு**

"தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்" பற்றிய உங்கள் எழுத்துக்கள் உண்மையிலேயே பரலோகத்திலிருந்து கிடைத்த பரிசு. முதலில் அது உங்களுக்கும் பின்னர் அனைத்து வாசகர்களுக்கும் அருளப்பட்டுள்ளது. சில நடைமுறை மற்றும் ஆழமான ஆவிக்குரிய புத்தகங்கள் சமீபத்தில் சபைக்கு வந்திருந்தாலும் இந்த சிறிய புத்தகம் அசாதாரணமானது. பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுவதற்கான வழி அதில் கச்சிதமாகவும் மற்றும் தெளிவாகவும் முன்வைக்கப்பட்டுள்ளது. அதை படிப்பவர்கள் தங்கள் ஆவிக்குரிய பட்டியலை கணக்கிட்டு முடிவெடுக்காமல் இருக்க முடியாது. H.H.

**முக்கியமானவற்றை வெளிப்படையாக எடுத்துக்கொண்டு நேரத்தை வீணடித்தேன்**

நான் மூன்றாவது முறையாக ஸ்பானிஷ் மொழியில் 'தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகளைப்' படிக்கிறேன். நான் ஒரு திருச்சபையின் உறுப்பினராகவும் ஒரு அட்வென்டிஸ்ட் போதகராவும் இந்த முக்கியமான உண்மையை கண்டு இயேசுவுடனான எனது உறவில் முக்கியமானவற்றை

தெளிவாக எடுத்துக்கொள்கிறேன். என் வாழ்க்கையிலும் ஊழியத்திலும் மிக முக்கியமான வேளையில் இந்தப் புத்தகம் எனக்கு கிடைத்தது. நான் என் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியின் மூலம் ஆசீர்வாதத்தை இப்படி ஒரு வித்தியாசமான அணுகுமுறையிலும் அனுபவித்து வருகிறேன் என்றுதான் சொல்ல முடியும். புத்தகத்தின் ஆய்வறிக்கை என் வாழ்க்கையில் உண்மையாக மாறியது. – அமெரிக்காவிலிருந்து, E.E.

நீங்கள் நினைக்கின்ற காரியத்தை சேனையின் பலத்தால் அடைய முடியாது. "**பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.**" சகரியா 4:6

---



## தனிப்பட்ட எண்ணங்கள் மற்றும் கலந்துரையாடலுக்கான வழிகாட்டி

1. இயேசுவில் நிலைத்திருப்பதற்கு என்ன படிகள் அவசியம்?

   ______________________________

2. தினமும் இயேசுவிடம் சரணடைவது ஏன் அவசியம்?

   ______________________________

3. பரிசுத்த ஆவியால் மீண்டும் நிரப்பப்பட நீங்கள் ஏன் தினமும் ஜெபிக்க வேண்டும்? ________________________

4. அன்றாட தொழுகையும் தியான நேரமும் ஏன் மிகவும் அவசியம்?

   ______________________________

### நமது ஜெப நேரம்

- ➢ உங்கள் ஜெப–பங்காளியுடன் தொடர்பு கொண்டு இந்த தலைப்பைப் பற்றி விவாதியுங்கள்.
- ➢ உங்கள் ஜெப–பங்காளியுடன் சேர்ந்து ஜெபியுங்கள்.

1. நீங்கள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுவீர்கள்.
2. அனுதின வழிபாட்டில் கர்த்தர் உங்களுடைய மகிழ்ச்சியை அதிகரிப்பார்.
3. இயேசுவின் குணம் உங்களில் வளரும்.

நாள் 6

## ஞானஸ்நானத்திற்கும் பரிசுத்த ஆவிக்குமுள்ள தொடர்பு என்ன?

### ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுதல்

தொழுகையின் நோக்கத்தைப் பற்றி சிந்திக்கலாம். மனுக்குலத்திற்கான தேவனின் கடைசி செய்தி – மிருகத்தை வணங்குவதற்குப் பதிலாக படைத்தவரை வணங்குவதோடு தொடர்புடையது (வெளி. 14:6–12). சிருஷ்டிகரை வணங்குவதின் வெளிப்படையான அடையாளம் ஓய்வுநாளாகும். தொழுகையின் உண்மையான மனப்பான்மை யோவான் 4:23–24ல் காட்டப்பட்டுள்ளது. "உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்."

ஆவியுடன் தொழுவது என்பது நிச்சயமான உணர்வுடன் தொழுதுகொள்வதுடன், பரிசுத்த ஆவியினால் நிறைந்திருப்பதாகும். உண்மையுடன் தொழுது கொள்வதென்பது இயேசுவிடம் முழுமையாக ஒப்புக்கொடுத்து வாழ்வதாகும். ஏனெனில் அவரே சத்தியம். இயேசு "நானே சத்தியம்" என்றுரைத்தார். (யோவான் 14:6). தேவனுடைய வார்த்தையின்படியும் வழிகாட்டுதலின் படியும் இயேசு நம்மில் வாசம் செய்கிறார். அவர் "உமது வசனமே சத்தியம்" (யோவான் 17:17) என்றார், சங்கீதம் (சங்.119:142) "உம்முடைய வேதமே சத்தியம்" என்று கூறுகிறது. இப்போது நாம் உண்மையான தொழுகை செய்யவில்லையென்றால், பின்னர் ஒரு இக்கட்டான காலத்தில் நாம் விழுந்து போகும் ஆபத்தில் இருப்போம் இல்லையா? மாம்ச கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் இது ஒரு பெரிய பிரச்சனையாக இருக்கும்.

நாம் அனைவரும் தேவ ஒத்தாசையுடன் முன்னேறவும் அறிவில் வளரவும் விரும்புவோம் என்று நினைக்கிறேன். பின்வரும் தவறான நம்பிக்கை முன்னோக்கி செல்வதில் சிலருக்கு தடையாக இருக்கலாம்

### ஞானஸ்நானமும் பரிசுத்த ஆவியும்

சிலர் ஞானஸ்நானம் பெற்றுவிட்டதால் தாங்கள் பரிசுத்த ஆவியால்

நிரப்பப்பட்டதாகவும், எல்லாம் சரியாக இருக்கிறது, மேலும் தாங்கள் எதுவும் செய்ய தேவையில்லை என்று நினைக்கிறார்கள். டி.எல். மூடி ஒரு முறை: "அநேகர் தாங்கள் நிரப்பப்பட்டதால் தாங்கள் நிரந்தரமாக நிரப்பப்பட்டுவிட்டதாக நினைக்கிறார்கள். ஓ, நண்பரே! நாம் உடைந்த பாத்திரங்கள். நிரப்பப்படுவதற்கு நாம் தொடர்ந்து நீரூற்றின் கீழ் இருப்பது அவசியம்." – D.L. Moody, They Found the Secret, p.85,86 quoted in 10 Days – prayers and Devotions… by Dennis Smith, p.23

**ஜோசப் எச் வேகனர்:** "ஞானஸ்நானம் எல்லா சமயங்களிலும் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டதற்கு சான்றாகக் எண்ணப்படுகிறது, மனந்திரும்பிய பாவி, தான் பாதுகாப்புடன் இருப்பதாக நினைக்கிறான். தேவ கிருபையின் அடையாளமாக அவன் ஞானஸ்நானத்தை மட்டுமே நம்புகிறான். அவனுடைய அடையாளம் ஞானஸ்நானம் மட்டுமேயன்றி அவனுடைய இதயத்தில் உள்ள ஆவியோ அல்லது சாட்சியோ அல்ல." – Joseph, H Waggoner, The Spirit of God (Battle Creek, Michigan 1877), p.35

ஞானஸ்நானம் நிச்சயமாக ஒரு குறிப்பிடத்தக்க தீர்மானம். இது தேவனின் விருப்பத்திற்கு ஏற்ப அதன் முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. ஆனால் நாம் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருக்கிறோம் என்பதற்கு ஆதாரமாக கடந்த கால நிகழ்வை நாம் திரும்பி பார்க்கக்கூடாது.

ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பே சிலர் பரிசுத்த ஆவியைப் பெற்றனர் – உதாரணமாக கொர்னேலியு மற்றும் அவனது குடும்பத்தினர் அல்லது சவுல். மற்றவர்கள் ஞானஸ்நானம் பெற்ற பிறகு பரிசுத்த ஆவியைப் பெற்றனர் – உதாரணமாக சமாரியர்கள் அல்லது எபேசில் உள்ள 12 ஆண்கள். ஆனால் பரிசுத்த ஆவியை ஒரு நபர் ஞானஸ்நானத்திற்கு முன்போ அல்லது பின்போ பெற்றிருந்தாலும் அவை எல்லாம் ஒன்றுதான். முக்கிய விஷயம் என்னவென்றால், நாம் ஒரு சமயத்தில் பரிசுத்த ஆவியைப் பெற்றோம் என்பதல்ல, இப்போது அவர் நம் இதயத்தில் இருக்கிறாரா என்பதே காரியம். கடந்த காலத்தில் என்ன நடந்தது என்பதல்ல, இப்போது எப்படி இருக்கிறது என்பதே முக்கியம்..

நான் மீண்டும் உங்களுக்கு நினைவுட்ட விரும்புகிறேன். பிறக்கும்போதே நம் உடல் உயிரைப் பெற்றது. நாம் உண்ணும் உணவு, பருகும் தண்ணீர், உடற்பயிற்சி மற்றும் தூக்கம் போன்றவற்றால் நம் வாழ்க்கை பராமரிக்கப்படுகிறது. இல்லையெனில் நாம் நீண்ட காலம் உயிர்வாழ முடியாது. அதே சட்டங்கள்தாம் நமது ஆன்மீக வாழ்க்கைக்கும் பொருந்தும். நாம் கிறிஸ்துவுக்கு நம்மை முழுமையாக ஒப்புக்கொடுத்த போது நாம் பரிசுத்த ஆவியின் மூலம் புதிய வாழ்விற்கான ஜீவனைப் பெற்றோம். நமது

ஆவிக்குரிய வாழ்க்கை பரிசுத்த ஆவி, ஜெபம், தேவனுடைய வசனம் போன்றவற்றின் மூலம் பராமரிக்கப்படுகிறது. "இயற்கை உலகைப் போலவே ஆவிக்குரிய உலகிலும் நடைபெறுகிறது. தெய்வீக வல்லமையால் இயற்கை உலகம் ஒவ்வொரு இமைப்பொழுதும் பாதுகாக்கப்படுகிறது; ஆயினும் அது நேரடியான ஒரு அற்புதத்தால் நடைபெறவது இல்லை, தேவன் நமக்கு எட்டும் வகையில் வைத்திருக்கிற ஆசீர்வாதங்களைப் பயன்படுத்துவதால் கிடைக்கிறது. அதுபோல ஆவிக்குரிய ஜீவனும் தேவனால் அருளப்பட்டிருக்கிற ஆசீர்வாதங்களை முறையாக பயன்படுத்துவதன் மூலம் பாதுகாக்கப்படுகிறது." - E.G. White, The Acts of the Apostles (1911), p.284.2

சரீர வாழ்வோ அல்லது ஆன்மீக வாழ்வோ தானாகவே நமக்குள் நிலைத்திருக்காது. அதற்கு தேவன் வழங்கிய வழிமுறைகளைப் பயன்படுத்துவது அவசியம்.

இதன் அர்த்தமாவது: நாம் மீண்டும் பிறந்தபோதே பரிசுத்த ஆவியானவர் நம்மில் தங்குவதற்கு நமக்குக் கொடுக்கப்படுகிறார். ஆனால் அவர் தங்குவதற்கு நாம் அனுதினமும் வழிகளை ஆயத்தப்படுத்துவதை பொறுத்தே அவர் தங்குவது அமையும். நாம் வழிமுறைகளை பயன்படுத்தாவிட்டால் நாம் எதை எதிர்பார்க்க முடியும்?

இந்த எல்லா "வழிமுறைகளிலும்" பரிசுத்த ஆவியானவரே மிக முக்கியமானவர். அத்துடன் அவருடைய வார்த்தையின் மூலம் தேவனுடன் இணைந்திருப்பதற்கும், அவரை தொழுது கொள்வதற்கும், பிற விஷயங்களில் பங்கேற்பதற்கும் ஜெபம் முக்கியமானது.

ஒரு சட்டமாக உள்ளான மனுஷனை பராமரிப்பது அவசியம் என்பதை நாம் ஒப்புக்கொள்வோம் என்று நினைக்கிறேன். அதைச் செய்யாவிட்டால், வருந்தத்தக்க விளைவுகளை நாம் அனுபவிக்க நேரிடும். நாளைய தினத்திற்காக இன்றே சாப்பிட முடியாதது போல பரிசுத்த ஆவியானவரை சேமித்து வைக்க முடியாது. "நாளைக்கு வேண்டிய உதவியை தேவன் இன்றே கொடுப்பதில்லை." -EG White, The Desire of Ages, (1898), p.313.4

அன்றாடம் இயேசுவிடம் நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டியது அவசியம் என்பதையும், ஒவ்வொரு நாளும் பரிசுத்த ஆவியானவரை நம் வாழ்வில் தங்கும்படி அழைக்க வேண்டியதும் நியாயமானது என்று நான் கருதுகிறேன்.

இவ்விரண்டு விஷயங்களும் கிறிஸ்துவுடன் நெருங்கிய உறவைக் கொண்டிருக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக செயல்படுகின்றன. அவை ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள். என்னை அவருக்கு ஒப்புக்கொடுத்து பரிசுத்த ஆவியானவரைக் கேட்பதன் மூலம் அவரை என்

இதயத்தில் அழைக்கிறேன். அனேக வேதவசனங்களுள் 1யோவான் **3:24 (14:17,23**ஐயும் பார்க்கவும்**).** பரிசுத்த ஆவியானவர் மூலம் இயேசு நம்மில் தங்கியிருக்கிறார் என்பதைக் காட்டுகிறது. "அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே அறிந்திருக்கிறோம்."

### பரிசுத்த ஆவியானவர் நம்மில் தங்கியிருப்பதன் விளைவுகள்!

பரிசுத்த ஆவியானவர் என்னுள் வாசம் செய்யும்போது, கிறிஸ்து சாதித்ததை அவர் என்னுள் நிறைவேற்றுகிறார். "கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே." **(**ரோமர் **8:2).** தேவனிடம் முழுமையாக ஒப்புக்கொடுத்த இதயத்தில் பரிசுத்த ஆவியனவர் செயல்படும் விதத்தை விளக்க முடியும். கிறிஸ்து சாதித்ததை பரிசுத்த ஆவியால் மட்டுமே என்னில் சாதிக்க முடியும். எலன் உவைட் அதை நன்றாக விளக்குகிறார். "ஆவியானவர் உயிர்ப்பிக்கும் வல்லமையாக கொடுக்கப்பட வேண்டும், இவர் இல்லாமல் கிறிஸ்துவின் தியாகம் பயனற்றதாக இருக்கும். உலக மீட்பர் உருவாக்கியதை ஆவியானவரே விளைவிக்கிறார். ஆவியால் இதயம் தூய்மை அடைகிறது. ஆவியின் மூலம் விசுவாசி தெய்வீக சுபாவத்தின் பங்காளியாக மாறுகிறான். தேவ வல்லமை அவர்களின் மன்றாட்டு மற்றும் வரவேற்புக்காக காத்திருக்கிறது." - E.G. White, The Desire of Ages. (1898), p.671.2

இந்த செயல்முறையை தாமஸ். ஏ. டேவிஸ் பின்வருமாறு விவரிக்கிறார்: "இதன் அர்த்தமாவது, கிறிஸ்து தம் ஜனங்களுக்காக ஆற்றிய அரும்பணிகள்கூட பரிசுத்த ஆவியையே சார்ந்துள்ளது. அவர் இல்லாமல் இயேசு இந்த பூமியில் செய்த அனைத்தும் – கெத்செமனே, சிலுவை மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் பரலோகத்தில் அவர் செய்து வரும் ஆசாரிய ஊழியம் யாவும் தோல்வியடையும். உலக பெரும் மதம் மற்றும் நீதிநெறியாற்றிய தலைவரைவிட கிறிஸ்து செலுத்திய தியாகத்தின் பலன் மிகவும் பயனுள்ளதாக இருக்காது. உண்மையில் இவர்களெல்லாரையும்விட கிறிஸ்து மேம்பட்டவராய் இருந்தாலும், தம்முடைய முன்மாதிரி மற்றும் போதனைகளினால் மட்டுமே மனுக்குலத்தை அவரால் காப்பாற்றிவிட முடியாது. மக்களை மாற்றுவதற்கு அவர்களில் பரிசுத்த ஆவியானவர் வேலை செய்வது அவசியம். இயேசுவால் சாத்தியமாக்கப்பட்ட இந்த வேலை பரிசுத்த ஆவியால் மட்டுமே செய்யப்படுகிறது." - Thomas A Davis, Als Christ slegreich leben, (HW-Verlag), Seite 43 / How to be Victorious Christian, R&H.

நீங்கள் பரிசுத்த ஆவியால் நிரப்பட்டிருக்கிறீர்களா என்பதை அறிய இது

மட்டும் போதாதா?

"தேவ ஆவியானவர் உங்கள் இருதயத்தை பற்றிக்கொள்ளும்போது உங்கள் வாழ்க்கை மறுரூபமடையும். பாவ எண்ணங்கள் களைந்தெறியப்படும். தீய செயல்கள் வெறுக்கப்படும். கோபம், பொறாமை, மற்றும் சண்டை இருந்த இடத்தை அன்பு, தாழ்மை, மற்றும் சமாதானம் நிரப்பும். கவலையிருந்த இடத்தை சந்தோஷம் ஆட்கொள்ளும். பரலோக பிரகாசம் முகத்தில் காணப்படும். மனித கண்களால் காணயியலாத வல்லமை நம்மில் புதிய தேவசாயலை உண்டாக்கும்" - E.G. White. The Desire of Ages, (1898), p.173.1

பரிசுத்த ஆவியானவர் ஒருவருடைய வாழ்க்கையில் செயல்படும்போது, மதிப்புமிக்க பல விளைவுகள் வெளிவருகின்றன. அவர் இல்லாமல் பெரும் குறைபாடுகளும், இழப்புகளும் ஏற்படுகின்றன. பரிசுத்த ஆவியானவருடனான வாழ்க்கை மற்றும் அவர் இல்லாத வாழ்க்கைக்கான வித்தியாசம் அத்தியாயம்–4ல் மேலும் விரிவாக கையாளப்படும்.

### நான் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருக்கிறேனா?

பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுவதைக்குறித்து பின்வரும் கேள்விகளை நீங்களே கேட்டுப்பாருங்கள்: - Catherine Marshall, Der Helfer (Erzhausen. 2002), p.24

- என் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியின் குறிப்பிடத்தக்க விளைவுகள் ஏதேனும் உள்ளதா? உதாரணமாக, அவர் இயேசுவை உங்களுக்கு உண்மையாகவும் பெரியவராகவும் வெளிப்படுத்துகின்றாரா? (யோவான் 15:16)
- பரிசுத்த ஆவியின் குரலை உள்மனதில் நான் கேட்கவும் புரிந்துகொள்ளவும் தொடங்குகிறேனா? என் வாழ்க்கையில் பெரிய மற்றும் சிறிய முடிவுகளுக்கு அவர் என்னை வழிநடத்த முடியுமா? (ரோமா; 8:14)
- என் சகமனிதன் பேரில் அன்பு எழுந்துள்ளதா? பொதுவாக நான் என் நண்பராக தெரிவு செய்ய முடியாத நபர்கள் பேரில் பரிசுத்த ஆவியானவர் இரக்கத்தையும் ஆழ்ந்த அக்கறையையும் கொடுக்கிறாரா? (யாக். 2:8,9)
- சகமனிதர்களுடன் பழகுவதற்கு பரிசுத்த ஆவியானவர் எனக்கு எப்படி உதவுகிறார் என்பதை நான் மென்மேலும் அனுபவிக்கிறேனா? கவலையும் பாரமும் நிறைந்த ஒரு நபரின் இதயத்தை அடைய அவர்

எனக்கு சரியான வார்த்தைகளைத் தருகிறாரா?

- இயேசுவைப் பற்றி பகிர்ந்து கொள்ளவும் மற்றவர்களை அவரிடம் வழிநடத்தவும் பரிசுத்த ஆவியானவர் எனக்கு பலம் தருகிறாரா?
- என் ஜெப வாழ்க்கையில் அவர் எனக்கு எப்படி உதவுகிறார், என் இதயத்தில் உள்ள ஆழமான உணர்வுகளை தேவனிடம் வெளிப்படுத்த எனக்கு எப்படி உதவுகிறார் என்பதை நான் அனுபவிக்கிறேனா?

இந்தக் கேள்விகளைப் பற்றி நாம் சிந்திக்கும்போது, பரிசுத்த ஆவியானவரில் வளரவும் அவரைபற்றி நன்கு தெரிந்து கொள்ளவும், அவரை இன்னும் அதிகமாக நேசிக்கவும் மிகப்பெரிய தேவை இருக்கிறது என்பதைக் காண்கிறோம்.

ஒரு சகோதரர் இவ்வாறு எழுதினார்: நானும் என் தந்தையும் சமரசம் செய்து கொண்டோம். தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள் மற்றும் 40 – நாள் புத்தகங்கள் ஒன்று மற்றும் இரண்டு ஆகியவற்றைப் படித்த பிறகு, நான் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட அற்புதமான அனுபவத்தைப் பெற்றேன். பரிசுத்த ஆவி எவ்வாறு செயல்படுகிறார் மற்றும் என் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் அவர் கிரியை செய்ய விரும்புவதை நான் ஆவலோடு எதிர்பார்க்கிறேன்.

### தகப்பனுக்கும் மகனுக்கும் இடையே நல்லிணக்கம்!

என் தந்தையுடனான எனது உறவு எப்போதுமே சிக்கலானது, என் குழந்தைப் பருவத்திலும் இளமையிலும் எனது விருப்பங்களும் ஜெபங்களும் எப்போதும் என் தந்தையுடன் சிறந்த உறவைக் கொண்டிருப்பதாக இருந்தன. ஆனால் படிப்படியாக மோசமடைந்தது. மற்றொரு ஆறு முதல் ஏழாண்டுகள் கடந்து சென்றது. என் இதயத்தில் பெரும் வெற்றிடம் ஏற்பட்டது. நானும் என் மனைவியும் வேதாகமத்தை படித்து பரிசுத்த ஆவிக்காக ஜெபித்தபோது, தேவனிடம் நிறைய அனுபவங்களை பெற்றோம். நாங்கள் எங்கள் குடும்பத்திற்காகவும் குறிப்பாக என் தகப்பனாருக்காகவும் பிரார்த்தனை செய்தோம். இந்த நேரத்தில் என் தகப்பனை நேசிக்க புதிய ஆற்றலைப் பெற்றேன். என் குழந்தை பருவத்திலிருந்தே எங்கள் உறவில் சரியாக நடக்காத எல்லாவற்றிற்காகவும் அவரை என்னால் மன்னிக்க முடிந்தது. நானும் என் தந்தையும் இப்போது நண்பர்கள். அவர் மேலும் ஆவிக்குரிய காரியத்தில் முன்னேறத் தொடங்கியதோடு, தேவனைப்பற்றி மற்றவர்களுக்கும் சொல்லத் தொடங்கினார். இரண்டு வருடங்கள் கழித்து இப்போது என் அப்பாவுடனான உறவு இன்னும் நன்றாக இருக்கிறது. இந்த அனுபவத்திற்காக நான் தேவனுக்கு நன்றி கூறுகிறேன். நான் மிகவும்

பெலவீனனாகவும் அடிக்கடி தனிமையாகவும் உணர்ந்தேன். ஆனால் நான் பரிசுத்த ஆவிக்காக தினமும் ஜெபிக்க ஆரம்பித்தேன். இப்பொழுது நான் ஒரு புதிய அற்புதமான வாழ்க்கை மற்றும் தேவனுடனான உறவை அனுபவிக்கிறேன். (பெயர் ஆசிரியரால் அறியப்பட்டது)

**ஜெபம் :** கர்த்தராகிய இயேசுவே, பரிசுத்த ஆவியின் மூலம் நீங்கள் எங்களில் நிலைத்திருக்க விரும்பியதற்கு நன்றி. அனுதினமும் எங்களை உங்களிடம் ஒப்படைப்பதன் மூலம் எங்களில் நம்பிக்கை, அன்பு மற்றும் உறவு வளர்ந்ததற்கு நன்றி. ஆண்டவரே, பரிசுத்த ஆவியையும் அவருடைய கிரியைகளையும் நன்கு அறிய எங்களுக்கு உதவுங்கள். எனக்கும், என் குடும்பத்துக்கும், என் சபைக்கும் அவர் என்ன செய்ய விரும்புகிறார் என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன். இதற்காக நாங்கள் தினமும் கேட்கும்போதும் நன்றி தெரிவிக்கும்போதும் பரிசுத்த ஆவியானவரை எப்படி பெற முடியும் என்ற உறுதியை பெற்றுக்கொள்ள முடியும். ஆமென்.

## எபேசியர் 5:18க்கான சிறப்பு சேர்க்கை "ஆவியினாலே நிறைந்து"

எபேசியர் 5:18ல் நாம் ஏற்கனவே ஆங்கில உரையில் கண்டபடி இந்த வேண்டுகோள் கட்டளையின் அடிப்படையில் நடைபெறுகிறது. மேலும் இந்த கட்டளை அனைவருக்கும் கொடுக்கப்பட்டு இருப்பதையும் நாம் அறியமுடியும். அத்துடன் பரிசுத்த ஆவியின் முழுமையை தேடுவது நமது கடமை என்பதையும் நாம் காணலாம். ஆனால் மூல பதிப்பில் – கிரேக்க உரை அதை மேலும் தெளிவாக்குகிறது.

**ஜோஹன்னஸ் மேகர்** இது குறித்து கருத்துரைக்கிறார்: புதிய ஏற்பாட்டு கடிதங்களில் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுவதைப் பற்றி நேரடியாக பேசக்கூடிய ஒரே ஒரு பகுதி இது மட்டுமே. "ஆவியினாலே நிறைந்து" (எபே.5:18). அப்போஸ்தலர் நடபடிக்கைகளில் பரிசுத்த ஆவியானவர் ஊக்கமளிக்கும் ஒரு பரிசாகவும், குறிப்பிட்ட சூழ்நிலைகளில் வல்லமையுடன் செயல்பட்டதாகவும் சொல்லப் பட்டிருந்தாலும், பவுல் "பரிசுத்த ஆவியால் நிறைந்து" என்பதை ஒரு கட்டளையாகவே குறிப்பிடுகின்றார். வாழ்க்கை சூழ்நிலைகளில் இந்த அனுபவம் தனித்துவமானது என்றாலும் இயேசுவின் அனைத்து சீஷர்களுக்கும் இது பொருந்தும். இந்த எளிய ஆனால் மிகமுக்கியமான கட்டளை நான்கு முக்கிய அம்சங்களை கொண்டுள்ளது.

1. "**நிரப்பு**" என்ற வினைச்சொல் கட்டளை வடிவத்தில் பயன்படுத்தப்படுகிறது. பவுல் இங்கு பரிந்துரை செய்யவோ அல்லது நட்பு ரீதியான அறிவுரை வழங்கவோ இல்லை. அது அவருடைய பரிந்துரையாயிருந்தால் அதை ஒரு நபர் ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாம். ஆனால் அதிகாரம் பெற்ற ஒரு அப்போஸ்தலனாக அதை அவர் கட்டளையிடுகிறார். ஒரு கட்டளை எப்போதும் அவரை பெரிய அளவில் ஈர்க்கும். கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட வேண்டும் என்ற கட்டளைக்கு உட்பட்டவர்கள். பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட வேண்டியதை நிறைவேற்ற வேண்டியது நம்முடைய கடமை.

2. "**வினைச்சொல்**" பன்மை வடிவத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. சபையில் சிறப்பான கடமைகளைச் செய்து கொண்டிருக்கும் ஒரு தனிநபரிடம் தேவன் இந்த கட்டளையைக் கொடுக்கவில்லை. பரிசுத்த ஆவியால் நிறைந்திருப்பது தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு சில நபர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்ட சலுகை அல்ல. இந்த அழைப்பு எப்போதும் எல்லா காலங்களிலும் உள்ள சபையைச் சேர்ந்த அனைவருக்கும் உரியது. இதற்கு யாரும் விதிவிலக்கு அல்ல. பவுலை பொருத்தமட்டில், எல்லா கிறிஸ்தவர்களும் பரிசுத்த ஆவியால் நிறைந்திருக்க வேண்டியது இயல்பானது.

3. **வினை செயலற்ற நிலையில் உள்ளது:** உங்களை 'ஆவியால் நிரப்புங்கள்' என்று அல்ல, 'ஆவினால் நிறைந்திருங்கள்' என்றே சொல்லுகிறது. எவராலும் தங்களை பரிசுத்த ஆவியால் நிரப்ப முடியாது. இது பரிசுத்த ஆவியின் பிரத்தியேகமான வேலை. இங்கே அவருடைய இறையாண்மை உள்ளது. ஆயினும் பரிசுத்த ஆவியானவர் தன்னை நிரப்ப நல்ல சூழலை உருவாக்க வேண்டியது தனிநபருடைய வேலை. ஒருவருடைய விருப்பம் இல்லாமல் பரிசுத்த ஆவியானவர் அவருக்குள் கிரியைச் செய்ய மாட்டார்.
4. **கிரேக்க மொழியில் இந்த சொல் நிகழ்காலத்தில் உள்ளது.** இந்த கட்டாய நிகழ்காலம் – அவசரகாலத்தை விவரிக்கும் ஒரு முறை செயலை மட்டும் குறிக்காமல், தொடர்ந்து மீண்டும் மீண்டும் நிகழும் நிகழ்வை விவரிக்கிறது. இதன்படி பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுவது ஒரு முறை அனுபவமல்ல, மாறாக இது ஒரு தொடர்ச்சியான மற்றும் முற்போக்கான செயல்முறை. ஒரு கிறிஸ்தவன் ஒருமுறை நிரப்பப்பட்ட பாத்திரத்தைப் போல அல்ல, மாறாக தொடர்ந்து நிரப்பப்பட வேண்டும். இந்த வாக்கியத்தை இவ்வாறு வெளிப்படுத்தலாம். உங்கள் ஆத்துமா தொடர்ந்து மற்றும் மீண்டும் மீண்டும் ஆவியால் நிரப்பப்படட்டும்.

"ஞானஸ்நானத்தின்போது (நம்மை முழுமையாக ஒப்படைத்து நாம் தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றபோது) நமக்கு கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவியின் நிறைவை, முழுமையை, தக்கவைக்காதபோது நம்மால் இழக்கப்படலாம். அது தொலைந்துவிட்டால், அதை மீண்டும் பெற முடியும். ஆவியால் நிரப்பப்படுவது – மீண்டும் மீண்டும் நடைபெற வேண்டும். அப்படி நடைபெறும்போது நம் வாழ்வின் அனைத்து பகுதிகளையும் பரிசுத்த ஆவியானவரால் ஆக்கிரமிக்க முடியும். மேலும் நம் ஆவிக்குரிய வாழ்க்கை பெலவீனமடையாது. ஆவியால் நிரப்பப்படுவது என்பது நாம் அதிக அளவில் ஆவியானவரை பெற்றிருக்கிறோம் என்பதை அர்த்தப்படுத்தவில்லை, மாறாக ஆவியானவரே நம்மை அதிகமதிமாக பெற்றிருக்கிறார் என்று அர்த்தம். அதனால்தான் பவுல் அனைத்து விசுவாசிகளையும் தொடர்ந்து ஆவியினால் நிறைந்திருக்கும்படி கட்டளையிடுகிறார். ஒரு கிறிஸ்தவனுக்கு இது ஒரு சாதாரண நிலை. ஒரே ஞானஸ்நானம் – ஆனால் அனேக நிரப்புதல்கள்" - Aufden Spuren des Geistes, (Luneburg,1999) page 100-101 (with permission from the publishing house)

"கர்த்தர் தாமே கட்டளையிட்டதாவது: நீங்கள் தொடர்ந்து மீண்டும் மீண்டும் பரிசுத்த ஆவியால் புதிதாக நிரப்பப்படுங்கள்."

ஜோஹன்னஸ் மேகர் ஒரு போதகர் மற்றும் சுவிசேஷகர். பல ஆண்டுகளாக பல்கலைக்கழகத்தில் "முறையான இறையியல்" (Systematic Theology) விரிவுரையாளாராக இருந்தார். மிக சமீபத்தில் அவர் சுவிட்சர்லாந்தில் பெர்னில் உள்ள யூரோ ஆப்ரிக்க மண்டலத்தில் ஊழியத்துறையின் தலைவராக இருந்தார் (இப்போது அது மத்திய ஐரோப்பிய மண்டலத்தில் உள்ளது). தற்போது அவர் ஓய்வு பெற்று ஃபரைடென்சாவில் வசித்து வருகிறார். மேற்கோள் அவரது புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

## தனிப்பட்ட எண்ணங்கள் மற்றும் கலந்துரையாடலுக்கான வழிகாட்டி

1. ஆவியோடும் உண்மையோடும் தொழுகை செய்வது என்பதன் அர்த்தம் என்ன?

___

___

2. பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவதைப் பொறுத்தவரை தண்ணீர் ஞானஸ்நானத்தை நம்பியிருக்கும்போது நாம் என்ன தவறு செய்கிறோம்?

___

___

3. நான் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படாதபோது, இயேசுவின் தியாகம் என்வாழ்க்கையில் என்ன உட்குறிப்பைக் கொண்டுள்ளது?

___

___

4. ஆவியால் நிறைந்திருங்கள் (எபே.5:18ல் உள்ள இணைப்புகளைப் பார்க்கவும்). பவுலின் முறையீட்டில் என்ன நான்கு முக்கிய குறிப்புகளைக் காணலாம்?

___

___

### <u>நமது ஜெப நேரம்</u>

- ➢ உங்கள் ஜெப–பங்காளியுடன் தொடர்பு கொண்டு இந்த தலைப்பைப் பற்றி விவாதியுங்கள்.
- ➢ உங்கள் ஜெப–பங்காளியுடன் சேர்ந்து ஜெபியுங்கள்.

1. கர்த்தர் இன்று தம்முடைய பரிசுத்த ஆவியால் உங்களை நிரப்புகிறார்.
2. தேவனுடைய இராஜ்ஜியத்தை நாம் முதலாவது தேடுவது என்றால் – நாமும், நம்மிடம் உள்ள யாவும் இயேசுவுக்கு கீழ்படிகிறோம் என்று அர்த்தம்.
3. இயேசு நம் வாழ்க்கையை மாற்றுவார்.

நாள் 7

அத்தியாயம் - 4

# என்ன வித்தியாசங்களை நாம் எதிர்பார்க்க முடியும்?

## பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட வாழ்வில் நமக்கு கிடைக்கும் நன்மை என்ன?

### மாம்ச மற்றும் ஆவிக்குரிய கிறிஸ்தவத்தினிடையே ஒரு ஒப்பீடு

மாம்ச கிறிஸ்தவத்தின் விளைவுகள் ஏற்கனவே தனிப்பட்ட நபர்களுக்கு ஒரளவு பட்டியலிடப்பட்டுள்ளன. சில விளைவுகள் பின்வருமாறு வெளிப்படுத்தப் படுகின்றன

- இந்த நிலையிலுள்ள நபர் இரட்சிக்கப்படுவதில்லை. (ரோமர் 8:6–8 ; வெளி 3:16)
- தேவனின் அன்பான – அகாபே அன்பு இந்த நபரிடம் இல்லை. (ரோமர் 5:5 ; கலா. 5:22); அவர்கள் தங்கள் மனித அன்பையே முற்றிலும் சார்ந்து இருக்கிறபடியால், மாம்ச இச்சைகள் களைந்தெறியப்படவில்லை. (கலா. 5:16).
- இந்த நபர் தேவஆவியின் வல்லமையால் பலப்படுத்தப்படவில்லை (எபே. 3:16–17).
- கிறிஸ்து இந்த நபரில் ஜீவிக்கவில்லை (1யோவான் 3:24).
- அந்த நபர் கிறிஸ்துவுக்காக சாட்சி கொடுக்கும் வல்லமையைப் பெறவில்லை. (அப் 1:8).
- இந்த நபர் மனித வழியில் செயல்படுகிறார். (1கொரி. 3:3), அது எளிதில் எதிர்ப்பு மற்றும் பதட்டங்களை ஏற்படுத்தலாம்.
- இந்த நபர் அறிவுரையை ஏற்றுக்கொள்வது கடினம்.
- அவர்களின் ஜெப வாழ்க்கை போதுமானதாக இல்லாதிருக்கலாம்.
- மனதபெலத்தைக் கொண்டே மன்னிக்கும் இவரால் வெறுப்பைச் சகித்துக் கொள்ள முடியாது.

மாம்ச கிறிஸ்தவன் சில சமயங்களில் உலக மனிதனைப்போல் செயல்படுகிறான். "நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா?" (1கொரி. 3:3) என்று பவுல் கூறுகிறார். மற்ற நேரங்களில் அவனது செயல்கள் ஆவிக்குரிய நபரைப் போலவே இருக்கும். இருப்பினும் அவன் தனது சொந்த பலம் மற்றும் திறன்களைக் கொண்டே வாழ்கிறான்.

**ஆவிக்குரிய கிறிஸ்தவன் தேவனின் முழுமையை அனுபவிக்கிறான்:**

"நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன். நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்." எபேசியர் 3:16–21.

## மாம்ச கிறிஸ்தவத்தின் விளைவுகள்

பரிசுத்த ஆவியானவர் இல்லாததால் நான் போதகராக பணியாற்றிய எனது குடும்பத்திலும் என் சபைகளிலும் ஏற்பட்ட இழப்புகளுக்காக வருந்துகிறேன். நாம் சென்ற தூரத்தை விட வேறு எவரையும் வழிநடத்த முடியாது என்பதும் இந்த காரியத்தில் உண்மைதான். குடும்பம் மற்றும் சபையில் உள்ள தனிப்பட்ட நபர்களில் பரிசுத்த ஆவியின் குறைபாடு அதிகரிக்கிறது என்பதை நாம் உணரவேண்டும்.

## குழந்தைகளும் வாலிபர்களும்

மாம்ச கிறிஸ்தவம் ஒரு தாராளவாத கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அடிப்படையாகும். அறியாமையால் ஜனங்கள் நல்ல நோக்கத்துடன் தங்களால் செய்ய இயலாததைச் செய்ய முயற்சி செய்கிறார்கள், பின்னர் வெளியேற வழியைத் தேடுகிறார்கள். நம் இளைஞர்களை நாம் இழக்க

இதுதான் காரணமா? நாம் அறியாமையினாலோ அல்லது வேறு காரணங்களினாலே மாம்ச கிறிஸ்தவத்தில் நம் குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் ஒரு முன்மாதிரியாக இருக்கிறோமா? இதன் விளைவாக அவர்கள் மாம்ச கிறிஸ்தவர்களாக மாறினார்களா? அதனால் அதைரியத்தோடே அவர்கள் போராட வேண்டியுள்ளதா? பலர் இதை பெரிதாக எடுத்துக்கொள்ளாததற்கு அல்லது சபைக்கு வராததற்கு அல்லது சபையை விட்டு வெளியேறுவதற்கு இதுதான் காரணமா?

கொஞ்ச காலத்திற்கு முன் ஒரு மூத்த சகோதரர் தனது சபையில், "பழைய தலைமுறை பரிசுத்த ஆவியின் செயல்பாட்டைப் புரிந்து கொண்டு அவரால் நிரப்பப்பட தவறிவிட்டதே இன்று நம் சொந்த வாழ்விலும் நம் வாலிபர்களின் வாழ்க்கையிலும் உள்ள பிரச்சனைகளுக்கு காரணம்" என்று கூறினார். - Garrie F. Williams, Erfulltsein Vom Heillgen Geist – Wie erfahren wird das? (Luneburg 2007), p.5.8

வெது வெதுப்பான தன்மையின் (கிறிஸ்துவிடம் தங்களை முழுமையாக அர்ப்பணிக்காதவர்கள்) பின்விளைவுகளை நான் மீண்டும் உங்களுக்கு நினைவூட்டுகிறேன்: "அரைகுறையான கிறிஸ்தவர்கள் இறைநம்பிக்கை இல்லாதவர்களைவிட மோசமானவர்கள். அவர்களின் ஏமாற்று வார்த்தைகள்; மற்றும் இணக்கமற்ற அவர்களின் வாழ்க்கை பலரை வழிவிலகச் செய்கிறது. இறை நம்பிக்கை இல்லாதவன் தன்னுடைய அவபக்தியை வெளிக்காட்டுகிறான். வெதுவெதுப்பான கிறிஸ்தவனோ இரு தரப்பினரையும் ஏமாற்றுகிறான். அவன் ஒரு நல்ல உலகமனிதனோ அல்லது ஒரு நல்ல கிறிஸ்தவனோ அல்ல. யாராலும் செய்ய முடியாத ஒரு வேலையை செய்ய சாத்தான் அவனை பயன்படுத்துகிறான்." – E.G.White letter 44, 1903. Quoted in the SDA Bible Commentary Vol 7. 963 On Rev. 3:15,16

இருப்பினும் நாம் ஆவிக்குரியவர்களாய் வாழ்ந்தால் தேவ உதவிக்கான வழியை நம் பிள்ளைகளுக்குக்காட்ட முடியும். மேலும் ஆச்சரியமான ஒன்றை எலன் ஜி உவைட் கூறுகிறார்:

"ஒவ்வொரு நாளும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெறுவது உங்களின் பாக்கியம் என்பதை நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுங்கள். கிறிஸ்து தம்முடைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான உதவிகரத்தை உங்களில் கண்டுபிடிக்கட்டும். ஜெபத்தின் மூலம் உங்கள் பிள்ளைகளுக்கான ஊழியத்தில் – ஒரு பரிபூரண வெற்றியடையச் செய்யும் அனுபவத்தைப் பெறலாம்" – E.G. White, Child Guidance (1954), p.69

நாங்கள் எங்கள் பிள்ளைகளுக்கு ஜெபிக்க கற்றுக்கொடுத்தோம். ஆனால் பரிசுத்த ஆவிக்காக தினமும் ஜெபிக்க வேண்டுமென்பதை

அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தோமா? அல்லது அதை நாமாவது அறிந்திருந்தோமா? அந்த காலத்தில் நானோ என் மனைவியோ கூட அறிந்திருக்கவில்லை. எங்களுக்கு அறிவு இல்லாத அந்த காலத்தை தேவன் கணக்கில் கொள்ளவில்லை என்பதற்காக நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். ஆயினும் அதன் விளைவாக எவ்வளவு பெரிய இழப்பு ஏற்பட்டுள்ளது?

தினந்தோறும் இயேசுவிடம் தங்களை ஒப்புக்கொடுத்து பரிசுத்த ஆவிக்காக ஜெபிக்கும் ஆவிக்குரிய பெற்றோர்களின் குழந்தைகள் எவ்வளவு அற்புதமாய் இருப்பார்கள்!

## சுற்றுச்சூழல் - தெய்வீக அன்பா அல்லது ஒருவருக்கொருவர் நன்றாக இருப்பதா?

மாம்ச அல்லது ஆவிக்குரிய கிறிஸ்தவர்களிடையே திருமணங்கள், குடும்பங்கள், சபை நட்புறவுகளிற்கிடையில் ஒழுக்கமான வாழ்க்கைக்கு தேவனின் வல்லமை இல்லை என்றால், தேவனின் அன்பு காணப்படாவிட்டால், மற்றும் பாவத்தின் வல்லமை உடைக்கப்படாவிட்டால் என்ன விளைவு உண்டாகும்? அல்லது தேவ கிருபையால் இவ்விஷயங்கள் யாவும் இருந்தால் என்ன வித்தியாசம் ஏற்படும்?

பழமைவாத மாம்ச கிறிஸ்தவன் விமர்ச்சிப்பான். இது நல்லதல்ல. தேவனின் நல்ல வழிகாட்டுதலைப் பற்றி நாம் பேச வேண்டியிருந்தாலும், மெய்யான மாற்றம் உள்ளிருந்து வரும்போது மட்டுமே அத்தியாவசிய மாற்றம் ஏற்படும் என்பதை நாம் உணர வேண்டும்.

தாராளவாதிகள் விஷயங்களை முனைப்பாக எடுத்துக்கொள்ளாமல் உலகியல் முறைகளுக்கு ஏற்ப மாறுகிறார்கள். தேவன் இதை ஆசீர்வதிக்க முடியாது.

"சோம்பல், மேலோட்டமான தன்மை, உலகப்போங்கு, தயாளமின்மை, ஊழியக்காரர்களின் மனஎரிச்சல், இளைஞர்கள் சபையை விட்டு வெளியேறுதல், பலவீனமான சுய ஒழுக்கம், பயன்தராத – முன்யோசனையற்ற திட்டங்கள், அர்ப்பணிப்புள்ள மனிதர்களின் நீண்டகால பற்றாக்குறை போன்றவையே இன்றைய சபையின் பொதுவான நிலை" என்பதை ஜோசப் கிடர் கண்டுபிடித்தார். - Joseph Kidder Anleitung zum geistlichen Leben (Andrew University) PPP folie 3+4

இயேசுவுடன் நமக்கு சரியான தொடர்பு இல்லாததுடன் (யோவான் 15:1–5) மனித முயற்சிகளில் அதிக நம்பிக்கை கொண்டிருப்பதும் (சக.4:6) நம்முடைய பிரச்சனைக்கு ஒரு காரணம். பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட

வாழ்க்கையில் இதற்கான தீர்வையும், கிடர் காண்கிறார் (அப். 1:8).

இயேசு ஒரு புதிய கட்டளை கொடுத்தார்,

"நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்." யோவான் 13:35

இயேசுவைப் போல அன்பு பாராட்டுவது என்றால்: தெய்வீக அன்புடன் (அகாபே) நேசிப்பது என்று அர்த்தம். பரிசுத்த ஆவியால் நிறைந்திருந்தால் மட்டுமே இதை நம்மால் செய்ய முடியும்.

"தேவன் மீது மிகுந்த அன்பும் ஒருவருக்கொருவர் தன்னலமற்ற அன்பும் – நமது பரலோகத் தகப்பன் அளிக்கும் சிறந்த பரிசு. இந்த அன்பு ஒரு உணர்வு அல்ல, அது ஒரு தெய்வீக கொள்கை, நிரந்தர வல்லமையாகும். அர்ப்பணிக்கப்படாத இதயத்தால் (பரிசுத்த ஆவியால் நிரப்பப்படாத இதயம்) அதை உருவாக்கவோ அல்லது உற்பத்தி செய்யவோ முடியாது. இயேசு ஆட்சி செய்யும் இதயத்தில் மட்டுமே அது காணப்படுகிறது." - E.G. White, Acts of the Apostles. (1911). p.551.2

நாம் ஒருவருக்கொருவர் நல்லுறவு கொண்டிருந்தால் அல்லது அதைத் தாண்டி தேவனின் அன்பை நேசித்தால் மட்டுமே வித்தியாசம் காணப்படும் என்று நான் நினைக்கிறேன். எலன் ஜீ உவைட் நமக்கு ஒரு குறிப்பிடத்தக்க துப்பு கொடுக்கிறார்: "சாந்தம் மற்றும் அமைதியான ஆவியைக் கொண்டிருப்பதால் மட்டுமே வாழ்க்கையை சூழ்ந்திருக்கும் நூறு பிரச்சனைகளில் தொண்ணூற்றொன்பது பிரச்சனைகளிலிருந்து வெளியேற முடியும்." - E.G. White, Testimonies for the Church, Volume 4, p.348.3

1தெச. 4:3–8ல் திருமண வாழ்க்கையைப் பற்றி தேவ வார்த்தை குறிப்பிடுகிறது. பிறகாரியங்களுடன் இந்த வசனங்கள் திருமண உறவு பரிசுத்தமாகவும் கனமாகவும் வாழ்வதைப் பற்றி பேசுகின்றன. இது புறஜாதியினரின் உணர்ச்சிமிக்க காமத்திற்கு மாறாக உள்ளது. பரிசுத்தமான வாழ்க்கை மற்றும் பரிசுத்த ஆவியைக் கொண்டிருப்பதைக் மூன்று முறை குறிப்பிடுவதால், பரிசுத்த ஆவியோடே கூடிய வாழ்க்கை நம் திருமண உறவுகளையும் மாற்ற முடியும் என்பதுடன் மாற்ற வேண்டும் என்றும் நாம் உணர்கிறோம். நம் திருமண வாழ்க்கையில் மிகுந்த மகிழ்ச்சியையும் நிறைவையும் பெற வேண்டுமென தேவன் விரும்புகிறார். இக்காரியத்தில் மோகஇச்சையைவிட மென்மையான அன்பு மேலானது என்பதை தேவன் நமக்குக் காண்பிக்கிறார்.

இயேசு தம்முடைய சீஷர்களின் ஒற்றுமைக்காக ஜெபித்தார்:

“அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்." (யோவான் 17:21)

"கிறிஸ்துவுடன் ஒன்றாக இருப்பதன் அர்த்தம் என்ன என்பதை அட்வென்டிஸ்ட்டுகள் இன்னும் ஆழமாக புரிந்து கொள்ள வேண்டும், கடந்த காலத்தில் நாம் அதற்குப் போதிய முக்கியத்துவம் கொடுக்காமல் இருந்திருக்கலாம் அல்லது தவறான திசையை நோக்கி வாழ்வை செலுத்தியிருக்கலாம்" என்பதை வில்லியம் ஜி ஜான்சன் கூறுகிறார். – William Johnson, Adventgemeinde in der ZerreiBprobe, (Luneburg 1996), p.118

நாம் பரிசுத்த ஆவியால் நிறைந்திருக்கும்போது கிறிஸ்து நம்மில் வாசம்செய்கிறார். ஆவிக்குரிய கிறிஸ்தவம் நமது ஜெபங்களுக்கு இறைவனால் பதில் கிடைக்க வழிவகுக்கிறது. "தேவமக்களிடையே ஆவியின் ஒருமை காணப்படும் போது; யூத தேசத்தின் பாவமாக இருந்த அனைத்து பரிசேய கொள்கைகளும், சுயநீதிகளும் எல்லோருடைய இதயங்களிலிருந்தும் வெளியேற்றப்படும். "புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்." (கொலோ.1:27) என எலன் உவைட் கூறுகிறார். - E.G. White, Selected Messages, Book 1 (1958), p.386.1

## திருத்துவதற்கான ஆலோசனை

தேவ அன்புடன் செய்யப்படாத அல்லது அரிதாகவே செய்யப்பட்ட திருத்த ஆலோசனை பாதிப்பை ஏற்படுத்துமா? பெரும்பாலும் மாம்ச கிறிஸ்தவர்களால் ஆன அல்லது ஒரு மாம்ச சிந்தை உடைய போதகரை தலைவராகக் கொண்ட ஒரு சபை என்ன முடிவுகளை எடுக்கும்? நான் ஒரு போதகராக பணியாற்றியபோது, ஆவிக்குரிய சபை அங்கத்தினர்கள் சத்தியத்திலிருந்து பின்வாங்கிப்போன அங்கத்தினர்களை மீண்டும் சத்தியத்திற்கு கொண்டு வந்ததை நினைத்துப்பார்த்தேன். மனந்திரும்பியவர்கள் தங்கள் தவறுகளை ஒப்புக்கொள்வார்களானால் அந்த ஆலோசனை அதன் நோக்கத்தை நிறைவேற்றியது எனலாம். சில சமயங்களில் மாம்ச கிறிஸ்தவர்கள் தாங்கள் அறிவுரை கொடுப்பதாக நினைத்து தங்கள் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி வரம்பைத் தாண்டி விடுகின்றனர். (மத். 18:15–17 ; 1கொரி. 3:1–4 ; 2கொரி. 10:3 ; யூதா 19).

## கடைசி நாட்களுக்கான தேவ தீர்க்கதரிசன வார்த்தை

தேவன் தமது தீர்க்கதரிசிகள் மூலம் முக்கியமான நிகழ்வுகளை முன்னதாகவே வெளிப்படுத்தும் வழக்கம் கொண்டவர் (ஆமோஸ் 3:7). இவ்வாறாக அவர் எலன் உவைட் மூலம் கடைசி நாட்களுக்குத் தேவையான முக்கிய தீர்க்கதரிசன செய்திகளை வழங்கியுள்ளார். பல விஷயங்கள் கடந்த காலங்களைவிட முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும் என்பதால், தேவனோடு தொடர்புடைய கூடுதல் தகவல்களைப் பெறுவது முக்கியமானதும், அவசியமானதும் கூட. இன்று நாம் அதை "புதுப்பித்தல்" என்று அழைக்கிறோம். எலன் உவைட்டின் கூற்றுப்படி, இயேசு மீண்டும் வரும் வரை இந்த செய்திகள் பொருத்தமானவை. அவர்களது ஆலோசனையில் வாழ்க்கை முறை மாற்றம், கண்டனம், அறிவுரைகள் போன்றவை உள்ளடங்கியிருப்பதால், மாம்ச கிறிஸ்தவரைவிட ஆவிக்குரிய கிறிஸ்தவர் எளிதில் ஏற்றுக்கொள்ள முடியும். (ஆனால் எவரோ ஒருவர் இந்த அறிவுரைகளை தீவிரமாக எடுத்துக் கொள்வதால், அவர் ஆவிக்குரியவர் என்று அர்த்தம் இல்லை) உபாகமம் 18:19ல் "என் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவிகொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன்" என்ற இந்த வார்த்தைகளைப் பற்றி சிந்திப்பது ஞானமாயிருக்கும்.

ஒரு மெய் தீர்க்கதரிசியின் செய்தி அந்த நபருடன் தொடர்புடையதாயிருக்க வேண்டும் என்று அல்ல. மாறாக தேவனுடனேயே தொடர்புடையதாயிருக்கலாம் என்பது தெளிவாகிறது. ஒருவர் மெய்யான தீர்க்கதரிசியா என்பதை நாம் எப்படி அறிந்து கொள்வது? தேவனுடைய வார்த்தை நமக்கு ஐந்து சோதனைக் குறிப்புகளைத் தருகிறது. ஒரு உண்மையான தீர்க்கதரிசி இந்த ஐந்து காரியங்களிலும் இணங்கியிருக்க வேண்டும்

1. தீர்க்கதரிசியின் வாழ்க்கை முறை "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்." (மத். 7:20)

2. நிறைவேறிய தீர்க்கதரிசனம் (உபா. 18:21–22). (நிபந்தனை தீர்க்கதரிசனங்களைத் தவிர. உதா. யோனா).

3. தேவனுக்கு (அவருடைய வார்த்தைக்கும்) விசுவாசமாயிருக்க வேண்டும் (உபா.13:1–5).

4. இயேசுவை உண்மையான மனிதனாகவும் தேவனாகவும் அங்கீகரிக்க வேண்டும் (1யோவான்.4:1–3).

5. வேத உபதேசங்களுடன் உடன்பட்டிருக்க வேண்டும் (யோவான்

17:17).

எல்லா தேவகட்டளைகளும், தீர்க்கதரிசிகள் மூலம் கொடுக்கப்பட்ட அறிவுரைகள் உட்பட அனைத்தும் நமது நன்மைக்காகவே கொடுக்கப்பட்டுள்ளன. ஆகையால் அவை மிகவும் மதிப்புமிக்கவை. எனவே ஆவிக்குரிய ஜனங்கள் தேவவல்லமையினால் அதற்கு மகிழ்ச்சியுடன் கீழ்படிந்தால் அவை வெற்றிக்கு நடத்தும். "உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள், அப்பொழுது நிலைப்படுவீர்கள்; அவருடைய தீர்க்கதரிசிகளை நம்புங்கள், அப்பொழுது சித்திபெறுவீர்கள் என்றான்" (2நாளா. 20:20).

பரிசுத்த ஆவியானவருடனான வாழ்க்கைக்கும், மெய் தீர்க்கதரிசியின் வார்த்தைகளுக்கும் இடையிலான உறவைப் பற்றி ஓய்வுநாள் பள்ளியின் வழிகாட்டி, "தீர்க்கதரிசன வார்த்தையை நிராகரிப்பவர், பரிசுத்த ஆவியின் அறிவுறுத்தலுக்கு தங்களை மறைத்துக் கொள்கிறார் என்று கூறுகிறது... அதன் விளைவு அப்போதிருந்ததைவிட இன்று எவ்விதத்திலும் வேறுபடவில்லை. தேவனுடனான உறவை இழப்பதென்பது எதிர்மறையான தாக்கங்களுக்கு உட்படுவதாகும்." - Studienanleitung Standardausgabe, Phillip G.Samaan, 1011.1989, to question 8.

## திட்டமிடல் / உத்திகள்

திருச்சபைக்குள் உள்ள கடமைகள் மற்றும் வெளி ஊழியங்களைச் செய்வதற்கு பயனுள்ள தீர்வுகள் மற்றும் முறைகளைத் தேடுவது ஒரு முக்கியமான பணியாகும். இது நம்முடைய திட்டங்கள் மற்றும் உத்திகளைப் பற்றிய கேள்வியாகும். ஆவிக்குரிய ரீதியில் சபையை பலப்படுத்துவதற்கும் ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதற்கும் இது முக்கியமானது.

நான் ஞானஸ்நானம் பெற்று 65 வருடங்களாகிறது மற்றும் 43 வருடங்களாக ஊழியம் செய்து வருகிறேன். நாங்கள் ஏராளமான திட்டங்கள் மற்றும் முறைகளை உருவாக்கியுள்ளோம். மிகவும் கடினமாக உழைத்தோம். இச்சூழலில் 2005ம் ஆண்டு ஜெனரல் கான்பஃரன்ஸ் கூட்டத்தில் டுவைட் நெல்சனின் அவர்கள் பேசிய வார்த்தைகளைப்பற்றி நான் மீண்டும் சிந்திக்க விரும்புகிறேன்.

"நம்முடைய சபை போற்றத்தக்க விதத்தில் திட்டங்களையும் மற்றும் நிகழ்ச்சிகளையும் முழுமையாக உருவாக்கியுள்ளது, ஆனால் முடிவில் நாம் நம்முடைய பல ஊழியர்கள் மற்றும் தலைவர்களின் ஆவிக்குரிய வறண்ட நிலையை (பரிசுத்த ஆவியின் பற்றாக்குறை) ஒப்புக்கொள்ளாவிட்டால், நாம் நமது தற்சார்பு நிலைக்கு அப்பால் செல்ல மாட்டோம்." - Helmut Haubeill (Hrsg) Missions brief Nr.34, (Bad Albling, 2011) p.3

அதே குரலில் டென்னிஸ் ஸ்மித் பின்வருமாறு கூறுகிறார்: "திட்டங்கள்,

நிகழ்ச்சிகள் மற்றும் முறைகளை குறைசொல்வதற்கு ஒன்றுமில்லை. ஆனால் தேவனின் வேலையை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு நாம் அடிக்கடி இந்த விஷயங்களையே சார்ந்து இருப்போமோ என்று நான் அஞ்சுகிறேன். திட்டங்கள், நிகழ்ச்சிகள் மற்றும் முறைகளால் மட்டும் தேவ பணி நிறைவேறாது. சிறந்த பேச்சாளர்கள், அற்புதமான கிறிஸ்தவ கச்சேரி, செயற்கைக்கோள் ஒளிபரப்புகள் போன்றவை தேவனுடைய வேலையை முடிக்காது. தேவ ஆவியால் நிறைந்த ஆண்கள் மற்றும் பெண்களின் மூலம் – தேவ ஆவியானவர் பேசி, சேவை செய்வதால் மட்டுமே ஊழியம் நிறைவுபெறும்." – Dennis Smith, 40 Days - Prayer and Devotions to prepare for the Second Coming (Wien, 2012), p.88

## ஞானஸ்நானம் - ஆத்தும ஆதாயம்

கிறிஸ்துவுக்காக ஆத்தும ஆதாயம் செய்வதற்கு பரிசுத்த ஆவியானவர் ஒரு முக்கியமான முன்நிபந்தனை என்று வேதாகமம் நமக்குக் காட்டுகிறது (அப்போஸ்தலர் புத்தகத்தை பார்க்கவும்) ஜெர்மனியில் ஒருபுறம் வளர்ந்து வரும் நம் சபைகளும், மறுபுறம் தேங்கி நிற்கும் அல்லது தேய்ந்து போகும் சபைகளும் உள்ளன. உலகளவில் கடந்த 60 ஆண்டுகளில் நமது சபையில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை இருபது மடங்கு அதிகரித்துள்ளது. ஜெர்மனியில் இந்த நிலைமைக்கான பல காரணங்களை நாம் நிச்சயமாக பட்டியலிடலாம். ஆனால் எனக்கு ஒருகாரியம் தெளிவாக தெரிகிறது: முக்கிய காரணம் பரிசுத்த ஆவியின் பற்றாக்குறையாகும். இயல்பாகவே இந்தப் பிரச்சனை நம்மை ஆக்கிரமித்துள்ளது. நாம் பல திட்டங்களை உருவாக்கியுள்ளோம் அல்லது மாற்றியமைத்துள்ளோம். இப்பெரும் முயற்சியில் பரிசுத்த ஆவியின் பற்றாக்குறையால், தேவையற்ற அல்லது தோல்வியுற்ற வழிகளை நாம் பின்பற்றியதால், நிதி மற்றும் நேரத்தை வீணடித்ததைக் கண்டோம். எலன் உவைட்டின் எழுத்துகளிலிருந்து இரண்டு மேற்கோள்கள் இதன் உண்மை நிலையை விளக்குகிறது.

> **"தேவஜனங்கள் அனைவரும் ஒற்றுமையுடன் ஏகமனதாய் இருக்கும்போது யூத தேசத்தின் பாவமாக இருந்த பரிசேய கொள்கைகளும், சுயநீதியும் அனைத்து இதயங்களிலிருந்தும் வெளியேற்றப்படும்."**

"ஒருபோதும் மனமாற்றமடைந்திராத சபை அங்கத்தினர்கள் மற்றும் ஒருமுறை மனந்திரும்பி பின்வாங்கினவர்கள் சபையில் இருப்பதால் அனேக ஆத்துக்கமாக்களை சத்தியத்திற்குள் கொண்டுவர கர்த்தர் கிரியை செய்யவில்லை, ஏனென்றால் இந்த அர்ப்பணித்திராத அங்கத்தினர்கள் (மாம்ச கிறிஸ்தவர்கள்) புதிதாக மனம்திரும்புபவர்கள் மேல் என்ன

செல்வாக்கை செலுத்துவார்கள்? – E.G. White, Testimonies for the Church, Vol.6 (1901), p.370.3

"நாம் தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தி, கனிவாகவும், கண்ணியமாகவும், மென்மையான – இதயமும், இரக்கமுள்ளவர்களாகவும் இருந்தால், இப்போது ஒரே ஒருவர் இருக்கும் இடத்தில் சத்தியத்திற்காக நூறு பேர் மனதிரும்புவார்கள்." - E.G. White, Testimonies for the Church, Vol.9 (1909), p.189.4

மறுபுறம், முழுமையாக ஆயத்தமில்லாதவர்களின் ஞானஸ்நானம் நம்மிடம் காணப்படுகிறது. எலன் உவைட் கூறுவதாவது:

"இவ்வுலகில் இக்காலத்தில் புதிய பிறப்பு ஒரு அரிய அனுபவமாயிருக்கிறது. சபைகளில் பல குழப்பங்கள் இருப்பதற்கு இதுவே முக்கிய காரணம். கிறிஸ்துவின் பெயரைக் தரித்துக்கொண்ட பலர் பரிசுத்தமற்றவர்களாய், அசுத்தமாய் காணப்படுகின்றனர். ஞானஸ்நானம் பெற்றவர்கள் உயிருடன் தண்ணீருக்குள் புதைக்கப்பட்டனர். அவர்களின் சுயம் சாகவில்லை. எனவே அவர்கள் கிறிஸ்துவில் புதிய வாழ்க்கைத் தரத்திற்கு உயரவில்லை." - E.G. White, MS 148 (1897)

இது 1897ல் எழுதப்பட்டது. இன்றைய நிலை என்ன? பிரச்சனை என்னவென்றால்: மீண்டும் பிறக்காத எவரும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படவில்லை. "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறாவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" என்று இயேசு கூறினார் (யோவான் 3:5). ஒவ்வொரு பகுதியிலும் பரிசுத்த ஆவியின் பற்றாக்குறையை நாம் சந்திக்கிறோம் என்பது உண்மையல்லவா?

## பரிசுத்த ஆவியும் - பிரசங்கமும்

பரிசுத்த ஆவியின் அர்த்தத்தையும் பிரசங்கத்தையும் பற்றி தேவன் நம்மிடம் பின்வருமாறு கூறுகிறார்: "பரிசுத்த ஆவியின் தொடர்ச்சியான பிரசன்னமும் உதவியும் இல்லாத வெற்று பிரசங்கம் பயனற்றது. தெய்வீக சத்தியத்தின் பயனுள்ள – ஒரே ஆசிரியர் இவரே. ஆவியானவரால் சத்தியம் இதயத்துடன் இணைந்தால் மட்டுமே மனசாட்சியை கூர்மையாக்கி, வாழ்க்கையை மாற்றும். ஒருவர் தேவனுடைய வார்த்தையின் எழுத்தை முன்வைக்கலாம், மேலும் அவர் அதன் அனைத்து கட்டளைகளையும் வாக்குறுதிகளையும் நன்கு அறிந்திருக்கலாம்; ஆனால் பரிசுத்த ஆவியானவர் சத்தியத்தை இதயத்தில் நிலைநாட்டாவிட்டால், எந்த ஆத்துமாவும் கன்மலைமேல் விழுந்து உடைக்கப்படாது. தேவஆவியின் ஒத்துழைப்பு இல்லாமல் எந்த கல்வியும் எந்த நன்மையும் எவ்வளவு பெரியதாக

இருந்தாலும், ஒருவரை ஒளியின் வாய்க்காளாக மாற்ற முடியாது. – E.G. White, The Desire of Ages, (1898), p.671.4

"உயிருள்ள தேவனுடன் தொடர்பு கொள்வதற்காக நாம் தாகத்தால் மடிந்து கொண்டிருக்கிறோம் என்பதே உண்மை"யென ராண்டி மேக்ஸ்வெல் கூறுகிறார். - Randy Maxwell, if my people pray - pacific press,1995), p.11

பரிசுத்த ஆவியின் பற்றாக்குறையும் பயத்திற்கு காரணமா? Emilio Knechtle சொல்வது சரியாக இருக்க முடியுமா: "கெட்டுப்போன இந்த உலகத்தை தலைகீழாக மாற்றுவதில் நாம் ஏன் வெற்றிபெறவில்லை? நமது நம்பிக்கையில் ஏதோ தவறு நடந்துள்ளது. நாம் மோதல்களுக்கு பயப்படுகிறோம், ஓடினால் பயப்படுகிறோம், சிரமங்களுக்கு பயப்படுகிறோம், நம் வேலையை இழக்க பயப்படுகிறோம், நம் நற்பெயரை இழக்க பயப்படுகிறோம், நம் ஜீவனை இழக்க பயப்படுகிறோம். அதனால் மௌனம் காத்து ஒளிந்து கொள்கிறோம். நற்செய்தியை அன்போடும் அதே வேளையில் வல்லமையோடும் உலகுக்கு அறிவிக்க நாம் பயப்படுகிறோம்." - CD Die letzte Vorbereitung. Teil 6

இந்த பிரச்சனைக்கு தீர்வு அப்போஸ்தலர் **4:31**ல் காணப்படுகிறது: "அவர்கள் ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது, அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள்."

## பரிசுத்த ஆவியும் நமது புத்தகங்களும்

நமது புத்தகங்களைப்பற்றி பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: "காகிதத்தில் எழுதுபவரிடம் தேவ இரட்சிப்பின் அனுபவம் இருந்தால், அதே ஆவி வாசகரால் உணரப்படும். எழுத்தாளர் தேவமகிமைக்காக முழுவதுமாக தன்னை அர்ப்பணித்து வாழாதபோது எழுதப்பட்ட பகுதி தேவனுக்கு முழுமையாக அர்ப்பணிக்கப்படவில்லை என்பது தேவதூதர்களிடையே சோகத்தை ஏற்படுத்துகிறது. தேவனும் அவருடைய ஆவியும் அதில் இல்லாததால் அவை வாசகரைக் கவரவில்லை. வார்த்தைகள் நன்றாக உள்ளன. ஆயினும் அது தேவனின் செல்வாக்கைக் கொண்டிருக்கவில்லை." - E.G.White, PH 016, p. 29.1

நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்: எக்காரணத்தைக் கொண்டும் இயல்பாக நாம் எதிலும் தவறு செய்யவில்லை. நாம் நல்ல, மிகவும் நல்ல விஷயங்களையே உருவாக்கினோம். முடிந்தவரை தேவன் மனித முயற்சிகளை நிச்சயமாகவே ஆசீர்வதித்தார். ஆனால் முக்கியமான கேள்வி என்னவென்றால்: இந்தக் கடமைகளை நாம் ஆவிக்குரிய ரீதியிலா அல்லது மாம்ச கிறிஸ்தவராகவா அணுகுகிறோம்? ஒன்று நிச்சயம்; மாம்ச அடிப்படையில் தீர்வுகளைக் காண நாம் போராடும்போது அதிகமான நேரத்தை விரையம் செய்வோம். நாம் அனேக முயற்சிகளை செய்தாலும் பலனிராது.

## தனிப்பட்ட எண்ணங்கள் மற்றும் கலந்துரையாடலுக்கான வழிகாட்டி

1. மாம்ச கிறிஸ்தவத்தின் முடிவுகள் என்ன?

2. அரைகுறையான மனந்திரும்புதல் ஏன் இவ்வளவு பெரிய பிரச்சனையாகிறது?

3. ஒரு மெய்யான தீர்க்கதரிசியின் செய்தியை நாம் தீவிரமாய் எடுத்துக் கொள்ளாதபோது நமக்கு ஏற்படும் இழப்பு எப்படிப்பட்டது?

4. பரிசுத்த ஆவியானவர் ஏன் நமது பிரசங்கத்திலும் நமது புத்தகங்களிலும் நமது ஒளிபரப்புகளிலும் மிக முக்கியமானவராயிருக்கிறார்?

### நமது ஜெப நேரம்

- ➢ உங்கள் ஜெப–பங்காளியுடன் தொடர்பு கொண்டு இந்த தலைப்பைப் பற்றி விவாதியுங்கள்.
- ➢ உங்கள் ஜெப–பங்காளியுடன் சேர்ந்து ஜெபியுங்கள்.

1. கர்த்தர் இன்று உங்களை பரிசுத்த ஆவியால் நிரப்புவார்.
2. மெய் தீர்க்கதரிசியின் மூலம் தேவன் தனிப்பட்ட முறையில் நம்மிடம் பேசுகிறார் என்ற உண்மையை நாம் முழுமையாக அறிந்திருக்கிறோம்
3. பரிசுத்த ஆவி இல்லாத பிரசங்கம் மனித முடிவுகளை மட்டுமே கொண்டுவரும்.

நாள் 8

## பரிசுத்த ஆவிக்காக ஜெபிக்காதபோது நாம் எதை இழந்து போகிறோம்?

### பரிசுத்த ஆவி: முன்மாரியும் இல்லை, பின்மாரியும் இல்லை

"முன்மாரி, பரிசுத்த ஆவியால் நிறைந்திருப்பது. இது நமக்குத் தேவையான ஆவிக்குரிய முதிர்ச்சியைக் கொண்டுவருகிறது, பின்மாரியிலிருந்து நாம் பயனடைய இது இன்றியமையாதது." – Dennis Smith, 40 Days - prayer and Devotions to Review Your Experience with God, Book 2, (Vienna, 2013), p.175

"பின்மாரி, பயிர்களை பூமியின் அறுவடைக்கு முதிரச்செய்து மனுஷ குமாரனின் வருகைக்காக சபையை ஆயத்தப்படுத்தி தேவையான ஆவிக்குரிய கிருபையைக் கொண்டுவருகிறது. ஆனால் முன்மாரி பெய்தாலொழிய ஜீவன் இருக்காது; பச்சையான முளை கிளர்ந்தெழும்பாது. முன்மாரி தங்கள் வேலையைச் செய்யாதவரை, பின்மாரி எந்த விதையையும் முழுமையாக்க முடியாது." - E.G. White, The Faith I live by, 1958, p.333.3

### பரிசுத்த ஆவியானவரும் வேதாகம பரிசுத்தமாகுதலும்

"இந்த வேலை (வேதாகம பரிசுத்தமாக்குதல்) கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்தின் மூலம், தேவனின் உள்வசிக்கும் ஆவியின் வல்லமையால் மட்டுமே நிறைவேற்றப்பட முடியும்." - E.G. White, The Great Controversy, (1911), p.469.3

### பரிசுத்த ஆவியின்றி பெரிய ஊழியமா?

பரிசுத்த ஆவியின்றி பெரிய நிறுவனங்களும், வெற்றிகரமான சுவிசேஷ ஊழியத்திட்டங்களும் மற்றும் வல்லமை நிறைந்த மிஷினெரி ஊழிய உத்திகள் உருவாக்கப்பட்டிருக்க முடியுமா? தென்னாப்பிரிக்காவிற்கான சிறந்த மிஷினெரியான ஆண்ட்ரூ முர்ரே இந்தக் காட்சி மிகவும் சாத்தியமானது என்றும் உண்மையில் பெரும்பாலான கிறிஸ்தவ மண்டலத்தில் இதுதான் உண்மை என்றும் எழுதினார்:

"நான் பிரசங்கிக்கவோ, எழுதவோ, சிந்திக்கவோ அல்லது தியானிக்கவோ மற்றும் தேவனுடைய புத்தகத்திலும் தேவனுடைய ராஜ்யத்திலும் உள்ள விஷயங்களில் ஈடுபட்டு மகிழ்ச்சி அடையலாம்; என்றாலும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை குறிப்பிடத்தக்க அளவில் இல்லாமல் இருக்கலாம். கிறிஸ்துவின் சபை முழுவதிலும் தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்படுகிறது என்றாலும் ஏன் மிகக்குறைந்த மனமாற்றமே ஏற்படுகிறது? ஏன் அதிகமான வேலை நடைபெற்ற போதிலும்

நித்தியத்திற்கான வழியிலே மிகக்குறைந்த வெற்றியே கிடைக்கிறது, பரிசுத்தத்திலும் அர்ப்பணிப்பிலும் விசுவாசிகளை கட்டியெழுப்புவதில் ஏன் மிகக்குறைந்த வல்லமையே செயல்படுகிறது என்ற கேள்விகளுக்கு வரும் பதில்: பரிசுத்த ஆவியின் குறைபாடே. மேலும் இது ஏன்? மாம்சமும் (கலா.3:30ஐப்பார்க்கவும்), மனித சக்தியும், பரிசுத்த ஆவிக்கு கொடுக்க வேண்டிய இடத்தைப் பிடித்திருப்பதைத் தவிர வேறு எந்த காரணமும் இருக்க முடியாது." - Raddy Maxwell, If My people pray, (Pacific press 1995), p.145

## பரிசுத்த ஆவியும் ஆரோக்கியமும்

"அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை." ரோமர் 12:1

"நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்." 1கொரி.3:16–17

"உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப் படுத்துங்கள்." 1கொரி. 6:19,20 (யாத் 15:26).

பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட ஜனங்களே தேவனுடைய ஆலயம். இது உங்கள் வாழக்கையில் என்ன தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை நீங்கள் எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா? ஆலயம் என்பது தேவனின் இருப்பிடம் "அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக." யாத்.25:8

இந்த அறிக்கையை நாம் தீவிரமாக எடுத்துக் கொண்டால், நமது உடல்நலம் மற்றும் நமது வாழ்க்கை முறையை கவனித்துக்கொள்வது நமது சீஷத்துவத்தின் ஒரு பகுதியாக மாறும். நம் உடல் தேவனுக்குச் சொந்தமானது. தேவனின் சொத்தை கவனமாக நடத்த விரும்புகிறீர்களா? உண்மையில் தேவனின் கட்டளைப்படி இதற்கு குறிப்பிட்ட அளவு ஒழுக்கம்

தேவை. பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட ஒருவர் இந்த ஒழுக்கத்தை மகிழ்ச்சியுடன் செயல்படுத்துவதோடு அதை வழக்கமாகவும் கொள்வார். ஆவி ஆத்மா சரீரத்திலுண்டாகும் சிறந்த ஆரோக்கியமே அதற்கான வெகுமதியாகும். பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படாத ஒருவர் தீமைகளோடு போராட்டத்தையே அனுபவிப்பார். தேவனுடைய மகிமைக்காகவும் அவருடைய சேவைக்காவும் நம்முடைய சொந்த மகிழ்ச்சிக்காகவும் நம் உடலிலும் ஆவியிலும் சிறந்த ஆரோக்கியத்தை பேணவேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவதற்கு பதிலி அல்லது மாற்றீடு என்ற ஒன்று இல்லவே இல்லை. இயேசு பரிசுத்த ஆவியின் மூலம் நம்மில் வாழும்போது அவர் "உங்களை குணமாக்கும் கர்த்தராகவும் இருக்கிறார்" (யாத்.15:26). சுகமடைதல் என்பது சம்பந்தப்பட்ட நபருக்கும் தேவனின் மகிமைக்கும் எப்போதும் சிறந்தது. தெய்வீக மருத்துவர் அனைவரையும் குணப்படுத்துவாரா? என்ற கேள்வியை இது எழுப்புகிறது.

தாய்லாந்தில் உள்ள அகதிகள் முகாமில் இருந்த மிஷன் மருத்துவமனைக்கு ஒரு வயதான கம்போடியப் பெண் அடைக்கலமாக வந்தாள். அவள் ஒரு புத்த கன்னியாஸ்திரியின் ஆடைகளை அணிந்திருந்தாள். டாக்டர் இயேசுவிடம் சிகிச்சை அளிக்குமாறு கேட்டுக் கொண்டாள். ஆகவே இயேசுவைப் பற்றி அவளிடம் சொன்னார்கள். அவள் அவர் மீது நம்பிக்கை வைத்து உடலிலும் உள்ளத்திலும் குணமடைந்தாள். அவள் கம்போடியாவுக்குத் திரும்பியபோது கிறிஸ்துவுக்காக 37 பேரை அவளால் வென்றெடுக்க முடிந்தது" - Author unknown, Our daily Bread - worship book (ROC Ministries), 26, Nov,1993.

உண்மையுள்ள அரசனாகிய எசேக்கியா நோயுற்ற போது கர்த்தர் அவனுக்கு ஒரு செய்தியை அனுப்பி நிச்சயமாக நான் உன்னை குணமாக்குவேன் (2இராஜாக்கள் 20:1–11) என்றார். ஆயினும் கர்த்தர் ஏன் தம் வார்த்தையால் அவனைக் குணப்படுத்தாமல் அத்தி பழ அடைகளை இடும்படி செய்தார்? இயற்கை வைத்தியம் மூலமாக இறைவன் நம் பங்கேற்பை எதிர்பார்க்கிறாரா? பின்னும் தேவன் ஏன் பவுலை குணப்படுத்தவில்லை என்பதற்கு பவுல் கூறிய காரணம்: "நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்றான் (2கொரி. 12:7–10). எனினும் எலன் உவைட் நமக்கு சொல்வதாவது: "நோய்வாய்ப்பட்ட ஒரு ஆணோ பெண்ணோ பெறக்கூடிய மிகச் சிறந்த மருந்து தேவ ஆவியே ஆகும். பரலோகமே ஆரோக்கியம் நிறைந்த இடம்; தொய்ந்துபோன ஆத்துமாவில் பரலோக செல்வாக்கு எவ்வளவு ஆழமாக உணரப்படுகிறதோ

அந்த அளவிற்கு உறுதியான சுகம் அந்த ஆத்துமாவிற்கு கிடைக்கும்" - E.G. White, Medical Ministries (1932) p.12.3

ஆனால் ஒரு குறிப்பிட்ட வணிகர் என்ன எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கதும், முக்கியமானதும் கூட. சுகாதார கருத்தரங்குகள் எதுவும் தனக்கு எந்த நன்மையும் செய்யவில்லை என்பதை அவர் பகிர்ந்து கொண்டார். ஆனால் பரிசுத்த ஆவிக்காக தினமும் ஜெபிக்க ஆரம்பித்ததில் இருந்து அவர் முற்றிலும் ஆரோக்கிமான வாழ்க்கை முறைக்கு மாறி சைவ உணவை ஏற்றுக் கொண்டார். **– 7.3.2013** அன்று வந்த மின்னஞ்சல்.

பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுவது ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஏற்றுக்கொள்வதற்கு நம்மை உற்சாகப்படுத்துவதோடு மகிழ்ச்சியுடன் வாழ பெலத்தையும் கொடுக்கிறது.

ஒரு சகோதரி இந்த அனுபவத்தை வாசித்த பின் கீழ்கண்டவாறு எழுதினார்: "என் வாழ்க்கையை முழுமையாக அர்ப்பணித்ததன் மூலம் தேவன் என் வாழ்க்கையை கணநேரத்தில் முற்றிலும் மாற்றினார். ஒப்புக்கொடுத்து பிரார்த்தனை செய்தபின் மறுநாள் காலையில் நான் சமையல் அறைக்குச் சென்று காஃபி மிஷன் முன்பாக நின்றேன். பின்னர் தலையை அசைத்து, இனி மேல் காஃபி குடிக்கமாட்டேன் என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன். கடந்த காலத்தில் இதை என்னால் நினைத்துக்கூட பார்க்க முடியாததாக இருந்திருக்கும். ஏனென்றால் நான் காபி குடிப்பதை நிறுத்த முயற்சித்தபோது ஐந்து நாட்களுக்கு தொடர்ந்து எனக்கு பயங்கரமான தலைவலி இருந்தது. வேறுவழியின்றி நான் திரும்ப குடிக்க ஆரம்பித்தேன். ஆனால் இப்பொழுது காஃபி குடிக்காவிட்டால் அதனால் ஏற்படும் விளைவுகளைப்பற்றி நான் கொஞ்சமும் சிந்திக்கவில்லை. மேலும் அதைப்பற்றிய எண்ணம்கூட எனக்குள் வரவில்லை. - Email from November 18, 2014 from Sister M.

அவளுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட பல மாற்றங்களில் இது ஒன்றுதான். (போதை பழக்கத்தில் இருந்து விடுபட விரும்பும் எவருக்கும், புகையிலை மற்றும் மதுவின் மீதான வெற்றி குறித்த 5வது "ஆண்டிரியாஸ்ப்ரீஃ"ல் பரிந்துரைக்கிறேன்). வாக்குத்தத்த ஜெபத்தின் மூலம் விடுதலை பெறுவதற்கான வழியை இந்த சாட்சி விளக்குகிறது. (ஜெர்மன் மொழியில் மட்டுமே கிடைக்கும்).

பரிசுத்த ஆவியுடன் வாழ்வது ஆரோக்கிய சீர்திருத்தத்தை பெரிதும் ஊக்குவிக்கும். இது சுகாதாரத் தகவலோடு சேர்ந்து இதில் மாற்றும் வல்லமையும் இணைக்கப்பட்டுள்ளது. நியூ ஸ்டார்ட் குளோபலின் இயக்குனர் (NEW START Global Director) டான் மெக்கிண்டோஷ் விமர் கூறுவதாவது:

"இந்நாட்களின் மெய்யான தேவை வெறும் சுகாதாரக் கல்வி அல்ல; நம்மிடம் சிறந்த தகவல்கள் இருக்கின்றன. தேவை என்னவென்றால், சுகாதாரத் தகவல்களும் அதை நடைமுறைக்குக் கொண்டுவரும் வல்லமையுடன் கூடிய மாற்றும் வல்லமையாகும்." - Dave Fielder, D'Sosa (Remnant publications), Forward.

டாக்டர் டிம் ஹோரவ் கூறுகிறார்: "சுகாதாரக் கல்வி மட்டுமே மருத்துவ மிஷினெரி பணி அல்ல. தேவகட்டளைகள் மட்டுமே எப்படி இரட்சிப்பை வழங்க முடியாதோ, அதுபோல சுகாதாரக் கல்வியும் சுகத்தை வழங்காது. ஆரோக்கியம் அல்லது இரட்சிப்பை உணர தேவனின் மாற்றும் சக்தியை அனுபவிக்க வேண்டும்." - Dave Fielder, D'Susa (Remnant publications), Forward.

இறுதியாக நான் ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன்: விசுவாச குணப்படுத்தல் பற்றி என்ன? பரிசுத்த ஆவியால் நிரப்பப்படாமல் எதையும் எதிர்பார்க்க முடியுமா? (மாற்கு 16:17–18; யாக்கோபு 5:14–16)

## இயேசுவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாகுதல்

பரிசுத்த ஆவியின் மூலம் இயேசுவோடு நெருங்கிய ஐக்கியம் கொள்வதைத் தவிர இரண்டாம் வருகைக்கு நாம் ஆயத்தமாவதற்கு வேறு மாற்று வழி கிடையாது. கிறிஸ்து பரிசுத்த ஆவியின் மூலம் என்னில் வாழும்போது, அவருடைய கிருபையினால் நான் வருகைக்கு ஆயத்தமாய் இருக்கிறேன். இதை மூன்று பகுதிகள் தெளிவாக காட்டுகின்றன. (இதைக்குறித்து டென்னிஸ் ஸ்மித் 'Spirit Baptism and Earth's Final Events' என்ற தனது புத்தகத்தில் விளக்கிக் காட்டியுள்ளார்).

## கிறிஸ்துவுடனான தனிப்பட்ட உறவு

"ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்." (யோவான் 17:3) என்று இயேசு கூறினார். 'அறிவதே' என்ற வார்த்தை ஆங்கிலத்தில் இருப்பதை விட, வேதாகமத்தில் ஆழமான அர்த்தம் உடையது. இது ஒரு முழுமையான பரஸ்பர மற்றும் அன்பான அர்ப்பணிப்பைக் குறிக்கிறது. இது பரிசுத்த ஆவியுடன் கூடிய வாழ்க்கையில் மட்டுமே இருக்கிறது. இந்த எண்ணம் பின்வரும் மேற்கோளில் வெளிப்படுத்தப்படுகிறது:

"நாம் தேவனுடன் ஒரு உயிருள்ள தொடர்பைக் கொண்டிருக்க வேண்டும். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தால் நாம் உயர்ந்த தரத்தை அடைவதற்கு உன்னதத்திலிருந்து வரும் வல்லமையை அணிந்து கொள்ள வேண்டும்; வேறு எந்த வழியிலும் நமக்கு சகாயம் கிடையாது." - E.G. White, Review and Herald, April 5, 1892.

பத்துக் கன்னிகைகளின் உவமையில் இயேசு புத்தியில்லாதவர்களிடம் "நான் உங்களை அறியேன்" என்றார். ஏன் என்ன காரணத்திற்காக அப்படிச் சொன்னார்? எண்ணெய் பற்றாக்குறை பரிசுத்த ஆவியின் பற்றாக்குறையை குறிக்கிறது (மத் 25:1–13). இயேசுவை சிலுவையில் அறைந்த மனிதர்கள், பழைய ஏற்பாட்டைப் பற்றி மிகுந்த அறிவைப் பெற்றிருந்தனர். ஆனால் அதைத் தவறாக புரிந்துகொண்டதின் காரணமாக இயேசுவுடனான தனிப்பட்ட உறவை அவர்கள் தேடவில்லை. அதே போல கடைசி நாட்களில் வாழும் தலைமுறையான நாம் உலக சூழ்நிலைகளுக்கிடையில் தேவனுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும் என்ற தேவையை அறிவோமா?

### விசுவாசத்தினால் வரும் நீதி

மனுக்குலத்திற்கு தேவன் கொடுக்கும் கடைசி செய்தியான மூன்று தூதர்களின் செய்தியில் "நித்திய சுவிசேஷம்" (வெளி 14:6,7) என்ற அறிவிப்பு அடங்கியுள்ளது. முழு உலகமும் கேட்கவிருக்கும் இந்த செய்திகளின் சாராம்சம் என்ன? இது இயேசு கிறிஸ்துவில் மட்டுமே உள்ள விசுவாசத்தின் மூலம் கிருபையினால் வரும் நீதியாகும் (எபே.2:8,9). இந்த கடைசிகால செய்தியை வல்லமையுடன் அறிவிப்பவர்கள் செய்தியின் வல்லமையை தாங்களாகவே அனுபவிக்க வேண்டும். பாவத்தை மன்னிப்பவரும் பாவத்திலிருந்து மீட்பவருமான இயேசுவின் மூலம் மட்டுமே விசுவாசத்தினால் வரும் நீதியை அவர்கள் அறிந்து அனுபவிக்க வேண்டும். இது பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட வாழ்க்கையில் மட்டுமே சாத்தியமாகும், இதன் மூலம் இயேசு கிறிஸ்து கீழ்ப்படிதலை நம்மில் செயல்படுத்த முடியும். தேவனின் அனைத்து கட்டளைகளுக்கும் கீழ்படிவதன் மூலம் இயேசு நம்மில் ஜீவிக்கிறார் என்பது காட்டப்படுகிறது. இந்த செய்தியால் உலகம் பிரகாசமடையும். (வெளி 18:1)

### சத்தியத்தின் மேலுள்ள அன்பு!

சத்தியத்தின் மீதான அன்பு, தேவவார்த்தையைப் படிப்பது மற்றும் அதை நம்வாழ்வில் நடைமுறைப்படுத்துவது போன்றவற்றில், பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட அல்லது நிரப்பப்படாத வாழ்க்கையில் என்ன விளைவுகளை கொண்டு வரும்? 2தெச. 2:10 "கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கீகரியாமற்போனடியால் அப்படி நடக்கும்." இதயத்தில் சத்தியத்தின்பால் அன்பு கொண்டிருக்கிறவர்கள் தவறாக வழிநடத்தப்பட முடியாது. இந்த அன்பை பெறுவது எப்படி? இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியின் மூலம் நம்மில்

வசிக்கும் போது மட்டுமே நாம் அதைப்பெற முடியும். ரோமர் 5:5 "மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது." பரிசுத்த ஆவி நம்மில் வாசம்செய்யும்போது மட்டுமே நம் இதயத்தில் அன்பு வருகிறது. "விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி" (எபே.3:17). பரிசுத்த ஆவியானவரே – 'சத்திய ஆவி' என்றும் அழைக்கப்படுகிறார் (யோவான் 16:13). ஆவிக்குரிய கிறிஸ்தவத்திற்கு அடையாளமாக – சத்தியத்தின் மீது அன்பைக் கொண்டிருப்பது அவசியம் என்பதை இது நமக்குத் தெளிவாக காட்டுகிறது. சத்தியத்தின் மீதும், தேவனுடைய வார்த்தையின் மீதும், தீர்க்கதரிசன எழுத்தின் மீதும், உள்ள அன்பில் இன்று நமக்கு பிரச்சனைகள் இருக்கிறதா? நமக்கு முன்னுள்ள காலத்தைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள்: "வேதத்தை விடாமுயற்சியுடன் படிப்பவர்கள் மற்றும் சத்தியத்தின் மேலுள்ள அன்பைப் பெற்றவர்கள் மட்டுமே உலகத்தின் மேல் வரும் மாபெரும் வஞ்சகத்திலிருந்து பாதுகாக்கப்படுவார்கள். தேவஜனங்கள் இப்போது தங்கள் புலன்களின் ஆதாரத்திற்கு அடிபணியாதபடி அவருடைய வார்த்தையின் மீது மிகவும் உறுதியாக இருக்கிறார்களா?" - E.G. White, The Great Controversy (1911) p. 625.3

நாம் எல்லா சத்தியத்தையும் கண்டுபிடித்துவிட்டோமா என்று தேவன் கேட்பதில்லை, மாறாக நாம் உண்மையை விரும்புகிறோமா என்றே கேட்கிறார்.

### மாம்ச கிரியைகளா? அல்லது ஆவியின் கனியா?

"பரிசுத்த ஆவியின் செல்வாக்கினாலேயே கிறிஸ்து ஆத்துமாவில் ஜீவிக்கிறார். பரிசுத்த ஆவியானவர் ஒரு இடத்தில் இருப்பது போல் மற்றொரு இடத்திலும் இருக்கிறார். அவரையல்லாமல் நாம் கிறிஸ்துவைப் பார்ப்பதோ, அவருடன் பேசுவதோ முடியாது. கிறிஸ்துவைப் பெறுகிற ஒவ்வொருவரிலும் அவர் செயல்படுகிறார். ஆவியானவர் தங்களில் வாசம்செய்வதை அறிந்தவர்கள் ஆவியின் கனிகளை வெளிப்படுத்துகிறார்கள்." - Editor Francis D. Nichol, SDA Bible Commentary Vol.6 (Hagerstown, 1980), p.112

கலா. 5:22 "ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்" எபே. 5:9 "ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும்."

கலாத்தியர் 5:16–21 பரிசுத்த ஆவியின் மூலம் பாவத்தின் வல்லமைகள்

நம்மில் உடைக்கப்படும் என்பதை காட்டுகிறது.

"ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது." "ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை" (ரோமர் 7:23 ; 8:1). "மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே. இப்படிப் பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்" (கலா. 5:19–21).

## ஆவியின் வரங்கள்

ஆவிக்குரிய வரங்கள் என்பதன் கீழ், பரிசுத்த ஆவியின் செயல்பாட்டின் மூலம் கொடுக்கப்பட்ட வரங்களைக் குறிப்பிடுகிறோம். அவை 1கொரி.12:28 ; எபே.4:11லும் ஏனைய இடங்களிலும் பட்டியலிடப்பட்டுள்ளன. "அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், போதகர்கள், ஆசிரியர்கள், அற்புதங்கள், குணமாக்கும் வரங்கள், ஊழியங்கள், ஆளுகைகள், பலவித பாஷைகள். இந்த வரங்கள் பரிசுத்தவான்களை ஊழியப்பணிக்கு ஆயத்தப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. சபையின் சாட்சியத்தை உறுதிப்படுத்தி அதற்குத் தலைமையையும் வழிநடத்துதலையும் தருகிறது. பரிசுத்த ஆவியானவர் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக ஞானம், புத்தி, அறிவையும் (யாத். 31:2–6) மற்ற திறமைகளையும் (கட்டிடக்கலை – 1நாளா. 28:12,19) கொடுக்கிறார்.

நாம் இயேசுவின் சீஷர்களாக மாற விரும்பும்போது, நம்மையும் நம்மிடம் உள்ள அனைத்தையும் அவரிடம் அர்ப்பணிப்போம். எனவே நமது திறமைகளும், தாலந்துகளும், உள்ளார்ந்தவைகளையும் கற்றறிந்தவைகளையும் அனைத்தையும் அவருடைய விருப்பத்திற்கு ஒப்படைப்போம். தேவையானால் அவர் நமக்கு கூடுதல் தாலந்துகளை வழங்க முடியும் அல்லது இயல்பான திறமைகளை அவர் சுத்தப்படுத்தி தூய்மையாக்க முடியும். பரிசுத்த ஆவியே பற்றாக்குறையாய் இருக்கும்போது நாம்

ஆவிக்குரிய வரங்களை பெற முடியுமா?

## தேவனின் விருப்பமா அல்லது மக்களின் விருப்பமா?

உலகளாவிய ஜனநாயக அமைப்பே இப்போது சபையிலும் இருக்கிறது. ஆனால் அது மக்கள் ஜனநாயகம் என்று ஒருபோதும் கருதப்படவில்லை. ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் தேவசத்தத்தைக் கேட்டு அதன்படி வாக்களிப்பதே நமது வாக்குகளின் உண்மையான குறிக்கோள். தேவனுடைய குரலுக்குச் செவிசாய்ப்பதன் மூலம் நம்முடைய வாக்கு தேவனின் விருப்பத்தை அறியச் செய்கிறது. எந்தவொரு நிர்வாகக் கூட்டத்திலும் பங்கேற்பதற்கு முன் நாம் நிச்சயமாக பிரார்த்திக்கிறோம். வாக்களிக்கும் முன் பெரும்பாலும் தனிப்பட்டமுறையில் ஜெபித்து வாக்களிக்க வாய்ப்பு வழங்கப்படுகிறது, இதனால் ஒவ்வொரு நபரும் எவ்வாறு வாக்களிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பது தெளிவாகிறது. "என் தேவன் என் மனதிலே ஒரு எண்ணத்தை உண்டாக்கினார்" என்று நெகேமியா கூறினார் (நெகே.7:5). மற்றும் எலன் உவைட் நெகேமியா அத்தியாயம் – 1 பற்றி கூறிவதாவது: "அவன் ஜெபித்தபோது, அவனுடைய மனதில் ஒரு பரிசுத்த நோக்கம் உருவாகிக்கொண்டிருந்தது." - E.G. White, Southern watchman (www.egwwritings.org), Mar 1,1904.

மாம்ச கிறிஸ்தவனுக்கு தேவனின் குரல் கேட்குமா? அவன் மனப்பூர்வமாகவும் முழுமையாகவும் இறைவனிடம் ஒப்புக் கொடுக்கவில்லை என்றால் நிச்சயமாக அவன் தேவனிடமிருந்து பதிலை பெறமாட்டான் (சங் 66:18 ; 25:12). மாம்ச கிறிஸ்தவன் தனக்குத் தெரிந்த அளவிற்கு எவ்வளவுதான் உண்மையாக வாக்களித்தாலும், உலகப்பிரகரமாக பார்த்தால் அவன் செய்வது சரிதான். ஆனால் உடனடியாக மனித ஒப்பந்தங்கள் செய்யப்படுகின்றன. அப்படிச் செய்வது பாவமாகும்.

தேவ ஊழியத்தில் தலைவர்களுக்கு பெரும் செல்வாக்கு இருக்கிறது. தேவனால் அழைப்புப்பெற்றவர்களோ அல்லது மனித வாக்கு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட சகோதர – சகோதரிகள் எவராயிருந்தாலும் வெற்றி பெரும்போது, அது நிச்சயமாக ஒரு பெரிய வித்தியாசத்தையோ அல்லது பெரிய விளைவுகளையோ ஏற்படுத்தும்.

ஜெபத்தைப் பற்றிய புத்தகத்தைப் படித்தபோது நாம் நடக்க வேண்டிய வழியைக் காட்டும்படி தேவனிடம் கேட்கலாம் என்பதை உணர்ந்தேன் (சங்.32:8). அமைதலாக தேவனின் குரலைக் கேட்டபோது என் வாழ்க்கை முழுமையாக மாறியது. "வணிக பிரதிநிதியிலிருந்து போதகர் வரை" என்ற கட்டுரையிலிருந்த இந்த அனுபவத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். (ஜெர்மன் மொழியில் மட்டுமே கிடைக்கும்). "சரியான முடிவை எடுப்பது எப்படி?"

மற்றும், கர்ட் ஹேசலின் ஒரு நல்ல பிரசங்கமும் அதில் இருக்கிறது. (ஜெர்மன் மொழியில் மட்டும் கிடைக்கிறது) மேலும் பல ஆண்டுகளுக்கு முன்பு படித்த ஹென்றி டிரம்மண்ட்டின் 'தேவனின் சித்தத்தை நான் அறிவது எப்படி?' என்ற ஒரு ஆழமான பிரசங்கமும் அதில் உள்ளது. (ஜெர்மன் மொழியில் மட்டுமே கிடைக்கும்).

அக்டோபர் 23, 2014 அன்று நடந்த ஒரு அனுபவம் இதோ: ஆஸ்திரியாவின் கரிந்தியாவில் உள்ள ஒரு 'Country life Institute Austria' mission center ஒரு முடிவை எதிர்கொண்டது. அதில் அங்கு நாம் கூடுதலாக கட்டிடங்களை கட்ட வேண்டுமா? வேண்டாமா? என்பதே அது. அதற்கு ஆதரவாகவும் எதிராகவும் நிறைய விஷயங்கள் இருந்தன. இந்த விஷயத்தில் தேவனின் சித்தம் என்ன? என்பதே முக்கியமான கேள்வி. அதன்பின் நாங்கள் சாதக பாதகங்களைப் பற்றி விவாதிக்கவில்லை, மாறாக பத்து நாட்கள் ஜெபித்தோம், அக்டோபர் 23 அன்று நடைபெற இருக்கும் ஜெபக்கூட்டத்தில், கூடுதலாக கட்டிடங்களைக் கட்ட வேண்டுமா? வேண்டாமா? என்ற எங்கள் விண்ணப்பத்திற்கு தேவன் தனது பதிலைத் தரவேண்டும் என்று ஜெபித்தோம்.

20க்கும் அதிகமானோர் பங்கேற்ற பிரார்த்தனைக் கூட்டம் நடந்தது. அனைவரும் கூடி ஜெபித்த பிறகு ஒவ்வொருவரும், கட்டலாமா வேண்டாமா என்று தங்களுக்குச் சொல்லும்படி அமைதியாக தேவனிடம் கேட்டார்கள். தேவனிடமிருந்து வந்த தனிப்பட்ட பதில்கள் குழுவுடன் பகிர்ந்து கொள்ளப்பட்டன. ஒரு துண்டு காகிதத்தில் அவர்கள் கட்ட வேண்டுமென்றால் "+" என்று எழுத வேண்டும். பதில் இல்லாத போது அவர்கள் "0" என்று எழுதவேண்டும் மற்றும் அவர்கள் விடைதெரியாமல் இருந்தால் "?" என்றும் எழுத வேண்டும். அதன் முடிவில் தேவனின் அற்புதமான வழிகாட்டுதலின் அடையாளம்: 14 "+" (இவற்றில் 4 "+?" குறியுடனும்), 6 – "0" குறியுடனும் மீதமுள்ள 4 வெற்று காகிதத்துண்டுகள் இருந்தன. அவைகளில் 2 பதில்களும் தெளிவாக இல்லை. ஆகவே அவை கணக்கிடப் படவில்லை. இவ்வாறு தேவ வழிநடத்துதல் நாம் கட்டியெழுப்ப வேண்டும் என்பதில் மிகத்தெளிவாக இருந்தது. கடைசி நாட்களில் நாம் நேரடியாக தேவனின் ஆலோசனையை மென் மேலும் தேடலாம் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

யோவேல் 2:28–29ஐக் குறித்து எலன் உவைட்டின் கருத்துக்கள்: "அவர் நம் இதயத்துடன் பேசுவதை நாம் தனித்தனியாக கேட்க வேண்டும். மற்ற எல்லாக் குரலும் அடக்கப்பட்டு, நாம் தேவனுக்கு முன்பாக அமைதலோடு காத்திருக்கும்போது, தேவனின் குரலை மேலும் தெளிவாகக் கேட்கமுடியும்.

"அமர்ந்திருந்து நானே தேவன் என்பதை அறிந்து கொள்ளுங்கள் என்று அவர் நமக்கு கட்டளையிடுகிறார் **(சங்.46:10).**" –E.W. White, The Desire of Ages (1898)p. 363.3

## பணம்

பணத்தைச் சம்பாதிப்பது மற்றும் கையாள்வது தொடர்பாக ஆவிக்குரிய மற்றும் மாம்ச கிறிஸ்தவர்களிடையே என்ன வேறுபாடுகள் காணப்படுகின்றன? நாம் பெற்றிருப்பவைகளுக்கு உரியாளர்களாக நம்மைப் பார்க்கிறோமா? அல்லது தேவனின் உக்கிராணக்காரர்களாக நம்மைப் பார்க்கிறோமா? "பண ஆசையும் பகட்டுவாழ்வும் இந்த உலகை திருடர்கள் மற்றும் கொள்ளையர்களின் குகையாக மாற்றியுள்ளது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு சற்று முன்பு பேராசையும் ஒடுக்குமுறையும் நிலவும் என்று வேதாகமம் சித்தரிக்கின்றது" - E.G. White, Prophet and kings (1917), p.651.3

## தேவனுக்கு பயந்தவர்களை தேவதூதர்கள் பாதுகாக்கிறார்கள்

தேவனுக்கு பயந்தவர்களை தேவதூதர்கள் பாதுகாக்கிறார்கள். "கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறான்." **(சங்.34:7).** கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொருவருக்கும் ஒரு பாதுகாவல் தூதன் நியமிக்கப்பட்டிருக்கிறான். இந்த பரலோக கண்காணிப்பாளர்கள் துன்மார்க்கரின் வல்லமை யிலிருந்து நீதிமான்களை பாதுகாக்கிறார்கள்." - E.G. White, The Great Controversy, (1911), p.512.2

தேவனுக்கு பயந்தவர்களைப் பற்றி பேசும்போது – தேவ பாதுகாப்பில் இருக்கும் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் மற்றும் நீதிமான்களைப் பற்றி குறிப்பிடுகிறோம். தங்களை ஒரு கிறிஸ்தவராகப் பார்க்கும் எல்லாருக்கும் இது பொருந்தும் என்று அர்த்தமா? தேவனிடம் தங்கள் வாழ்க்கையை முழுமையாக ஒப்படைக்காதவர்களுக்கும் இது பொருந்துமா? இது அவருடைய பிள்ளைகளுக்கு மட்டுமே பொருந்தும், ஏனென்றால் இயேசு மத்தேயு **18:10** "இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். தாவீது தன் வாழ்க்கை முழுவதையும் தேவனிடம் ஒப்படைத்தான். அவன் பயப்படுவதற்கு எந்த காரணமும் இல்லையென்று தெரியும். "கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்?" **(சங்.27:1)** என்றான்.

நல்ல தூதர்களின் ஊழியத்தைப் பற்றி மாபெரும் போராட்டம் என்ற புத்தகத்தில் அத்தியாயம் – 31ஐ படிக்க உங்களுக்கு பரிந்துரைக்கிறேன். தேவனுடைய ஒவ்வொரு பிள்ளைக்கும் இது ஒரு பெரும் மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

## இறுதிக் குறிப்புகள்

நாம் ஒருசில பகுதிகளை மட்டுமே தொட்டுள்ளோம். வாழ்க்கையின் பல பகுதிகள் மற்றும் விசுவாசம் போன்றவை சேர்க்கப்படலாம். பின்வரும் யாவும் அனைவருடைய வாழ்க்கையிலும் நிஜமாகிறது.

வேறுபாடுகளை நாம் இப்போது மறுஆய்வு செய்வோம். பரிசுத்த ஆவியுடன் நாம் வாழும்போது பெரிய நன்மைகள் இல்லை என்று சொல்வதற்கு ஒன்றும் இல்லை. மறுபுறம் பரிசுத்த ஆவி இல்லாத வாழ்க்கையில் நமக்கு பெரிய தீமைகள் ஒன்றும் இல்லை என்று சொல்வதற்கில்லை என்ற முடிவுக்கு வரமுடியும். ஆகவே நம் வாழ்க்கையை தினமும் தேவனுக்கு அர்ப்பணிக்கவும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும்படி கேட்கவும் இது ஒரு சிறந்த உந்துதலாக இருக்க வேண்டாமா?

சில ஆண்டுகளுக்கு முன், டோக்கியோ விமான நிலையத்திலிருந்து லண்டனை நோக்கி போயுங் 707 விமானம் புறப்பட்டது. அது மிகுந்த ஆரவாரத்தோடு புறப்பட்டது. வானம் தெளிவாக இருந்தது. விரைவில் பயணிகள் ஜப்பானில் உள்ள புகழ்பெற்ற மவுண்ட ப்ஃயுஜியைப் பார்க்க முடிந்தது. அந்த அரிய காட்சியை பயணிகள் ரசிக்கும் வகையில் மலைகளை சுற்றி வட்டமிட வேண்டும் என்ற எண்ணம் விமானிக்கு திடீரென ஏற்பட்டது.

அவர் விமானத்திற்காக நியமிக்கப்பட்ட வழியை விட்டுவிட்டு தன் கண்களுக்கு தென்படும் வழியை நோக்கி விமானத்தை திருப்பினார். பயணத்தின்போது விமானி தரைக்கட்டுப்பாட்டு கேண்டரின் பாதுகாப்பை விட்டுவிட்டு தன் பார்வைக்கு எட்டிய வழியை பார்த்து விமானத்தை ஓட்டினார். திடீரென விமானி தனக்கு கீழே மலை மிக நெருக்கமாய் இருப்பதைக் கண்டார். அவரது உயரமானி 4000 மீட்டர் உயரத்தைக் காட்டியது. ப்ஃயுஜி மலையைச் சுற்றி வீசிய கடும் காற்று மற்றும் காற்றின் வேகத்தை விமானி கவனிக்கவில்லை. போயிங் 707 விமானம் அந்த காற்றுக்குத் தாக்குபிடிக்க முடியவில்லை. விமானம் காற்றில் உடைந்து விபத்துக்குள்ளானதுடன் பயணிகள் அனைவரும் இறந்துபோயினர். – Kalenderzettel, Feb 17, 1979 by Reinhard Petrik.

மாம்ச கிறிஸ்தவர்கள் தங்கள் கண்களை நம்பி அதன் வழியிலேயே வாழ்கிறார்கள். எல்லா முடிவுகளையும் தாங்களே எடுக்கிறார்கள். அதில்

சிறந்த நோக்கங்கள் இருந்த போதிலும் தோல்வியடைகின்றனர். ஆவிக்குரிய கிறிஸ்தவர்களோ பரிசுத்த ஆவியின் மூலம் தேவனிடம் அன்பும் நம்பிக்கையும் கொண்ட உறவில் வாழ்கிறார்கள். அவர் அவர்களை பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்கிறார்.

**ஜெபம் :** பரலோக பிதாவே, பரிசுத்த ஆவியின் மூலம் இயேசு எங்களிலும் எங்களுடைய வேலைகளிலும் தங்கியிருப்பதன் மூலம் இத்தகைய நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தியதற்கு நன்றி. பரிசுத்த ஆவியின் கிரியைகளுக்கு எங்கள் கண்களை இன்னும் அதிகமாக திறக்கவும், இயேசு எங்களுக்குக் கொடுக்க விரும்பும் இந்த முழு வாழ்க்கையையும் அவர் மூலமாக எங்களுக்குத் தாருங்கள். அடுத்த அத்தியாயத்தில் இந்த சிக்கலைத் தீர்ப்பதற்கான திறவுகோலைக் கண்டறிந்து அதை நடை முறைப்படுத்த எங்களுக்கு உதவி செய்யுங்கள். நன்றி. ஆமென்.

என்ன வித்தியாசங்களை நாம் எதிர்பார்க்கலாம் / நாள் 8

## தனிப்பட்ட எண்ணங்கள் மற்றும் கலந்துரையாடலுக்கான வழிகாட்டி

1. பரிசுத்த ஆவியின்றி ஊழியத்தில் பெரிய பணிகளும் நடக்க முடியுமா? இது எந்த அளவிற்கு உற்பத்தித் திறன் கொண்டது?

   ______________________________

2. பரிசுத்த ஆவியானவர் என் வாழ்க்கை முறையில் என்ன தாக்கத்தை ஏற்படுத்துகிறார்? (அன்றாட நிகழ்வுகளில்: ஆரோக்கியம், உடை, உறவுமுறைகள்).____________________
3. என் வாழ்க்கையில் சத்தியத்தின் மீதான அன்பு என்பதற்கு என்ன அர்த்தம்?____________________
4. ஆவிக்குரிய வரங்கள் என்றால் என்ன?

   ______________________________

**நமது ஜெப நேரம்**

- ➢ உங்கள் ஜெப–பங்காளியுடன் தொடர்பு கொண்டு இந்த தலைப்பைப் பற்றி விவாதியுங்கள்.
- ➢ உங்கள் ஜெப–பங்காளியுடன் சேர்ந்து ஜெபியுங்கள்.

1. கர்த்தர் உங்களை பரிசுத்த ஆவியால் நிரப்புகிறார்.
2. முடிவுகால தலைமுறைக்கு பரிசுத்த ஆவியின் விசேஷ அளவீடு ஏன் தேவை என்பதை உங்களால் கண்டுகொள்ளமுடியும்
3. தேவனால் ஆசீர்வதிக்கப்படும் விதத்தில் பணத்தைக் கையாள்வது

நாள் 9

# நடைமுறை அனுபவத்திற்கான திறவுகோல்

## எனக்கான தேவனின் தீர்வை நான் செயல்படுத்தி அனுபவிப்பது எப்படி?

### ஜெபமும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதலும்

விசுவாசத்தின் மூலம் நாம் இந்தப் பயணத்தில் செல்வதும், பரிசுத்த ஆவிக்காக விசுவாசத்துடன் கேட்பதும் அவசியமாகும். அதாவது, பரிசுத்த ஆவிக்காக ஜெபித்த பிறகு, கர்த்தர் நம் ஜெபத்திற்கு பதிலளித்தார் என்பதையும், அவர் ஏற்கனவே நமக்கு பரிசுத்த ஆவியைக் கொடுத்தார் என்பதையும் நாம் நம்புவதோடு அதில் உறுதியாக இருக்க வேண்டும்.

கலா. 3:14 "ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று." (NIRV) என்ற வேறொரு மொழிபெயர்ப்பு: "ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் கிறிஸ்துவை விசுவாசிப்பதினால் பெறும்படிக்கு" என்று கூறுகிறது.

நம்முடைய பரலோகத் தகப்பனை நாம் எளிதாக நம்புவதற்குக் தேவன் நமக்கு ஒரு பெரிய உதவியைக் கொடுத்திருக்கிறார். அதை நாம் "வாக்குறுதிகளுடன் ஜெபித்தல்" என்று அழைக்கிறோம்.

### வாக்குறுதிகளைப் பற்றிக்கொண்டு ஜெபிப்பது

முதலில், இங்கே ஒரு பயனுள்ள உதாரணம்: பள்ளியில் என் குழந்தை பிரஞ்சு மொழியில் நன்றாக படிக்கவில்லை என்று வைத்துக்கொள்வோம். என் குழந்தை பிரஞ்சு மொழியை நன்கு படிக்க ஊக்குவிக்க விரும்புகிறேன். ஆகவே அவனுடைய ரிப்போர்ட் கார்டில் அவன் நல்ல மதிப்பெண் பெற்றால் அவனுக்கு நான் 20 டாலர் தருவதாக வாக்களிக்கிறேன். குழந்தை கடினமாகப் படிக்கத் தொடங்குகிறது. நானும் அவனுக்கு பிரஞ்சு மொழியைப் கற்றுக்கொள்ள உதவுகிறேன், அவன் உண்மையில் நல்ல மதிப்பெண் பெறுகிறான். இப்போது என்ன நடக்கிறது? குழந்தை பள்ளியிலிருந்து

வீட்டிற்கு வந்து முன் கதவு வழியாக வரும்போதே சத்தமாக அழைக்கிறான்: அப்பா 20 டாலர்! அப்பா 20 டாலர்! என்கிறான். ஏனெனில் 20 டாலரைப் பெற வேண்டும் என்பதில் அவன் உறுதியாக இருக்கிறான். ஏனெனில் அவனுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிக்கான வேலையை அவன் நிறைவேற்றிவிட்டான். சொல்லப்போனால் இன்று பெரும்பாலானோருக்கும் இதுதான் உண்மை.

ஆனால் அந்த நேரத்தில் என்னிடம் 20 டாலர் இல்லை என்று வைத்துக்கொள்வோம். தேவன் வாக்களித்த ஒன்று அவரிடம் இல்லையா என்று கேட்கிறீர்களா? அப்படியொன்றும் இல்லை!

ஒருவேளை நான் எனது வாக்குறுதியை திரும்பப் பெற்றுக்கொள்வற்காக, மகனே 'கல்வி' என்ற புத்தகத்தில் குழந்தைகளை பணம் கொடுத்து படிக்கத் தூண்டக் கூடாது என்று படித்தேன். அதனால் என்னால் உனக்கு 20 டாலர் கொடுக்க முடியாது என்று சாக்குபோக்கு கூறினால் சரியாயிருக்குமா? தேவன் வாக்குக்கொடுத்துவிட்டு பின்னர் இப்படி மனம் மாறுகிறவரா? இல்லை அப்படி இருக்க இயலாது.

நாம் தேவனிடமிருந்து ஒரு வாக்குறுதியைப் பெற்று அதன் தேவைகளை நிறைவேற்றினால் ஒரே ஒரு வாய்ப்பு மட்டுமே உள்ளது. நாம் அந்த வாக்குறுதியைப் பெற்றுக்கொள்கிறோம் என்பதே அந்த வாய்ப்பு!

தேவனின் வாக்குறுதிகள் மூலம் அவர் காண்பிக்கும் வழியில் செல்ல அவர் நம்மை ஊக்குவிக்க விரும்புகிறார் – உதாரணமாக பரிசுத்த ஆவியை பெறுதல், இது நம் வாழ்வில் தேவ வல்லமையை அளிக்கிறது. நாம் அவரை நம்புவதை அவர் எளிதாக்க விரும்புகிறார். விசுவாசமே நம்பிக்கையின் இதயமாக இருக்கிறது.

வாக்குத்தத்தங்களுடன் ஜெபிப்பதற்காக 1யோவான் 5:14–15ல் உள்ள சில முக்கிய வேதவசனங்களை இப்போது வாசிப்போம். "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறா–ரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்."

தேவன் தம்முடைய சித்தத்தின்படியான ஜெபங்களுக்கு பதிலளிப்பதாக ஒரு பொதுவான வாக்குறுதியை அளிக்கிறார். தேவனுடைய விருப்பம் அவருடைய கட்டளைகளிலும் வாக்குத்தத்தங்களிலும் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. அவைகளை நாம் நம் ஜெபங்களில் சார்ந்திருக்கலாம். வசனம் 15ல் "நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்" என்று கூறுகிறது.

மற்றொரு மொழிபெயர்ப்பு (NIRV): "தேவன் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்று அறிந்திருக்கிறோம்" என்று கூறுகிறது. அதாவது: தேவனுடைய சித்தத்தின்படி நம்முடைய ஜெபங்களை நாம் அவரிடம் கொண்டுவரும்போதே பதிலளிக்கப்படுகிறது. உணர்வுபூர்வமாக பொதுவான எதையும் நாம் கவனிப்பதில்லை. நம்முடைய ஜெபங்கள் உணர்வுகளால் அல்ல, விசுவாசத்தால் பதிலளிக்கப்படுகின்றன. உணர்வுகள் பின்னர் தாம் வருகின்றன.

நிக்கோடின் மற்றும் மதுவுக்கு அடிமையானவர்களுடன் ஜெபிப்பதில் நான் கற்றுக்கொண்டதாவது: தங்கள் விடுதலைக்காக ஜெபிக்கும் தருணத்தில் அவர்கள் எதையும் பெற்றுக்கொண்டதாக உணர்வதில்லை. அவர்கள் விசுவாசத்தின் மூலம் பதிலை பெறுகிறார்கள். ஆனால் சில மணி நேரங்களுக்குப் பிறகு புகையிலை மற்றும் மதுபானத்தின் மீது தங்களுக்கு எந்த விருப்பமும் ஏற்படவில்லை என்பதை அவர்கள் கவனிக்கிறார்கள். இவ்வேளையில் அவர்கள் தங்கள் ஜெபத்திற்கு நடைமுறையான பதிலைப் பெற்றுக்கொண்டார்கள்.

மாற்கு 11:24. "ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும் போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்."

"ஆசீர்வாதத்திற்கான வெளிப்புற ஆதாரங்களை நாம் தேட வேண்டியதில்லை. அவர் அருளும் ஈவு அவரது வாக்குறுதியில் இருக்கிறது. மேலும் தேவன் வாக்கு கொடுத்ததை அவரால் செய்ய முடியும் என்பதையும் விசுவாசித்து நம் வேலையைச் செய்யலாம், நமக்கு மிகவும் தேவைப்படும்போது ஏற்கனவே நம்மிடம் இருக்கும் அந்த வரம் பயன்பாட்டுக்கு வரும்." – E.G.White, Education (1903),p. 258.2

எனவே நாம் வெளிப்புற ஆதாரங்களைத் தேடக்கூடாது. அப்படித் தேடுவது நிச்சயமாக உணர்வுக்கடுத்த ஒரு அனுபவத்தைத் தேடுவதையே குறிக்கிறது. "பிசாசின் ஆவிகள் கிறிஸ்து மற்றும் அவருடைய தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்குப்பதிலாக தங்களின் உணர்வுகளை நோக்கவே ஜனங்களை ஊக்குவிக்கின்றன. என்ன நடக்கிறது என்பதை தனிநபர்கள் உணராமல் எந்த விதத்திலும் ஆவிகள் அவர்களின் வாழ்க்கையை கட்டுப்படுத்த முடியாது." - Roger J Morneau. A Trip into the Supernatural, Review and Herald, 1982, p.43

"வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொண்டு ஜெபிப்பது தேவனின் கருவூலத்தை நமக்குத் திறக்கிறது. அன்பு நிறைந்த நம்முடைய பரம தகப்பன் விவரிக்க முடியாத ஆசீர்வாதங்களை நமக்காக வைத்து வைத்திருக்கிறார். அவருடைய வாக்குத்தத்தங்களில் அவர்களுக்கு விசுவாசமிருந்தால் அவர்கள் (சீஷர்கள்) பெரிய காரியங்களை எதிர்பார்க்கலாம்" - E.G. White, The Desire of Ages, (1898), p. 668.2

### வாக்குத்தத்தங்களில் இரண்டு வகை

அதே நேரத்தில் வேதாகம வாக்குத்தத்தங்களை கவனமாக வேறுபடுத்தி பார்ப்பது அவசியம்: "பாவ மன்னிப்பு, பரிசுத்த ஆவியானவர், அவருடைய வேலையைச் செய்வதற்கான வல்லமை போன்ற ஆவிக்குரிய வாக்குத்தத்தங்கள் கேட்டவுடனே கொடுக்கப்படுகின்றன. (அப் 2:38–39ஐப் பார்க்கவும்). ஆனால் இந்த வாழ்க்கைக்கான தற்காலிக ஆசீர்வாதங்களை எந்த சந்தர்ப்பத்தில் கொடுத்தால் நல்லது என்று தேவன் காண்கிறாரோ அப்படிப்பட்ட சமயங்களில் மட்டுமே அவை அவரால் கொடுக்கப்படுகின்றன அல்லது நிறுத்தி வைக்கப்படுகின்றன." – Morris L Venden, 95 Theses on Righteousness by Faith, (pacific press 1987), p.60

ஒரு உதாரணம் ஏசாயா 43:2 "நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினிஜுவாலை உன்பேரில் பற்றாது." அக்கினி சூளையில் எறியப்பட்ட மூன்று நண்பர்களுக்காக தேவன் கொடுத்த இந்த வாக்குறுதியை அற்புதமான முறையில் நிறைவேற்றினார் (தானி.3). அதே வேளையில், சீர்த்திருத்தவாதிகளான ஹஸ் மற்றும் ஜெரோம் ஆகியோர் கான்ஸ்டன்ஸில் எரிக்கப்பட்டனர். அவர்களின் பிரார்த்தனைகள் பதிலளிக்கப்படவில்லை என்று சொல்ல முடியுமா? ஒருவேளை அவை நமக்குப் தெரிந்த பாணியில் பதிலளிக்கப்படவில்லையா? ஏன்? போப்பு மார்க்கத்தைச் சார்ந்த ஒரு எழுத்தாளர் இந்த இரத்தசாட்சிகளின் மரணத்தை பின்வருமாறு விவரித்தார்: "இருவரும் தங்கள் கடைசி நேரம் நெருங்கும்போது உறுதியான மனதுடன் தங்களை வைத்துக் கொண்டனர். திருமண விருந்துக்கு செல்வது போல் நெருப்புக்கு தயாரானார்கள். அவர்கள் வலியால் அலறவில்லை. தீப்பிழம்புகள் எழுந்தபோது, அவர்கள் பாடல்களைப் பாடத் தொடங்கினர்; நெருப்பின் வீரியம் அவர்களின் பாடலை நிறுத்துவது அரிதாயிருந்தது." - E.G. White, The Great Controversy, (1911), p.109.3 Neander, "Kirchengeschichte", 6. Per. 2 Abschnitt, 2 Tell, 69; Hefele, Konzilinleschicute" Bd. VI. S.209 f

யாராவது எரிக்கப்பட்டால் அவர்களால் கத்தி கதறமட்டுமே முடியும். நமக்கு எளிதில் புலப்படாத விதத்தில் தேவன் தலையிட்டார் என்பதை அவர்களின் நடத்தை காட்டுகிறது. தற்காலிக வாக்குறுதிகள்கூட இன்னும்

நமக்கு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை இது எனக்குக் காட்டுகிறது.

### பதில் கொடுத்ததற்கு நன்றி

இப்போது மற்றொரு முக்கியமான அம்சம்: நாம் வேண்டிக்கொண்ட மாத்திரத்தில் நமது விண்ணப்பங்கள் நிறைவேற்றப்பட்டால், அந்த பதிலுக்காக தேவனுக்கு நன்றி சொல்வது சரியானது. இந்த நேரத்தில் நம்முடைய ஜெபத்திற்கு பதிலளித்த தேவனுக்கு செலுத்தும் நன்றியின் மூலம் நமக்கு மிகவும் தேவைப்படும்போதும் மீண்டும் கிடைக்கும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகிறோம். சில விசுவாசிகள் ஜெபித்த உடனேயே ஏதாவது நடந்திருக்கிறதா என்று பார்க்கிறார்கள். ஆனால் பல விசுவாசிகளின் அனுபவம் எலியாவின் அனுபவத்தைப் போன்றது: "பெருங்காற்று உண்டாயிற்று; ஆனாலும் அந்தக் காற்றிலே கர்த்தர் இருக்கவில்லை; காற்றிற்குப்பின் பூமி அதிர்ச்சி உண்டாயிற்று: பூமி அதிர்ச்சியிலும் கர்த்தர் இருக்கவில்லை. பூமி அதிர்ச்சிக்குப்பின் அக்கினி உண்டாயிற்று; அக்கினியிலும் கர்த்தர் இருக்கவில்லை; அக்கினிக்குப்பின் அமர்ந்த மெல்லிய சத்தம் உண்டாயிற்று." (1இராஜா 19:11–12). இது என் அனுபவமும் கூட.

நீண்ட நேரம் கழித்து எதுவும் நடக்கவில்லை என்று நினைத்தேன். அப்போது என்னை அறியாமலேயே எனக்குள் பல விஷயங்கள் நடந்திருப்பதை நான் திடீரென்று கவனித்தேன்.

### என் சிந்தை மாற்றப்பட வேண்டும்

இந்த நேரத்திலேயே எனது சிந்தனை மாற்றப்படவேண்டியது அவசியம் என்பதே இதன் பொருளாகும்: "தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்." ரோமர் 12:2

என் ஜெபத்திற்கு நீங்கள் பதிலளித்ததற்கு நன்றி. எனது விண்ணப்பத்தை ஏற்கனவே கேட்டதற்கு நன்றி. அதை நான் ஏற்ற நேரத்தில் அனுபவிப்பேன் என்பதற்கு நன்றி என்று இப்போதே சொல்வதுதான் சரியானதாகும்.

**இது சுய-கையாளுதல் அல்ல.** நான் என்னையே சமாதானப் படுத்த முயற்சிக்கிறேனா? நான் வாக்குத்தத்தத்தைப் பற்றிக்கொண்டு ஜெபித்தபோது என்னுள் ஏற்பட்ட சிந்தனைக்கு ஒரு தெய்வீக அடிப்படை இருக்கிறது, ஏனென்றால் நான் விசுவாசத்தின் மூலம் பதிலளிக்கப் பட்டிருக்கிறேன். இந்த விஷயத்தில் நான் என் சிந்தனையை மாற்றவில்லை என்றால், நான் தேவனை நம்பவில்லை என்பதைக் காட்டுகிறேன்

என்பதோடு எனது உணர்வைச் சார்ந்த இந்த நடத்தையால் நான் தேவனை பொய்யனாக ஆக்குகிறேன். அதனால் எதையும் பெறப்போவதில்லை.

எதையும் நான் காணாவிட்டாலும் அதற்கேற்ப செயல்படுவதும் முக்கியம். விசுவாசிக்க வேண்டியதன் அவசியத்தை தேவன் எப்போதும் ஒருங்கிணைக்கிறார். நாம் அவரை நம்ப வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். யோர்தான் நதியைக் கடப்பதைப் பற்றி யோசித்துப் பாருங்கள். தண்ணீர் பிரிக்கப்படுமுன் ஆசாரியர்கள் முதலில் அடியெடுத்து வைக்க வேண்டும். குணமடைவதற்கு முன் நாகமான் ஏழு முறை தண்ணீரில் மூழ்க வேண்டியிருந்தது.

ஒரு வேளை "என்னால் அதை செய்ய முடியாது. அப்படிச் செய்வதை என்னால் நினைத்துக்கூட பார்க்க முடியாது" என்று நீங்கள் சொல்லலாம். நம்மால் விளக்க முடியாத பல விஷயங்கள் உள்ளன என்பதை தயதுசெய்து நினைவில் கொள்ளுங்கள். இன்றுவரை, மின்சாரம் என்றால் என்ன என்று நமக்குத் தெரியாது, இருப்பினும் நாம் அனைவரும் அதை பயன்படுத்துகிறோம். இன்றுவரை, குழந்தைகள் எப்படி பேசக் கற்றுக்கொள்கிறார்கள் என்பது நமக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் அனைவரும் கற்றுக்கொள்கிறார்கள். "இயற்கை உலகில் நாம் எப்போதும் புரிந்து கொள்ள முடியாத அதிசயங்களால் சூழப்பட்டிருக்கிறோம். அப்படியிருக்கும்போது, ஆவிக்குரிய உலகிலும் நம்மால் புரிந்து கொள்ள முடியாத மறைபொருள்களைக் கண்டு நாம் ஆச்சரியப்பட வேண்டாமோ?" – E.G. White, Education (1903), p.170.1

நீதி **3:5–6** "உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்." நம்முடைய பாதைகளில் வழிநடத்தும் இந்த வாக்குறுதிக்கு தேவனிடமிருந்து தெளிவான முன்நிபந்தனைகளை இங்கே காண்கிறோம். ஒவ்வொரு முன்நிபந்தனையும் ஒரு கட்டளையாகும். முன்நிபந்தனையை நிறைவேற்றிவிட்டோம் என்று உறுதியாகத் நமக்குத் தெரியவில்லை என்றால், தேவன் உடனடியாக நமக்குப் பதிலளிக்க வேண்டும் என்ற உறுதியுடன் விருப்பத்திற்காக நாம் பிரார்த்தனை செய்கிறோம்..." "ஆனால் நீங்கள் விருப்பத்தோடு ஆயத்தமாயிருந்தால், தேவன் உங்களுக்கான வேலையைச் செய்வார்" - E.G. White, Thoughts from the Mount of Blessing (1896), p.142.1

உதவக்கூடிய சிறிய ஒன்று: தேவனுடைய வாக்குத்தத்தத்துடன் ஜெபித்து, அதற்கான தேவையை நிறைவேற்றிவிட்டு, பின்னர்

பதிலளிக்கப்படுவதில் சந்தேகம் எழுந்தால் நாம் என்ன செய்கிறோம் தெரியுமா? நாம் தேவனை பொய்யனாக ஆக்குகிறோம். உண்மையில் எந்த சூழ்நிலையிலும் நாம் இதைச் செய்ய விரும்புவதில்லை. இந்த விஷயத்தில் "ஆண்டவரே நான் விசுவாசிக்கிறேன், என் அவிசுவாசம் நீங்கும்படி எனக்கு உதவி செய்யும்" என்று கேளுங்கள். பிறகு விசுவாசியுங்கள்!

எலன் உவைட் எழுதிய 'கல்வி' என்ற புத்தகத்தில் 'விசுவாசமும் ஜெபமும்' என்ற அத்தியாயத்தில் வாக்குறுதிகளுடன் ஜெபிப்பதற்கான மிகவும் மதிப்பு மிக்க ஆலோசனை உள்ளது. தயவு செய்து படியுங்கள்.

## பரிசுத்த ஆவிக்காக ஜெபித்தல்

பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட ஜெபிப்பதற்கான சிறந்த தகுதிகள் நம்மிடம் இருப்பதாக நான் நினைக்கிறேன். ஆனால் அது தேவனை நம்முடைய விருப்பப்படி செயல்பட வைப்பதல்ல. மாறாக அவருடைய வாக்குறுதிகளையும் அவர்மேல் விசுவாசத்தையும் வைப்பதென்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

## பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கான வாக்குறுதி

பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்வதற்கு கர்த்தர் நமக்கு அற்புதமான வாக்குத்தத்தங்களை கொடுத்திருக்கிறார்: லூக்கா 11:13. "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?"

நம்முடைய பரம தகப்பன் இங்கே ஒரு நிச்சயமான உறுதிமொழியை கொடுக்கவில்லையா? இந்த அற்புதமான வாக்குறுதியில் உள்ள தேவை: கேளுங்கள்! ஆயினும் இயேசு ஒரே ஒரு முறை கேட்பதை அர்த்தப்படுத்தவில்லை, மாறாக தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கும்படி வேண்டுகோள் விடுக்கிறார்.

இருப்பினும் இங்கே சூழலைப் கவனிப்பது அவசியம். இதே விஷயத்தைப் பற்றி பேசும் மற்ற வசனங்களையும் நாம் படிக்க வேண்டும். உதாரணமாக அப்.5:32 "இந்தச் சங்கதிகளைக்குறித்து நாங்கள் அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம்; தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியும் சாட்சி என்றார்கள்."

**இங்குள்ள தேவை:** கீழ்ப்படிதல்! ஒரே ஒரு வசனத்தை மட்டும் வைத்துக்கொண்டு நம்மை ஆதரிக்க முடியாது: வாக்குத்தத்தத்தின் சூழலையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். நமக்கு விருப்பமான

ஒன்றுக்கு ஒருமுறை மட்டும் கீழ்ப்படிவது போதாது. மாறாக நமது அற்புதமான மீட்பரும் நண்பருமான அவருக்குக் தொடர்ந்து கீழ்படிய வேண்டுமல்லவா? கீழ்ப்படிதல் மகிழ்ச்சியை உருவாக்குகிறது. கீழ்படிதலுள்ள இதயத்திற்காக தினமும் காலையில் ஜெபம் செய்யுங்கள். அவர் விரும்பும் அனைத்தையும் செய்ய தேவன் உங்களை ஆயத்தப்படுத்தும்படியும் அதை நிறைவேற்ற உங்களுக்கு உதவும்படியும் ஜெபியுங்கள். இது நல்ல முன்நிபந்தனையை உருவாக்குகிறது.

யோவான் 7:37 "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்."

இங்கே சொல்லப்படும் தாகம் – பரிசுத்த ஆவிக்கான வாஞ்சையுடன் தொடர்புடையது. உங்களுக்கு அந்த விருப்பம் இல்லை என்றால் அல்லது உங்களிடம் குறைவாக இருப்பதாக நினைத்தால், நீங்கள் விருப்பத்திற்காக ஜெபிக்கலாம். இது தேவனுடைய விருப்பத்திற்கிசைந்த ஒரு வேண்டுகோள். இதற்கு உடனடியாக பதிலளிக்கப்படும். நம் அற்புதமான தேவனிடம் கேட்கும்போது, அவர் நமக்குள் "விருப்பத்தையும் செய்கையையும்" உருவாக்குவார். மேலும் தேவனுடன் நெருங்கிய உறவு கொள்ளவும், அவரை முழுமனதுடன் நேசிக்கவும், மகிழ்ச்சியுடன் சேவைசெய்து, இயேசுவின் மீது அதிகமதிகமாய் நேசம்கொண்டு, அவர் விரைவில் திரும்பி வரும்போது தேவனுடைய ராஜ்யத்தில் சேர்க்கப்படுவதற்கும், தேவனுடைய வார்த்தைகளைப் ஆராய்ந்து பார்த்து கற்றுக்கொள்வதற்கும், அத்துடன் காணாமல் போன ஆத்துமாக்களை இரட்சிப்பதற்கு உதவும்படியும் நாம் ஜெபிக்கலாம்.

யோவான் 7:37–38 "வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்." தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச்சொன்னார்."

**இங்குள்ள நிபந்தனை:** விசுவாசம்! பரிசுத்த ஆவியானவரைப் பெறுவதற்கு இயேசு கிறிஸ்துவிலுள்ள நமது விசுவாசமும், தேவன்மீது நாம் வைத்திருக்கும் நம்பிக்கையும் ஒரு முக்கியமான முன்நிபந்தனை என்பதை நாம் இங்கே காண்கிறோம். ஆனால் நாம் வாக்குத்தத்தங்களைச் சொல்லி ஜெபிக்கும்போது விசுவாசிப்பது எளிது.

கலாத்தியர் 5:16 "பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்."

இங்கே நமக்கு ஒரு வாக்குறுதி கொடுக்கப்பட்டுள்ளது. இது ஒரு கட்டளையாக வெளிப்படுத்தப்படுகிறது. நான் ஆவியில் நடக்க வேண்டும் என்று தேவன் விரும்பும்போது, அவர் என்னை பரிசுத்த ஆவியால் நிரப்ப விரும்புகிறார் என்றே அர்த்தம். நாம் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருக்கும் போது, இனி நாம் நம் இச்சைகளின்படி வாழவேண்டிய அவசியமில்லை என்பதை அவர் நமக்கு இங்கே காட்டுகிறார். நம்மைக் கட்டிவைத்திருக்கும் பாவத்தின் வல்லமையை பரிசுத்த ஆவியானவர் உடைக்கிறார் (ரோமர் 8:1–17, குறிப்பாக வச.2). பரிசுத்த ஆவியினாலே "சரீரத்தின் செய்கைகள் அழிக்கப்படுகிறது." (ரோமர் 8:13). பவுல் தன்னைப் பற்றிக் கூறியதை யோசித்துப் பாருங்கள்: "நான் அனுதினமும் சாகிறேன்." மாம்ச கிரியைகளின்படி வாழாமல் இருப்பது மிகவும் மதிப்புமிக்க ஒன்று (கலா. 5:18–21), அதேவேளையில் ஆவியின் கனிகளில் வளர்வதற்கு அது உதவுகிறது (கலா. 5:22).

பாவம் நம் வாழ்வை சுற்றிவளைக்க முடியாதென்பதை தொலைநோக்கியின் கூட்டமத்துடன் ஒப்பிடலாம். லென்ஸ்களில் தூசி படாமல் இருக்க அறைக்கு அதிக அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். கதவு திறக்கப்படும் போது காற்று வெளிப்புறமாக நகரும். தூசி உள்ளே நுழைய முடியாது. அதேபோல, நாம் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படும்போது "மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்." (ஒரு நபர் ஆவிக்குரியவராக இருக்க முடியுமா? என்ற இந்த விஷயத்தைப் பற்றிய கூடுதல் தகவல்: அத்தியாயத்தின் முடிவில் உள்ளது).

எபேசியர் 3:16–17, 19 "நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகலபரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்."

நீண்ட காலமாக நாம் எந்த வல்லமையையும் கவனிக்காமல் இருந்திருக்கலாம். அது இயற்கையில் நடப்பது போல் இருக்கமுடியும். குளிர்காலத்தில் மரங்கள் வெறுமையாகவும் வசந்த காலத்தில் பச்சை நிறமாகவும் இருக்கும். புத்துயிர் பெறும்போது மிகப்பெரிய வல்லமைகள் செயல்படுகின்றன. அனால் அவற்றை நாம் பார்க்கவோ கேட்கவோ முடியாது. ஆயினும் அதன் விளைவுகளை நாம் பார்க்கிறோம். எனக்கும் அப்படித்தான் இருந்தது. எனக்கு அபரிமிதமான வல்லமையைக் கொடுத்த தேவனுக்கு

நன்றி கூறுகிறேன்.

மற்றொரு உதாரணம்: நம்முடைய சரீரத்தில் மின்சாரம் இருப்பதை சமீப காலமாகத்தான் அறிந்திருக்கிறோம். அவை நம்மில் இருக்கிறது என்றாலும் அவற்றைப் பற்றி நாம் அறிந்திருக்கவில்லை..

எபே. 5:18 "ஆவியால் நிறைந்து" இருங்கள் அல்லது தொடர்ந்து நீங்கள் மீண்டும் மீண்டும் ஆவியால் நிரப்பப்படுங்கள். – Johannes Mager, Auf den puren des Heillgen Geistes,(Luneburg,1999), Seite 101.

அப்.1:8 "பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து... எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்."

தங்களுக்கு வல்லமை கிடைக்கும் வரை காத்திருக்கும்படி சீஷர்களுக்கு கட்டளை கொடுக்கப்பட்டிருந்தது. அவர்கள் வெறுமனே காத்திருக்கவில்லை. "பாவிகளை கிறிஸ்துவிடம் அழைத்துச் செல்லும் வார்த்தைகளைப் பேசுவதற்காக, அனுதினமும் மனிதர்களை சந்திப்பதற்கான தகுதிக்காக, சீஷர்கள் மிகுந்த ஆவலுடன் ஜெபித்தனர். எல்லா வேறுபாடுகளையும், மேலாதிக்க இச்சைகளையும் தள்ளிவிட்டு அவர்கள் கிறிஸ்தவ ஐக்கியத்தில் நெருங்கி வந்தனர். - Acts of the Apostle, p.37. நாமும் இந்த வாக்குத்தத்தங்களுக்காக ஜெபிக்கலாம் அல்லவா?

# போதகர்கள் சொல்லுவது என்ன? (பகுதி 2)

நான் எனது முழுமையான ஊழியத்தை அடைந்தேன். தேவன் மிகவும் நல்லவர், இந்த அற்புதமான புத்தகத்தின் மூலம் நம் அனைவரையும் ஆசீர்வதித்துள்ளார். நான் ஒரு ஓய்வு பெற்ற போதகர். இந்த புத்தகத்தை நான் முதன் முதலில் படித்தபோது அது என் முழுவாழ்க்கையையும் மாற்றியது. நான் அதை நான்குமுறை படித்து மூன்று கருத்தரங்குகள் நடத்தியிருக்கிறேன். 'தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்' இரண்டாவது தொடர் கருத்தரங்குகளுக்குப் பிறகு நான் இப்போது எனது முழுமையான ஊழியத்தை அடைந்துவிட்டதாக உணர்ந்தேன். – பப்புவா நியூகினியாவிலிருந்து PJ.

ஜெனரல் கான்ஃபரன்ஸ் வலைதளத்தில் இருந்து 'தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்' என்ற புத்தகத்தால் நான் ஆசீர்வதிக்கப்பட்டேன். இந்த புத்தகத்தை வாசிப்பது எனக்கு ஒரு மனதை தொடும் அனுபவமாக இருந்தது. என் வாழ்க்கை மாறிவிட்டது. மூன்று மாதங்களில் பலமுறை படித்த பிறகு, இந்த செய்தியை பல சபைகளில் பகிர்ந்து கொண்டேன். மாநாட்டு போதகர்கள் கூட்டத்தில் பங்குபெற்ற (மாநாடு 80000 உறுப்பினர்கள்) அனைத்து போதகர்களுக்கும் புத்தகத்தின் மென்பிரதியை அனுப்பியுள்ளேன்.

ஜெனரல் கான்ஃபரன்ஸில் "எழுப்புதல் மற்றும் சீர்திருத்தம்" என்ற இணையதளத்தில் புத்தகத்தைக் கண்டேன். எழுப்புதல் கருத்தரங்குக்கு மதிப்புமிக்க எண்ணங்களைத் தேடிக்கொண்டிருந்தேன். அங்கு சுவாஹிலி மொழியில் புத்தகத்தைக் கண்டுபிடித்து கருத்தரங்கில் பயன்படுத்தினேன். இது எனக்கு ஒரு சிறந்த அனுபவமாக இருந்தது. அதே நெருப்பு ஒவ்வொரு தலைவரையும், ஒவ்வொரு போதகரையும் நமது திருச்சபை அனைத்து அங்கத்தினர்களையும் சென்றடைய வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன்.
தான்சானிய / கிழக்கு ஆப்ரிக்காவில் இருந்து L.M.

ஏற்கனவே எனக்கு நன்றாகத் தெரியும் என்று நான் நினைத்ததால் படிப்பதைத் தள்ளிப்போட்டேன். அதனால் நான் மிகவும் தவறு செய்தேன்.

'தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்' என்ற சிறு புத்தகத்திற்காக நான் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். இந்த புத்தகத்தை ஜனவரியில் கொடுத்ததாக எனக்கு நினைவிருக்கிறது. ஆனால் எனக்கு ஏற்கனவே நன்றாகத் தெரியும் என்று நான் நினைத்ததால் அதைப் படிப்பதைத் தள்ளிப்போட்டேன். அதனால் நான் மிகவும் தவறு செய்தேன். நான் மீண்டும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை நாடியபோது, 3 அல்லது 4 வாரங்களுக்கு முன்பு ஒரு சக ஊழியர் இந்த புத்தகத்தின் PDF நகலை எனக்கு அனுப்பினார். நான் மிகவும் உற்சாகமாக இருந்தேன். அது எனக்கு மிகவும் தேவைப்படும் நேரத்தில் வந்தது. படிக்கும்போது நான் முழங்காலில்

நின்று தேவனிடம் மன்னிப்புக் கேட்டேன். என் வாழ்க்கையின் இந்த மிக முக்கியமான பகுதியை நான் ஏன் புறக்கணிக்க அனுமதித்தேன். நேற்று ஓய்வுநாளில், நான் உபவாசித்து, ஜெபித்து என் வாழ்க்கையை மீண்டும் தேவனிடம் ஒப்படைத்து என்னைப் பயன்படுத்திக் கொண்டு நான் அவருக்குச் செய்ய விரும்பும் குறிப்பிட்ட ஊழியத்தை எனக்குத் தெளிவாகக் காட்டும்படி அவரிடம் கேட்டேன். எனது பணியின் காரணமாக ஒவ்வொரு மாதமும் வெவ்வேறு நாடுகளுக்குச் செல்ல வேண்டியதாயிருக்கிறது. இந்த மிக முக்கியமான செய்தியை பரிசுத்த ஆவியின் வல்லமையின் மூலம் நமது சகோதர சகோதரிகளுக்கு அனுப்ப இது ஒரு சிறந்த வாய்ப்பு என்று நான் நம்புகிறேன்.– பிலிப்பைன்சிலிருந்து M.A.

---



## தனிப்பட்ட எண்ணங்கள் மற்றும் கலந்துரையாடலுக்கான வழிகாட்டி

1. வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொண்டு கேட்கும் ஜெபம் நிச்சயம் பதிலளிக்கப்படும் என்று எதிர்பார்க்கமுடியுமா?

______________________________

2. வாக்குத்தத்தங்களை பற்றிக்கொண்டு ஜெபித்தபின்னர் அதற்கு பதில் வராது என்று நினைத்தால் நான் தேவனுக்கு சொல்வது என்ன?

______________________________

3. வாக்குத்தத்தங்களின் இரண்டு பிரிவுகள் எவை? இந்த இரண்டு பிரிவுகளுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

______________________________

4. பரிசுத்த ஆவியுடன் சம்பந்தப்பட்ட ஒருசில வாக்குத்தத்தங்களைப் பட்டியலிடுங்கள்:______________________________

### நமது ஜெப நேரம்

- ➢ உங்கள் ஜெப–பங்காளியுடன் தொடர்பு கொண்டு இந்த தலைப்பைப் பற்றி விவாதியுங்கள்.
- ➢ உங்கள் ஜெப–பங்காளியுடன் சேர்ந்து ஜெபியுங்கள்.

1. கர்த்தர் உங்களை பரிசுத்த ஆவியால் நிரப்புகிறார்.
2. வாக்குத்தத்தங்களை பற்றிக்கொண்டு ஜெபிப்பதன் மூலம் உங்கள் பிரார்த்தனைகள் பலப்படுத்தப்படும்.
3. வல்லமையுள்ள தேவவசனங்கள் வெறுமையாகத் திரும்பாது என்பதற்கு நன்றி.

நாள் 10

## பரிசுத்த ஆவியால் நிறைந்திருக்கிறேன் என்பதை உறுதிபடுத்திக் கொள்ள நான் எப்படி ஜெபிக்க வேண்டும்?

### நேர்மறையான விளைவு இல்லையா?

ஒரு இளைஞன் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட விரும்பியதால், ஆலோசனையைத் தேடிக்கொண்டிருந்தான். அவன் உண்மையிலேயே போராடிக்கொண்டிருந்தான். போதகர் அவனிடம்: நீ உன்னை தேவனிடம் முழுமையாக அர்ப்பணித்தாயா? என்றார். அதற்கு அவன்: நான் என்னை முழுமையாக அர்ப்பணித்ததாக நான் நினைக்கவில்லை என்றான். நல்லது என்ற போதகர், (பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுவதற்கு) நீ உன்னை தேவனிடம் முழுமையாக ஒப்புக்கொடுக்காதவரை உனக்காக ஜெபிப்பது எந்த பயனையும் தராது என்றார். பின்னர் இப்போதே உன்னை தேவனிடம் ஒப்புக்கொடுக்க விரும்புகிறாயா? என்றார். என்னால் முடியாது, என்று அவன் பதிலளித்தான். அப்படியானால் தேவன் அதை உனக்காகச் செய்ய நீ ஆயத்தமாய் இருக்கிறாயா? என்றார். ஆம், என்று அவன் பதிலளித்தான். அப்படியானால் அதைச் செய்யும்படி அவரிடம் கேள் என்றார். அவன் ஜெபித்தான்: ஓ,தேவனே, என் சொந்த விருப்பத்திலிருந்து என்னை வெறுமையாக்குங்கள். உமது சித்தத்திற்கு என்னை முழுமையாக ஒப்புக்கொடுக்கவும், எனக்காக என் விருப்பத்தை நீங்களே செய்யுங்கள். நான் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் என்றான். அப்போது போதகர்: அது நடந்ததா? என்று கேட்டார். அது நடந்திருக்க வேண்டும் என்றான். 'நான் அவருடைய சித்தப்படி அவரிடம் கேட்டேன். நான் கேட்டதை அவர் எனக்கு கொடுத்தார் என்று விசுவாசிக்கிறேன் (1யோவான் 5:14–15). ஆம் அது நடந்தது, என் சித்தம் கீழே வைக்கப்பட்டுள்ளது.' என்றான். அப்போது போதகர்: பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திற்காக (பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுவதற்காக) நீ இப்போதே ஜெபி என்றார். அவன் ஜெபித்தான்: ஓ தேவனே! இப்போதே உமது பரிசுத்த ஆவியால் எனக்கு ஞானஸ்நானம் கொடுங்கள். நான் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் என்றான். அவன் தன்னுடைய சித்தத்தை கீழ்ப்படித்தியவுடன் அது உடனடியாக நடந்தது.
– Reuben A Torrey, Der Heilige Geist - Sein Wesen und Wirken (Frankfurt,1966), p.150

### அதற்கு முன்னும் பின்னும் - பெரிய வித்தியாசம்

நான் நீண்ட காலமாக வாக்குத்தத்தங்களைச் சொல்லி ஜெபிப்பதில் பழகியிருந்தாலும், சிறப்பு சூழ்நிலைகளில் அதைப் பயன்படுத்தியிருந்தாலும், ஜெபத்திற்கு அற்புதமான பதில்களை அனுபவித்திருந்தாலும்,

அவைகளையெல்லாம் சொல்லாமல் வெறுமனே ஜெபத்தில் பரிசுத்த ஆவியைக்கேட்டால் போதும் என்று பல ஆண்டுகளாக நினைத்தேன். இதே கருத்து பலரிடம் இருப்பதாக அறிகிறேன். இது தவறு என்று நான் கூற விரும்பவில்லை. ஆனால் எனது தனிப்பட்ட அனுபவத்தை நான் திரும்பிப் பார்த்தபோது எந்த வாக்குறுதியும் இல்லாமல் நான் இப்படி ஜெபித்ததற்காக வருத்தப்படுகிறேன். இப்பொழுது நான் தினமும் பரிசுத்த ஆவிக்கான வாக்குத்தத்தங்களுடன் ஜெபித்து வருகிறேன். நான் ஜெபித்த பிறகு இப்போது நான் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருக்கிறேன் என்ற உறுதி எனக்குள் இருக்கிறது. அக்டோபர் 28, 2011 அன்று நடந்த ஒரு அனுபவத்தின் மூலம் என் வாழ்க்கையில் அதற்கு முன்னும் அதற்குப் பின்னும் ஏற்பட்ட பெரிய வித்தியாசத்தை உணர்ந்தேன்.

நான் வாக்குத்தத்தங்களைச் சொல்லி ஜெபிக்க ஆரம்பித்ததிலிருந்து தேவனுடனான எனது உறவு மிகவும் நெருக்கமாகிவிட்டது, இயேசு என்னுடன் நெருக்கமாகவும் எனக்கு பெரியவராகவும் இருக்கிறார். இது வெறும் உள்ளுணர்வு அல்ல; நான் அதை பின்வரும் விஷயங்களுடன் இணைக்க முடியும்.

➢ வேதாகமத்தைப் படிக்கும்போது எனக்குள் அடிக்கடி ஊக்கமளிக்கும் புதிய புரிதல்கள் ஏற்படுகின்றன.

➢ சோதனைகளுடனான போரில் நான் வெற்றிபெற்றவனாகவே இருக்க முடிகிறது.

➢ எனது ஜெப நேரம் எனக்கு மிகவும் விலைமதிப்பற்றதாகவும் மிகுந்த மகிழ்ச்சியைத் தருவதாகவும் மாறியுள்ளது.

➢ தேவன் என்னுடைய அனேக ஜெபங்களுக்குப் பதிலளிக்கிறார்.

➢ இயேசுவைப் பற்றி மற்றவர்களுக்குச் சொல்வதில் எனக்கு அதிக மகிழ்ச்சியும் "தைரியமும்" உண்டாயிருக்கிறது. (அப் 4:31)

➢ நான் எனது நெங்கிய நண்பர்களுடன் சரளமாக பழகுகிறேன்.

➢ தேவ கிருபையால் நான் மகிழ்ச்சியாயிருப்பதுடன், அவருடைய கரத்தில் பாதுகாப்புடன் இருப்பதை உணர்கிறேன்.

➢ ஒரு கடினமான காலகட்டத்தில் தேவன் என்னை அற்புதமாக தாங்கி எனக்குள்ளிருந்து என்னை பலப்படுத்தினார்.

➢ தேவன் எனக்கு அளித்த ஆவிக்குரிய வரங்கள் என்னென்ன என்பதை உணர்ந்தேன்

➤ குறைகூறுவது நிறுத்தப்பட்டது. மற்றவர்கள் விமர்ச்சிப்பதைக் கேட்கும்போது எனக்கு சங்கடமாக இருக்கிறது.

இந்த மாற்றம் அமைதியாக நடந்தது. வேதாகம வாக்குத்தத்தங்களுடன் பரிசுத்த ஆவிக்காக தினமும் சிறிது நேரம் செலவிட்ட பிறகு நான் அதை முதலில் உணர்ந்தேன். அப்போதிருந்து நான் ஒரு வித்தியாசமான கிறிஸ்தவத்தை அனுபவித்து வருகிறேன். முன்பு தேவனுடனான எனது வாழ்க்கை பெரும்பாலும் கடினமானதாகவும் கஷ்டமாகவும் இருந்தது; இப்போது நான் மகிழ்ச்சியையும் வல்லமையையும் அனுபவிக்கிறேன்.

பரிசுத்த ஆவியின் பற்றாக் குறையால் எனது தனப்பட்ட வாழ்க்யைில் ஏற்பட்ட இழப்புகளுக்காகவும் எனது திருமணம் மற்றும் குடும்பத்தில் ஏற்பட்ட இழப்புகளுக்காகவும் நான் போதகராக பணியாற்றிய சபைகளில் ஏற்பட்ட இழப்புகளுக்காகவும் வருந்துகிறேன். இதை உணர்ந்த நான் தேவனிடம் மன்னிப்பு கேட்டேன்.

துரதிஷ்டவசமாக இந்த பாதையில் நாம் பயணித்த அளவை விட மற்ற யாரையும் வழிநடத்த முடியாது என்பது உண்மை. குடும்பம் மற்றும் சபையில் உள்ள தனிநபர்களின் தனிப்பட்ட குறைபாடுகள் அதிகரிக்கின்றன என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

மற்றவர்கள் தங்கள் வாழ்க்கையில் இதே தவறுகளைப் பற்றி புலம்பக் கூடாது என்பதற்காக நான் என்னுடைய சில சிந்தனைகளை கூற விரும்புகிறேன்.

2பேதுரு 1:3–4ல் இயேசுவோடு தனக்கிருந்த ஒரு நெருக்கமான உறவின் மூலம் பேதுரு, "திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" என்கிறான்.

பரிசுத்த ஆவியானவர் வாக்குத்தத்தங்களின் மூலம் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறார் என்பதும் இதன் அர்த்தம். நீங்கள் வாக்குத்தத்தங்களை வங்கி காசோலைக்கு ஒப்பிடலாம். கணக்கு வைத்திருப்பவர்களிடமிருந்து கையொப்படமிடப்பட்ட காசோலையை வங்கியில் கொடுக்கும்போது, வெறொருவரின் கணக்கிலிருந்து பணத்தைப் பெற முடியும். தேவனின் பிள்ளைகளாக (யோவான் 1:12) நாம் தினமும் இயேசு கையொப்பமிட்ட காசோலைகளை (வாக்குத்தத்தங்களை) செலுத்தி பெறலாம். ஒரு கலைஞரால் செய்யப்பட்ட காசோலைகள் நம்மிடம் இருந்தாலும் கையொப்பமிடாத நம் சொந்த காசோலைகளை வழங்குவது

எந்த நன்மையையும் வழங்காது. கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து கையொப்பமிடப்பட்ட காசோலைகள் நமக்குத் தேவை.

வாக்குத்தத்தங்களோடு ஜெபிக்க நம்மை ஊக்குவிக்கும் மற்றொரு காரணமும் இருக்கிறது. தேவனுடைய வார்த்தையில் வல்லமை இருக்கிறது. இயேசு ஏன் சிலுவையில் மூன்று முறை சங்கீதக்காரனின் வார்த்தைகளைச் சொல்லி ஜெபித்தார்? வனாந்திரத்தில் சாத்தானால் சோதிக்கப்பட்டபோது அவர் வேதவசனங்களால் தன்னைத் தற்காத்துக் கொண்டதோடு சாத்தானை எங்ஙனம் முறியடித்தார்? மத் 4:4,7,10ல் "மனுஷன் தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்" என்றார்.

தேவனுடைய வார்த்தையில் வல்லமை இருக்கிற தென்பதை சிருஷ்டிகராகிய இயேசு அறிந்திருந்தார். "ஒவ்வொரு கட்டளையிலும் வாக்குத்தத்தம் நிறைந்த ஒவ்வொரு தேவனுடைய வார்த்தையிலும் தேவனின் ஜீவவல்லமை இருக்கிறது. இதன் மூலம் கட்டளை நிறைவேற்றப்பட்டு வாக்குத்தத்தம் நிறைவேறும்." - Christ object Lesson, (1900), p.38.2

என்ன ஒரு அற்புதமான அறிக்கை! தேவனுடைய வல்லமையும் அவருடைய ஜீவனும் ஒவ்வொரு வாக்குத்தத்தத்திலும் இருக்கிறது. நாம் வாக்குத்தத்தங்களுடன் ஜெபிக்கும்போது நம்முடைய ஜெபத்தில் தேவனுடைய வார்த்தையைப் பயன்படுத்துகிறோம். தேவனுடைய வார்த்தையைப் பற்றி "அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச்செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்." (ஏசா.55:11) என்று கூறுகிறது.

வாக்குத்தத்தங்களுடன் பரிசுத்த ஆவிக்காக மட்டுமே ஜெபிக்க நான் திட்டமிட்டுள்ளேன். வாக்குத்தத்தங்களோடு ஜெபிக்கும்போது நான் பரிசுத்த ஆவியைக் கேட்டபின் 1யோவான் 5:15ல் தேவனுடைய வார்த்தையில் உள்ள வாக்குத்தத்தத்தின் அடிப்படையில் நான் அதை பெற்றேன் என்பதை அறிவேன்: "நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்." நான் வாக்குறுதியை பற்றாமல் ஜெபிக்கும்போதும் என் ஜெபத்திற்கு பதில் கிடைக்கும் என்று நம்புகிறேன். சாயங்காலத்தில் எனது தோல்விகளை எண்ணி புகார் செய்வதைவிட இது போன்று ஜெபம் செய்வதற்காக நேரத்தை ஒதுக்கி ஆசீர்வதிக்கப்பட்ட நாளை அனுபவிப்பது நல்லது.

மிகுந்த மகிழ்ச்சியுடன் எழுதப்பட்ட ஒரு மின்னஞ்சல் எனக்கு வந்தது: "நாள் முழுவதும் வழிநடத்தின தேவனிடம் நான் என்னுடைய சொந்த வார்த்தைகளால் ஜெபிப்பதிலும், வேதத்திலிருந்து வாக்குத்தத்தங்களைச் சொல்லி ஜெபித்தால் அது இவ்வளவு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நான் ஒரு போதும் நினைக்கவில்லை! வாக்குத்தத்தங்கள் எப்போதும் எனக்கு மிகவும் முக்கியமானவை. நான் எப்போதும் அவற்றை நம்பினேன், ஆனாலும் நான் தினமும் அவற்றைப் பிடித்துக்கொண்டு ஜெபிக்க தவறிவிட்டேன். இயேசுவுடனான எனது வாழ்க்கை ஆழமான, மகிழ்ச்சியான, அதிக நம்பிக்கை மற்றும் அமைதியான பரிமாணத்தைப் பெற்றுள்ளது. இதற்காக நான் தேவனுக்கு நன்றி கூறுகிறேன்." - Email to H. Haubeil C.S.

இந்த காரணத்திற்காக, பரிசுத்த ஆவிக்கான ஜெபத்தின் உதாரணத்தைப் வாக்குத்தத்தங்களுடன் பகிர்ந்து கொள்ள நான் முடிவு செய்துள்ளேன். சுருங்கச்சொன்னால். தேவனுடைய வார்த்தையைக் கொண்டு நமக்காக நேரடியாக ஜெபிக்க கற்றுக்கொள்வது அவசியம். ஆனால் முக்கியமான விஷயம் என்னவென்றால், நாம் ஜெபித்தபிறகு நாம் பரிசுத்த ஆவியைப்பெற்றோம் என்ற உறுதியைப் பெறும் விதத்தில் வாக்குத்தத்தங்களால் நம்முடைய விசுவாசம் பலப்படுத்தப்படுகிறது. நாம் ஜெபிப்பதை விசுவாசிக்கும்போது நாம் பரிசுத்த ஆவியைப் பெறுகிறோம்.

பரிசுத்த ஆவியின் மூலம் இயேசு நம்மில் வாழ விரும்புகிறார் (1யோவான் 3:24; யோவான் 14:23) "பரிசுத்த ஆவியின் செல்வாக்கினாலேயே கிறிஸ்து நம்மில் ஜீவிக்கிறார்" என எலன் உவைட் கூறினார். - Editor Francis D Nichol, Adventist Bible Commentary vol.6 (Hagerstown, (1980), p. 111. 2

பேதுரு, பவுல் மற்றும் அனேகரை மாற்றிய அதே வல்லமை நமக்கும் கிடைக்கிறது. "அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகலபரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்" (எபே. 3:16).

பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுவது மகிழ்ச்சி, வல்லமை, அன்பு மற்றும் பாவத்தின் மீதான வெற்றி ஆகியவற்றிற்கு திறவு கோலாகும். "கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கு விடுதலை உண்டு" (2கொரி. 3:17)

எனக்கு வந்த ஒரு செய்தியில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: பல சபை உறுப்பினர்கள் தினமும் பரிந்துரைக்கப்பட்ட ஜெபத்தை இரண்டு இரண்டு பேர்களாக சேர்ந்து ஜெபிக்கிறார்கள். கடந்த ஐந்து மாதங்களாக நான் என் தோழியுடன் ஜெபித்து வருகிறேன். தனிப்பட்ட காரியங்களுக்காக மட்டுமல்ல

– குடும்பம், உறவு, திருமணம், ஆன்மீகம் மற்றும் சபை எல்லாம் முன்னேற்றம் அடைகிறது. தேவன் செயல்படும் முறைகளை கண்டு நாங்கள் ஆச்சர்யமடைகிறோம். இது வாழ்க்கையை எளிதாக்குகிறது, ஏனென்றால் தேவனின் நெருக்கத்தை நாங்கள் மென்மேலும் உணர்கிறோம்.." email to Helmut Haubeil. E.S

### ஒரு நபர் ஆவிக்குரியவராகவே நிலைத்திருக்க முடியுமா?

ஆம்! அவிசுவாச மனப்பான்மையை வளர விடாமல் பார்த்துக் கொள்ளும்போது நாம் ஆவிக்குரிய வாழ்க்கைக்கு சுவாசிக்கிறோம்: நமது பாவங்களை ஒப்புக்கொண்டு அறிக்கைசெய்வதன் மூலம் சுவாசத்தை "வெளியேற்றுதல்" நடைபெறுகிறது, தேவனின் அன்பையும், மன்னிப்பையும் பயன்படுத்தி, ஆவிக்குரிய சுவாசத்தை உட்கொள்வதன் மூலம் மற்றும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படும்படி விசுவாச ஜெபத்தைப் புதுப்பிப்பதன் மூலம் ஆவிக்குரியவராக நிலைதிருக்கலாம். – Helmut Haubeil & Gerhard Padderatz, Dott, Geld & Glaube (Eckental, 2009), p.97

இது நமக்கும் நம்முடைய குழந்தைக்குமுள்ள உறவு போன்றது. ஒரு குழந்தை கீழ்ப்படியாமல் இருந்தபோதிலும் அது இன்னும் நம் குழந்தையாகவே இருக்கிறது. ஆனால் உறவில் ஒரு தடங்களை உணர்கிறோம். குழந்தையால் நம் கண்ணைப் நேராகப் பார்க்க முடியாமல் போகலாம் . இந்த தடை அறிக்கை செய்வதன் மூலம் சரி செய்யப்படுகிறது.

ஆயினும் ஒரு நபர் இயல்பாகவே நீண்ட காலத்திற்குபின் மீண்டும் மாம்ச சிந்தைக்கு திரும்ப முடியும். "ஒருமுறை இரட்சிக்கப்பட்டால் எப்பொழுதும் இரட்சிக்கப்பட்டதாக" வேதாகமம் போதிக்கவில்லை. நம்முடைய பாவ இயல்பு இன்னும் இருக்கிறது. எந்தவொரு அப்போஸ்தலரோ அல்லது தீர்க்கதரிசியோ – எவரும் தங்களிடம் பாவமே இல்லை என்று கூறவில்லை" - E.G. White, The Acts of the Apostles (1911), p.561.1

அதேசமயம் பரிசுத்த ஆவியானவர் நம்மில் தங்கியிருந்து இயேசு நம் இருதங்களில் ஜீவிப்பதன் மூலம் பாவத்தின் வல்லமை உடைக்கப்படுகிறது. இதனால் நாம் மகிழ்ச்சியான மற்றும் வலுவான கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ முடியும். நம்முடைய நீதி இயேசு கிறிஸ்துவில் மட்டுமே உள்ளது. "அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்" (1கொரி 1:30). இந்த முக்கியமான தலைப்பு விரைவில் விரிவாகக் கையாளப்படும்.

ஆவிக்குரிய வாழ்வின் நீண்ட கால அலட்சியத்தினாலோ அல்லது ஆவிக்குரிய சுவாசத்தை மறந்துபோனதாலோ நாம் மீண்டும் மாம்ச சிந்தைக்குள்ளானோமானால், இரக்கமுள்ள மீட்பர் ஒருவர் நமக்காக காத்திருக்கொண்டிருப்பதை அறியவேண்டும்.

## பரிசுத்த ஆவியின் அனுதின புதுப்பித்தலுக்கான வாக்குத்தத்தங்களுடன் ஒரு மாதிரி ஜெபம்

பரமபிதாவே, எங்கள் இரட்சகராகிய இயேசுவின் நாமத்தில் நான் உங்களிடம் வருகிறேன். உன் இதயத்தை எனக்கு தா என்றீர் (நீதி 23:26). நான் இப்போது என்னையும் என்னிடம் உள்ளதையும் உங்களிடம் சமர்பிப்பதன் மூலம் அதைச்செய்ய விரும்புகிறேன். உமது சித்தத்தின்படி இதற்கு நீங்கள் ஏற்கனவே பதிலளித்தற்கு நன்றி. ஏனென்றால் உமது சித்தப்படி ஜெபித்தால் நாங்கள் ஏற்கனவே அதைப் பெற்றுவிட்டோம் என்று உங்கள் வார்த்தை கூறுகிறது (1யோவான் 5:15). மேலும் உங்களிடம் வருபவர்களை நீங்கள் புறம்பே தள்ள மாட்டேன் என்றும் கூறியுள்ளீர்கள். (யோவான் 6:37)

"பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா" என்று இயேசு கூறியுள்ளார். (லூக். 11:13)

உங்களை நம்புகிறவர்களுக்கு (யோவான் 7:38–39), உங்களுக்கு கீழ்படிகிறவர்களுக்கு (அப். 5:32), பரிசுத்த ஆவியால் தங்களைப் புதுப்பிக்க அனுமதிப்பவர்களுக்கு (எபே. 5:18), மற்றும் ஆவியில் நடப்பவர்களுக்கு (கலா. 5:16), உமது பரிசுத்த ஆவியை தருவதாக வாக்களித்துள்ளீர்கள். இதுவே என் விருப்பம். தயவு செய்து என்னில் இதை நிறைவேற்றுங்கள். இன்று எனக்கு பரிசுத்த ஆவியைக் கொடுக்கும்படி பிதாவே உம்மை மனதார வேண்டிக்கொள்கிறேன். இது உமது சித்தத்தின்படியான வேண்டுகோள் என்பதால், இப்போது எனக்கு பரிசுத்த ஆவியை அளித்ததற்கு உமக்கு நன்றி செலுத்துகிறேன் (1யோவான் 5:15). அதே வேளையில் உமது தெய்வீக அன்பை நான் பெற்றதற்கும் நன்றி, "மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்தஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது. (ரோமர் 5:5; எபே.3:17) என்று உமது வார்த்தை கூறுகிறது. சங்கீதக்காரனுடன் சேர்ந்து நானும் "என் பெலனாகிய கர்த்தாவே, உம்மில் அன்புகூருவேன்." (சங். 18:1) என்று சொல்ல விரும்புகிறேன். உமது அன்பினால் என் சகமனிதனையும் என்னால் நேசிக்க முடியும் என்பதற்கு நன்றி.

பரிசுத்த ஆவியினாலே பாவத்தின் வல்லமை என்னில் உடைக்கப்பட்டது என்பதற்கு நன்றி (ரோமர் 8:13; கலா.5:16). தயவு செய்து இன்று என்னை பாவத்திலிருந்தும், உலகத்திலிருந்தும், விழுந்துபோன தூதர்களிடமிருந்தும் காப்பாற்றுங்கள். சோதனையிலிருந்து என்னை காப்பாற்றுங்கள். தேவைப்படும்போது எனது பழைய கெட்ட சுபாவங்களிலிருந்தும் என்னைக் காப்பாற்றுங்கள் (1யோவான் 5:18). வார்த்தையிலும் செயலிலும் உம்முடைய சாட்சியாக இருக்க எனக்கு உதவுங்கள் (அப்போஸ்தலர் 1:8). நான் உம்மை புகழ்கிறேன், என் ஜெபத்தைக் கேட்டதற்கு நன்றி. ஆமென்.

✶ "கிறிஸ்துவுடன் சேர்ந்து பணியாற்றுபவர்களும், ஆண்டவரே, நானும் என்னிடம் இருப்பதெல்லாம் உம்முடையவைகள் என்று சொல்லுபவர்களும் மட்டுமே தேவனுடைய குமாரர் – குமாரத்திகளாக அங்கீகரிக்கப்படுவார்கள்." - E.G. White, The Desire of Ages (1898), p.523.1

தேவனின் கிருபையால் நாம் புதுபிக்கப்பட்டு ஆவிக்குரிய வாழ்க்கையை மீண்டும் நடத்துவதற்கான வழியை நாம் அறிந்துகொள்வது முக்கியம். யாரும் மாம்ச சிந்தையில் நிலைத்திருக்க வேண்டியதில்லை.

தனிப்பட்ட முறையிலும் பொதுவாகவும் ராண்டி மேக்ஸ்வெல் கூறியதை நினைவில் கொள்ள வேண்டும்: "ஆவிக்குரிய மரணத்தினின்று எவ்வித முயற்சியுமின்றி தேவ சபையை எழுப்பிவிடலாம் என்று நாம் நினைக்கிறோமா? - Randy Maxwell, If My People Pray (Pacific Press, 1995), p.158

இயேசுவின் மாபெரும் தியாகத்தினால் கிடைத்த பரிபூரண ஜீவனுக்கும், அனேகரின் இரட்சிப்புக்கும் நமது நன்றியும் முயற்சியும் மிகவும் பயனுள்ளது.. முக்கியமான விஷயம் என்னவென்றால் காலை தோறும் தெய்வ வழிபாட்டிற்காக நாம் அவரை சந்திப்பது மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் இங்குதான் அவர் நம்மை வல்லமையினால் உடுத்துவிக்கிறார்.

அப்போஸ்தலனாகிய யோவானைப் பற்றி நாம் பின்வருமாறு படிக்கிறோம். "நாளுக்கு நாள் அவனுடைய இதயம் கிறிஸ்துவை நோக்கி ஈர்க்கப்பட்டது. அவன் தனது எஜமானரின் மேல் வைத்த அன்பினால் தன்னையே மறந்தான். அவனுடைய எரிச்சலும், பேராசையும் கிறிஸ்துவின் வல்லமையால் ஒழிந்து போயின. பரிசுத்த ஆவியின் மறுபிறப்பின் செல்வாக்கு அவனுடைய இருதயத்தை புதுப்பித்தது. கிறிஸ்துவின் அன்பின் வல்லமை அவனது குணத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியது. இது இயேசுவோடு இணைந்ததன் உறுதியான விளைவு. கிறிஸ்து இதயத்தில் நிலைத்திருக்கும் போது, முழு இயல்பும் மாற்றமடைகிறது." – E.G. White, Steps to Christ (1892), p. 73.1

"உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும்" (சங்.119:18). ஆண்டவரே நீர் என்னை வழிநடத்தியதற்கு நன்றி, மேலும் நான் "மிகுந்த கொள்ளையுடைமையைக் கண்டுபிடிக்கிறவன் மகிழுகிறதுபோல, நான் உமது வார்த்தையின்பேரில் மகிழுகிறேன்" (சங். 119:162) என்று என்னால் சொல்ல முடியும்.

"தேவனுடைய
வாக்குத்தத்தங்களை நம்பி, சாந்தமும்
மனத்தாழ்மையுமாய் உள்ளவர்களுக்கு சேவை செய்ய
கண்ணுக்குப் புலப்படாத ஒளியும் வல்லமையும்
நிறைந்த சேனைகள் விரைந்து நிற்கின்றனர்."
- Christ Object Lessons p.176

## தனிப்பட்ட எண்ணங்கள் மற்றும் கலந்துரையாடலுக்கான வழிகாட்டி

மாதிரி ஜெபத்தை அச்சிட்டு நீங்கள் காலை வழிபாடு செய்யும் இடத்தில் வைக்கவும். எழுதப்பட்ட ஜெபத்தை வாசித்து ஜெபிப்பது ஆரம்பத்தில் விசித்திரமாக இருக்கலாம். பிரார்த்தனையைப் படியுங்கள். பின்னர் ஜெபியுங்கள். சிறிது நேரத்திற்குள் அது உங்களுக்கு மிகவும் இயல்பாகிவிடும்.

1. எழுதப்பட்ட ஜெபத்தைப் பயன்படுத்துவதைப் பற்றி நாம் ஏன் தயங்கத் தேவையில்லை?

   ______________________________

2. ஜெபத்தில் வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொண்டு கேட்பதன் விளைவுகள் என்ன?

   ______________________________

3. ஒரு ஆலோசனை: ஜெபத்தில் வெவ்வேறு வேத மொழிபெயர்ப்புகளிலிருந்து வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொண்டு கேட்பதற்கான இரண்டு முக்கிய பத்திகளைப் படிக்கவும். (1யோவான் 5:14,15 மற்றும் 2பேதுரு 1:3,4)

   ______________________________

4. அனுதினமும் தேவனின் பாதுகாப்பில் உங்களை வைப்பது ஏன் பயனுள்ளது? ______________________________

5. நாம் எப்படி ஆவிக்குரிய கிறிஸ்தவர்களாக இருக்க முடியும்?

   ______________________________

**<u>நமது ஜெப நேரம்</u>**

- ➢ உங்கள் ஜெப–பங்காளியுடன் தொடர்பு கொண்டு இந்த தலைப்பைப் பற்றி விவாதியுங்கள்.
- ➢ உங்கள் ஜெப–பங்காளியுடன் சேர்ந்து ஜெபியுங்கள்.

1. கர்த்தர் இன்று தம்முடைய பரிசுத்த ஆவியால் நிரப்புவார்.
2. அனுதினமும் நம்மை தேவனின் சிறப்புப் பாதுகாப்பின் கீழ் வைப்போமாக.
3. நாம் ஸ்திரமான ஆவிக்குரிய கிறிஸ்தவர்களாக இருப்போம்.

அத்தியாயம் - 6

நாள் 11

# நமக்கு முன்னுள்ள அனுபவங்கள் என்ன?

## தனிப்பட்ட அனுபவங்கள், அதே போல் சபை, கான்ஃபரன்ஸ் மற்றும் யூனியனிலிருந்து வரும் அனுபவங்கள்

### ஒரு சகோதரனின் அனுபவம்

கடந்த இரண்டு வருடங்களாக என் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியின் பொழிவுக்காக தினந்தோறும் நான் ஜெபித்து வருகிறேன். இவ்வாறு ஒவ்வொரு நாளும் இயேசு என்னில் பூரணமாய் ஜீவிக்க வேண்டும் என்பதே என் ஜெபம். இந்த கால கட்டத்தில் தேவனுடனான எனது பயணம் நம்ப முடியாத அளவிற்கு ஆசீர்வாதமாய் இருந்தது. நான் இயேசுவை என்னில் ஜீவிக்கவும், அவருடைய சித்தத்தை என்னில் செய்யவும், பரிசுத்த ஆவியால் என்னைப் புதுப்பிக்கவும் கேட்டுக்கொண்டபோது கலாத்தியர் 5ல் உள்ள ஆவியின் கனி என் வாழ்வில் அதிகமாகக் காணப்பட்டது. வேதாகமத்தைப் படிப்பதிலும் கிறிஸ்துவை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதிலும் எனக்கு அதிக மகிழ்ச்சி உண்டாயிருப்பதுடன், மற்றவர்களுக்காக ஜெபிப்பதற்கு எனக்குள் தீராத விருப்பம் உண்டாயிருக்கிறது; மேலும் என் வாழ்க்கைமுறை வியக்கத்தகு முறையில் மாறிவிட்டது. தேவனுக்கான எனது அனுதின தேடுதல் மற்றும் பரிசுத்த ஆவிக்கான எனது அன்றாட விண்ணப்பங்களின் உறுதிப்படுத்தலாக இவை அனைத்தையும் நான் பார்க்கிறேன் என்று பகிர்ந்து கொண்டார் - C.H.

பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டால் என்ன நடக்கும் என்பதைப் பார்க்க தொடர்ந்து ஆறு வாரங்களுக்கு தினமும் ஜெபிக்கும்படி நான் உங்களுக்கு அறைகூவல் விடுகிறேன்.

### செர்பியாவில் 40 நாள் பிரார்த்தனை

2010 செப்டம்பரில், 'இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாகும் ஜெபங்களும் தியானங்களும்' என்ற 40 – நாள் புத்தகத்தை மொழிபெயர்த்து வெளியிட்டோம். எங்கள் யூனியனில் உள்ள அனைத்து சபை

உறுப்பினர்களுக்கும் அது கிடைக்கும்படிச் செய்தோம். பின்னர் நாங்கள் வாராந்திர மற்றும் தினசரி ஜெபக்கூட்டங்களை 40 – நாட்களும் உள்ளூர் சபைகளிலும் அங்கத்தினர்களின் வீடுகளிலும் ஏற்பாடு செய்தோம், அங்குள்ள மக்கள் பரிசுத்த ஆவியின் புதிய பொழிவுக்காக உபவாசித்து ஜெபித்தனர்.

இது நடந்தவுடன் உள்ளூர் சபைகளில் முற்றிலும் புதிய சூழல் உருவாகத் தொடங்கியது. செயலற்ற சபை உறுப்பினர்கள் சுறுசுறுப்பாக மற்றவர்களுக்கு சேவை செய்வதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். வெவ்வேறு பிரச்சனைகளுக்காக பல ஆண்டுகளாக ஒருவருக்கொருவர் சண்டையிட்டவர்கள் (ஒருவருடன் ஒருவர் பேசுவதை கூட நிறுத்தி விட்டார்கள்) சமரசம் செய்துகொண்டு சமூக நலனுக்காக திட்டங்களை உருவாக்க தொடங்கினர்.

பின்னர் அக்டோபர் 2010ல் வருடாந்திர ஆலோசனையின்போது "எழுப்புதல் மற்றும் சீர்திருத்தத்திற்கான ஆரம்ப பணி" அறிமுகப் படுத்தப்பட்டது. தேவன் ஏற்கனவே எங்களது யூனியனில் தொடங்கியதன் தொடர்ச்சியாக அதை நாங்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டோம்.

இந்த ஜெபக்கூட்டங்களின் உடனடி விளைவாக, யூனியன் அதிகாரிகளிடையே நெருக்கமான ஐக்கியம், அதிக ஒற்றுமை மற்றும் சிறந்த பொதுவான புரிதல் ஆகியவற்றை எங்களால் காணமுடிந்தது. – M. Trajkovska, Southern European Union, Belgrade, quoted in www.revivalandreformation.org

### ஜுரிச் / சுவிட்சர்லாந்தில் 40 நாள் பிரார்த்தனை

எங்கள் போதகரும் நானும் தனித்தனியாக ஒவ்வொரு புத்தகத்தைப் பெற்றோம், அதன் உள்ளடக்கம் எங்களை பரவசப்படுத்தியது. அதன் தலைப்பு: 40 நாட்கள்: டென்னிஸ் சுமித்தால் எழுதப்பட்டு ரிவியூ & ஹெரால்டு பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட "இரண்டாவது வருகைக்கு ஆயத்தமாவது" பற்றிய ஜெப – தியான புத்தகத்தை படித்துமுடித்தபின் தூக்கி எரிந்துவிட முடியாது. அதன் உள்ளடங்கள் என்னை மாற்றின.

சுமார் 100 அங்கத்தினர்களையுடைய Zurich - Wolfswinkel-ல் உள்ள எங்களது சபை எழுப்புதல் மற்றும் ஜெபத்திற்கான ஒரு பெரிய தேவையை உணர்ந்ததால், 2011 இலையுதிர்காலத்தில் 40 – நாள் ஜெபத்திற்காக திட்டமிட்டோம். அதில் பயன்படுத்துவதற்காக இந்த புத்தகம் விரிவான மற்றும் மதிப்பு மிக்க தகவல்களைக் கொண்டிருந்ததுடன் கூடுதலாக அன்றாட ஆராதனைகளுக்கும் உகந்ததாயிருந்தது.

பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதல், ஜெபம், பிரசங்கம், இயேசுவின்

வாழ்க்கை மற்றும் ஆவிக்குரிய ஐக்கியம் ஆகியவற்றைப் பற்றிய தலைப்புகளை அந்த புத்தகம் கொண்டிருந்தது.

எனவே 40 நாள் கூட்டம் மிகுந்த எதிர்ப்பார்ப்புடனும் ஆவலுடனும் 2011ம் ஆண்டு அக்டோபர் 1ம் தேதி தொடங்கியது. அதிர்ஷ்டவசமாக, பெரும்பாலான சபை அங்கத்தினர்கள் அதில் பங்கேற்றனர். ஜெப–பங்காளிகள் தினமும் பிரார்த்தனை செய்ய சந்தித்தனர். அன்றாடம் குறுஞ்செய்திகள் அனுப்பப்பட்டன மற்றும் ஜனங்கள் ஒவ்வொரு நாளும் தொலைபேசியில் ஜெபம் செய்தனர். ஆராதனை மற்றும் ஜெபத்திற்காக ஒருகுழு தினமும் காலை 6 மணிக்கு கூடியது.

40 நாட்களும் எங்களுக்கு மறக்க முடியாத அனுபவம். தேவன் எங்களுடைய பல ஜெபங்களுக்கு பதிலளித்ததுடன், அதே வேளையில் நடந்த வேதாகம தீர்க்கதரிசன தொடர் கூட்டங்கள் மிகப்பெரிய ஆசீர்வாதமாக அமைந்தது. அதைத்தொடர்ந்து வரும் தீர்க்கதரிசன கருத்தரங்குக்கு 20 பேர் முன்பதிவு செய்திருந்ததோடு அநேக பார்வையாளர்கள் வந்தனர். (மார்ச் 2013 தொடர்ந்து கூட்டங்கள் நடைபெற்றது அதில் 50 – 60 விருந்தினர் கலந்துகொண்டனர். இது சூரிச்சில் 20 ஆண்டுகளில் நடந்திராத ஒன்று).

தேவ ஆவியானவர் எங்களது சபையில் தொடர்ந்து மாற்றங்களைச் கொண்டுவந்தார், மேலும் எங்களது சிறு குழுக்கள் எவ்வாறு வளரத் தொடங்குகின்றன என்பதையும், ஆர்வமுள்ளவர்களை கண்டுபிடித்து வேதபாட வகுப்புகளை நடத்துவதில் சபை உறுப்பினர்கள் ஆர்வத்தோடிருந்தனர். தேவனுடைய ஆவியினால் நடந்த இந்த தொடர் கூட்டங்களில் பங்கு பெற்றவர்கள் இப்போது மிகுந்த விருப்பம் கொண்டுள்ளனர். எங்கள் முழு இருதயத்திலிருந்தும் தேவனுக்கு நன்றி சொல்ல விரும்புகிறோம், அவருக்கே மகிமை உண்டாவதாக!

## கொலோன்/ஜெர்மனியில் 40 நாள் பிரார்த்தனையும் சுவிசேஷம் ஊழியங்களும்

போதகர் ஜோவா லோட்ஸே பிரேசிலில் வாழ்ந்த ஜெர்மனியர். அவர் பிரேசிலில் உள்ள சபை மற்றும் மருத்துவமனைகளில் 38 ஆண்டுகள் பணிபுரிந்தார். அதேபோல ஒரு யூனியன் மற்றும் தென்அமெரிக்கப் பிரிவில் பணியாற்றினார். அவர் மார்ச் 2012ல் ஓய்வு பெற்றார். அவரும் அவரது மனைவியும் கொலோனுக்கு "தேவகரங்கள் – மிஷினெரிகளாக" வந்து போர்ச்சுகீசிய மொழி மற்றும் ஸ்பானிஷ் பேசும் சபைகளில் பணியாற்ற ஒப்புக்கொண்டனர்.

சபை அங்கத்தினர்களை ஊக்குவிக்கவும் விருத்தினர்களை

அழைக்கவும் சிறிய பராமரிப்பு குழுக்களுடன் கொலோனில் தொடங்கினோம். பிரேசிலில் எங்கள் அனுபவத்தின் அடிப்படையில் நாங்கள் கொலோனில் 40 – நாள் பிரார்த்தனை செய்தோம். அதற்கான புத்தகங்கள் போர்த்துகீசிய மொழியில் கிடைத்தன.

போர்ச்சுகீஷ் – ஸ்பானிஷ் மற்றும் ஜெர்மன் மொழி பேசும் அங்கத்தினர்களைக் கொண்ட சபைகள் 40 – நாள் பிரார்த்தனையை மகிழ்ச்சியுடன் தொடங்கின. 100 நண்பர்கள் மற்றும் அறிமுகமானவர் களுக்காக தினமும் பிரார்த்தனை செய்தோம். இந்த நண்பர்களின் பெயர்கள் சபையில் ஒரு கரும்பலகையில் எழுதப்பட்டிருந்தன. எங்கள் பிரார்த்தனையின் 30 – 35 நாட்களை கடந்த பின்னர் நாங்கள் அவர்களுக்காக ஜெபித்துக் கொண்டு இருக்கிறோம் என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்தினோம். அதே நேரத்தில் விருந்தினர்களுக்கான சிறப்பு ஓய்வுநாள் நிகழ்ச்சிக்கு அவர்களை அழைத்தோம். சபையின் இந்த சிறப்பு ஆராதனைக்கு 120 பேர் வந்திருந்திருந்தனர். Nordrhein - Westfalen ஊழிய இலாக்கா இயக்குனர் கிறிஸ்டியன் படோர்ரெக் பிரசங்கத்தை நடத்தினார். சபைக்கு வந்திருந்த விருந்தினர்கள் கரும்பலகையில் தங்கள் பெயர்களைக் கண்டதும் மகிழ்ச்சியில் ஆனந்த கண்ணீர் வடித்தனர்.

அதன் பிறகு பிரேசிலைச் சேர்ந்த அன்டோனியோ கோன்கால்வ்ஸ் என்ற சுவிசேஷகர் 15 – நாள் சுவிசேஷ தொடர் கூட்டத்தை நடத்தினார். ஒவ்வொரு மாலையும் (மொழிபெயர்ப்புடன்) அவர் 1 மணி 30 நிமிடங்கள் பேசினார். "வேதாகமம் உங்களை ஆச்சரியப்படுத்தட்டும்" என்பதே இந்த தொடருக்கு கொடுக்கப்பட்ட தலைப்பு. தொடரின் தலைப்பு இரண்டாம் வருகையுடன் தொடர்புடையதாக இருந்தது. அதே போல் தானியேல் மற்றும் வெளிப்படுத்தின விசேஷத்தின் தலைப்புகளும், விரிவுரைகளும், பாடல்களும், போர்த்துகீசிய மொழியிலிருந்து ஜெர்மன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. ஒவ்வொரு மாலையும் பாடல் குழுவுடனான இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. ஒவ்வொரு மாலை நிகழ்ச்சியும் மீண்டும் வரும்படியான அழைப்புடன் நிறைவேறியது. அதற்கேற்றார்போல் விருந்தினர்களும் தவறாமல் வருகை புரிந்தனர். அதற்கு நாங்கள் நன்றி கூறுகிறோம். சபை அங்கத்தினர்கள் குறிப்பாக 40 – நாள் தொடர்களில் கலந்து கொண்டவர்களுக்காக தீவிரமாக ஜெபித்தனர்.

எங்கள் சபையில் 80 பேர் அமர வசதியுள்ளது. ஆனால் 100க்கும் அதிகமானோர் வந்திருந்தனர். வார இறுதிநாட்களில் சபை நிரம்பியிருந்தது. வாரத்தில் சராசரியாக சுமார் 60 பேர் கலந்து கொண்டனர். 32

விருந்தினர்கள் தவறாமல் கலந்து கொண்டனர். இக்கூட்டம் 8 பேர் ஞானஸ்நானம் பெறுவதற்கும் மற்றும் 14 பேர் ஞானஸ்நான வகுப்பில் சேர்வதற்கும் வழிவகுத்தது. ஆண்டின் இறுதியில் 13 பேர் திருமுழுக்கு பெற்றனர்.

பல ஆச்சர்யமான அனுபவங்களை பெற்றோம். மொழிபெயர்ப்பாளரைக் கண்டுபிடிப்பது கடினமாக இருந்தது. ஒரு கத்தோலிக்க ஆசிரியர் உதவ முன்வந்தார். ஆனால் அவருக்கு வேதாகம அனுபவம் இல்லை. பின்னர் நாங்கள் வேறொரு மொழி பெயர்ப்பாளருக்காக ஜெபித்தோம். விரைவில் உணவகத்தில் இருந்த ஒரு பெண்ணை பற்றி நாங்கள் கேள்விப்பட்டோம். அவர் பெந்தகோஸ்தே சபையில் போர்த்துகீசிய மொழியிலிருந்து ஜெர்மன் மொழிக்கு மிகுந்த மகிழ்சியுடன் மொழிபெயர்த்ததாகக் கூறினார். அவரே சுவிசேஷ தொடருக்கான எங்கள் மொழிபெயர்ப்பாளராக இருந்ததுடன், முடிவில் அவரும் ஞானஸ்நானம் பெற்றார்.

மொழிபெயர்ப்பாளரான மரியா தன் தோழி எலிசபெத்தை கூட்டத்திற்கு அழைத்து வரலாமா என்று கேட்டார். அவர் 13 உறுப்பினர்களுடன் கொலோனில் உள்ள ஒரு சிறிய கொலம்பிய சபையின் தலைவராக இருந்தார். அவள் தன் சபையில் இருந்த உறுப்பினர்களையும் தன்னுடன் அழைத்து வந்தாள். அப்போதிருந்து இவர்களில் இருவர் ஞானஸ்நானம் பெற்றுள்ளனர். எலிசபெத்தும் அவளுடைய குடும்பமும் இப்போது வேதபாடங்களை கற்று வருகின்றனர்.

ஹோப் சேனலுடன் இணைந்த மற்றொரு அனுபவம். ஒரு ஜெர்மானிய பெண்மனி தற்செயலாக ஹோப் சேனலைக் கண்டுபிடித்தார், மேலும் ஓய்வுநாளைப் பற்றிக் கூறப்பட்டவை உட்பட அவர் கேட்டவற்றால் மிகவும் ஈர்க்கப்பட்டார். தன்னுடன் அவற்றைக் கேட்க அவள் தன் கணவனையும் அழைத்தாள். அவரும் செய்திகளை மிகவும் ஆர்வத்துடன் கேட்டார். ஒரு நாள் அவள் தன் அம்மாவைப் பார்க்கச் சென்றபோது, அவர்கள் வாகனத்தை வேறொரு பாதையில் ஓட்டிச் செல்வதற்கு வழிநடத்தப்பட்டனர். வழியில் ஏழாம்–நாள் அட்வென்டிஸ்ட் சபைக்கான அடையாளம் காணப்பட்டது. ஹோப் சேனலில் இருந்து வந்த அட்வென்டிஸ்ட்டுகளாகத்தான் அவர்கள் இருக்க வேண்டும் என்பதை அவர்கள் உணர்ந்தனர். ஓய்வுநாளில் அவள் சபை ஆராதனைக்கு சென்றாள். பிறகு அவள் தன் கணவனையும் தன்னுடைய அம்மாவையும் தன்னுடன் வருமாறு அழைத்தாள். அது முதல் அவர்கள் மூவரும் ஞானஸ்நானம் பெற்றனர்.

மற்றொரு அனுபவம் ரஷ்ய – ஜெர்மன் சகோதரியை பற்றியது. அவர் 40

நாள் ஆராதனைக் கூட்டத்தில் பங்கேற்று ரஷ்ய மொழி பேசும் அண்டை வீட்டாருக்காக பிரார்த்தனை செய்யத் தொடங்கினார். உங்களுக்காக நான் ஜெபித்துக்கொண்டிருக்கிறேன் என்று அவள் தன் அண்டை வீட்டாரிடம் சொன்னபோது பக்கத்து வீட்டுக்காரர் ஆச்சரியப்பட்டு வேதாகம ஓய்வுநாளை கடைபிடிக்கும் ஒரு சபையைதான் அவர் தேடிக் கொண்டிருப்பதாகக் கூறினார். அவளும் மற்ற அண்டை வீட்டாரும் சுவிசேஷ தொடருக்கு வந்தனர். அதில் இருவர் ஞானஸ்நானம் பெற்றுள்ளனர்.

மற்றொரு அனுபவம் ஜுன் என்ற பெண்மணியைப் பற்றியது. பிரேசிலில் உள்ள பாப்டிஸ்ட் சபை உறுப்பினராக இருந்த அவள் இப்போது கொலோனில் போர்த்துகீசியம் பேசும் சபையை தேடிக்கொண்டிருந்தாள். அவள் அட்வென்டிஸ்ட் சபையுடன் தொடர்பு கொண்டு வேதபாடங்களை கற்று ஞானஸ்நானம் பெற்றாள். மதம் மாறிய பிறகு, பிரேசிலில் உள்ள தனது உறவினர்களை அழைத்து அட்வென்டிஸ்ட் சபையைத் சேர்ந்த தன் மாமாவிடம் தானும் இப்போது அட்வென்டிஸ்ட் என்று சொன்னாள். இது அவரது தாயருக்கும் அவரது உடன்பிறப்புகளுக்கும் மற்றும் பிரேசிலில் உள்ள பாப்டிஸ்ட் சபைக்கும் ஒரு பெரிய ஆச்சரியமாக இருந்தது. பிரேசிலில் உள்ள அவரது குடும்பத்தினர் ஓய்வுநாள் பற்றி தாங்களும் அறிந்து கொள்ள அட்வென்டிஸ்ட் சபைக்குச் சென்றனர். இது பிரேசிலில் ஐந்து பேர் ஞானஸ்நானம் பெற வழிவகுத்தது (அவரது தாயார், அவரது இரண்டு சகோதரிகள் மற்றும் பிற உறவினர்கள்). இப்போது அவர் அர்ஜென்டினாவில் வசிக்கும் தனது மற்றொரு சகோதரியின் மனமாற்றத்திற்காக பிரார்த்தனை செய்கிறார். தேவனுடைய ராஜ்யத்தில் அவர்களுடன் சேர்ந்து இருக்க விரும்புகிறாள்.

தேவவழிநடத்தலின் கீழ் நாம் இன்னும் பல அனுபவங்களைப் பெற்றிருக்கிறோம். முதல் ஞானஸ்நானத்தில் – இத்தாலி, ஜெர்மனி, பெரு, பிரேசில், உக்ரைன், வெனிசுலா, கொலம்பியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளிலிருந்து தலா ஒருவர் ஆக மொத்தம் எட்டு பேர் திருமுழுக்கு பெற்றனர்.

இலையுதிர் காலத்தில் நாங்கள் மீண்டும் 40 நாள் தொழுகை தொடர்பான ஒரு சுவிசேஷ தொடரை நடத்தினோம். பிரேசிலில் இருந்து வந்த ஜிம்மி கார்டோசர் மற்றும் அவரது மனைவி சுவிசேஷ தொடரை நடத்தினர், தற்போது அவர்கள் அமெரிக்காவில் வசித்து வருகின்றனர். இந்தத் தொடர் ஒரு வாரம் மட்டுமே நீடித்தது என்றாலும் முடிவில் அருமையான நான்கு ஆத்துமாக்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க முடிந்தது. அவர்கள் ஏற்கனவே வேத பாடங்களை கற்றுக்கொண்டு வந்தனர். அதில் மூன்று

ஜெர்மானியர்களும் ஒரு இத்தாலியரும் இருந்தனர்.

இரண்டு ஞானஸ்நான நிகழ்ச்சிகளும் நல்ல வசதியுடன் 400 உறுப்பினர்களைக் கொண்ட கொலோனில் உள்ள பிரதான சபையில் நடைபெற்றன.

தேவன் எங்களை இவ்வளவு பெரிய விதத்தில் ஆச்சரியப் படுத்தியதற்காக நாங்கள் அவருக்கு நன்றி கூறுகிறோம். அவர் இன்னும் பெரிய அனுபவங்களை எங்களுக்கு வைத்திருக்கிறார் என்று நான் உறுதியாக நம்புகிறேன். தயவுசெய்து எங்களை உங்கள் ஜெபத்தில் நினைத்துக் கொள்ளுங்கள். - Joao Lotze, Colonge, Germany.

**முக்கிய பரிந்துரை:** நான் முதலில் 40 – நாள் புத்தகத்தை படித்தேன். முதல் பக்கத்திலிருந்தே அது என்னை மிகவும் கவர்ந்தது. நாம் ஒரு நபருக்காக வெறுமனே ஜெபம் மட்டும் செய்யாமல் அவரிடம் அன்பான அக்கறையும் காட்ட வேண்டும். இது பரிந்துரை ஜெபத்தை உயிருள்ளதாக்குகிறது. துரதிர்ஷ்டவசமாக இதற்கு முன்பு நான் இப்பேர்பட்ட பரிந்துரையை பார்த்ததில்லை. உங்கள் விசுவாசத்தை வாழ்ந்து காட்டுங்கள்! பிரார்த்தனை செய்யும் நபருக்கும், பிரார்த்தனை செய்யப்படும் நபருக்கும் இது மிகவும் முக்கியமானது என்று நான் உறுதியாக நம்புகிறேன். அப்படிச் செய்யும்போது சபையின் ஐக்கியம் பலப்படுத்தப்படும் என்பதை ஆரம்பத்திலிருந்தே அது எனக்கு உணர்த்தியது. இந்த புத்தகத்தின் கடைசி அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டுள்ளபடி அத்தகைய ஐக்கியம் உண்டாகும் என்று நம்புகிறேன். உண்மையைச் சொல்வதானால், நான் நீண்டகாலமாக அத்தகைய ஐக்கியத்திற்காக ஏங்கினேன். ‘கிறிஸ்து என்னில்’ (Christ in me) என்ற புத்தகம் நமக்கு பெலனளித்து நம்முடைய சொந்த முயற்சிகளிலிருந்து நம்மை விடுவிக்கிறது என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். நான் கிறிஸ்துவைப் பற்றி பல புத்தகங்களை படித்திருக்கிறேன். ஆனால் இந்த புத்தகம் மிகவும் பயனள்ளதாக இருக்கிறது. உங்கள் ஜெப வாழ்க்கை இந்தப் புத்தகத்தால் பலப்படுத்தப்படும், சபையின் ஐக்கியம் வளர்க்கப்படும் என்பதோடு பரிந்து பேசுதலை மேலும் அது உயிர்ப்பிக்கும் என்றும் நான் நம்புகிறேன். இந்தப் புத்தகம் என் மீதும் சபையின் மீதும் உலகத்தின் மீதும் நம்பிக்கையைத் தருகிறது. இந்த புத்தகத்திற்காக நான் தேவனுக்கு நன்றி கூறுகிறேன். அடுத்து ‘40 நாள் வழிகாட்டி’ என்ற புத்தகத்தைப் படித்து அதன் மீது ஜெபித்து: தேவன் காண்பிக்கும் இடமெல்லாம் எடுத்துச்செல்ல திட்டமிட்டுள்ளேன்.

**சில வாரங்களுக்குப் பின்** இந்த சகோதரியிடமிருந்து எனக்கு

மற்றொரு மின்னஞ்சல் வந்தது. "நான் முதலில் புத்தகத்தைப் மேலோட்டாகப் படித்தேன் என்று உங்களுக்குத் தெரியும். ஆனால் நான் என் ஜெப– பங்காளியுடன் தியான புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்ததிலிருந்து முதலில் நான் நினைத்ததைவிட அவை மிகவும் மதிப்பு மிக்கவை என்பதை நான் கண்டுபிடித்தேன். சொந்தமாகச் என்னால் செய்ய முடியாத விஷயங்களுக்குகூட நான் பதில்களைப் பெற்றுள்ளேன். தீவிரமாகவும் சுறுசுறுப்பாகவும் என்னுடன் பங்கேற்கும் எனது ஜெப பங்காளிக்காக நான் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்." - H.K.

**இனியும் உறுதியாக தெரியவில்லை:** "தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்" என்ற சிறு புத்தகம் என்னை அசாதாரணமாக தொட்டது. அட்வென்டிஸ்ட் குடும்பத்தில் பிறந்ததால் நான் சரியான பாதையில் செல்கிறேன் என்று நம்பினேன். பத்து கன்னிகைகள் பற்றிய அத்தியாயம் மற்றும் குறிப்பாக ரோமர் 8:9 "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல" என்பது உண்மையில் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. திடீரென என்னிடம் பரிசுத்த ஆவி இருக்கிறதா? என்னில் அவர் கிரியை செய்கிறாரா? என்று எனக்கு தெரியவில்லை, ஏனென்றால் பரிசுத்த ஆவியானவருடன் தொடர்புடைய கனிகளை என் வாழ்க்கையில் நான் இழந்திருக்கிறேன். இந்த ஒய்வுநாள் மதியம் நான் அந்த சிறு புத்தகத்தைப் படித்து முடித்தேன். பரிசுத்த ஆவியானவரைப் பெறவும் அவர் என்னுடைய இருதயத்தை மாற்றவும், தேவன் தம்முடைய சித்தத்தின்படி என்னை உருவாக்கவும் வேண்டும் என எனக்குள் ஆழமான பாரம் வந்தது. -A.P

**அவரைத் அறிந்து கொள்:** சிறிது காலத்திற்கு முன்பு எழுப்புதல் பற்றிய உங்கள் கட்டுரையை படித்தேன். சுமார் மூன்று ஆண்டுகளாக இந்த பொருள் குறித்து அறிந்து கொள்வதில் நான் மிகவும் ஆர்வமாக இருக்கிறேன். இப்போது "தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்" புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தேன். அதற்கு 'ஆமென்' என்று மட்டுமே என்னால் சொல்ல முடியும்! இந்தப் பக்கங்களில் எனது சொந்த எண்ணங்கள் பலவற்றைக் கண்டதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நம்முடைய சபையில் – நம்முடைய இலக்கை ஒரே ஒரு அங்குலத்தில் இழந்திருக்கிறோம் என்ற எண்ணத்தில் இருக்கிறேன். அத்தியாவசியமான ஒன்றை நாம் இழந்துவிட்டோம் என்ற உணர்வை என்னிலிருந்து நீக்க முடியவில்லை. பெரும்பாலும் சத்தியம் என்றால் என்ன? நாம் எப்படி வாழவேண்டும் அல்லது தீர்க்கதரிசனம் எவ்வளவு முக்கியமானது என்பதுடன் இது தொடர்புடையது. இதை தவறு என்று நான் கூறவில்லை. ஆனால் தேவன் ஏன் இவற்றைக்

கொடுத்தார் என்பதை நாம் கவனிக்க தவறிவிட்டோமா? சத்தியம் தேவனுடன் முழுமையான ஐக்கியத்தை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லையா? மாறாக இந்தப் பகுதிகள் – தேவனை அறிந்து கொள்ள நமக்கு உதவ வேண்டாமா? தீர்க்கதரிசனத்தின் நோக்கம்: தேவனின் மகத்துவத்தையும் அவருடைய சர்வ வல்லமையையும் ஒப்புக்கொள்வதுடன், அவர் முழு உலகத்தையும் தன் கட்டுப்பாட்டில் வைத்து வழிநடத்துவதைப் போல, நம் வாழ்க்கையையும் வழிநடத்தவும் வடிவமைக்கவும் அவரால் முடியும் என்பதைப் புரிந்துகொள்வது அல்லவா? நித்திய ஜீவன் என்றால் என்ன? யோவான் 17:3. "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்." மணவாளன் பற்றிய உவமையில் ஐந்து புத்தியில்லாத கன்னிகைகளிடம் "நான் உங்களை அறியேன்" என்று கூறுகிறார். நம்முடைய விசுவாசத்தின் குறிக்கோள் தேவனை அறிந்து கொள்வதும் அவருடன் ஐக்கியம் கொள்வதுமேயாம். அப்பொழுது அவர் பரிசுத்தஸ்தலத்தை நிரப்பியது போல் இப்பொழுது நம்மையும் நிரப்ப முடியும் (2நாளா. 5:13–14). அவர் நம்மை நிரப்பி, நம் வழியாகப் பாயும்போது, நாம் அல்ல கிறிஸ்துவே நம்மில் வாழ்கிறார்." (இதை எழுதினவர் யார் என்பதை ஆசிரியர் அறிவார்).

### பரிந்துபேசும் ஜெபத்திற்கு அற்புதமான பதில்கள்

டென்னிஸ் ஸ்மித்தின் இரண்டாவது 40 – நாள் புத்தகம் எனக்கு ஒரு நம்பமுடியாத ஆசீர்வாதம். நான் ஜெபித்தவர்களில் சிலர் தங்கள் வாழ்க்கையில் 180 டிகிரி ஓட்டத்தை அனுபவித்திருக்கிறார்கள்.

40 நாட்களில் நான் ஒரு நண்பருடன் ஆழ்ந்த ஆவிக்குரிய உரையாடலை மேற்கொண்டேன். கடந்த சில வாரங்களில் அவரது வாழ்க்கை ஒரு வித்தியாசமான மாற்றத்தை கண்டதாக அவர் என்னிடம் கூறினார். அவருக்காக ஜெபிக்க வேண்டிய தேவை அதிகமாக இருந்தது, தேவனுடைய வார்த்தையைப் பற்றி அதிகம் சிந்தித்துக் கொண்டிருந்தார், மேலும் முன்பு அவருக்கு மிகவும் முக்கியமானதென்று நினைத்ததையும் மேலும் அவர் விரும்பிய விஷயங்களை விட்டுவிட முடிந்தது. நான் தைரியமாக எழுந்து 40 நாள் புத்தகத்தைப் பற்றி சொன்னேன், மேலும் நான் பிரார்த்தனை செய்யும் ஐந்து பேரில் அவரும் ஒருவர் என்றும் அவரிடம் சொன்னேன். பின்னர் அவர் நேர்மறையான ஆச்சரியத்துடன் அப்படியானால் இந்த விஷயங்கள் அனைத்திற்கும் நீங்களே பொறுப்பு என பதிலளித்தார்.

ஒரு பெண் தன் வாழ்க்கையை 100% தேவனுக்கு அர்ப்பணிக்க முடிவு

செய்தாள். சிறுவயதிலிருந்தே அவள் விசுவாசியாக இருந்தாலும், தேவன் இல்லாதவள் போலவே வாழ்ந்தாள். அவள் இப்போது முற்றிலும் மாறிவிட்டாள். அவளை அறிந்த மற்றும் அவளைப் பார்க்கும் அனைவரும் இப்போது ஆச்சரியப்படுகிறார்கள். அவள் இப்போது என்னுடன் வேதாகமத்தைப் படிக்கிறாள், எங்கள் சபையில் நடைபெறும் 40 – நாள் நிகழ்ச்சியில் பங்கேற்பதுடன், தீவிரமான விசுவாச – வாழ்க்கையைப் பெற மற்றவர்களை ஊக்குவிக்க விரும்புகிறாள்.

நான் ஜெபித்த மற்றொரு இளம்பெண், ஒரு வார கால பயிற்சி வகுப்பில் பங்கேற்க வேண்டியிருந்தது, அதற்காக மற்ற பங்கேற்பாளருடன் தங்கும் விடுதிகளில் அவள் தங்க வேண்டியிருந்தது. இந்த ஒருவார காலத்தை அந்நியர்களுடன் செலவிடுவதைப் பற்றி அவள் கவலைப்பட்டாள். அவள் புறப்படுவதற்கு ஒரு நாளைக்கு முன்பு நான் அவளை ஜெபத்தில் ஊக்குவித்தேன். அவளுக்காக நான் நீண்ட காலமாக ஜெபித்து வருகிறேன் என்று சொன்னேன். எனவே இந்த சூழ்நிலையில் தேவன் அவளுக்கு அமைதியைத் தர வேண்டும் என்றும், அங்கு அவள் பெறப்போகிற அனுபவம் நாங்கள் செய்யும் ஜெபத்திற்கு பதிலாக அமைய வேண்டும் என்றும் பிரார்த்தனை செய்தோம். பயிற்சியின் போது அவள் என்னைக் கூப்பிட்டு தேவன் தனக்கு நம்பமுடியாத ஒன்றை செய்தாதாகச் சொன்னாள். அவர் எனக்கு அமைதியைக் கொடுத்தது மட்டுமல்லாமல், மாலை நேர கேளிக்கைகளில் (டிஸ்கோ டான்ஸ் & மது அருந்துதல்) பங்கேற்க வேண்டாம் என்ற தைரியத்தையும் கொடுத்தார் என்றாள்.

40 நாட்களுக்குப் பிறகும், இந்த மக்களுக்காக நான் தொடர்ந்து ஜெபித்து வருகிறேன். ஏனென்றால் தேவன் ஜெபத்திற்கு பதிலளிக்கும் சிறந்த வழிகளைக் கேட்டதோடு மட்டுமல்ல பார்க்கவும் செய்தேன். - A.M (சுருக்கப்பட்டது)

### பரிந்து பேசுவதன் மூலம் தேவன் எவ்வாறு செயல்படுகிறார்

கடந்த ஐந்து வருடங்களில் ஒரு முக்கியமான நபருடன் நான் தொடர்பு கொள்ளவே இல்லை. அவன் எனது செய்திகளை புறக்கணிப்பது போல் இருந்தது. கடந்த மூன்று வருடங்களாக அவன் சபைக்குச் செல்லவில்;லை என்று கேள்விப்பட்டேன். (அவன் சபையில் வளர்ந்தவன்) மேலும் அவன் ஒரு கிறிஸ்தவர் அல்லாத பெண்ணுடன் உறவில் இருந்தான். நான் இந்த இளைஞனை எனது பிரார்த்தனை பட்டியலில் சேர்ந்தேன், அவன் 600 கிமீ தொலைவில் வசிப்பதால் அவனுடன் மீண்டும் தொடர்பு கொள்வது சாத்தியமில்லை என்று நான் நினைத்தேன், அவனும் எனக்கு

பதிலளிக்கவில்லை. இருந்தபோதிலும், எனக்கு ஒரு அடையாளம் கொடுக்க வேண்டிக்கொண்டேன்.

வெகுசீக்கிரத்தில் அவனது சகோதரன் ஞானஸ்நானம் பெறவிருப்பது பற்றிய குறுஞ்செய்தி அறிவிப்பை நான் கேள்விப்பட்டேன். இது நான் இருக்கும் இடத்துக்கு அருகில் மற்றும் 40 நாள் பிரார்த்தனையின் போது ஒரு நாள் நடந்தது. (இது முதலில் மற்றொரு தேதிக்கு திட்டமிடப்பட்டிருந்தது). நான் கலந்து கொள்ள முடிவு செய்து அவனைச் சந்தித்தேன்! எங்களால் மிக ஆழமான விவாதம் செய்ய முடிந்தது, மேலும் அவன் என்னிடம் சமீப காலமாக தேவனிடம் திரும்பி வர வேண்டிய தேவை அதிகமாக ஏற்பட்டதாகவும், ஆனால் தனது வாழ்க்கை முறையை மாற்றும் சக்தியை தான் பெற்றிருக்கவில்லை என்றும் கூறினான். கடந்த 20 நாட்களாக நான் அவனுக்காக தீவிரமாக ஜெபித்து வருகிறேன் என்றும் அதற்கு முன்பும் அவன் என் பிரார்த்தனை பட்டியலில் இருந்தான் என்றும் கூறினேன். சரியாக இந்த நேரத்தில் தேவன் தன்னில் கிரியை செய்வதை உணர்ந்ததாக அவன் போசாமல் இருந்தான்.

ஞானஸ்நான ஆராதனையில் போதகர் அழைப்புக் கொடுத்தபோது அவன் மிகவும் உணர்ச்சிவயப்பட்டவனாயிருந்தான். அவனுக்குள் நடக்கும் போராட்டதை என்னால் உணர முடிந்தது, நீண்ட போராட்டத்திற்குப் பிறகு கடைசியாக அவன் முழங்காலில் நின்று அழ ஆரம்பித்தான். மீண்டும் தேவனிடம் தன்னை ஒப்புக்கொடுத்தான்! மாலையில் அவன் மீண்டும் சபைக்கு தவறாமல் செல்லவும், தனது வாழ்க்கை முறையை மாற்றவும் முடிவு செய்ததாக என்னிடம் கூறினான். இந்த வார இறுதியில் இப்படி முடியும் என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை.

சில வாரங்களுக்குப் பிறகு நான் அவனை ஒரு வாலிபர் மாநாட்டில் சந்தித்தேன், அது அவனை மீண்டும் பலப்படுத்தியதோடு அவனை தட்டியெழுப்பியது. ஒரு அன்பான நபரின் மனந்திரும்புதலுக்காக நான் தேவனுக்கு நன்றி கூறுகிறேன். - M.H.

### ஜெர்மனியில் உள்ள லுட்விக்ஸ்பர்க் / பேடன்-வுர்ட்டம்பெர்க் சபை

முதலில் நாங்கள் 40 – நாள் புத்தகத்தை இரண்டு பேர்களாக சேர்ந்து படித்தோம். மேலும் பிரார்த்தனையின்போது தனிப்பட்ட பலன்களையும் ஆசீர்வாதங்களையும் அனுபவித்தோம். பிறகு வாரத்திற்கு இருமுறை சபையில் ஒரு பிரார்த்தனைக் கூட்டத்தை ஏற்பாடு செய்து, சபை அங்கத்தினர்களுடன் புத்தகத்தைப் படித்தோம். 40 நாட்களில் நாங்கள் தேவனின் ஆசீர்வாதத்தையும் வழிநடத்துதலையும் தெளிவாக பெற்று பல

அற்புதங்களை அனுபவித்தோம். சபையாக தேவன் எங்களுக்கு புத்துணர்ச்சியூட்டி, புத்துயிர் அளித்தார்: அந்நியர்களுடன் பேசுவதற்கு ஒருபோதும் தைரியம் இல்லாத சபை அங்கத்தினர்கள் திடீரென்று தங்களாகவே அந்நியர்களுடன் பேசினார்கள். ஜெபத்தின் மூலம் தேவன் நம்மை ஒரு சபையாக நெருக்கமாக இணைக்கிறார். 40 நாட்களில் நாங்கள் ஐந்து பேருக்காக விசேஷமாக ஜெபித்தோம். இந்த மக்களின் வாழ்க்கையில் தேவன் சிறப்பான வழியில் கிரியைச் செய்தார். அந்த தெருவில் வசித்த மக்கள் அவ்வப்பொழுது ஓய்வுநாள் சபை ஆராதனையில் கலந்து கொள்ள வருவார்கள். இந்தக் குடும்பங்களில் ஒரு குடும்பத்திற்கு நாங்கள் வேதபாடங்களை கொடுத்து வருகிறோம். அவர்கள் இணையத்தில் உள்ள வீடியோக்கள் மற்றும் 'மாபெரும் ஆன்மீகப் போராட்டம்' புத்தகத்தின் மூலம் ஓய்வுநாளைப்பற்றி அறிந்து சில காலமாக அதை கடைபிடிக்கும் ஒரு சபையை தேடிக் கொண்டிருந்தனர். – Katja and Christian Schindler, Seventh - Day Adventist Church in Ludwigsburg ( Shortened version)

## 40 - நாள் அனுபவம்

'தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்' என்ற கருத்தரங்கில் இவையெல்லாம் தொடங்கியது. அச்சமயத்தில் என் அன்றாட வாழ்க்கையில் தேவனை கண்டடைய வேண்டும் என்ற விருப்பம் எனக்குள் வளர்ந்தது. அப்போது 40 – நாள் பிரார்த்தனை மற்றும் தியானம் பற்றி கேள்விப்பட்டேன். இது எனக்கு ஒரு நல்ல தெளிவைக் கொடுத்தது. ஆகவே நான் இந்த தருணத்தை பயன்படுத்திக்கொள்ள விரும்பினேன். உண்மையில், நான் என்ன செய்யப் போகிறேன் என்று எனக்குத் தெரியாது. பொருத்தமான ஜெப–பங்காளியை கண்டுபிடிப்பது எனக்கு கடினமாகத் தெரியவில்லை. ஆனால் 40 நாட்களுக்கு நேரத்தைக் கண்டுபிடிப்பதே எனக்கு பெரும் சவாலாக இருந்தது. ஒரு செவிலியராக எனக்கு மிகவும் ஒழுங்கற்ற வேலை நேரம் அமைந்துள்ளது. நான் அதைப்பற்றி யோசிக்கவே இல்லை. ஆயினும் கூட தேவன் என்முடிவை ஆரம்பத்தில் இருந்தே ஆசீர்வதித்தார். அந்த நாளின் விலைமதிப்பற்ற நிமிடங்களுக்காக நான் ஏக்கத்துடன் காத்திருந்தேன், அதில் தலைப்பைப் பற்றி ஒருவொருக்கொருவர் பகிர்ந்து கொள்ளலாம் மற்றும் பரிசுத்த ஆவிக்காக மன்றாடலாம். ஜெபம் எங்கள் வாழ்வில் ஏதோ மாற்றத்தை ஏற்படுத்தியதைக் கண்டுபிடித்தோம். மேலும் எங்களுக்குள்ளேயே அதை வைத்திருக்க முடியவில்லை. வந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாங்கள் எதையாவது பகிர்ந்து கொள்வதில் ஈர்க்கப்பட்டோம். அதே அனுபவத்தைப் பெற மற்றவர்களை ஊக்குவிப்பது எனக்கு முக்கியமானது. அதன் விளைவை உடனே காண முடிந்தது. சில

சபை அங்கத்தினர்கள் எங்கள் உற்சாகத்தால் தொடப்பட்டனர். விரைவில் புதிய நபர்கள் ஆராதனைக்கு வருகை புரிந்தனர். நாங்கள் அனுபவித்ததை ஒவ்வொரு வாரமும் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள ஆவலோடு எதிர்பார்த்தோம். இந்த வைரஸ் நம் இளைஞர்கள் சிலராலும் பிடிக்கப்பட்டது. அந்த **40 –** நாள் மிக விவைாக முடிவுக்கு வந்தது. எங்களுடைய ஆர்வத்தை நிறுத்த முடியாததால் அதை நாங்கள் விரும்பவில்லை. எனவே எலன் ஜி உவைட் எழுதிய 'மாரநாதா' – தேவன் வருகிறார் என்ற புத்தகத்துடன் எங்கள் ஆராதனை நேரத்தைத் தொடர்ந்தோம். மேலும் தேவன் எங்களை நீண்ட நேரம் காத்திருக்க வைக்கவில்லை. **40** நாட்களில் அவர் ஜெபத்திற்கு பல அற்புதமான பதில்களைக் கொடுத்தார். இந்த நேரத்தில் நாங்கள் பிரார்த்தனை செய்த ஒருவர் நீண்ட நாட்களுக்குப் பிறகு மீண்டும் சபையுடன் தொடர்பு கொண்டார். நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தோம். என்னைச் சுற்றியுள்ளவர்கள் எனக்கு மிகவும் முக்கியமானவர்களாக மாறினர். தேவனின் அன்பை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற என் விருப்பம் என்னில் வலுப்பெற்றது, என் வாழ்க்கை மாறியது. எங்களில் பலர் ஒருவரையொருவர் நன்கு அறிந்து புரிந்து கொண்டோம். ஒருவருக்கொருவர் உதவுவதிலும் ஒருவருடைய வாழ்க்கையில் ஒருவர் பங்கு கொள்வதிலும் மகிழ்ச்சி உண்டாயிருக்கிறது. ஐக்கியம் என்பது முற்றிலும் புதிய அர்த்தம் கொண்டுள்ளது. டென்னிஸ் ஸ்மித்தின் **40 –** நாள் ஜெபம் மற்றும் ஆராதனை எனக்கு பேருதவியாக இருந்தது. தேவனுடனான என் அனுபவம் ஒரு ஜெப–பங்காளியைக் கண்டுபிடிப்பதை விட எளிதானது. எங்களுக்குப் பிரியமானவர்கள் அதற்கு நன்றி சொல்வார்கள்." Hildegard Welker, Crailsheim Seventh-Day Adventist Church, is a nurse on the surgical ward. (சற்று சுருக்கப்பட்டது).

## இயேசுவே நமது உதாரணம்

எல்லாவற்றிலும் இயேசுவே நமக்கு சிறந்த முன்மாதிரி. லூக்கா **3:21–22**ல் "ஜனங்களெல்லாரும் ஞானஸ்நானம் பெற்றபோது, இயேசுவும் ஞானஸ்நானம் பெற்று, ஜெபம்பண்ணுகையில், வானம் திறக்கப்பட்டது; பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப்போல அவர்மேல் இறங்கினார்."

இந்த நிகழ்வைப் பற்றி எலன் உவைட் பின்வருமாறு கூறினார்: "பிதாவிடம் அவர் செய்த ஜெபத்திற்கு பதிலளிக்கும் விதமாக, பரலோகம் திறக்கப்பட்டது, மேலும் ஆவியானவர் புறாவைப் போல இறங்கி அவர் மீது தங்கினார்." – E.G. White, Ye Shall Receive Power (1995), p.14.4

அவரது ஊழியத்தின் போது என்ன நடந்தது என்பது ஆச்சரியமாக இருக்கிறது: "காலைதோறும் அவர் பரலோகத்தில் உள்ள தமது பிதாவுடன் தொடர்பு கொண்டு, அவரிடமிருந்து தினமும் பரிசுத்த ஆவியின் புதிய ஞானஸ்நானத்தைப் பெற்றார்." - E.G. White, Signs of the Time, Nov 21, 1895.

இயேசுவுக்கே பரிசுத்த ஆவியின் புதிய ஞானஸ்நானம் அனுதினமும் தேவையாயிருந்தது என்றால் நமக்கு இன்னும் எவ்வளவு தேவை!

---

நமக்கு முன் உள்ள அனுபவங்கள் என்ன? / நாள் 11

## தனிப்பட்ட எண்ணங்கள் மற்றும் கலந்துரையாடலுக்கான வழிகாட்டி

1. பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட வேண்டும் என்று கேட்ட மக்களின் அனுபவங்கள் என்ன?

________________________________________

________________________________________

2. உங்களுக்கும் உங்கள் சபையின் வாழ்க்கைக்கும் என்ன மாற்றங்களை விரும்புகிறீர்கள்? __________________________

________________________________________

3. பரிசுத்த ஆவியின் வழிகாட்டுதலால் நீங்கள் தனிப்பட்ட முறையில் என்ன மாற்றங்களைச் செய்யலாம்?

________________________________________

________________________________________

### நமது ஜெப நேரம்

- ➢ உங்கள் ஜெப–பங்காளியுடன் தொடர்பு கொண்டு இந்த தலைப்பைப் பற்றி விவாதியுங்கள்.
- ➢ உங்கள் ஜெப–பங்காளியுடன் சேர்ந்து ஜெபியுங்கள்.

1. கர்த்தர் நம்மைப் பரிசுத்த ஆவியால் நிரப்புகிறார்.
2. நம்மையும் நம்மிடம் இருப்பதையும் இன்று கர்த்தருக்கு மகிழ்ச்சியுடன் சமர்ப்பிப்போம்.
3. உங்கள் பரிந்துரை பிரார்த்தனை பட்டியலில் உள்ளவர்களுக்காக ஜெபியுங்கள்.

நாள் 12

# ஆர்வமும் பகிர்வும்

**நாம் பிறருக்குக் கொடுக்கும் சந்தோஷம் நமது இதயத்திற்கே திரும்புகிறது (ஜெர்மன் பழமொழி)**
**மற்றவர்கள் "பரிபூரண ஜீவனை" அனுபவிக்க நான் எப்படி உதவ முடியும்? (யோவான் 10:10)**

### ஆவி நிரம்பிய வாழ்வில் ஆர்வத்தைக் தூண்டுவது எப்படி?

தலைவர்களும் சபைகளும் என்ன செய்ய முடியும்? தலைவர்களாக (எ.கா. தலைவர், போதகர், சபை / மிஷின் செயலாளர், நிறுவனங்களின் தலைவர்கள், சபை நிர்வாகக்குழு, சபை – குழுக்களுடன் இணைந்து செயல்படும் பிற முக்கிய நபர்கள்) நாம் என்ன செய்ய முடியும் என்பதைக் காட்டும் சில சாத்தியங்கள் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன.

### சாத்தியங்கள்

**1. இரண்டு பேரைக்கொண்ட வழிபாட்டு குழு:** தம்பதியாகவோ அல்லது மற்றொரு ஜெப – பங்காளியுடனோ, 40 – நாள் தொழுகை பற்றி படிக்கவும். "இரண்டாவது வருகைக்கு ஆயத்தமாகுதல்" என்ற பொருளில் டென்னிஸ் ஸ்மித்தால் எழுதப்பட்ட 40 நாள் – ஜெப தியானத்துடன் முதலில் ஆரம்பிக்கவும். மறுபரிசீலனை மற்றும் அறிவிப்புக்குப்பின் இரண்டாவது 40 – நாள் புத்தகமான "தேவனுடனான உங்கள் அனுபவத்தை புதுப்பித்தல்" பற்றிய ஜெப தியானத்தை பயன்படுத்தவும். தம்பதிகளாக இணைந்து தொழுது கொள்வது மிகுந்த பயனளிக்கக் கூடியதும், அவர்களிடையே பரஸ்பர பாசத்தை தூண்டுவதாகவும் அமையும். இயல்பாகவே, நீங்கள் மற்றவருடன் சேர்ந்து வழிபடலாம். தனிப்பட்ட முறையில் ஓரிடத்தில் கூடி ஜெபிப்பது சிறந்ததாக இருக்குமென்றாலும், தொலைபேசி அல்லது ஸ்கைப் அல்லது பிற ஊடகங்களின் மூலமும் செய்யலாம். இரண்டு இரண்டு பேர்களாக கொண்ட ஜெப குழுக்கள் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. நாம் இருவராக ஜெபிக்க வேண்டும் (மத் 18:19) மற்றும் இருவராக வேலை செய்ய வேண்டும் என்று தேவனின் வார்த்தை பரிந்துரைக்கிறது (லூக் 10:1). இந்த வழிபாட்டு முறை மற்றவர்களையும் அவ்வாறு செய்ய தூண்டுவதற்கு சிறந்த முன்நிபந்தனையாகும்.

**2. கையேட்டை அறிமுகம் செய் அல்லது பகிர்ந்து கொள்:** "தனிபட்ட எழுப்புதலுக்கான படிகள்" என்ற (மொழிபெயர்க்கப்பட்ட அனைத்து மொழிகளிலும் இலவசமாக அல்லது குறைந்த விலையில் கிடைக்கும்) இந்த கையேடு எவ்வகைகளில் பயன்படுகிறது என்பதைப்பற்றிய 80க்கும் மேற்பட்ட வாசகர்களின் சாட்சிகள் மற்றும் உரையாடல்களின் மூலம் நூற்றுக்கணக்கானோர் தங்கள் கருத்தை தெரிவித்துள்ளனர்.

- ➢ தங்களின் ஆவிக்குரிய நிலையைக் காண இது அவர்களின் கண்களைத் திறந்துள்ளது: இரட்சிக்கப்பட்டார்களா? அல்லது இழந்து போனார்களா? (மேலும் அத்தியாயம் – 2ல்)
- ➢ ஆவிக்குரிய வாழ்க்கைக்குத் தேவையான படிகளை அவர்கள் இதன் மூலம் புரிந்துகொண்டனர்: அன்றாடம் கிறிஸ்துவிடம் ஒப்படைத்தல் மற்றும் பரிசுத்த ஆவியைப் கேட்டு பெறுதல் (யுகங்களின் வாஞ்சை ப.676.2). தனிப்பட்ட மற்ற எல்லா படிகளும் பரிசுத்த ஆவியால் காட்டப்படுகின்றன. (மேலும் அத்தியாயம்.3ல்)
- ➢ வேதாகம வாக்குத்தத்தங்களைப்பற்றிக்கொண்டு ஜெபிப்பதன் மூலம், பரிசுத்த ஆவியைப் பெற்றோம் என்ற உறுதியை அவர்கள் பெற்றனர். (மேலும் அத்தியாயம் 5ல்)
- ➢ அவர்களின் மட்டற்ற மகிழ்ச்சி அவர்களைச் இச்சிறு கையேட்டின் சாட்சிகளாகவும் விநியோகிப்பவர்களாகவும் மாற்றியது.

"தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்" மற்றும் 40 – நாள் புத்தகங்கள் 1 & 2 சிறந்த முடிவுகளுக்கு வழிவகுக்கும் என்பதை பலரது அனுபவங்களின் மூலம் அறிந்திருக்கிறோம். "தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்" கண்களைத் திறப்பதோடு மற்றும் உடனடியாக தொடங்குவதற்கு ஒரு சிறந்த உதவியாகும். 40 – நாள் புத்தகங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையை விரிவுபடுத்தி பலப்படுத்த உதவுகின்றன. மேலும் அவை தனிப்பட்ட காலை தொழுகைக்கும் மற்றும் அனேக ஜெபங்களுக்கான பதிலுக்கும் வழிவகுக்கின்றன.

**3. ஆராதனை நிகழ்ச்சியின் போது சுருக்க வாசிப்புகள்:** பரிசுத்த ஆவியுடன் வாழ்வது பற்றி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட பகுதிகளை பிரசங்கத்திற்கு முன் ஆராதனையின் போது வாசிக்கலாம். (ஐந்து முதல் பத்து நிமிடங்கள் வாசிப்பதற்காக) பரிந்துரைக்கப்பட்ட பிரசுரங்கள் அடுத்தடுத்து கிழே பட்டியலிடப்பட்டுள்ளன. சிறிது நேரத்திற்குப் பிறகு, இருவர் கொண்ட குழுக்களை உருவாக்க அல்லது 40 – நாள் கருத்துக்களைச் செயல்படுத்த மக்களை ஊக்குவிக்கலாம் (12வது குறிப்பைப்

பார்க்கவும்)

**4. நமது புத்தகங்களிலிருந்து குறிப்பிட்ட பகுதிகளை** சபை அறிவிப்புப் பலகையில் எழுதலாம் அல்லது அறிவிப்புகளின் போது பரிந்துரைக்கப்படலாம்.

- யுகங்களின் வாஞ்சை அதி – 73 "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக"
- அப்போஸ்தலர்களின் நடபடிகள் அதி – 5 "ஆவியின் வரங்கள்"
- கிறிஸ்துவின் பொருட்பாடங்கள் அதி – 12 "கொடுப்பதற்காக கேட்பது"
- பொருளாளர்களுக்கான ஆலோசனை தொகுதி 3, "ஆவியானவரின் வாக்குத்தத்தங்கள்" பக் 209 – 215
- எலன் உவைட் எழுதிய காலைதியான புத்தகம் “Ye shall receive power” லிருந்து ஒவ்வொரு நாள் தியானத்தை வாசிக்கலாம்.

**5. அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்:** தொழுகையின் போது முடிந்தவரை ஆவிக்குரிய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள். தனிப்பட்ட அனுபவங்கள், பிற சபை உறுப்பினர்கள் அல்லது பிற சபைகளில் இருந்தும் பகிர்ந்து கொள்ளலாம். சாட்சியங்களை நீங்கள் www.steps-to-personal-revival.infoல் காணலாம். தகவல்களைப்பெற கிளிக் செய்யவும் "சாட்சியங்கள்"

**6. ஒரு விசேஷ ஓய்வுநாளில் நான்கு பகுதி கருத்தரங்கு:** ஒரு சபையில் ஆர்வத்தை விரைவாக உருவாக்குவதற்கு இது மிகச் சிறந்த முறையாகும். ஒரு விசேஷ ஓய்வுநாளில் 3 அல்லது 4 பகுதிகளாக நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வதாகும். வெள்ளிக்கிழமை மாலை தொடங்கி, பின்னர் ஓய்வுநாளின் தெய்வீக ஆராதனையின் போதும் மற்றும் பிற்பகல் வேளையிலும் "தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்" கையேட்டிலிருந்து முக்கியமான தலைப்புகளிலிருந்து திட்டமிடலாம். நிகழ்ச்சி நிரலுக்கு www.steps-to-personal-revival.Info பார்க்கவும்.

அனைவரது உள்ளங்களையும் அசைக்கும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள வெள்ளிக்கிழமை மாலை சிறந்த நேரமாகும், கூடுமானால் அப்போது விசேஷ பேச்சாளார் தனது வாழ்க்கையில் நடந்த முக்கியமான அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளலாம். மற்றொரு முக்கிய விசேஷம் என்னவென்றால் "கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுப்பதைப்" பற்றி பேசுவதாகும். இதற்கான ஆலோசனை "இயேசுவில் நிலைத்திருங்கள்" (Abide in Christ) என்ற சிறு புத்தகத்தில் அத்தியாயம் 2ல் ‘இயேசுவிடம் ஒப்படைத்தலில்’

காணலாம்.

தெய்வீக ஆராதனையின்போது முக்கிய கருத்துக்களைப் பற்றி "தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்" புத்தகத்திலிருந்து பிரசங்கிக்க பரிந்துரைக்கப்படுகிறது. இன்னும் துல்லியமாக பரிசுத்த ஆவியின் பற்றாக்குறை பற்றி அறிமுகத்திலிருந்து 2–3 மேற்கோள்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள். பரிசுத்த ஆவியைப்பற்றி இயேசு என்ன போதித்தார் என்பதை அத்தியாயம்–1லிருந்தும், நம்முடைய பிரச்சனைகளின் மையம் எது? என்பதை 2வது அத்தியாயத்திலிருந்தும் முக்கிய சிந்தனையையும் தொடரவும். (இவ்விரண்டையும் தனித்தனியே பிரித்து இரண்டு மணிநேரங்களில் பேசலாம்).

பிற்பகல் சந்திப்பின் முற்பகுதியில் அத்தியாயம் 3ல் "நமது பிரச்சனைகளைத் தீர்க்க முடியுமா? எப்படி?" என்ற முக்கிய சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

பிற்பகல் சந்திப்பின் இரண்டாவது பகுதியில் அத்தியாயம் 5ல் "நடைமுறை அனுபவத்திற்கான திறவுகோல்"இலிருந்து முக்கிய சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

'தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்' என்ற கருத்தரங்கு ஏற்கனவே நடத்தப்பட்ட சபைகளில் மீண்டும் ஒருமுறை நடத்தலாம் – இன்னொரு விசஷ ஓய்வுநாளில் மற்றொரு கருத்தரங்கு "இயேசுவில் நிலைத்திருங்கள்" என்ற சிறு புத்தகத்தின் தலைப்புகளைப் பயன்படுத்தி நான்கு அத்தியாயங்களிருந்து நான்கு பகுதிகளாக நடத்தலாம்.

மற்றொரு விசேஷ ஓய்வுநாளுக்கு ஆயத்தமாவதில் பயனளிக்கும்படி, அதற்குரிய கையேட்டின் பகுதிகளை கவனமாகப் படிக்கும் பரிந்துரையுடன் முன்கூட்டியே அனுப்ப வேண்டும். இந்த விசேஷ ஓய்வுநாள் நிகழ்ச்சிக்குப்பின் வார இறுதியில் 40 – நாள் ஜெப நிகழ்ச்சியை தொடங்குவது பயனள்ளதாயிருக்மென நிரூபிக்கப்பட்டுள்ளது (குறிப்பு 12ஐப் பார்க்கவும்) அல்லது "தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்" (குறிப்பு 7ஐப் பார்க்கவும்) கையேட்டிலிருந்து வாரத்திற்கு ஒரு அத்தியாயத்தை அனைவரும் சேர்ந்து வாசிக்கவும்.

**7. வாரத்திற்கு ஒரு அத்தியாயமாக ஒருங்கிணைக்கப்பட்ட வாசிப்பு :** "தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்" அல்லது "இயேசுவில் நிலைத்திருத்தல்" அல்லது 40 – நாள் புத்தகங்களில் ஏதாவது ஒன்றை ஒவ்வொரு வாரமும் ஒரு அத்தியாயத்தை வாசிப்பது பயனுள்ளதாயிருக்கும் (தங்கள் வீட்டில் இருக்கும்போதே இந்த அத்தியாயங்களை ஒன்றுக்கு

மேற்பட்ட முறை வாசிதல் மேலும் சிறந்தது). ஒரு குழுவாகவோ அல்லது முழு சபையாகவோ வாசிக்கத் தொடங்கும் தேதியை எல்லாரும் அறிந்திருத்தல் நல்லது. இது நான்கு–பகுதி கருத்தரங்கிற்கான ஆயத்தத்தில் (குறிப்பு 6ஐப் பார்க்கவும்) அல்லது இந்த விசேஷ ஓய்வுநாளுக்குப் பிறகு செய்யலாம். ஒவ்வொரு நபரும் தனியாகவோ மேலும் ஒருவருடனோ அல்லது குழுவாகவோ சேர்ந்து படிக்க விரும்புகிறீர்களா என்பதை தீர்மானிக்கலாம். ஓய்வுநாளில் அந்தந்த அத்தியாயத்தில் உள்ள முக்கிய சிந்தனைகளை சுமார் 5 நிமிடங்களில் படித்துவிட்டு பிறகு தங்கள் தனிப்பட்ட சாட்சியங்களைப் பகிர்ந்து கொள்ள மக்களை அழைப்பது நல்லது. பிறகு வேறொருவரின் சாட்சியங்களைப் படிக்கலாம். (முன்பே ஆயத்தம் செய்யுங்கள் – சாட்சியங்களைப் பார்க்கவும்) அடுத்தடுத்து வரும் வாரங்களில் எந்தெந்த அத்தியாயங்களைப் படிக்க வேண்டுமென்பதை முன்னரே அறிவிக்கவும். www.spiritbaptism.orgன்கீழ் 40 – நாள் புத்தகங்களை ஆர்டர் செய்யலாம்.

**8. பரிசுத்த ஆவியுடன் ஜீவிப்பது பற்றிய பிரசங்கத்தை செய்யுங்கள்** அல்லது அதைச் செய்ய வேறொவரை ஊக்கப்படுத்திக் கேட்டுக் கொள்ளுங்கள். கீழ்க்கண்ட தலைப்புகளில் டுவைட் நெல்சன் அவர்களின் சிறந்த பிரசங்கங்களும் இருக்கின்றன. கிரவுண்ட் ஜீரோ, புதிய சீர்திருத்தம் மற்றும் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவது எப்படி?" அவற்றை கீழ்கண்ட இணையதளத்தில் காணலாம்.www.pmchurch.tv/sermons

**9. பரிசுத்த ஆவியுடன் வாழ்வதைக் குறித்த வேதபாடங்களை நடத்துங்கள்** அல்லது அவற்றை அனைவரும் கேட்கத் தகுந்தவிதத்தில் உரக்க வாசியுங்கள்.

**10. சிறுகுழுக்களோ அல்லது ஜெபக்குழுக்களோ** குறிப்பிட்ட புத்தகங்களின் பகுதிகளைப் படித்து விவாதிப்பதோடு ஒன்றாக சேர்ந்து ஜெபிக்கலாம். அத்துடன் இரண்டு இரண்டு பேர்களாலான இக்குழுக்கள் 40 – நாள் தொழுகை பகுதியை படித்த பின்னர் வாரத்திற்கு ஒரு முறை எல்லா குழுக்களுடன் ஒன்று சேர்ந்து கலந்துரையாடி அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும், சேர்ந்து ஜெபிப்பதற்கும் ஊக்குவிக்கப்பட வேண்டும் (குறிப்பு 12ஐப் பார்க்கவும்).

**11. மிஷன் ஓய்வுநாள்** – பரிசுத்த ஆவியானவருடனான வாழ்க்கை நம்மை மிஷினரிகளாக ஆக்குவதால், நிரந்தர அடிப்படையில் அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, மிஷன் ஓய்வுநாளை மீண்டும் தொடங்குவது ஒரு நல்ல வாய்ப்பாகும். இது நமது முன்னோடிகளின் அடிப்படை அம்சமாகும். நம் முன்னோர்கள் ஒவ்வொரு மாதமும் முதல் ஓய்வுநாளை மிஷன் ஓய்வுநாளென

வைத்திருந்தார்கள். ஒரு அர்ப்பணிப்புள்ள தனிநபரோ அல்லது ஒரு சிறிய குழுவோ ஜெபம் செய்வதற்கும் செயல்படுத்துவதற்கும் பொறுப்பேற்க வேண்டும். மேல் குறிப்பிட்டுள்ள சில சாத்தியக்கூறுகளுடன் இது இணைந்தால் அது மிஷினெரி ஆவியின் விழிப்புணர்வை ஏற்படுத்தும்.

**12. 40 - நாள் கருத்தைப் படித்து விவாதிக்கவும் –** இந்தக் கருத்து 40 – நாள் புத்தகங்களில் ஒன்று மற்றும் இரண்டு மற்றும் மூன்றில் "விதிமுறை வழங்கள் (Instruction) அறிவுறுத்தல் மற்றும் மேலோட்டம்" என்ற பிரிவின் கீழ் வழங்கப்படுகிறது. பின்னர் இது சபைக்குழு, ஊழியக்குழு, அல்லது கான்பஃரன்ஸ் குழுவில் விவாதிக்கப்படலாம். இந்த கருத்தை போதகர் கூட்டங்கள், மூப்பர் கூட்டங்கள், மிஷன் கூட்டங்கள் மற்றும் இளைஞர் கூட்டங்கள், மாவட்ட கூட்டங்கள், மற்றும் மிஷன் பள்ளிகளிலும் வழங்கலாம். இந்த கருத்து பின்வரும் பகுதிகளில் உதவுகிறது:

- பரிசுத்த ஆவியின் மூலம் இயேசுவோடு அதிக நெருக்கமான உறவைப்பேண உதவுகிறது.
- ஜெப வாழ்க்கையை வலுப்படுத்த உதவுகிறது (தனியாக, ஜோடியாக அல்லது குழுக்களாக)
- நமது தனிப்பட்ட உறவுகளை ஆழப்படுத்த உதவுகிறது.
- பரிசுத்த ஆவியினால் 40 – நாள் ஆராதனைகள் மூலம் ஆவிக்குரிய வாழ்க்கையை பலப்படுத்த உதவுகிறது.
- காணாமல் போன அல்லது சத்தியம் சென்றடையாத நபர்களுக்காகப் பரிந்து பேசுவதை எளிதாக்குகிறது மற்றும் அவர்களைத் தொடர்புகொள்ள உதவுகிறது.
- சுவிசேஷ ஊழியம், பராமரிப்பு குழுக்கள், மற்றும் வேத ஆராய்ச்சிகளை ஆதரிக்க உதவுகிறது.

**மூன்று ஆவிக்குரிய படிகளின் மூலம் இது சாதிக்கப்படுகிறது**

- இரண்டு இரண்டு பேர்களைக் கொண்ட குழுக்களாக 40–நாள் ஆராதனை மூலம் தனிப்பட்ட ஆவிக்குரிய எழுப்புதலுக்கு வழிகாணுதல். (பரிசுத்த ஆவிக்காக அன்றாட "பிரார்த்தனையை மையப்படுத்துதல்" மற்றும் புத்தகங்களிலுள்ள "கேள்விகளை விவாதித்து கலந்துரையாடல்")
- ஆவியால் நிரப்பப்பட பரிந்துரை ஜெபம் மற்றும் ஒவ்வொரு நபரும் அணுகப்படாத ஐந்து நபர்களை அல்லது பலவீனமான சபை

அங்கத்தினர்களை தொடர்பு கொள்ளுதல்.

- ➢ சுவிசேஷ நடவடிக்கைகள் (விளக்கக் காட்சிகள், கருத்தரங்குகள், ஊழிய மனப்பான்மை கொண்ட கவனிப்பு குழுக்கள், வேத ஆராய்ச்சி, சிறிய அல்லது நடுத்தர அளவிலான விளக்க காட்சி. எ.கா. ஆரோக்கியம், சிருஷ்டிப்பு அல்லது தீர்க்கதரிசன வெளிப்பாடுகள்).

40 – நாள் கருத்து கூட்டத்தை ஒழுங்கு செய்பவர்களுக்கு செய்முறை விளக்கவுரை இங்கே கிளிக் செய்தால் கிடைக்கும். மேலும் 40 – நாள் வழிமுறை கையேடு PDF ஆகவும் (கையடக்க ஆவண படிவத்தில்) கிடைக்கிறது. தேவையான அனைத்து நடவடிக்கைகளும் இதில் உள்ளன. பரிந்துரைக்கப்பட்ட ஆவிக்குரிய பாதையானது திட்டமிட்ட சுவிசேஷத் தொடருக்கான சிறந்த ஆயத்தமாகும். இந்த வழியில் தலைவர்களும் சபை அங்கத்தினர்களும் தனிப்பட்ட முறையில் ஆவிக்குரிய ரீதியில் தயாராகின்றனர். பரிந்துபேசும் ஜெபம் மற்றும் ஒவ்வொரு நபரும் அணுகப்படாத ஐந்து நபர்களைத் தொடர்பு கொள்வதன் மூலம் சுவிசேஷத் தொடருக்கான களம் தயாராகி வருகிறது. பல்வேறு வகையான சுவிசேஷம் பயன்படுத்தலுக்கு கீழ்கண்ட இணையதளத்தை தொடர்பு கொள்ளவும். www.spiritbaptism.org

13. சபை அங்கத்தினர்களுக்கு 40 – நாள் பிரார்த்தனை நிகழ்ச்சி பற்றிய தகவலை அனுப்பவும். கூடுதலாக உங்கள் சபையில் 40 – நாள் தொடரின் தொடக்க தேதிக்கான அழைப்பை உருவாக்க பரிந்துரைக்கப்படுகிறது.

14. சபையின் அறிவிப்பு பலகை, கான்ஃபரன்ஸ் அறிவிப்பு பலகை, யூனியன் அறிவிப்பு பலகை, மாத இதழ்கள், சபையின் இணையதளங்கள், இத்துடன் சபை செய்திமடல்கள் மற்றும் சபைத் துறைகளின் செய்தி கடிதங்கள் ஆகியவற்றில் **பொருத்தமான கட்டுரையை வெளியிடவும்.**

**15. கணக்கெடுப்பு:** பரிசுத்த ஆவியின் தலைப்பை பற்றி விளக்கியபின் ஒரு சிறிய கணக்கெடுப்புக்காக காகிதத் துண்டுகளை அனுப்பலாம்.

ஒரு நபர் அடிக்கடி அல்லது அனுதினமும் பரிசுத்த ஆவிக்காக ஜெபித்தால் அவர்கள் ஒரு சரிபார்ப்பு[*] அடையாளத்தையிடலாம்.

ஒரு நபர் தினமும் பரிசுத்த ஆவிக்காக வாக்குறுதிகளுடன் ஜெபித்தால் அவர்கள் இரண்டு சரிபார்ப்பு[**] அடையாளத்தையிடலாம்.

இக்காரியத்தில் தற்போதைய நிலை என்ன என்பதைத் தீர்மானிக்க இது ஒரு சிறந்த வழியாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து சாத்தியக்கூறுகளின் போதும்

ஜெபத்துடன் கூடிய ஆயத்தம் மற்றும் ஜெபம் முக்கியமானது. குறிப்பிட்ட சபை அங்கத்தினர்கள் ஏற்கனவே உள்ள ஜெப வட்டங்கள் மற்றும் முழு சபையிடமும் கூட ஒரு குறிப்பிட்ட விண்ணப்பத்திற்காக ஜெபிக்கலாம். அதை செயல்படுத்துவதும் மற்றும் அதன் விளைவை கேட்டறிவதும் ஜெபிக்கும் நபர்களுக்கு விலைமதிப்பற்றது.

# தெளிவான வார்த்தைகள்

### நீல் சி வில்சன்: ஏதோ குறை இருக்கிறது

"பல துறைகளில் முன்னேற்றம் மற்றும் வெற்றி இருந்தபோதிலும், ஏதோ ஒரு குறைபாடு இருப்பதாக நான் அதிகமதிகமாக உணர்த்தப் பட்டிருக்கிறேன் என்பதை நான் ஒப்புக்கொள்ள வேண்டும். நம் ஒவ்வொருவருக்கும் மற்றும் அவருடைய சபைக்கும் தேவன் வைத்திருக்கும் மகிமையான எதிர்பார்ப்புகளை நாம் இன்னும் முழுமையாக அளவிடவில்லை" (Adventist Review, Jan.4 1990, p.2) நீல் சி வில்சன் தொடர்ந்து கூறும்போது, பரிசுத்த ஆவியின் நிரப்புதல் இல்லாததே தனக்குள்ள குறை என்று உணர்ந்ததாகச் சுட்டிக்காட்டுகிறார். நான் அவருடன் முழு மனதுடன் உடன்படுகிறேன். தேவன் தம் மக்கள் மூலம் தம்முடைய வேலையை முடிப்பதற்கான திறவுகோல் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமே. (Dennis Smith, Spirit Baptism & Evangelism, p.4)

### எழுப்புதல் ஊழிய பணியை ஏற்படுத்துகிறது

எனக்கு இப்போது 36 வயதாகிறது. மேலும் கடந்த 5 ஆண்டுகளாக எனது பணியிடத்தில் நான் மட்டுமே அட்வென்டிஸ்ட்டாக இருக்கிறேன். இந்த ஆண்டில் எனது அணியில் 5 புதிய பதவிகள் திறக்கப்பட்டுள்ளன. நியமிக்கப்பட்ட 5 புதிய ஊழியர்களில் 2 பேர் அட்வென்டிஸ்ட்கள் மற்றொருவர் என்னோடு சேர்ந்து 2000ம் ஆண்டில் மார்க் ஃபின்லியின் பிரச்சாரம் இங்கே போர்ட் மோர்ஸ்பியில் நடத்தப்பட்டபோது ஞானஸ்நானம் பெற்றவர் என்பதை நான் சீக்கிரமே கண்டுபிடித்தேன். இருப்பினும் அவர் பின்வாங்கி போயிருந்தார். பரிசுத்த ஆவியின் செல்வாக்கின் மூலம் இந்த சகோதரனுக்கும் என்னைச் சுற்றியுள்ள மற்றவர்களுக்கும் உதவுவதே எனது வேலை. பரிசுத்த ஆவிக்காக ஜெபித்ததில் இருந்து முதன் முறையாக "கிறிஸ்துவிடத்திற்கு படிகள்" என்ற சிறு புத்தகத்தின் 2 பிரதிகளை சக ஊழியர்களுக்கு வழங்கியுள்ளேன். இன்று நான் அதை பின்தொடர்ந்தேன். என் சக பெண் தோழி படித்து முடித்துவிட்டாள் என்றும்; படிப்பதற்கு வேறொரு புத்தகமிருந்தால் கொடுக்கும்படி விரும்பி கேட்டுக்கொண்டாள், அதே வேளையில் என் சக ஊழியர் இன்னும் படித்து முடிக்கவில்லை. என் பிரார்த்தனைப் பட்டியலில் அவர்களிருவரும் உள்ளனர். பரிசுத்த ஆவிக்காக நான் தேவனுக்கு நன்றி கூறுகிறேன். மேலும் நான் ஒரு வெதுவெதுப்பான

அட்வென்டிஸ்டாக இருக்க விரும்பவில்லை. என்னுடன் தொடர்பு கொள்ளும் அனைவருடனும் இயேசுவைப் பகிர்ந்து கொள்ள நான் மிகவும் ஆவலாக இருக்கிறேன். எனது அன்றாட வாழ்க்கையில் இயேசுவின் புதிய அன்பை இணைத்துக்கொள்ள நான் போராடி வருவதால் விரைவில் எனது வேலையை மாற்றிவிடலாம் என்று நினைக்கிறேன். I.M

**ஊக்கமளிக்கும் செய்தி:** எனது மனைவியும் நானும் "தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்" (ஆங்கிலம் மற்றும் ஸ்பானிஷ் மொழிகளில்) மற்றும் "கிறிஸ்துவில் நிலைத்திருத்தல் புத்தகங்களை எங்கள் வலைதளத்தின் மூலம் கேட்கும் எல்லோருக்கும் இலவசமாகப் பகிர்கிறோம். நாங்கள் கடந்த 2 ஆண்டுகளாக புத்தகங்களைப் பகிர்ந்து வருகிறோம். மேலும் தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள் – 1000க்கும் அதிகமான பிரதிகளும் மற்றும் கிறிஸ்துவில் நிலைத்திருத்தல் 500 புத்தகங்களையும் வழங்கியுள்ளோம். இந்த புத்தகங்களின் நுண்ணறிவுக்கு மிக்க நன்றி. இயேசுவில் நிலைத்திருத்தல் புத்தகம் மிகவும் அவசியமானது என்று நினைக்கிறேன். ஸ்பானிஷ் மொழிபெயர்ப்பு இருக்கிறதா? அமெரிக்காவிலிருந்து AFB

ஆர்வமும் பகிர்வும் / நாள் 12

## தனிப்பட்ட எண்ணங்கள் மற்றும் கலந்துரையாடலுக்கான வழிகாட்டி

1. பரிசுத்த ஆவியுடன் வாழ்வதற்கான ஆர்வத்தை எவ்வாறு தூண்டலாம் என்பதற்கான பல சாத்தியங்களைப் பட்டியலிடுங்கள்.________________
2. பரிசுத்த ஆவியின் வரத்திற்காக எந்த மக்களுடன் நீங்கள் கூடி ஜெபிக்கலாம்?________________________________
3. "பரிசுத்த ஆவி" என்ற தலைப்பில் ஆர்வத்தை ஊக்குவிக்க உங்கள் சபையில் என்ன ஆலோசனை நீங்கள் கொடுக்கலாம்?

________________________________

### நமது ஜெப நேரம்

- உங்கள் ஜெப–பங்காளியுடன் தொடர்பு கொண்டு இந்த தலைப்பைப் பற்றி விவாதியுங்கள்.
- உங்கள் ஜெப–பங்காளியுடன் சேர்ந்து ஜெபியுங்கள்.

1. கர்த்தர் இன்று உங்களை பரிசுத்த ஆவியால் நிரப்புகிறார்.
2. கர்த்தர் நம்மிலும் நம் வாழ்விலும் சபைகளிலும் ஒரு எழுப்புதலை ஏற்படுத்துகிறார்.
3. இன்று நாம் சொல்லிலும் செயலிலும் ஆசீர்வாதமாக இருக்கிறோம்.

நாள் 13

## செய்திகளை நாம் எப்படி எந்த வழிகளில் அனுப்புகிறோம்?

### எழுப்புதல் கையேட்டை எவ்வாறு விநியோகிப்பது?

**இலக்கு:** ஒரு சகோதரர் ஒரு முறை இந்த செய்தி உலகெங்கிலும் உள்ள ஒவ்வொரு அட்வென்டிஸ்ட் குடும்பத்தையும் சென்றடைய வேண்டும். அதற்கான என் பங்கை நான் செய்வேன் என்று கூறியதோடு அதை தீவிரமாக செய்துகொண்டிருக்கிறார். ஒரு சகோதரி: இந்த சிறு புத்தகம் எல்லா முக்கிய மொழிகளிலும் அல்லது சிறந்த மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்று எழுதினார். அவர் தனது கான்பஃரன்ஸில் வெற்றி பெற்றார். இப்போது இதை அனைத்து மாவட்டங்களிலும் பிரசங்கித்து வருகிறார். மேலும் தேவ வழிகாட்டுதலின் மூலம் அவர் ஆயிரக்கணக்கான சிறு புத்தகங்களை முன்பு கிறிஸ்தவ விசுவாசத்தை ஏற்றுக்கொள்ளாத தமது அண்டை நாட்டிற்கும் கொண்டு சென்றுள்ளார்.

### வளர்ச்சியும் நிதியும்

தேவ வழிகாட்டுதலின் மூலம், "தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்" என்ற சிறு புத்தகம் அனைத்து அட்வென்டிஸ்ட் குடும்பங்களுக்கும் அவர்களின் சொந்த மொழிகளில் – இலவசமாகவோ அல்லது குறைந்த விலையிலோ அனுப்பப்படும். போதகர்களின் உதவியுடன் ஏராளமான கான்பஃரன்ஸ்கள் மற்றும் யூனியன்கள் ஏற்கனவே அந்தந்த மாவட்டங்களுக்குள் உள்ள குடும்பங்களுக்கு இலவச பிரதிகளை அனுப்பியுள்ளன. சுவிட்சர்லாந்தில் சுவிஸ்–ஜெர்மன் கான்பஃரன்ஸ், ஆஸ்திரியாவில் ஆஸ்திரிய யூனியன் மற்றும் ஜெர்மனியில் பேடன்–வுட்டம்பர்க் கான்பஃரன்ஸ் ஆகியவை அப்படியே செய்துள்ளன. இந்த திட்டம் தேவ செல்வாக்கின் மூலம் உருவாக்கப்பட்டது. மேலும் அவரது கிருபையால் 2017 வரை 6 லட்சத்திற்கும் மேற்பட்ட பிரதிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. தேவன் தொடர்ந்து எங்களை வழிநடத்தவும் திட்டத்தை மேலும் மேம்படுத்த தேவையான வழிகளை வழங்கவும் நாங்கள் ஜெபித்து வருகிறோம். அச்சிடும் செலவில் பாதியை ஈடுகட்ட வலுவான நிதி வரவுசெலவுகளைக் கொண்ட கான்பஃரன்ஸ் அல்லது யூனியன்களிடம் இருந்து நாங்கள் வழக்கமாக நிதியைக் கோருகிறோம். குறிப்பாக ஊழியங்களுக்கு தேவனின் உதவியுடன் ஒவ்வொரு விஷயத்திற்கும் நாமே நிதியளிக்க விரும்புகிறோம். ஆனால் இறுதிப் பயனாளிகள் எப்போதும் பொருளை இலவசமாகவோ அல்லது குறைந்த விலையிலோ பெறுகின்றனர்.

## ஒரு தனிப்பட்ட தேவை

நீங்கள் மற்றவர்களை சென்றடைய வேண்டுமென விரும்புகிறோம். தனிபட்ட முறையில் இந்த செய்தியால் மற்றவர்களை ஆசீர்வதிப்பதற்கு நீங்கள் அனுதினமும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட வேண்டியதும், கிறிஸ்து உங்களில் வாசம் செய்ய வேண்டியதும் மிகவும் அவசியம். தயவுசெய்து யுகங்களின் வாஞ்சை, பக் 676.2ஐ வாசியுங்கள். யோவான் 15:4ல் இயேசுவின் வார்த்தைகளின் விலைமதிப்பற்ற குறிப்பு அது. "என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்" இது இரண்டு விஷயங்களைக் சுட்டிக்காட்டுகிறது:

- அவரது ஆவியை நிரந்தரமாக பெறுவது
- அவருடைய சேவைக்கு வாழ்வை சம்பூரணமாய் ஒப்புக்கொடுப்பது

இயேசு ஏன் இந்தக் குறிப்பைக் கொடுத்தார்? "என்னுடைய சந்தோஷம் (இயேசுவின் சந்தோஷம் பரிசுத்த ஆவியின் கனியாகும் – கலா 5:22) உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும் படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்." (யோவான். 15:11).

## விநியோகத்திற்கான சாத்தியங்கள்

**ஜெபம்:**

சிலநபர்களுடன் நற்செய்தியைப் பகிர்ந்து கொள்வதற்கு பரிந்துபேசும் ஜெபத்தின் மூலம் ஆயத்தப்பட வேண்டியது அவசியம். எலன் உவைட் சுவிசேஷ ஊழியம் என்னும் புத்தகத்தில் கூறுவதாவது: "அதிக ஜெபத்தின் மூலம் நீங்கள் ஆத்துமாக்களுக்காக பிரயாசப்பட வேண்டும், இதன் மூலம் மட்டுமே நீங்கள் இதயங்களை சென்றடைய முடியும்." –Evangelism.p.341.3

**கையேட்டை விநியோகித்தல்:**

கையேட்டை ஒருவருக்கு நீங்கள் அனுப்பும்போது அதில் உங்கள் மனதில் பட்டதையும், அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளுங்கள். இவர்கள் நண்பர்களாகவோ, தலைவர்களாகவோ மற்றும் சபை, கான்பஃரன்ஸ் மற்றும் யூனியன்கள், அச்சகங்கள், மிஷன் திட்டங்கள் மற்றும் பிற நிறுவனங்களில் முக்கிய பதவிகளை வகிக்கும் நபர்களாகக்கூட இருக்கலாம். மற்றொரு மதிப்புமிக்க வாய்ப்பு கான்பஃரன்ஸ் கூட்டங்களின்போது ஒரு சாவடி அல்லது பொது விநியோக அமைப்பாளர்களின் அனுமதியுடன் கொடுக்கவும். ஒவ்வொரு அட்வென்டிஸ்ட் குடும்பமும் இலவச நகலை அல்லது குறைந்த விலையில் பெறவேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும்.

மேலும் இந்த கையேட்டை அஞ்சல் மூலமாகவோ அல்லது பெறுநர்களை

தனிப்பட்ட முறையில் சந்திக்கும் நபர்கள் மூலமாகவோ அனுப்பலாம்

**இணையதளம் மூலம் விநியோகம்**

மின்னஞ்சல் மூலம் செய்தியை அனுப்புவதே நிகழ்காலத்தில் மிகவும் சிறந்த வழி. இந்த செய்தி ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து இந்தியாவின் மிசோராம் நகருக்கு சென்றது. பிரேசில் வழியாக பாகிஸ்தானையும் சென்றடைந்தது. நீங்கள் செய்தியை www.schritte-zurpersonlichenerweckung.infoல் படிக்கலாம். மொழிபெயர்க்கப்பட்ட அனைத்து மொழிகளிலும் ஒன்று அல்லது பலவற்றிற்கு எளிய இணைப்பு மூலம் அச்சிடலாம் அல்லது அனுப்பலாம். www.steps-to-personal-revival.info இணையதளம் ஆங்கிலத்தில் உள்ளது என்பதை மக்களுக்குத் தெரியப்படுத்தலாம். 2016ம் ஆண்டின் இறுதியில் தேவனின் வழிகாட்டுதல் மற்றும் மொழிபெயர்ப்பாளர்களின் அர்ப்பணிப்பு ஆதரவுடன் செய்தி 20 மொழிகளில் கிடைக்கும், மேலும் 8 மொழிகளில் விரைவில் பின்பற்றப்படும். தேவனின் உதவியால் இன்னும் பலர் பின்பற்றுவார்கள்.

**மின்புத்தகம் மூலம் விநியோகம்**

இந்த இணையதளத்தில் `epub' மற்றும் `mobi' வடிவங்களில் இலசவச மின் புத்தகம் கிடைக்கிறது. நீங்கள் £-1 க்கு அமேசான் வழியாக மின்புத்தகத்தை ஆர்டர் செய்யலாம்.

**சமூக வலைப்பின்னல்கள் மூலம் விநியோகம்**

இந்த இணையதளத்தின் உள்ளடக்கங்களையோ அல்லது PDF புத்தகங்களுக்கான இணைப்பையோ நண்பர்கள் மற்றும் அறிமுகமானவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு மிகவும் பயனுள்ள வழி முகநூல், Google+, Twitter அல்லது WhatsApp நெட்வொர்க்குகள் பகிர்தல் மற்றும் அழைப்புகள் மூலம் உங்கள் தனிப்பட்ட தொடர்புகளையும் பல்வேறு நாடுகள் மற்றும் கண்டங்களில் உள்ள புதிய நபர்களையும் நீங்கள் அடையலாம்.

**பிரசங்கங்கள் மற்றும் கருத்தரங்குகள் மூலம் விநியோகம்**

அனைத்து போதகர்கள் மற்றும் சபை சீடர்கள் இந்த செய்தியை ஒன்று அல்லது பல பிரசங்கங்கள் மூலம் சபைகளுடன் பகிர்ந்து கொள்ள அற்புதமான வாய்ப்பு உள்ளது. உங்கள் சொந்த ஆய்வுகள் மூலமாகவோ அல்லது கையேட்டில் உள்ள செய்திகளைப் பயன்படுத்தியோ இதைச் செய்யலாம். "திருச்சபை ஏற்கனவே கேட்ட அல்லது படித்த ஒரு தலைப்பை நான் ஒருபோதும் பிரசங்கிக்கவில்லை. கல்வி ஆராய்ச்சியின் மூலம் இது போன்ற தலைப்பை 6 – 10 முறை வாசிப்பது அல்லது கேட்பது முற்றிலும்

இன்றியமையாதது என்பதை நான் இன்று அறிவேன் (சகோதரர் ஹெல்மட் ஹவுபைலின் தனிப்பட்ட அனுபவம் மற்றும் ஆலோசனை). இப்போது நான் இதை அறிந்திருப்பதால் மக்கள் தலைப்பை ஏற்கனவே படித்த பிறகு அல்லது கேட்ட பிறகு பிரசங்கிப்பதில் எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை.. நீங்கள் விரும்பினால், கையேட்டில் இருந்து முக்கிய சிந்தனைகள் மற்றும் மேற்கோள்களைப் பயன்படுத்துகிறீர்கள் என்பதைக் குறிக்கலாம்.

நீங்கள் பிரசங்கிக்கவில்லை என்றால் மற்றவர்களின் பிரசங்கங்களில் இந்தத் தலைப்பைப் பயன்படுத்துமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளலாம்.

"தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்" என்ற பொதுவான தலைப்பைக் கொண்ட ஓய்வுநாள் கருத்தரங்கில் குறைந்தது மூன்று தலைப்புகள் இருக்க வேண்டும்.

**பிரசங்கம்:**

நமது பிரச்சனைகளின் அடிப்படை என்ன? நமது பிரச்சனைகளுக்கு ஆவிக்குரிய காரணம் இருக்கிறதா?

பரிசுத்த ஆவியின் பற்றாக்குறை நம்மிடம் உள்ளதா எனது ஆவிக்குரிய வாழ்க்கையை நான் எவ்வாறு சுயமாக கண்டறிவது? (இவை அறிமுகம் மற்றும் அத்தியாயங்கள் 1 & 2ல் இருந்து முக்கிய சிந்தனைகள்)

**1. பிற்பகல் நிகழ்ச்சி**

நமது பிரச்சனைகள் தீர்க்கப்படக்கூடியவை – ஆனால் எப்படி?

மகிழ்ச்சியான சந்தோஷமான மற்றும் பலமான கிறிஸ்தவ வாழ்க்கையை நாம் எவ்வாறு வளர்த்துக்கொள்ள முடியும்?

பரிசுத்த ஆவியானவர் எப்படி நம் வாழ்க்கையை நிரப்புகிறார்? இதிலுள்ள இரகசிய வார்த்தை "தினமும்" (அத்தியாயம் 3ன் முக்கிய கருத்துகள் இவையே)

**2. பிற்பகல் / மாலை நிகழ்ச்சி:**

நடைமுறை பயன்பாட்டிற்கான முக்கிய அனுகுமுறை / நடைமுறையில் அதை எவ்வாறு பயன்படுத்துவது (நடைமுறை அனுபவத்திற்கான திறவுகோல்)

- ➢ நான் எனது வாழ்க்கையில் தேவனின் தீர்வை எப்படி அனுபவப்பூர்வமாக அனுகி நடைமுறைப்படுத்தலாம்?
- ➢ பரிசுத்த ஆவியின் நிரப்புதலின் நிச்சயத்திற்காக நான் எவ்வாறு ஜெபிக்க வேண்டும்?

(அத்தியாயம் 5ன் முக்கிய கருத்துகள் இவை)

## தனிப்பட்ட சாட்சிகள்

பின்வரும் தலைப்புகள் பற்றிய தனிப்பட்ட சாட்சிகள் மிகவும் மதிப்புமிக்கவை.

- வாசித்ததன் மூலம் மனதில் ஆழமாகப் பதிந்தவை அல்லது மனதில் பட்டவை பற்றி
- நம் வாழ்வில் இந்தச் செய்தி ஏற்படுத்திய விளைவுகள் பற்றி

## உங்கள் சொந்த மொழியில் மொழிபெயர்ப்பு

கையேடு உங்கள் தாய்மொழியில் மொழிபெயர்க்கப்படவில்லை என்றால், நீங்கள் ஜெபத்தோடு தேவ ஏற்பாட்டின் மூலம் – அதைச் செய்ய விருப்பமும் திறனும் உள்ள ஒருவரைக் கண்டறியலாம். மொழிபெயர்ப்பாளர், அந்தச் செய்தியால் தனிப்பட்ட முறையில் தொடப்பட்டால் பெரும் நன்மையை அளிக்கும். இதுவரை, பெரும்பாலான மொழிபெயர்ப்புகள் தானாக முன்வந்து செய்யப்பட்டன, ஏனெனில் மொழிபெயர்ப்பாளரும் இந்தச் செய்தியை பரப்புவதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். ஆனால் சில சமயங்களில் மொழிபெயர்ப்பது வாழ்வாதாரத்தை ஈட்டுவதற்காகவே. அந்த மொழிபெயர்ப்பாளருக்கு "சகோதர" ஊதியம் வழங்கப்பட்டது. மொழிபெயர்ப்பாளர் விஷத்தில் நீங்கள் தனிப்பட்ட முறையில் ஹெல்முட் ஹவுபைலைத் தொடர்பு கொண்டால் நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருப்போம். எல்லா மொழிகளிலும் ஒரே வடிவத்தில் இந்த சிறு புத்தகம் வெளியிடப்படுவதைப் பகிர்ந்து கொள்ள அவர் நல்ல ஆலோசனைகளை வழங்கியுள்ளார். வாழ்க்கையின் எல்லா சூழ்நிலைகளிலும் பரிசுத்த ஆவியானவர் மூலம், அவருடைய மகிமையின் ஐசுவரியத்தின்படியே பெலனான ஒரு அற்புதமான தலைவர் நமக்கு இருக்கிறார்.

அன்றாடம் நாம் நம்மை ஒப்படைத்து பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவதன் மூலம் நம் வாழ்வில் ஒரு உண்மையான முன்னேற்றத்திற்கு வழி உண்டாகும். இவ்வாறு நமது குணாதிசயங்கள் மாறமுடியும் மற்றும் தேவனுடைய பணியில் மதிப்புமிக்க கருவிகளாக மாறலாம்.

உலக வரலாற்றில் மகத்தான காலத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்த தேவன் விரும்புகிறார். அவருடைய வருகைக்காக நாம் தனிப்பட்ட முறையில் தயாராக இருக்க வேண்டும் என்றும், பரிசுத்த ஆவியின் வல்லமையில் நாம் சுவிசேஷத்தின் வேலையை முடிப்பதில் ஒன்றாகச் செயல்பட வேண்டும்

என்றும் அவர் விரும்புகிறார். கடினமான காலங்களில் அவர் நம்மை வெற்றியுடன் வழிநடத்த விரும்புகிறார்.

அனுதினமும் அவரிடம் நம்மை ஒப்புக்கொடுப்பதன் மூலம் மற்றும் பரிசுத்த ஆவியின் அனுதின ஞானஸ்நானம் ஆகியவற்றின் மூலம் தேவன் உங்களுக்கு தனிப்பட்ட எழுப்புதலையும் சீர்திருத்தத்தையும் தருவாராக.

வேதாகம உரை மற்றும் எழுப்புதலுக்கான ஜெபத்துடன் நான் முடிக்க விரும்புகிறேன்; "என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக்கொடுப்பேன்." 2நாளா.7:14

**ஜெபம்**

பரமபிதாவே, தயவுகூர்ந்து எங்களுக்கு மனத்தாழ்மையைத் தாருங்கள் (மீகா 6:8). உமது முகத்தைத் தேடுவதற்கும் ஜெபிப்பதற்கும் மிகுந்த விருப்பத்தை எங்கள் இதயங்களில் ஏற்படுத்துங்கள். எங்ளுக்கு விருப்பத்தை தந்து, எங்கள் பொல்லாத வழிகளிலிருந்து திரும்ப எங்களுக்கு உதவுவீராக. உங்கள் வாக்குறுதியின் பதிலை நாங்கள் பெற்றுக்கொள்வதற்காக தயவு செய்து எங்களுக்கு முன்வைக்கப் பட்டுள்ள முன்நிபந்தனைகளை நிறைவேற்றுங்கள், எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னித்து எங்களின் மந்த நிலையினின்றும், விசுவாச துரோகத்திலிருந்தும் எங்களைக் குணப்படுத்துங்கள். தயவுகூர்ந்து அனுதினமும் நாங்கள் எங்களை இயேசுவிடம் ஒப்படைத்து விசுவாசத்தால் பரிசுத்த ஆவியைப் பெற எங்களுக்கு உதவி செய்யுங்கள். ஆமென்.

ஒரு எழுப்புதலின் தேவை ஜெபத்தின் பதிலாக மட்டுமே எதிர்பார்க்கப்படுகிறது." - E.G. White, Selected Messages, Book 1 (1958), p.121.1

"பெந்தகோஸ்தே நாளில் பரிசுத்த ஆவியின் ஞான்ஸ்நானம் மெய் மார்க்கத்தின் எழுப்புதலுக்கும் அற்புதமான பல செயல்களின் செயல்பாட்டிற்கும் வழிவகுக்கும்" - E.G. White, Selected Messages, Book 2 (1958), p. 57.1

## தனிப்பட்ட எண்ணங்கள் மற்றும் கலந்துரையாடலுக்கான வழிகாட்டி

1. இந்த பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விருப்பங்களில் எது உங்களை மிகவும் கவர்ந்துள்ளது?

_______________________________________________

_______________________________________________

2. இந்த கையேட்டைப் படித்த பிறகு உங்களுக்கு எது மிகவும் முக்கியமானதாகிவிட்டது?

_______________________________________________

_______________________________________________

3. அடுத்த சில வாரங்களில் நீங்கள் குறிப்பாக எதை அடைய விரும்புகிறீர்கள்?

_______________________________________________

_______________________________________________

**நமது ஜெப நேரம்**

- ➢ உங்கள் ஜெப–பங்காளியுடன் தொடர்பு கொண்டு இந்த தலைப்பைப் பற்றி விவாதியுங்கள்.
- ➢ உங்கள் ஜெப–பங்காளியுடன் சேர்ந்து ஜெபியுங்கள்.

1. கர்த்தர் உங்களை தொடர்ந்து பரிசுத்த ஆவியால் நிரப்புகிறார்.
2. நாம் எவ்வாறு தொடரலாம் என்பதை அடையாளம் கண்டு கொள்வோம்.
3. தேவன் நம்மை அவருடைய சாட்சிகளாக வழிநடத்துவார்.

நாள் 14

# பிற்சேர்க்கை

**மேலும் ஆராய்வதற்கான பரிந்துரைகளும் தொடர்புகளும்**

ஒரு முக்கியமான ஆலோசனை: முடிந்தால், ஒவ்வொரு நாளும் ஆறு நாட்களுக்கு இந்த கையேட்டைப் படியுங்கள். நம் வாழ்க்கைக்கு இது போன்ற முக்கியமான தலைப்பை ஒருவர் முழுமையாக புரிந்து கொள்வதற்கு முன் அதை ஆறு முதல் பத்து முறையாவது படிக்க வேண்டும் அல்லது கேட்க வேண்டும் என்று கல்வி ஆராய்ச்சி சுட்டிக் காட்டுகிறது. ஒரு முறை முயற்சி செய்யுங்கள். முடிவுகள் உங்களை நம்ப வைக்கும்.

ஒரு ஆசிரியர் அதை முயற்சி செய்து பார்த்தார்: "இந்த ஊக்கமளிக்கும் வார்த்தைகள் என்னைக் கவர்ந்தன. 'ஒரு முறையாவது முயற்சி செய்யுங்கள். முடிவு உங்களை நம்ப வைக்கும்.' நான் இதை பயிற்சிக்க விரும்பினேன். மூன்றாவது முறை வாசித்தபோது அது என்னைப் பற்றிக்கொண்டது. என் வாழ்நாள் முழுவதும் நான் ஏங்கிக் கொண்டிருந்த நம் மீட்பர் மீது மிகுந்த அன்பை உணர்ந்தேன். இரண்டு மாதங்களில் நான் புத்தகத்தை ஆறு முறை படித்தேன். அதன் விளைவு மதிப்பிற்குரியது. இயேசு நம் அருகில் வரும்போது அவருடைய தூய்மையான கனிவான மற்றும் அன்பான கண்களைப் பார்க்கும்போது அது எப்படி இருந்தது என்பதை நான் புரிந்து கொள்வது போல் இருந்தது. அப்போதிருந்து, என் இரட்சகரிடமிருந்த இந்த மகிழ்ச்சி குறைந்துவிட நான் ஒரு போதும் விரும்பவில்லை." - C.P

பரிசுத்த ஆவியுடனான புதிய அனுபவத்தைப் பற்றி பலரிடமிருந்து நான் உற்சாகமான பல நன்றி சாட்சியங்களைப் பெற்றுள்ளேன். ஏறக்குறைய அனைத்துமே வாசகர்களிடமிருந்து வந்தவைகள். அவர்கள் புத்தகத்தை பல முறை தீவிரமாக மீண்டும் மீண்டும் படித்தனர்.

## 40 - நாள் அறிமுக ஆலோசனை கையேடு

www.SpiritBaptism.org என்ற இணையதளத்தில் 40 – நாள் அறிமுக ஆலோசனை கையேட்டின் கீழ் டென்னிஸ் ஸ்மித்தின் 40 – நாள் புத்தகத்தைப் பயன்படுத்தி, 40 – நாள் ஜெபத்தை ஒரு சுவிசேஷத் தொடருடன் ஏற்பாடு செய்வதற்கான பயனள்ள தகவல்களை நீங்கள் காணலாம்.

## பரிசுத்த ஆவியுடன் வாழ்வதில் புதிய அனுபவங்கள்

நம்முடைய கர்த்தராகிய இயேசு: "பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" என்றார் (அப் 1:8).

**ஒரு விசேஷ வேண்டுகோள்:** உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையிலோ அல்லது சாட்சி கொடுப்பதிலோ நீங்கள் பரிசுத்த ஆவியுடன் வாழ்ந்த அனுபவத்தைப் பெற்றிருந்தால், ஹெல்மட் ஹவுபைலுக்கு (ஒரு சிறிய அறிக்கையை அனுப்பினால் நாங்கள் அதை மிகவும் பாராட்டுவோம்) அறிக்கைக்குப் பிறகு உங்கள் பெயரின் முதலெழுத்துக்கள் மட்டும் வேண்டுமா அல்லது உங்கள் முழுபெயரையும் குறிப்பிடுவதுடன், நீங்கள் எந்த சபையில் பங்கு பெறுகிறீர்கள் என்பதையும் உங்களால் பகிர்ந்து கொள்ள முடியுமா என்பதையும் எங்களிடம் தெரிவியுங்கள். பரிசுத்த ஆவியுடனான உங்கள் அனுபவம் மற்றவர்களை பலப்படுத்தும் என்பதை நினைவில் கொள்ளவும்.

## தனிப்பட்ட எண்ணங்கள் மற்றும் கலந்துரையாடலுக்கான வழிகாட்டி

இந்த புத்தகத்தை 6–10 முறை மீண்டும் மீண்டும் படிக்க வேண்டும் என்ற பரிந்துரை, பரிசுத்த ஆவியுடன் கூடிய வாழ்க்கையை உங்கள் இதயத்தில் கொண்டு வருவதற்கான சிறந்த வழியாகும். ஒரு சகோதரி தனது அனுபவத்தின் முதல் 6 வாரங்களில் என்ன நடந்தது என்பதை நாட்குறிப்பில் எழுதி வைத்திருந்தார். அவள் மிகவும் மகிழ்ச்சியடைந்து ஒரு நீண்ட கடிதம் எழுதினாள்.

1. உங்கள் எதிர்கால நடவடிக்கைக்கு என்ன திட்டங்களை வைத்திருக்கிறீர்கள்?

2. 40 நாள் கருத்து என்பது நான் ஒரு போதகராக 50 ஆண்டுகளில் கண்ட சிறந்த ஆவிக்குரிய மற்றும் சுவிசேஷ கருத்து. இந்த 40 நாள் புத்தகத்தின் அறிமுகத்திலும் நீங்கள் அதைப் பற்றி படிக்கலாம். முழுமையான திட்டத்தை விரும்புவோர் https://www.missionsbrief.de/40-tage-konzept.html (ஆங்கிலம் மற்றும் ஜெர்மன் மொழியில்) இலவசமாக பதிவிறக்கம் செய்யமுடியும்.

   40 நாள் ஆய்வுகளை தனிப்பட்ட முறையிலோ அல்லது இரண்டு பேராக சேர்ந்தோ படிக்கலாம். மேலும் தொலைபேசி அல்லது ஸ்கைப் மூலமாகவும் மேற்கொள்ளலாம். இந்த நேரத்தில் நீங்கள் எடுத்துக்காட்டாக "தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகளை" மூன்று முறை படிக்கலாம் அல்லது "இயேசுவில் நிலைத்திருத்தல்" புத்தகத்துடன் தொடரலாம் அல்லது டென்னிஸ் ஸ்மித்தின் 40 நாள் புத்தகங்களில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தலாம். இந்த நேரத்தில் சந்திக்கப்படாத வேறு ஐந்து நபர்களுக்காக தினமும் ஜெபம் செய்து அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்துங்கள்.

   40 நாட்களுக்குப்பின் சபையில் விருந்தினர் ஓய்வுநாள் தினம் வைக்கலாம்.

   ஒரு வாரம் கழித்து வேதாகம வகுப்புகள், வீட்டுப் படிப்பு குழுக்கள் கருத்தரங்குகள் அல்லது விரிவுரைகள் தொடங்கும். இந்த கருத்தை நீங்கள் நன்கு தெரிந்துகொள்ள விரும்புகிறீர்களா?

3. பரிசுத்த ஆவியைப் பற்றி மற்றவர்கள் என்ன சொல்லுகிறார்கள்? பரிசுத்த ஆவிக்கான நமது கோரிக்கை எவ்வளவு முக்கியமானது?

**நமது ஜெப நேரம்**

- உங்கள் ஜெப–பங்காளியுடன் தொடர்பு கொண்டு இந்த தலைப்பைப் பற்றி விவாதியுங்கள்.
- உங்கள் ஜெப–பங்காளியுடன் சேர்ந்து ஜெபியுங்கள்.

1. நாம் தினமும் தொடர்ந்து ஜெபித்து பரிசுத்த ஆவியைப் பெறுவோம்.
2. மேலும் நமது ஆவிக்குரிய வாழ்வின் எதிர்கால வழிகாட்டுதலுக்காக தேவனுக்கு நன்றி.
3. நமது எதிர்கால நடவடிக்கைகளுக்கு சரியான முடிவுகளை எடுப்போம்.

# தனிப்பட்ட எழுப்புதலுக்கான படிகள்

ஹெல்மட் ஹவுபைல் ஒரு வணிகரும் போதகருமாவார். பல ஆண்டுகள் ஒரு கப்பல் கம்பெனியில் வியாபார பிரதிநிதியாக இருந்தபின் தனது 37வது வயதில் தேவனுடைய அழைப்புக்கு செவிகொடுத்து தேவனுடைய ஊழியத்தில் ஒரு போதகராக 16 ஆண்டுகள் பணியாற்றினார். அதன்பின் ஜெர்மனியிலுள்ள பேடு எய்ப்லிங் என்ற இடத்தில் அன்வெண்டிஸ்ட் நர்சிங்ஹோமில் இயக்குனராக பணியாற்றினார். "Missionbrief" என்ற ஜெர்மானிய மிஷின் பத்திரிக்கையின் நிறுவனரும் ஆசிரியருமானார். ஓய்வு பெற்றபின் மிஷின் ஊழிய பணியை மத்திய ஆசியாவிலும் இந்தியாவிலும் செய்வதில் முக்கிய பணி ஆற்றி வருகிறார்.

"ஆவியானவரை பெறுவதற்கு இதுதான் வழியென்றால்
நாம் ஏன் பரிசுத்த ஆவியின் வரத்திற்காக பசியும்
தாகமுமுடையவர்களாக இல்லை?
நாம் ஏன் அதைப்பற்றி பேசவோ
அதற்காக ஜெபிக்கவோ அதைப்பற்றி
பிரசங்கிக்கவோ கூடாது?"

Ellen G. White, Testimonies for the Church, Vol. 8, p.22